# தமிழரசு

பிப்ரவரி 2006











# வரலாறு படைக்கும் 5 ஆண்டுச் சாதனைகள்











“நான் இந்த மக்களுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். அவர்கள் அனைவரின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப தமிழக அரசு திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செயல்படுத்தி வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழகம் விளங்கவும், பெண்களுக்காகப் பல நலத்திட்டங்களை உருவாக்கிச் செயலாக்கவும், வறுமைக் கோட்டுக்குக் கீழ் எவருமே இருக்கக்கூடாது என்ற இலட்சியத்தை நிறைவேற்றிடவும் அயராது பாடுபடுவதே எனது குறிக்கோள்”

செல்வி **ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2037
தை – மாசி
மலர்: 37 இதழ்: 8
பிப்ரவரி 2006
விலை ரூ.10

* உள்துறை ........ 3
* நிதித்துறை ........ 14
* பொதுப்பணித்துறை ........ 15
* நெடுஞ்சாலைத்துறை ........ 16
* ஊரக வளர்ச்சித்துறை ........ 18
* நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை ........ 21
* ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ........ 26
* பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்நலத்துறை ........ 28
* கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை ........ 31
* உயர்கல்வித்துறை ........ 33
* பள்ளிக்கல்வித்துறை ........ 34
* மக்கள் நல்வாழ்வுத்துறை ........ 37
* கைத்தறி மற்றும் துணிநூல்துறை ........ 40
* மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை ........ 43
* வணிகவரித்துறை ........ 44
* கூட்டுறவுத்துறை ........ 48
* தொழில்துறை ........ 50
* சட்டத்துறை ........ 51
* தகவல் தொழில்நுட்பத்துறை ........ 54
* வருவாய்த்துறை ........ 58
* வேளாண்மைத்துறை ........ 69
* வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை ........ 75
* வனம் மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டுத்துறை ........ 77
* சிறுதொழில்கள்துறை ........ 82
* எரிசக்தித்துறை ........ 84
* தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை ........ 87
* போக்குவரத்துத்துறை ........ 92
* திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள்துறை ........ 94
* செய்தி –மக்கள் தொடர்புத்துறை ........ 95
* சுற்றுலாத்துறை ........ 100
* சமூகநலத்துறை ........ 102
* தமிழ்வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத்துறை ........ 103
* இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை ........ 108
* பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை ........ 111

*ஆசிரியரும் வெளியிடுபவரும் :* **சி. முத்துக்குமாரசாமி,** இ.ஆ.ப., இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர், தமிழ்நாடு அரசு
சென்னை– தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலைநகல் : 25364906
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

# உள்துறை




- தமிழ்நாடு காவல்துறையை நவீன மயமாக்குவதற்கு ரூ.427.59 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ரூ.22.40 கோடியில் சென்னைப் பெருநகரக் காவல் ஆணையகரம் 155 காவல் நிலையங்களுடன் (34 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உட்பட) உருவாக்கப்பட்டுள்ளன.
- மாநிலத்தில் 196 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.
- அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கும் கட்டணமின்றி பேசும் தொலைபேசி வசதி வழங்கப்பட்டுள்ளது.
- மகளிர் அதிரடிப் படையினருக்கு 12 வார சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- பெண் காவலர்களுக்கு ஓய்வு அறைகள், அவர்களுடைய குழந்தைகளுக்கு காப்பகம் அமைத்துத் தரப்பட்டுள்ளது.
- பாலின வேறுபாடின்றி பணியாற்றுவதற்கு ஆறு நாட்கள் பயிற்சி, அனைத்துக் காவலர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது.
- 2002–03ஆம் ஆண்டு 2,108 பெண் காவலர்கள் தற்காலிகமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- காவலர்களுக்கான சீருடைப்படி மாதமொன்றுக்கு ரூ.62 முதல் ரூ.100ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.
- காவல்துறையின் அமைச்சுப் பணியாளர் ஒவ்வொருவருக்கும் பயிற்சி ஊக்கத் தொகையாக ரூ.1,000 வழங்கப்பட்டுள்ளது.
- சட்டம் ஒழுங்கை சீரான முறையில் கையாண்டதன் மூலம் 2004ஆம் ஆண்டிலும், 2005ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரையிலும், சட்டம் ஒழுங்கு சம்பந்தமான எவ்வித பெருத்த நிகழ்வுகளும் நடைபெறவில்லை. மாநிலத்தில் வகுப்புவாத மற்றும் சாதி மோதல்கள் ஏதுமின்றி தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது.
- மாநிலத்தில் எவ்வகையிலும் பாதிப்பு ஏற்படா வண்ணம் வகுப்புவாத மற்றும் சாதி ஒற்றுமை நிலவியது. 2004 மற்றும் 2005ஆம் ஆண்டுகளில் சிவகங்கையில் கண்டதேவி தேர்த் திருவிழா அமைதியாக நடைபெற்றது.
- அடிப்படைவாதிகளுக்கு எதிரான நிலுவையில் உள்ள வழக்குகள் நீதிமன்றங்கள் மூலம் விரைவாக முடிக்கப்பட்டு, 14 எதிரிகளுக்கு ஆயுள் தண்டனை கிடைக்கப் பெற்றது. மேலும், பிற ஆறு வழக்குகளில் 14 பேருக்கு சிறைத்தண்டனை கிடைக்கப் பெற்றது.
- 2005ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை குற்றக் கண்டுபிடிப்பு விழுக்காடு 83 ஆக உயர்ந்துள்ளது. அது, 2004ஆம் ஆண்டு அதே காலக்கட்டத்தில் 82.2% விழுக்காடாக இருந்தது. 2005ஆம் ஆண்டு (அக்டோபர் மாதம் வரை) மீட்கப்பட்ட சொத்துக்களின் விழுக்காடு 75 ஆகும்.

* கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் வரையிலான காலக்கட்டத்தோடு ஒப்பிடுகையில், சொத்துக் குற்றங்களைப் பொறுத்தவரை, 2005 ஆம் ஆண்டு அக்டோபர் வரையிலான காலக்கட்டத்தில் 1,783 வழக்குகள் குறைந்து காணப்படுகின்றன.

* 2005ஆம் ஆண்டு அக்டோபர் வரையில், பெண்களுக்கு எதிரான குற்றங்களின் எண்ணிக்கை 4,568 ஆகும். அது 2004 ஆம் ஆண்டு 5,241 ஆக இருந்தது.

## நீதி நிருவாகம்

* 11–வது நிதிக்குழுவின் பரிந்துரைப்படி அமர்வு நீதிமன்றங்களில் நீண்டகாலமாக நிலுவையிலுள்ள வழக்குகளை முடிப்பதற்காக அரசு 49 விரைவு நீதிமன்றங்களை, 2001ஆம் ஆண்டு அமைத்துள்ளது.

* அனைத்து மாநிலங்களிலும் நிறுவப்பட்ட விரைவு நீதிமன்றங்களின் செயல்பாடுகளின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசு ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, மேலும் ஓராண்டுக்கு 49 விரைவு நீதிமன்றங்களின் செயல்பாட்டை 31.3.2006 வரை நீட்டிப்பு செய்தது.

* மகளிருக்கு எதிரான வழக்குகளை விரைவாகவும், நீண்ட தூரப் பயணங்களைத் தவிர்க்கவும், அவர்களது குறைகளை நீக்குவதற்கும் ரூ.51.11 இலட்சம் செலவில் 6 மகளிர் நீதிமன்றங்கள் 2002 மற்றும் 2003இல் அமைக்கப்பட்டுள்ளன.

* தேனி மாவட்டத்தில் தனியாக மாவட்ட அமர்வு நீதிமன்றம், கூடுதல் மாவட்ட நீதிபதி–மற்றும் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் அமைக்க தொடரினச் செலவாக ரூ.85.07 இலட்சம் தொடரா இனச் செலவாக ரூ.38.66 இலட்சம் அனுமதித்து அரசு ஆணை வழங்கியுள்ளது.

* தேனி மாவட்டம் உத்தமபாளையத்தில் 2004இல் ஒரு சார்பு நீதிமன்றம் தொடங்கப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது.

* விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் சார்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டு, தற்போது செயல்பட்டு வருகிறது.

* திருவள்ளூரில் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது. நீதிமன்றங்கள் விரைவில் துவங்கப்படும்.

* திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்க அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. நீதிமன்றம் விரைவில் துவங்கப்படும்.

* மாநிலச் சட்டப்பணிகள் ஆலோசனை மையத்திற்கு உயர்நீதிமன்ற வளாகத்தில் கட்டடம் கட்டுவதற்கு ரூ.1.85 கோடி 2002–2003ஆம் ஆண்டு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டு கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு அக்கட்டடத்தில் இம்மையம் இயங்கி வருகிறது.

* விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் மற்றும் குடியிருப்புகள் கட்டுவதற்காக ரூ.9.82 இலட்சம் அனுமதித்து அரசு ஆணை வெளியிடப்பட்டு கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

* சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையின் கட்டுமானப்பணி மற்றும் இதரப் பணிகளுக்காக ரூ.65.44 கோடி செலவிடப்பட்டுள்ளது.

* தேனியில் ரூ.3.90 கோடி செலவில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

* வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் கட்ட ரூ.497 இலட்சம் செலவில் கட்டுமானப்பணி நடைபெற்று வருகிறது.

* திருவள்ளூரில் மூன்று விரைவு நீதிமன்றங் களுக்கும், திருச்சிராப்பள்ளியில் ஒரு விரைவு நீதிமன்றத்திற்கும் கட்டடம் கட்ட மொத்தம் ரூ.31.85 இலட்சம் செலவினத்திற்கு இசைவளிக்கப் பட்டுள்ளது.

* மாநிலத்தில் சிதிலமடைந்த நிலையில் உள்ள நீதிமன்றக் கட்டடங்களுக்கு சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ள ரூ.7.58 கோடி செலவினத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

* சென்னை நகர உரிமையியல் நீதிமன்றங்களுக்கு கணினி வசதி மைய அரசின் நிதியுதவியுடன் அமைத்திட ரூ.2.19 கோடிக்கான செயல் திட்ட அறிக்கை மைய அரசுக்கு அனுப்பப்பட்டது. மைய அரசு நிதி உதவியுடன், மாநில அரசும், உயர்நீதிமன்றத்திற்கு ரூ.82 இலட்சம் மற்றும் ரூ.137 இலட்சம் அளித்து பணிகளை நிறைவு செய்ய அனுமதித்து 2002–2003இல் ஆணை வழங்கியுள்ளது. அத்துடன் சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை ஆகியவற்றை கணினி மயமாக்குவதற்கு ரூ.169 இலட்சம் ஒதுக்கீடு வழங்கியுள்ளது.

* 2003–04ஆம் ஆண்டுக்கு உயர் நீதிமன்றத்திற்கு சட்டப் புத்தகங்கள் மற்றும் சட்ட இதழ் வெளியீடுகள் வாங்குவதற்கு ரூ.30 இலட்சம் அனுமதித்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

* தமிழ்நாடு மாநில நீதிபதிகள் பயிற்சி மையத்திற்கு சென்னை மல்லிகை வளாகத்தில் ரூ.4.5 கோடி மதிப்பீட்டில் கட்டடம் கட்டுவதற்கு 2002–2003இல் அனுமதி வழங்கப்பட்டு கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு இப்பயிற்சி கழகம் இயங்கி வருகிறது.

* 2003ஆம் ஆண்டில் குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககத் துறையில் பணியாற்றும் 11 துணை இயக்குநர்களுக்கும், ஒரு இணை இயக்குநருக்கும் 12 ஈப்புக்கள் மற்றும் 27 கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

## தமிழக போக்குவரத்துத் துறை

* அனைத்து தேசிய நெடுஞ்சாலைகளிலும், மாநில நெடுஞ்சாலைகளிலும் 50 கி.மீ. இடைவெளிக்கு ஒன்றாக 100 விபத்து நிவாரண மையங்களை அமைக்க அரசு 2002ஆம் ஆண்டு அனுமதி வழங்கி உள்ளது. நிர்ணயிக்கப்பட்ட 100 மையங்களில், 81 மையங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன.

* 25–2–2005 அன்று தமிழ்நாடு அரசு ஆந்திர மாநில அரசுடன் மாநிலங்களுக்கிடையேயான போக்குவரத்து குறித்து ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இதன் மூலம் இரு மாநிலங்களும் பயனடையும்.

* மக்கள் நலனை முன்னிட்டு சென்னையிலுள்ள அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், பகுதி அலுவலகங்கள், மீனம்பாக்கத்திலுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் செங்குன்றத்திலுள்ள வட்டாரப் போக்குவரத்துப் பகுதி அலுவலகம் ஆகியவை தனியார் வாகனங்கள் தொடர்பான பணிகளைக் கவனிப்பதற்காக 1–1–2005 முதல் சனிக்கிழமைகளிலும் செயல்பட்டு வருகின்றன.

* வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஆட்டோரிக்ஷாக்களுக்கு அனுமதி வழங்கும் தடை ஆணையினை தளர்வு செய்து, திரவ எரிவாயு பொருத்தப்பட்டிருக்க வேண்டும் என்றும், உரிமையாளரே ஓட்டுநராக இருக்கவேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் 5,000 ஆட்டோக்களை சென்னை மாநகரில் ஓட்டுவதற்கு அனுமதி வழங்கி ஆணையிடப் பட்டுள்ளது.

* சுயவேலை வாய்ப்பினை ஊக்கப்படுத்தும் முகமாக ஆட்டோரிக்ஷா வாங்குவதற்காக மானியத்துடன் கூடிய கடன் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மனுதாரரின் ஆண்டு வருமானம் ரூ.36,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும். ஆட்டோரிக்ஷாவின் விலையில் 25% அல்லது ரூ. 25,000 இதில் எது குறைவோ அது அரசு மானியமாக வழங்கப்படும்.

## தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்

* மே 2001 முதல் 31.10.2005 வரை தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தினால் ரூ.278.90 கோடி செலவில் 7,752 அடுக்குமாடி காவலர் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

* ரூ.6 கோடி செலவில் 34 நிலையங்களுக்கு பொதுப்பணித்துறை மூலம் 2001–2002 மற்றும் 2002–2003 ஆம் நிதி ஆண்டுகளில் கட்டடம் கட்டித்தர அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும், தீயணைப்பு சாதனங்கள் ரூ.2 கோடி மதிப்பீட்டில் 2002–2003 மற்றும் 2003–2004 நிதியாண்டுகளில் வாங்குவதற்கு அரசு ஒப்புதல் வழங்கி, திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

* இவ்வரசு "சிறந்த திறமைக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கம்" ஒன்றை புதியதாக உருவாக்கியுள்ளது. இப்பதக்கமானது, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளின்போது, அதிக திறமையினையும் மற்றும் சிறந்த பணியினையும் வெளிப்படுத்தும் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சார்நிலைப் பணியாளர்களுக்கு வழங்கப்படும். ஆண்டு தோறும் 3 பதக்கங்கள் வழங்கப்படும். ஒவ்வொரு பதக்கமும் 8 கிராம் எடையுடைய 22 காரட் தங்கத்தினால் செய்யப்பட்டதாகும். மேலும், இப்பதக்கம் பெறுபவர்களுக்கு, தரத்திற்கேற்ப ஒட்டு மொத்த மானியமாக, நிலைய அலுவலர் மற்றும் அதற்குச் சமமான பதவிகளில் உள்ளவர்களுக்கு ரூ.3000மும், முன்னணி தீயணைப்போர் மற்றும் அதற்குச் சமமான பதவிகளில் உள்ளவர்களுக்கு ரூ.2500மும், தீயணைப்போர் மற்றும் அதற்குச் சமமான பதவிகளில் உள்ளவர்களுக்கு ரூ.2000மும், வழங்கப்படும்.

* பிராண்டோ ஸ்கைலிப்ட் என்கிற ஹைட்ராலிக் பிளாட்பாரம் மற்றும் சுழல் மேசை ஏணி ஊர்தியினைக் (42 மீட்டர்) கீழ்ப்பாக்கம் நிலையத்தில் நிறுத்தி வைப்பதற்கான கொட்டகையை ரூ.12.50 இலட்சத்தில் கட்டுமானம் செய்ய அரசு ஒப்புதல் வழங்கி, திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

* கோட்ட அலுவலர், நிலைய அலுவலர் மற்றும் தீயணைப்புப் படை வீரர்கள் பதவிகளுக்கு

பெண்களைத் தேர்ந்தெடுக்க அரசு ஆணை வழங்கியுள்ளது. இரண்டு பெண்கள் கோட்ட அலுவலர் பதவியில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

* பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்டித் தருவதை 100 லிருந்து 200 ஆக 2001–2002ஆம் ஆண்டு முதல் உயர்த்தி அரசு முடிவெடுத்ததுடன், மேட்டுப் பாளையம், திருப்பத்தூர், பழநி, மன்னார்குடி, கும்மிடிப்பூண்டி, விருத்தாசலம், இராமேஸ்வரம், வந்தவாசி, நாமக்கல், மறைமலைநகர், தாராபுரம், அம்பாசமுத்திரம் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் 200 குடியிருப்புகள் கட்டித்தர அரசு ஆணை வழங்கி நிறைவேற்றப்பட்டுள்ளது.

* பணியாளர்களுக்கு வழங்கப்படும் உணவுக் கட்டணத் தொகையினை காவல் துறை பணியாளர்களுக்கு இணையாக ரூ.9 லிருந்து ரூ.50 ஆக உயர்த்தி அரசு ஆணை வழங்கியுள்ளது. சென்னையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு உணவுக் கட்டணத் தொகை ரூ.50லிருந்து ரூ.80ஆக உயர்த்தி ஆணை வழங்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

* தீயணைப்பு – மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் வாராந்திர உபரிப்பணிப்படியினை காவல் துறை பணியாளர்களுக்கு இணையாக ரூ.10லிருந்து ரூ.50 ஆக உயர்த்தி அரசு ஆணை வழங்கியது. பின்னர் ரூ. 50லிருந்து ரூ.100 ஆக உயர்த்தி ஆணை வழங்கி நிறைவேற்றப்பட்டுள்ளது.

* தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகையினை, பணியிலிருக்கும் போது உயிர் துறக்கும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர் குடும்பத்திற்கு ரூ. 2,00,000 லிருந்து ரூ. 5,00,000ஆகவும், பணியிலிருக்கும் போது நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளவர்களுக்கு ரூ.50,000லிருந்து ரூ.1,00,000ஆகவும், பணியிலிருக்கும்போது கடுமையாகக் காயமடைந்தவர்களுக்கு ரூ.10,000 லிருந்து ரூ.20,000ஆகவும், பணியிலிருக்கும்போது சிறு காயமடைந்தவர்களுக்கு ரூ.5,000–லிருந்து ரூ.10,000ஆகவும் வழங்கி இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

* தமிழ்நாடு தீயணைப்பு–மீட்புப் பணிகள்துறை சேமநல நிதிக்கு அரசினரால் வழங்கப்பட்டு வந்த மானியத் தொகை ரூ.3 இலட்சத்தை ரூ.4 இலட்சமாக உயர்த்தி அரசு ஆணை வழங்கி நிறைவேற்றப்பட்டுள்ளது.

* ரூ.16.06 லட்சம் செலவில் 9 அதிநுண் அலைவரிசைக் கருவிகளும் மற்றும் ரூ. 1.12 கோடி செலவில் 3 தண்ணீர் லாரிகள், 12 நோயாளர் அவசர ஊர்திகள், கம்பியில்லாத் தந்திக் கருவிகள் பொருத்தப்பட்ட 1 சீருந்து மற்றும் 2 விசை மிதி வண்டிகள் ஆகியவைகள் கழித்தொதுக்கல் செய்யப்பட்டவைகளுக்கு பதிலாக வாங்குவதற்கு அரசு ஆணை வழங்கி நிறைவேற்றப்பட்டுள்ளது.

* பணியாளர்களுக்கு தைக்கப்பட்ட சீருடைகள் வழங்க இயலாத போது, அவர்கள் இரண்டு எண்ணிக்கைகள் சீருடை தைத்துக் கொள்ள தையற் கூலியாக தலா ரூ.200 வீதம் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

* தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையைச் சார்ந்த 29 பணியாளர்களுக்கு தலா ரூ.1 லட்சத்திற்கு மிகாமல், தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மருத்துவ நல நிதி விதிகளைத் தளர்த்தி, ஒரு சிறப்பு நேர்வாக, உதவித் தொகை அளித்து ஆணை பிறப்பிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டுள்ளது.

* சுற்றுலா பயனாளிகளின் பாதுகாப்பிற்காக ஒகேனக்கல்லில் மீட்புப் பணிக்காகவே ஒரு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

* தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் நிலை, பணி மற்றும் பொறுப்புகள், நவீனப்படுத்துதல் போன்றவைகளைப் பரிசீலிப்பதற்காக ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசரைத் தலைவராகக் கொண்ட “தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஆணையம்” ஒன்றினை அமைத்துள்ளது.

* 2002 மற்றும் 2004ஆம் ஆண்டுகளுக்கிடையில் சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட 1,041 நபர்கள் தீயணைப்போராக நியமனம் செய்யப்பட்டனர்.

* சென்னை நகரில் வெள்ளப் பெருக்கின்போது சூழ்ந்துள்ள நீரினை வெளியேற்றவும் மற்றும் தீயணைப்புப் பணிகளுக்கு உதவிடவும் ரூ.1.50 கோடி செலவில் 15 தண்ணீர் லாரிகள் வாங்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

* இத்துறைக்கு சொந்தமான 142 கட்டடங்களில் மழைநீர் சேமிப்பு அமைப்புகள் ரூ. 14.20 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

* 15 தீயணைப்பு–மீட்புப் பணி நிலையங்களுக்கு மொத்தம் ரூ 356.40 இலட்சம் செலவில் 2003–2004ஆம் நிதியாண்டில் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

* கொல்லிமலை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு ரூ.5.27 இலட்சம் செலவினத்தில் ஒரு நோயாளர் அவசர ஊர்தி 2003–2004ஆம் நிதியாண்டில் வாங்கப்பட்டுள்ளது.



* 2003–2004ஆம் நிதியாண்டில் கழித்தொதுக்கப் பட்ட 84 நீர்த்தாங்கி வண்டிகளுக்கு பதிலாக புதிய நீர்த்தாங்கி வண்டிகள் ரூ. 11.01 கோடி செலவில் வாங்க அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப, 84 நீர்த்தாங்கி வண்டிகளில், 66 நீர்த்தாங்கி வண்டிகள் ஏற்கெனவே கட்டுமானம் செய்யப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 18 நீர்த்தாங்கி வண்டிகளை கட்டுமானம் செய்ய, 2005–06ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* காவல் மற்றும் சிறைத் துறைகளில் உள்ளதைப் போன்று பணியில் இருக்கும்போது வீரதீரச் செயலில் ஈடுபட்டு உயிர் துறக்கும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்கள் கடைசியாகப் பெற்று வந்த சம்பளத்தை அவர்கள் உயிருடன் இருந்திருந்தால், எப்போது ஓய்வு பெற்றிருப்பார்களோ அந்த நாள் வரை அவர்களது வாரிசுகளுக்கு குடும்ப ஓய்வூதியமாக வழங்க அரசு ஆணைகள் வழங்கி நிறைவேற்றப்பட்டுள்ளது.

* 2004–05ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பாக திட்டத்தின் கீழ் ரூ.35 இலட்சம் செலவில் கணினிகள் மற்றும் டிஜிட்டல் சாதனங்கள் போன்றவைகளை தலைமையகத்திற்கும் கோட்ட அலுவலகங்களுக்கும் வாங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

* தீயணைப்பு–மீட்புப் பணிகள் துறையில் கம்பியில்லா தகவல் தொடர்பினை நவீனப்படுத்தும் வகையில், ரூ. 55 இலட்சம் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. கும்பகோணம் தீயணைப்பு – மீட்புப் பணிகள் நிலையத்திற்கு 9,000 லிட்டர் கொள்ளளவுடைய ஒரு தண்ணீர் லாரி ரூ.12 இலட்சம் தொடராச் செலவினத்தில் வாங்க அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

* இராஜபாளையம் தீயணைப்பு–மீட்புப் பணிகள் நிலையத்திற்கு 9,000 லிட்டர் கொள்ளளவுடைய ஒரு தண்ணீர் லாரி, ரூ.12 இலட்சம் தொடராச் செலவினத்தில் வாங்க அரசால் ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளது.

* கும்பகோணம் தீயணைப்பு–மீட்புப் பணிகள் நிலையத்திற்கு ஒரு நோயாளர் ஊர்தி ரூ.6 இலட்சம் தொடரா செலவினத்தில் வாங்க அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

* புதுக்கோட்டை மாவட்டத்தில் கரம்பக்குடியில் ஒரு தீயணைப்பு–மீட்புப் பணிகள் நிலையம் ரூ. 24.35 இலட்சம் தொடராச் செலவினத்திலும் மற்றும் ரூ. 13 இலட்சம் தொடர் செலவினத்திலும் திறக்க அரசினரால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. துறையில் ஏற்கனவே உள்ள ஊர்தியினைக் கொண்டு 1.11.2005 முதல் கரம்பக்குடியில் ஒரு புதிய தீயணைப்பு–மீட்புப் பணிகள் நிலையம் திறக்கப் பட்டுள்ளது.

* தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்ள ரூ. 10.05 கோடி செலவில் மூன்று நீட்டிப்பு ஏணி ஊர்திகள் வாங்குவதற்கும், அவற்றை இயக்கிட ஆண்டு ஒன்றுக்கு ரூ.21.5 இலட்சம் செலவில் தேவையான பணியாளர்களை நியமிக்கவும் அரசு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

* இரசாயன தீ விபத்துக்களை கையாள்வதற்காக ரூ.5 கோடி செலவில் ஹஸ்மத் என்றழைக்கப்படும் நவீன ஊர்தியினை வாங்குவதற்கும்,

இவ்வூர்தியின் இயக்கத்திற்கு தேவையான பணியாளர்களுக்கென ரூ. 6 இலட்சம் தொடர் செலவினமாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

* நில நடுக்கங்கள் மற்றும் ஆழிப் பேரலைகளை திறம்படக் கையாள்வதற்காக ரூ.5 கோடி செலவில் 10 அவசர கால மீட்பு ஊர்திகள் வாங்குவதற்கும், அவ்வூர்திகளுக்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ.53 இலட்சம் தொடர் செலவில் தேவையான பணியாளர்கள் நியமிப்பதற்கும் அரசாணை வழங்கப்பட்டுள்ளது.

* ரூ.1.50 கோடி செலவினத்தில் மாற்று ஊர்திகளாக உபயோகப்படுத்த 10 கூடுதல் தண்ணீர் லாரிகள் வாங்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

* சென்னையில் தீயணைப்புப் பணித் திறனை மேலும் அதிகரித்திட ரூ.50 இலட்சம் தொடராச் செலவினத்தில், இரண்டு பௌசர்கள் வாங்கவும், அவ்வூர்திகளை இயக்க ஆண்டொன்றுக்கு ரூ.10.50 இலட்சம் தொடர் செலவில் தேவையான பணியாளர்களை நியமிக்கவும் அரசாணை வழங்கப்பட்டுள்ளது.

* இத்துறைப் பணியாளர்கள் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளில் மேலும் திறம்பட செயலாற்ற ஏதுவாக, சென்னை மாநகரில் 100 தீயணைப்பு வீரர்களுக்கு ரூ.1 கோடி செலவில் தற்காப்புச் சாதனங்கள் வாங்குவதற்கு அரசாணை வழங்கப் பட்டுள்ளது.

* தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையைச் சார்ந்த நிலைய அலுவலர்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட பதவி நிலையில் உள்ள 100 அலுவலர்களுக்கு காவல் துறை அலுவலர்களுக்கு நிகராக செல்லிடத் தொலைபேசிக் கட்டணம் வழங்க அரசாணை வெளியிடப்பட்டு, நடைமுறைப் படுத்தப்பட்டது.

* நிலநடுக்கம் மற்றும் பிற பேரழிவு நேரங்களில் இடிபாடுகளில் சிக்கி கண்ணுக்குப் புலப்படாமல் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பவர்களைக் கண்டறிய மோப்ப நாய் பிரிவு ஒன்று ரூ.8.5 இலட்சம் தொடர் செலவினத்தில் அமைக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. பொதுப்பணித் துறையினர் மூலம் மோப்ப நாய்களுக்கான கென்னல்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

* துறை ஊர்திகளின் பராமரிப்பை மேம்படுத்து வதற்காக அவற்றில் ஏற்படும் பழுதுகளை நீக்கிட இலகு ரக ஊர்திகளுக்கு ரூ.2,000வரையிலும், கனரக ஊர்திகளுக்கு ரூ.3,000 வரையிலும் செலவிட நிலைய அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கியும், கோட்ட அலுவலர்கள் இலகுரக ஊர்திகளின் பழுதுகளை நீக்கம் செய்ய ரூ.4,000 மற்றும் கனரக ஊர்திகளுக்கு ரூ.6000 வரையிலும் செலவிட அரசாணை வழங்கப்பட்டு, திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

* புதிய தீயணைப்பு மீட்புப் பணி நிலையங்களை அமைப்பதற்கும் ஏற்கெனவே உள்ள நிலையங்கள் மறு பகிர்மானம் செய்வதை ஆராய்வதற்காக அரசால் உள்துறை, முதன்மைச் செயலாளரது தலைமையின் கீழ் நிதித் துறை இணைச் செயலாளர்/துணைச் செயலாளர்களை உறுப்பினர்களாகவும், தீயணைப்பு மீட்புப் பணிகள் துறை இயக்குநரை அமைப்பாளராகவும் கொண்டு ஒரு நிலைக் குழு அமைத்து ஆணை வழங்கப் பட்டுள்ளது.


* திருமண மண்டபங்களில் போதுமான தீ பாதுகாப்பு நடவடிக்கைகளின் தேவையினை வலியுறுத்தும் பொருட்டு, தமிழ்நாடு தீயணைப்புத் துறைச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ள, இயக்குநர் அவர்களை தலைவராகவும் பிற துறையினைச் சேர்ந்த 15 அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட நிலைக் குழு ஒன்றினை அரசு அமைத்து ஆணையிட்டுள்ளது.


* பணியாளர்கள் நலன் கருதி, பணிக்காலத்தில் மரணமடையும் வாரிசுதாரர்களுக்கு அவர்களின் தகுதிகளுக்கேற்ப தீயணைப்பாளராகவோ அல்லது நிலைய அலுவலராகவோ பணி நியமனம் செய்ய அரசாணை வழங்கப்பட்டுள்ளது.

* மாநிலப் பயிற்சி மையத்தில் பயிற்சியளிக்கும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிப்படி 10 விழுக்காட்டிலிருந்து 15 விழுக்காடாக உயர்த்தி ஆணை வழங்கப்பட்டு, செயல்படுத்தப் பட்டுள்ளது.

* அலுவலர்களும் பணியாளர்களும் அதி நவீன தொழில்நுட்ப அறிவினைப் பெறும் பொருட்டு, பயிற்சிக்காக வெளிநாடுகளுக்கு அனுப்ப, அரசு ரூ.10 இலட்சம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

* தீ பாதுகாப்பு நடவடிக்கைகளின் தேவையினை வலியுறுத்தும் பொருட்டு, தமிழ்நாடு தீயணைப்புத் துறைச் சட்டத்திலும் ஏனைய தொடர்புடைய சட்டங்களிலும் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ள இயக்குநர் அவர்களை தலைவராகவும் பிற துறையினைச் சேர்ந்த 15 அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட நிலைக் குழு ஒன்றினை அரசு அமைத்து ஆணையிட்டுள்ளது.





* வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டு வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் திருவண்ணாமலை கோட்டங்களை உள்ளடக்கிய ஒரு புதிய மண்டலம் ரூ. 5 இலட்சம் தொடர் செலவினத்திலும் மற்றும் ரூ.12 இலட்சம் தொடராச் செலவினத்திலும் உருவாக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

* பணியாளர்களின் எண்ணிக்கையினை உயர்த்தும் பொருட்டு, தீயணைப்போர் பதவியில் 678 காலியிடங்களை நிரப்புவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது.

* பணியாளர்களின் நலன் கருதி, இத்துறையில் பதவி உயர்வில் நீண்ட காலமாக இருந்து வரும் தேக்க நிலையினைப் போக்க 1,120 பணியாளர்களுக்கு ஒருமுறை ஒரு நிலை தரம் உயர்த்துதல் மூலம் ரூ.20 இலட்சம் தொடர் செலவினத்தில் அளிக்க அரசு ஆணையிட்டு, செயல்படுத்தப்பட்டுள்ளது.

* கோட்ட அளவில் தனிநபர்களுக்கு ஒரு நபருக்கு ரூ.1,000 என்ற கட்டண அடிப்படையில் பயிற்சியளிக்க அரசு ஆணையிட்டு, திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

* அனைத்து மண்டல அலுவலகங்களிலும் அதாவது புதியதாக துவக்கப்படவுள்ள வேலூர் மண்டல அலுவலகம் உட்பட தரவுத் தளக் கோப்புத் தொகுப்பு ரூ.10 இலட்சம் தொடராச் செலவினத்திலும் மற்றும் ரூ.1.50 இலட்சம் தொடரும் செலவினத்திலும் உருவாக்க அரசு ஆணையிட்டு, திட்டத்தினைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

* அரசுக் கட்டடங்களில் தீ பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள, தலைமைச் செயலகத்தில் சம்மந்தப்பட்ட துறையின் செயலாளர்களுக்கு உறுதி செய்யும் பொறுப்பினை அளித்து, அரசு ஆணையிட்டுள்ளது.

* தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தண்ணீர் சேமிப்புத் தொட்டிகளில் தீயணைப்பு ஊர்திகள் நீர் நிரப்புவதற்கு ஏதுவாக தனிப்பட்ட முறையில் அதற்கான வழிவகைகளும் மற்றும் புதியதாக கட்டப்படவுள்ள தண்ணீர் சேமிப்புத் தொட்டிகளிலும் இதுபோன்ற அமைப்புகள் வைக்கவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் நிருவாக இயக்குநர் நடவடிக்கை எடுக்க அரசு ஆணையிட்டுள்ளது.

* தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகத்தில் தீ பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தும் பொருட்டு, இயக்குநர் அவர்களைத் தலைவராகவும், தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் உதவி ஆணையாளர், துணை இயக்குநர், வடமண்டலம் மற்றும் தென்சென்னை கோட்ட அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட குழு ஒன்றினை அமைத்து அரசு ஆணையிட்டுள்ளது.

* உயர் நீதிமன்றக் கட்டட வளாகத்தில் முழு தீ பாதுகாப்பு அளிப்பதற்கான வழிமுறைகளை கண்டறியும் பொருட்டு, பதிவாளர் (நிருவாகம்) அவர்களைத் தலைவராகவும், இத்துறை அலுவலர்கள் மற்றும் பிற துறை அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட குழு ஒன்றினை அமைத்து அரசு ஆணையிட்டுள்ளது.

* பணியாளர் நலனைப் பேணும் விதமாக, ஏற்கெனவே நிலைய அலுவலர் தரத்திற்கு கீழே உள்ள பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு

வந்த உபரிப் பணிப் படியினை ரூ. 100 லிருந்து ரூ.150 ஆக அரசு உயர்த்தி ஆணை வழங்கி, 1.7.05 முதல் செயல்படுத்தப்படுகிறது.

* பணியாளர்கள் நலனைப் பேணும் விதமாக, சென்னை அல்லாத பிற இடங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கான உணவுக் கட்டணம் நாள் ஒன்றிற்கு ரூ. 55 வீதம் அரசு ரூ.19.20 இலட்சம் தொடர் செலவினத்தில் உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

* பணியாளர்கள் நலனைப் பேணும் விதமாக, தீயணைப்போரிலிருந்து கோட்ட அலுவலர் வரை வழங்கப்படும் சீருடைப்படியினை ரூ. 100 ஆக ஒரே சரிசமமாக உயர்த்தி நிர்ணயம் செய்து 1.8.05 முதல் பெற்று வழங்க அரசு ஆணை வழங்கியுள்ளது.

## பிற திட்டங்கள்

* தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினால் தொடங்கப்பட்டுள்ள பாதுகாப்புத் தொண்டர்களை அங்கீகரிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

* தாம்பரத்தில் உள்ள தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மாநிலப் பயிற்சி மையத்தினை சர்வதேச தரத்தில் தன்னாட்சிக் கல்வி மையமாக தரம் உயர்த்தவும் முதல்கட்டமாக ரூ. 1 கோடி வழங்கவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

* துறையின் நிருவாகத்தை மேம்படுத்தும் விதமாக தற்போதுள்ள தீயணைப்போர் ஓட்டுநர் பதவியினை தலைமை தீயணைப்போர் என்ற புதிய பதவியாக படிப்படியாக அதே ஊதிய விகிதத்தில் பெயர் மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

* தீயிலிருந்து பாதுகாப்பு குறித்த முறைகளை சிறப்பான முறையில் அனுசரிக்கும் தொழிற் சாலைகள் மற்றும் பலமாடிக் கட்டடங்களின் உரிமையாளர்களுக்கு பரிசு வழங்குவதற்காக நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அதற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 5 இலட்சம் வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

* தீக்காயம் ஏற்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க மாவட்டத் தலைமையிடங்கள் மற்றும் பெரு நகரங்களில் உள்ள மருத்துவமனைகளில் குளிர்சாதன வசதியுடன் கூடிய சிகிச்சை அறைகள் ஏற்படுத்த அரசு ஆணை வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

* இரயில்வே துறைக்கு சொந்தமான உடைமைகளுக்கு தீ பாதுகாப்பளிக்க அத்துறை முழுச் செலவினத்தையும் இந்த அரசுக்குச் செலுத்தும் வகையில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் அமைப்பது குறித்து அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

* தீயணைக்கும் பணியின்பொழுது தீயணைப்பு ஊர்திகளுக்கு உதவுவதற்கு ஏற்ப மாநகரத்தைச் சுற்றியுள்ள ஊராட்சி ஒன்றியங்களின் தண்ணீர் லாரிகளில் இதற்குத் தேவையான பம்புகள் பொருத்துவதற்கான ஆணை வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

## தடய அறிவியல்துறை

* இயக்குநர் உள்ளிட்டு 231 அறிவியலாளர்களும், மற்றும் 266 உதவிப் பணியாளர்களும் என மொத்தம் 497 பணியிடங்களைக் கொண்டுள்ள இத்துறையில் 2004ம் வருடத்தில், ஓராண்டில் மட்டும் 77,437 வழக்குகளில் சம்பந்தப்பட்ட 2,33,826 பொருட்கள் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

* இந்திய அளவில், மாநிலத் தடய அறிவியல் துறை ஒன்றில் மரபணுவியல் ஆய்வு மூலம் வழக்குத் தடயங்கள் அறிவியல் ஆய்வு செய்யப்படுவது, தமிழக தடய அறிவியல் துறையில்தான் முதலில் துவக்கப்பட்டது என்ற சிறப்பம்சத்தை இத்துறை பெற்றுள்ளது .

* இவ்வாய்வகத்தின் சீரிய சாதனைகளுக்கெல்லாம் சான்றாக இவ்வாய்வக உதவி இயக்குநர் முனைவர் பா.தா.ஜெயப்பிரகாஷ் அவர்கள் மைய அரசின் உள்துறை அமைச்சகத்தின், சீரிய பணிக்கான 2003ஆம் ஆண்டிற்கான சிறப்பு விருதினைப் பெற்றிருப்பதாகும்.

* தமிழக தடய அறிவியல் துறையின் இயக்குநரது தலைசிறந்த தடய அறிவியல் பணிகளைச் செவ்வனே பாராட்டி,மத்திய அரசு சனவரி 2004இல் அன்னாருக்கு சிறப்பு விருது வழங்கி கௌரவித்துள்ளது.

**வளர்ச்சிக்கான தெரிவு செய்யப்பட்ட கொள்கைகள் மற்றும் திட்டங்கள் பின்வருமாறு:-**

* பதினோராம் நிதிக்குழு அளித்த பரிந்துரையின்படி 2001-05இல் ரூ.12 இலட்சத்தில், திருநெல்வேலி நகரத்திற்கு இயங்கும் தடய அறிவியல் ஆய்வகம் தோற்றுவித்தல், ரூ.5 இலட்சத்தில், வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு புற ஊதா நிறமாலைமானி கருவி ரூ.6 இலட்சத்தில், அகச்சிவப்பு நிறமாலைமானி கருவி ரூ.27 இலட்சத்தில், ஆவண ஆய்விற்கு ஸ்பெக்ட்ரல் கம்பரேடரும், ரூ.10 இலட்சத்தில், வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு போர்ட்டபிள் ஸ்பெக்ட்ரல் கம்பரேடரும், ரூ.5 இலட்சத்தில், புற ஊதா நிறமாலை மானி போன்ற திட்டங்கள் மொத்தம் ரூ.65 இலட்சம் செலவில் செயல்படுத்தப் பட்டுள்ளன.

* காவல்துறை நவீனப்படுத்துதல் திட்டத்தின் கீழ், 2003-04ஆம் ஆண்டிற்கு ரூ.15 இலட்சத்திற்கு

பீர் அனலைசர் மற்றும் ரூ.30 இலட்சத்திற்கு எமிஷன் ஸ்பெக்ட்ரோகிராப் வாங்குவதற்கும் அரசு அனுமதி அளித்துள்ளது.



* வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகங்களுக்கென 4 அகச் சிவப்பு நிறமாலைமானி கருவிகள் வாங்குவதற்கு ரூ.28 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## குற்ற வழக்குத் தொடர்வுத் துறை

* 2001–2002இல் இவ்வியக்ககத்தின் துணை இயக்குநர்களின் உபயோகத்திற்கென 11 ஈப்பு வாகனங்களை வாங்குவதற்கு ரூ.42.27இலட்சம் ஒதுக்கீடுச் செய்து ஆணை பிறப்பித்தது. ரூ.38,40,200–க்கு 11 மகேந்திரா மார்ஷல் ஈப்புகள் வாங்கப்பட்டன.

* 2003–04ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்த தொகையான ரூ.42.27 இலட்சம் மிகுதியான தொகையிலிருந்து ரூ.3,86,800 மதிப்புள்ள ஒரு மகேந்திரா மார்ஷல் ஈப்பு, இணை இயக்குநர், சென்னை உபயோகத்திற்கென வாங்குவதற்கு அரசு அனுமதி அளித்தது. 2004–2005இல் இவ்வியக்ககத்தின் துணை இயக்குநர்களின் உபயோகத்திற்கென 11 கணினிகள் வாங்குவதற்காக ரூ.12.02 இலட்சம் ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்தது. ரூ.10,47,521–க்கு 11 கணினிகள் வாங்கப்பட்டு 2005இல் பொருத்தப்பட்டு , மீதமிருந்த தொகை ரூ.1,54,479இல் சென்னை, குற்ற வழக்கு தொடர்வு இயக்குநர் அலுவலகத்தின் பயன்பாட்டிற்கென ஒரு கணினி வாங்குவதற்கு ஆணையிடப்பட்டு, 2005இல் அலுவலகத்தில் பொருத்தப்பட்டது.

* 2005–2006இல் இவ்வியக்ககத்தின் உதவி இயக்குநர்களின் உபயோகத்திற்கென 15 கணினிகள் வாங்குவதற்கென ரூ.14.25 இலட்சம் ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்தது. ரூ.13,87,409–க்கு 15 கணினிகள் வாங்க ஆகஸ்ட் திங்கள் 2005இல் ஏற்பாடுகள் செய்யப்பட்டு, தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

## சிறைத் துறை

* சிறைக் காவலர்களுக்கு எட்டு மணிநேர பணித்திட்டம் அமலாக்கப்பட்டதைத் தொடர்ந்து வாராந்திர ஓய்வு நாட்களில் பணிபுரியும் காவலர்களுக்கு மிகை நேரப் பணிக்கான ஊதியம் ரூ.50லிருந்து ரூ.100ஆக 20.8.2002 முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது.

* அனைத்து மத்தியச் சிறைகளிலும் பெண்கள் தனிச் சிறை வேலூர், திருச்சி மற்றும் பார்ஸ்டல்பள்ளி புதுக்கோட்டையிலும் சிறைக் காவலர்களுக்கு எட்டு மணி நேரப் பணித் திட்டத்தினை அமல்படுத்த 352 புதிய காவலர்களை நியமனம் செய்திட ஆணையிடப்பட்டுள்ளது,

* புதியதாக நியமனம் செய்யப்பட இருக்கும் 396 சிறைக் காவலர்களுக்கு, ஒரே சமயத்தில் பயிற்சி அளித்து சிறைகளில் பணியில் அமர்த்திட சேலம் மற்றும் கோவை மத்திய சிறைகளில் தற்காலிக காவலர் பயிற்சிப் பள்ளி அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது.

* முதல் நிலைக் காவலர்களுக்கு பதவி உயர்வு அளிக்கும் பொருட்டு கிளைச் சிறைகளிலுள்ள 112 முதல் நிலைக் காவலர் பதவிகளை முதல் தலைமைக் காவலராக மேம்படுத்தி அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

* சிறைகளுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் அனைத்தையும் மாவட்ட மொத்தக் கூட்டுறவுப் பண்டக சாலைகள் கூட்டுறவு சிறப்பு அங்காடிகளில் கொள்முதல் செய்யப்பட்டு வரும் தற்போதுள்ள நடைமுறையை மாற்றி தமிழ்நாடு பகிரங்க ஒப்பந்த அடிப்படை விதி 1998–ன் அடிப்டையில் கொள்முதல் செய்திட ஆணையிடப்பட்டுள்ளது

* பெண் சிறைவாசிகள் நிருவாகத்தினை ஒழுங்கு படுத்திடவும், அவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்து, அசம்பாவித நிகழ்வுகளைத் தடுக்கும் பொருட்டு, 10 கிளைச் சிறைகள் மற்றும் 3 தனிக் கிளைச் சிறைகளை பெண்கள் தனிச்சிறைகளாக மாற்றி அரசு ஆணையிட்டுள்ளது. அச்சிறைகளில் பெண் பணியாளர்களால் மட்டுமே பெண் சிறைவாசிகள் பராமரிக்கப்படுகிறார்கள்.

* சிறைவாசிகளின் மறுவாழ்விற்காக கணிப்பொறி பயிற்சி அளிக்க ஏதுவாக ஒவ்வொரு மத்தியச் சிறையிலும் மற்றும் பெண்கள் தனிச்சிறையிலும் மொத்தம் ரூ.155 இலட்சம் செலவில் கணிப்பொறி மையம் தொடங்கப்பட்டுள்ளது.

* கிளைச் சிறைகளில் அனுமதிக்கப்படும் சிறைவாசிகளுக்கு மத்தியச்சிறை சிறைவாசிகளின் உணவுக்கு நிகரான உணவு வழங்கிட 5.3.2003 அன்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

* வரலாற்றுச் சிறப்பு மிக்க வகையில் முதல் அகில இந்திய சிறைத்துறை திறனாய்வுப் போட்டி ரூ.9.94 இலட்சம் செலவில் சென்னையில் சிறப்பாக நடத்தப்பட்டது. இது சிறைவரலாற்றில் ஒரு மைல் கல் ஆகும்.

* சிறைவாசிகளின் நலன் கருதி அனைத்து மத்திய சிறைகள் மற்றும் மாவட்ட சிறைகளில் உணவு சமைப்பதற்கும், உணவு உட்கொள்வதற்கும் அலுமினியப் பாத்திரங்களுக்கு பதிலாக எவர்சில்வர் பாத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் அனைத்து மத்தியச் சிறைகளுக்கும் உணவு விநியோகிப்பதற்கும் தள்ளு வண்டிகள் ( Trolley) வாங்கிட அரசு அனுமதி அளித்து தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

* அனைத்து மத்திய சிறைகளிலுள்ள சிறை வாசிகளுக்கும் காட்டன் சீருடைக்கு பதிலாக டெரிகாட்டன் சீருடையும், உடுக்க உடையில்லாத விசாரணை சிறைவாசிகளுக்கு அதிகப்படியான உடைகள் வழங்கிடவும் அரசு ஆணையிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

* சிறைவாசிகளின் நலன் கருதி மாநிலத்திலுள்ள மத்திய சிறைகள் மற்றும் கிளைச்சிறைகளில் உள்ள சிறைவாசிகளுக்கு குளியல் சோப்பு மற்றும் பற்பொடி வழங்கப்பட்டு வருகின்றது.

* மாநிலத்திலுள்ள அனைத்து சிறைவாசிகளின் சிறுசிறு வழக்குகளை உடன் தீர்வு செய்திட ஏதுவாக இந்திய சிறை வரலாற்றிலேயே முதன் முறையாக சிறைவாசிகள் நீதிமன்றம் மற்றும் இலவச சட்ட உதவி மையம் ஆரம்பிக்கப்பட்டு சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

* சிறைத்துறை அதிகாரிகள் மற்றும் சிறைவாசிகளுக் கிடையே தகவல் பரிமாற்ற வசதிக்கு அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பார்ஸ்டல்பள்ளி, புதுக்கோட்டை மற்றும் இரண்டு பெண்கள் தனிச்சிறைகள் ஆகியவற்றில் பொது அறிவிப்பு தகவல் சாதனம் வழங்கப்பட்டுள்ளது.

* சென்னை, மத்திய சிறையில் நடைப்பெற்ற கலவரத்தின் போது மரணமடைந்த திரு.ஜெயக்குமார், துணை சிறை அலுவலர், அவர்களது துணைவியருக்கு மதுரை அவனியாபுரத்தில் உயர் வருவாய் வீட்டு வசதி வாரிய குடியிருப்பு ( HIG) ரூ.9.20 இலட்சம் செலவில் அரசு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

* மத்திய சிறைகள் மற்றும் கிளைச்சிறைகளில் பணிபுரியும் காவலர்களுக்கு வருடத்திற்கு இரண்டு செட் சீருடை தைப்பதற்கு தேவையான தையல் கட்டணம் ரூ.200 வழங்க அரசு உத்திரவிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

* சிறைத்துறையில் பெண் பணியாளர்களின் பதவி உயர்வு வாய்ப்பினை மேம்படுத்த ஐந்து மூதாய் பதவி இடங்கள் பெண் துணைச் சிறை அலுவலர்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

* சிறைத்துறையில் தகாத செயல்களை தடுத்து சரியான நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு ஒரு காவல் துறை ஆய்வாளர், 2 காவல்துறை உதவி ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர் மற்றும் ஒரு காவலர் அடங்கிய உளவு மற்றும் விழிப்புணர்வுக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

* அனைத்து மத்திய சிறைகளுக்கும் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. சிறைவாசிகள் தகவல் முறை என்ற மென்பொருள் தேசிய தகவல் மையத்தினரால் தயார் செய்யப்பட்டுள்ளது. சிறை ஆவணங்களை கணினி மயமாக்குவதற்கு மற்ற மென் பொருள்களையும் தேசிய தகவல் மையத்தினரால் தயார் செய்யப்பட்டு வருகிறது.

* நிருவாகத்தில் ஒளிவுமறைவற்ற தன்மையினைக் கொணரவும், பொதுமக்களுக்கு இத்துறையின் செயல்பாடுகளைப் பற்றித் தெரிவிக்கும் நோக்கிலும், இத்துறையின் இணையதளம் தேசிய தகவல் மையத்தினரால் தயார் செய்யப்பட்டு நிருவகிக்கப் பட்டு வருகிறது.

* மத்திய சிறைகளில் உள்ள சிறைவாசிகள் பயில்வதற்காகவே, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தினரால், பட்ட மற்றும் பட்டய மேற்படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டம் இந்தியாவிலேயே முதன்மையானது மட்டுமல்லாமல் இத்திட்டத்தின் கீழ் நடத்தப்படும் பாடங்களின் பாடத்திட்டம் திறந்தவெளிக் கல்வித் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் பாடத் திட்டமாகும்.

* தமிழ்நாடு சிறை நடைமுறை நூல் கடைசியாக 1983ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டது. அதன் பிறகு சீர்திருத்த நிருவாகத்தில், பல்வேறு முன்னேற்றங்களும் மாற்றங்களும் நிகழ்ந்துள்ளன. அதனைக் கருத்திற்கொண்டும்; நவீனத் தேவைகளைக் கருத்திற்கொண்டும், அரசால் அமைக்கப்பட்டுள்ள குழுவால், சிறை நடைமுறை நூல் திருத்தும் பணி நடைபெற்று வருகிறது.

* சென்னையில் தற்சமயம் செயல்பட்டு வரும் மத்திய சிறை, மிகவும் நெரிசல் மிக்க பகுதியில் அமைந்து மிகுந்த இடநெருக்கடி உள்ள சிறையாகவும் இருந்து வருகிறது. எனவே, இச்சிறையை இங்கிருந்து மாற்ற வேண்டிய அவசியத்தைக் கருத்திற் கொண்டு திருவள்ளூர் மாவட்டம் புழலில் 211.92 ஏக்கர் பரப்பளவில் 1,250 விசாரணை சிறைவாசிகள், 1,250 தண்டனை சிறைவாசிகள் மற்றும் 500 பெண் சிறைவாசிகளை அடைக்கத் தக்க வகையில் மூன்று சிறைகள் கொண்ட நவீன சிறை வளாகத்தை ரூ.77.09 கோடி செலவில் அமைத்திட அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

* சுகாதார முறையில் குறித்த நேரத்தில் உணவு தயாரித்திட மத்திய சிறைகளில் இருப்பது போன்று

அனைத்து கிளைச் சிறைகளிலும் சமையல் எரிவாயு வசதி ரூ.7.32 இலட்சம் செலவில் மேற்கொள்ள ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

* கட்டுப்பாட்டு அலுவலர்கள் மற்றும் கிளைச் சிறை கண்காணிப்பாளர்களுக்குமிடையே தொடர்பு கொள்ள அனைத்து கிளைச் சிறைகளுக்கும் தொலைபேசி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

* குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973, பிரிவு 167(2)(ஆ) விற்கு திருத்தம் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, சிறைகளையும், நீதிமன்றங்களையும் வீடியோ மூலம் இணைக்கும் திட்டம் வெளியிடப்பட்டு எல்லா மத்திய சிறைகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட நீதிமன்றங்கள் ஆகிய 78 இடங்களில் அமல்படுத்தப்பட்டது. வீடியோ கான்பிரன்சிங் முறை மூலம், சிறைவாசிகளின் விசாரணைக் காலம் நீட்டிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 31.10.2005 முடிய 1,29,564 சிறைவாசிகளின் விசாரணைக் காலம் நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்லாமலேயே நீட்டிக்கப்பட்டுள்ளது.

* சிறைவாசிகளின் சுகாதார நலன் கருதி அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறை, வேலூர், திருச்சி ஆகிய இடங்களில் பூச்சிக் கொல்லி மருந்துகளை அடித்திட அரசு ஆணையிடப்பட்டது.

* கோவை மத்திய சிறையின் பாதுகாப்பினை பலப்படுத்தும் பொருட்டு 3 கண்காணிப்பு கோபுரங்கள் கட்டப்பட்டுள்ளன.

* 50 கே.வி.ஏ. திறன் கொண்ட மின் உற்பத்தி இயந்திரங்கள் பொருத்தப்பட்ட அறைகள் பாதுகாப்பு விளக்குகள் ஆகியவை வேலூர் மகளிர் தனிச் சிறையில் கட்டப்பட்டது.

* அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச் சிறை வேலூர் மற்றும் திருச்சியிலுள்ள நூலகங்களில் கூடுதல் மரச்சாமான்கள் மற்றும் புத்தகங்கள் வாங்கிட ஆணையிட்டது.

* சென்னை, வேலூர், கடலூர், திருச்சி, மதுரை, கோவை, சேலம், பாளையங்கோட்டை மற்றும் புழல் ஆகிய மத்திய சிறைகளில் அடைக்கப்படும் சிறைவாசிகளின் நடவடிக்கைகளை கண்காணிக்க வீடியோ புகைப்படக் கருவி நிறுவப்பட்டது.

* சென்னை, கோவை வேலூர், மற்றும் கடலூர் ஆகிய நான்கு சிறைகளுக்கு சிறைவாசிகளின் நலன் கருதி 4 நோயாளர் ஊர்திகள் புதியதாக வாங்க ஆணையிடப்பட்டது.

* சென்னை, புழல், கூடுதல் சிறைத்துறை இயக்குநர் அலுவலகம் மற்றும் காவலர் பயிற்சிப் பள்ளி, வேலூர் காவலர்களின் நலன் கருதி நான்கு இரு சக்கர வாகனம் ஊர்திகள் புதியதாக வாங்க ஆணையிடப்பட்டது.

* 1,200 இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு வருடத்திற்கு 300 இரண்டாம் நிலைக் காவலர்கள் வீதம் நான்கு ஆண்டுகளில் முதல் நிலைக் காவலராகப் பதவி உயர்வு அளிக்கும் வகையில் இரண்டாம் நிலைக் காவலர் பதவிகளை முதல் நிலைக் காவலர் பதவிகளாக மேம்படுத்தி ஆணையிட்டது.

* 9 மத்திய சிறைகள் மற்றும் 2 பெண்கள் தனிச் சிறைகளுக்கு சிறைவாசிகளின் கைரேகைகளை பதிவு செய்து பராமரித்திட மென்பொருள் நேஷனல் இன்பர்மேடிக் சிஸ்டம் மூலம் தயாரிக்க ஆணையிடப்பட்டது.

* அனைத்து மத்திய சிறைகளுக்கும் தலா இரண்டு கதவில் பொருத்தும் உலோகம் கண்டறியும் கருவிகள் வாங்கிட ஆணையிடப்பட்டது.

* கோவை மத்தியச் சிறையில் 15 எண்கள் மற்றும் கடலூர் மத்திய சிறையில் 5 எண்கள் செல்லிடத்துப் பேசியை, செயல் இழக்கச் செய்யும் கருவி வாங்கிட ஆணையிடப்பட்டது.

* கோவை மத்திய சிறைக்கு எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய ஒரு எக்ஸ்ரே ஸ்கேனர் கருவி சிறைவாசிகள் நலன் கருதி வாங்க ஆணையிடப் பட்டது.

* கூடுதல் சிறைத்துறை இயக்குநர் அலுவலகத்தின் உபயோகத்திற்கென ஒரு பன்முகப் படக்காட்சிக் கருவி வாங்கிட ஆணையிடப்பட்டது.

* அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பார்ஸ்டல்பள்ளி, புதுகை மற்றும் பெண்கள் தனிச் சிறை, வேலூர், திருச்சி ஆகிய சிறைகளுக்கு கைக்குள் உலோகம் கண்டறியும் கருவி வாங்கிட ஆணையிடப்பட்டது.

* கோவை மத்திய சிறைக்கென பன்முக கதவில் பொருத்தும் உலோகம் அறியும் கருவி 2 எண்கள் வாங்கிட ஆணையிடப்பட்டது.

* 530 இரண்டாம் நிலைக் காவலர் காலிப் பணியிடங்களை நிரப்பிட அரசு ஆணையிடப் பட்டது.

* எட்டு மத்திய சிறைகளுக்கு தலா 2 நீராவி கொதிகலன்களையும் வேலூர் பெண்கள் தனிச் சிறைக்கு ஒரு நீராவி கொதிகலனும் வாங்கிட ஆணையிடப்பட்டது.

* சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ், ஐந்து ஆண்டுகளுக்கு ( 2002–2007) ரூ.1907 லட்சம் செலவில், புதிய சிறைகளை கட்டுதல், சிறைக் கட்டடங்களைப் பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல், சுகாதாரம் மற்றும் குடிநீர் விநியோகம், சிறைப்பணி யாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் போன்ற பணிகளை மத்திய சிறைகளில் மேற்கொள்ள ஆணையிட்டுள்ளது.

* கடந்த மூன்றாண்டுகளில் ரூ.48.08 கோடி ஒதுக்கப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 484 பணியாளர் குடியிருப்புகள் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது.

- ✶ மதுரை மற்றும் பாளையங்கோட்டை மத்திய சிறைகளில் அதிக அளவில் சிறைவாசிகள் அடைக்கப்படுகின்றனர். சிறைவாசிகளின் நலன் கருதி, ஸ்ரீ வைகுண்டம், திண்டுக்கல், நாகர்கோவில், விருதுநகர், இராமநாதபுரம், ஆகிய மாவட்டங்களில் உள்ள கிளைச் சிறைகளை மாவட்ட கிளைச் சிறையாக மேம்படுத்தி அரசு ஆணையிடப் பட்டுள்ளது.
- ✶ 500 பெண் சிறைவாசிகளை அடைக்கும் வகையில் திருச்சியில் புதியதாக பெண்கள் தனிச் சிறை அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.
- ✶ 100 பெண் சிறைவாசிகளை அடைக்கும் வகையில் கடலூர் மத்திய சிறை வளாகத்தில் புதியதாக பெண்கள் தனிச் சிறை அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

✶ ✶ ✶

# நிதித்துறை

- ❖ 2004–2005ஆம் ஆண்டில், தமிழ்நாடு, அகில இந்திய வளர்ச்சி நிலையை மிஞ்சும் வகையில் 8.73 சதவிகிதம் என்ற வளர்ச்சியை எய்தியுள்ளது. இவ்வளர்ச்சி 2005–2006ஆம் ஆண்டில் மேலும் உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- ❖ 2002–2007ஆம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட பத்தாவது திட்ட காலத்திற்கான திட்ட இலக்கை, 40,000 கோடி எனும் அளவிற்கு பெரும் வளர்ச்சித் திட்டத்தை இவ்வரசு தயாரித்துள்ளது. 2005–2006ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.9,100 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது 2001–2002ஆம் ஆண்டின் இலக்கைவிட 75 சதவிகிதம் வளர்ச்சி கொண்டதாகும். 2006–2007ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி 2006–2007ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.11,709 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது 2005–2006ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 28.67 சதவீதம் வளர்ச்சி கொண்டதாக இருக்கும்.
- ❖ 2001–2002ஆம் ஆண்டில் பட்டிகளுக்குத் தொகை கொடுக்காமல் விடப்பட்டு செயற்கையாக குறைத்துக் காட்டப்பட்ட ரூ.2,739 கோடி அளவிலான வருவாய்ப் பற்றாக்குறை, 2004–2005ஆம் ஆண்டில் ரூ.703 கோடி அளவிற்கு குறைந்துவிட்டது. 2005–2006ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுகளின்படி, இது ரூ.360 கோடி எனும் அளவிற்கு மேலும் குறையும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.
- ❖ 2001–2002ஆம் ஆண்டில் ரூ.1,777.91 கோடி எனும் அளவிலிருந்து வருவாய் ஈட்டும் சொத்துக்களை உருவாக்கும் மூலதனச் செலவு 2005–2006ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுகளின்படி ரூ.4,843.18 கோடி அளவிற்கு உயரும்.
- ❖ ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்பு வளையத்திற்கு 2005–2006ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ.7,528.09 கோடி அளவிற்கு உயர்த்தப் பட்டுள்ளது.
- ❖ சொத்துக்களை உருவாக்குதல் மற்றும் பராமரிப்பிற்கான ஒதுக்கீடு 2001–2002ஆம் ஆண்டிலிருந்த ரூ.1,681.72 கோடி அளவிலிருந்து 2005–2006ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடுகளின்படி ரூ.4,389.02 கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது.
- ❖ ரூ.2,160 கோடி செலவிலான தமிழ்நாடு சாலைப் பகுதித் திட்டத்திற்கு உலக வங்கி ஏற்பளித்துள்ளது. ரூ.597.15 கோடி ஒதுக்கீடுடைய தமிழ்நாடு சுகாதார முறைகள் திட்டம் உலக வங்கியின் ஏற்பைப் பெற்றுள்ளது.
- ❖ ரூ.567.42 கோடி ஒதுக்கீட்டிலமைந்த தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்–II செயல்படுத்தப் படுவதற்கு ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- ❖ ரூ.1,884.21 கோடி ஒதுக்கீடுடைய தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாடுத்திட்டம்–III மற்றும் ரூ.717.12 கோடி ஒதுக்கீடுடைய தமிழ்நாடு அதிகாரமளித்தல் மற்றும் வறுமைக் குறைப்புத் திட்டம் ஆகியவை உலக வங்கியின் ஏற்பைப் பெற்றுள்ளன.
- ❖ ரூ.3,900 கோடி மூலதனச் செலவிலான பாசன வேளாண்மையை நவீனப்படுத்துதல் மற்றும் நீர் ஆதார மேலாண்மைத் திட்டம் விரைவில் உலக வங்கியின் ஒப்புதலைப் பெறும் நிலை உள்ளது.

✶ ✶ ✶

# பொதுப்பணித்துறை



❖ பல்வேறு அரசுத்துறைகளுக்காக பொதுமக்கள் பயன்பாட்டுக்குரிய கட்டடங்களைக் கட்டிப் பராமரித்திடும் வகையில், பொதுப்பணித் துறையின் கட்டட அமைப்பின் மூலம், இதுவரை ரூ.584.76 கோடியில் பல்வேறு துறைகளைச் சார்ந்த கட்டடப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

❖ நீர்வள ஆதார தொகுப்புத் திட்டம், ரூ.1,136 கோடி மதிப்பில் உலக வங்கி உதவியுடன் செயலாக்கப்பட்டு, 30.9.2004 அன்று நிறைவடைந்தது. உலக வங்கியின் "இறுதி அறிக்கையினைச் செயல் படுத்தும் குழு'' நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தினை ஆய்வு செய்து இப்பணிகள் மொத்தத்தில் திருப்திகரமாக உள்ளதாக அறிக்கை அளித்துள்ளது.

❖ நீர்வள ஆதார தொகுப்புத் திட்டம்–IIக்கான ரூ.2,900 கோடி மதிப்பீட்டிலான கருத்துரு உலக வங்கியின் நிதிஉதவி பெற அனுப்பப்பட்டுள்ளது.

❖ ரூ.52.33 கோடி மதிப்பில் 15 சிறுபாசன பணிகள், ரூ.4.66 கோடி மதிப்பில் 14 சிறப்பு சிறுபாசன பணிகள், 2004–2005க்கான பகுதி - II திட்டமாக ரூ.9.30 கோடி மதிப்பில் 9 திட்டங்கள், ஆர்ஐடிஎப்–ன்கீழ் ரூ.10.71 கோடி மதிப்பில் நபார்டு வங்கியின் நிதிஉதவியுடன் 10 திட்டங்களின் பணிகள் நிறைவேற்ற ஆணை வழங்கப்பட்டுள்ளது.

❖ ஒருங்கிணைந்த நீர்வள ஆதார மேலாண்மை திட்டம் – IIன் கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஏரிகள் மற்றும் கால்வாய்களைப் புனரமைக்கும் பணிகளுக்காக ரூ.22.56 கோடி மதிப்பிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

❖ 2005–2006ஆம் ஆண்டுக்கான பகுதி–II திட்டத்தின்கீழ் ரூ.62 கோடி மதிப்பீட்டில் 290 மானாவாரி ஏரிகளைப் புனரமைக்க ஆணையிடப்பட்டுள்ளது.

❖ 2005–2006ஆம் ஆண்டுக்கான பகுதி–II திட்டத்தின்கீழ் தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள் மற்றும் கீழ் பாலாறு வடிநில மேம்பாட்டிற்காக 4 சிறுபாசன திட்டங்களுக்கு ரூ.27.90 கோடி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

❖ ரூ.4 கோடி செலவில் 2005–2006 பகுதி–2 திட்டத்தின்கீழ் தேனி, திண்டுக்கல், திருச்சி, கரூர், நாமக்கல், கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர் மாவட்டங்களில் 8 சிறப்பு சிறுபாசன திட்டங்களை செயல்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

❖ ரூ.198.36 கோடி மதிப்பில் 14 பாசனத் திட்டங்களுக்கு நபார்டு வங்கி அனுமதி அளித்துள்ளது.

❖ நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் (ஆர்ஐடிஎப் XI) ரூ.53.29 கோடி மதிப்பீட்டில் 7 பாசன திட்டங்களைச் செயல்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

❖ நபார்டு வங்கி நிதியுதவியுடன் 250 ஏரிகளை ரூ.67.37 கோடி மதிப்பீட்டில் சீரமைக்க ஆணையிடப் பட்டுள்ளது.

❖ ஹட்கோ நிதியுதவியுடன் கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ரூ.56.17 கோடி மதிப்பிலும் விழுப்புரம் மாவட்டம், நடுக்குப்பத்தில் ரூ.90 இலட்சம் மதிப்பிலும் கடலரிப்புத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.

❖ வடசென்னையிலுள்ள எண்ணூர் துரித வழி தடத்தில் 2.38 கி.மீ. நீளத்திற்கு ரூ.10.57 கோடி மதிப்பில் கடலரிப்புத் தடுப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

❖ சென்னை குடிநீர் வழங்கல் அதிகப்படுத்தும் திட்டம்–IIக்கு தமிழக அரசால் ரூ.124 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

❖ வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ், ரூ.105 கோடி மதிப்பீட்டில் 1,750 ஏரிகள் தூர்வாரி மேம்படுத்தப்பட்டுள்ளன.

❖ தமிழக ஆற்றுப்படுகைகளில் வரைமுறையின்றி மணல் எடுப்பதைத் தடுத்து நேரடியாக பொதுப்பணித்துறை மூலம் 239 குவாரிகளில் மணல் எடுத்து 171 இடங்களில் சேகரித்து 1 லாரிக்கு ரூ.1,000/– வீதம் விற்கப்பட்டது. தற்போது பொதுமக்களின் கோரிக்கைக்கிணங்க ஒரு லாரி சுமை ரூ.600 என்று குறைத்து நிர்ணயம் செய்து விற்கப்பட்டு வருகிறது.

* * *

# நெடுஞ்சாலைத்துறை

* 4,091 கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலைகள், 7,002 கி.மீ. நீள மாநிலச் சாலைகள், 7,383 கி.மீ. நீள மாவட்ட முக்கியச் சாலைகள், 41,209 கி.மீ. நீள மாவட்ட இதர சாலைகள், 1,700 கி.மீ. நீள கரும்பு சாலைகள் என மாநிலத்தில் உள்ள மொத்தம் 61,385 கி.மீ. நீள சாலைகளை நெடுஞ்சாலைத்துறை பராமரித்து வருகிறது.



* 2001 – 2002ஆம் ஆண்டு முதல் 2005 – 2006 வரை திட்டப் பணிகளின் கீழ், ரூ.5,783.6331 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் ரூ.3,718.9669 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் நடந்தேறி வருகின்றன.

* நபார்டு வங்கியின் கடன் உதவியுடன் 500 முதல் 1000 வரை மக்கள் தொகை உள்ள கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கும் நோக்கத்துடன், ஊரகச்சாலைகள் திட்டம், சிறப்பு உறுப்புத் திட்டம் மற்றும் பேருந்து சாலைகளை மேம்படுத்தும் திட்டம் ஆகியவை அடங்கிய குறைந்தபட்ச சேவைகள் திட்டத்தின்கீழ், 3,225.58 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 69 பாலங்களும் ரூ. 451.39 கோடி மதிப்பில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

* நபார்டு வங்கியின் கடன் உதவியுடன், ஊரக உள் கட்டமைப்பு வளர்ச்சி நிதியைக் கொண்டு, 2,970.85 கி.மீ நீள சாலைப்பணிகளும் 409 பாலப் பணிகளும் ரூ. 454.53 கோடி மதிப்பில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

* பகுதி - II திட்டத்தின் கீழ், 214.34 கி.மீ நீள சாலைப் பணிகளும், 278 பாலப்பணிகளும் ரூ. 59.23 கோடி மதிப்பில் இதுவரை செய்து முடிக்கப்பட்டுள்ளன.

* புதுப்பணிகள் திட்டத்தின் கீழ், இதுவரை 5,904.28 கி.மீ நீள சாலைகள் ரூ.419.46 கோடி மதிப்பில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

* விரிவான சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 1,420.26 கி.மீ நீள மாநில நெடுஞ்சாலைகள், 1,675.99 கி.மீ நீள மாவட்ட முக்கியச் சாலைகள், 3,596.62 கி.மீ நீள மாவட்ட இதர சாலைகள் என மொத்தம் 6,692.87 கி.மீ நீள சாலைகளை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

* புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதி திட்டத்தின் கீழ், இதுவரை 3,335.42 கி.மீ நீள சாலைப் பணிகளும் 81 பாலப் பணிகளும் ரூ. 435.75 கோடி மதிப்பில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

* சென்னைப் பெருநகர் எல்லையில் உள்ள உள்கட்டமைப்பு வசதிகளை ரூ.18,000 கோடி மதிப்பில் மேம்படுத்தும் மாபெரும் திட்டம் ஒன்று இறுதி செய்யப்பட்டு, சென்னை மாநகரின் பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த 2003–2004இல் ரூ.49.87 கோடி மதிப்பிலான பணிகளுக்கும் 2004–2005இல் ரூ.290.40 கோடி மதிப்பிலான பணிகளுக்கும் 2005–2006இல் ரூ.555.40 கோடி மதிப்பிலான பணிகளுக்கும் ஒப்புதல் வழங்கப் பட்டது. 86.30 கி.மீ. நீள சாலைப் பணிகள் ரூ.63.56 கோடி மதிப்பில் செய்து முடிக்கப்பட்டன. சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வேகமாக வளர்ந்து வரும் போக்குவரத்தினைக் கருத்தில் கொண்டு, மாநகரில் போக்குவரவு மற்றும் போக்குவரத்து வசதிகளை ரூ.574 கோடி மதிப்பில் மேம்படுத்தும் பணிகளை, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–3ன் கீழ் மேற்கொள்ள, அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

* ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய மற்றும் வகைப்படுத்தப் படாத சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.150 கோடி மதிப்பில் 2004–2005ஆம் ஆண்டில் 3,038 கி.மீ. நீள சாலைப்பணிகள் மேற்கொள்ளப் பட்டு, இதுவரை 2,896.94 கி.மீ. நீள சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

* 2005–2006இல் ரூ.100 கோடி மதிப்பில் பேருந்து தடச் சாலைகளை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இதுவரை ரூ.19.61 கோடி மதிப்பில் 42 கி.மீ. நீள சாலைப்பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

* மேற்கு மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், இதுவரை, ரூ. 2.45 கோடி மதிப்பில் 32.40 கி.மீ நீள சாலைப் பணிகளும் 4 பாலப் பணிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.5.87 கோடி மதிப்பில் 234.80 கி.மீ நீள சாலைப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.


* தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் மூலமாக, பொதுமக்களிடமிருந்து, பங்குப் பத்திரங்கள் வாயிலாகத் திரட்டப்பட்ட நிதியைக் கொண்டு பழுதடைந்த மாவட்ட இதர சாலைகளை, படிப்படியாக சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் 4,890 கி.மீ. நீள சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் எஞ்சியுள்ள 2,557 கி.மீ. நீள சாலைப்பணிகள் ரூ.171.19 கோடி மதிப்பீட்டில் 2001–2002ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டன. 2003–2004ஆம் ஆண்டில் ரூ.3.91 கோடி மதிப்பில் 61 கி.மீ. நீள சாலைப் பணிகள் கூடுதலாக முடிக்கப் பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட அனைத்து சாலைப் பணிகளும் முடிக்கப் பட்டுவிட்டன.

* பேருந்து தடச்சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ. 150 கோடி மதிப்பில் 3,078 கி.மீ நீள மாவட்ட இதர சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

* காவிரி பாசன மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் பழுதடைந்த 204 பாலங்களை ரூ.200 கோடி மதிப்பீட்டில் திரும்பக் கட்ட அரசு முடிவு செய்து, நபார்டு கடன் உதவித் திட்டம், மத்திய சாலை நிதித்திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் பாலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதுவரை 178 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

* ஹட்கோ கடன் உதவியைக் கொண்டு, சென்னை நகரைச் சுற்றி ஆரச்சாலைகளை அமைத்து மேம்படுத்தும் திட்டத்தின் கீழ், இதுவரை 50.28 கி.மீ. நீளமுள்ள சாலை மேம்பாட்டுப் பணிகள் மற்றும் 8 சிறிய பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

* சாலைகளின் மேற்தளத்தைப் புதுப்பிக்கும் திட்டத்தின் கீழ், 2001–2002இல் ரூ.92.14 கோடி மதிப்பீட்டில் 2,295 கி.மீட்டர் அளவிலான சாலைகளின் மேற்தளம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. முதலமைச்சரின் சிறப்பு சாலை பழுது பார்ப்புத் திட்டத்தின் கீழ், 2002–2003 முதல் 2004–2005 வரை ரூ.578 கோடி மதிப்பீட்டில் 12,699 கி.மீ. அளவிலான சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.



* 2005–2006ஆம் ஆண்டில் பராமரிப்புப் பணிகளின் கீழ், இதுவரை ரூ.87.82 கோடி மதிப்பில் 1,454.45 கி.மீ. நீள சாலைப் பணிகள் முடிக்கப் பட்டுள்ளன.

* 2001–2002ஆம் ஆண்டில் 2,817 கி.மீ. நீளமுள்ள மாவட்ட முக்கிய சாலைகளும், 151 கி.மீ. நீளமுள்ள மாவட்ட இதர சாலைகளும் மாநில நெடுஞ்சாலைகள் தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளன. 2004–2005ஆம் ஆண்டில் 400.81 கி.மீ நீள மாநில நெடுஞ்சாலைகள் தேசிய நெடுஞ்சாலைகளாக தரம் உயர்த்தப் பட்டுள்ளன. 189.30 கி.மீ. நீள மாவட்ட இதர சாலைகள் மாவட்ட முக்கிய சாலைகளாக தரம் உயர்த்தப்பட்டன.

* இருப்புப்பாதை பணிகள் திட்டத்தின் கீழ், இதுவரை 5 சாலை மேம்பாலம் மற்றும் கீழ்ப்பாலங்கள் கட்டப்பட்டுள்ளன.

* ஹட்கோ கடனுதவியுடன் ரூ.513.92 கோடி மதிப்பீட்டில் 36 சாலை மேம்பாலம் / கீழ்ப்பாலங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் 5 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

* ஹட்கோ கடனுதவியுடன் ரூ.112 கோடி மதிப்பீட்டில், சாலை மற்றும் பாலப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 125.36 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 1 உயர்மட்டப் பாலப் பணியும் முடிக்கப்பட்டுள்ளன.

* ஹட்கோ கடனுதவியுடன் ரூ.60 கோடி மதிப்பீட்டில், 60 பாலங்களைத் திரும்பக் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு, 32 பாலப்பணிகள் ரூ.23.63 கோடி மதிப்பில் செய்து முடிக்கப் பட்டுள்ளன.

* தேசிய நெடுஞ்சாலை திட்டப் பணிகளின் கீழ், 1,222 கி.மீ. நீள சாலைப்பணிகளும், 29 பாலப் பணிகளும் ரூ.330 கோடி மதிப்பில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

★ ★ ★

# ஊரக வளர்ச்சித்துறை

* அனைத்து கட்டமைப்பு வசதிகளையும் செயல்படுத்தி கிராமங்களின் தரத்தை முன்னேற்றும் வகையில் 2004 – 2005 ஆம் ஆண்டில் ரூ.182.96 கோடி மதிப்பீட்டில் "நமது கிராமம்" திட்டத்தின் கீழ், செயலாக்கம். இதுவரை, ரூ.1,518 கி.மீ. நீள சிமெண்ட் சாலைகள், 33,689 தெருவிளக்குகள் மற்றும் 3,162 இதர பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

* ரூ.10.37 கோடி செலவில் 1,113 கிராம ஊராட்சிகளும், 385 ஊராட்சி ஒன்றியங்களும், 29 உதவி இயக்குநர் அலுவலகங்களும், ஊரக வளர்ச்சித்துறை இயக்குநரகமும் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. 2005 – 2006 ஆம் ஆண்டில் 5,409 கிராம ஊராட்சிகளுக்கு, கணினிகள் ரூ.28.33 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படுகின்றன.

* 31 ஊராட்சிகள் மாதிரி கிராம பயிற்சி மையங்களாகத் தேர்வு செய்யப்பட்டு, அவற்றின் மூலம் இதர ஊராட்சிகளும் சிறப்பாக மேம்படத் தேவையான பயிற்சி அளித்திட இதுவரை ரூ.0.184 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* தமிழகத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டத்தின் கீழ், ஊரக வளர்ச்சித்துறை மூலம் 47 எரிசக்தி கலன்கள், 1,210 கழிப்பறையுடன் இணைந்த கரிம எரிவாயுக்கலன்கள், 8,837 கரிம வாயுக்கலன்கள், 3,925 சூரிய ஒளியில் இயங்கும் தெருவிளக்குகள், 1,025 சூரிய ஒளியில் செயல்படும் வீட்டு மின் விளக்குகள் மற்றும் 22 சூரிய ஒளியில் இயங்கும் பம்புகள் போன்றவற்றை செயல்படுத்தி, தமிழக அரசு, தேசிய அளவில் பாராட்டைப் பெற்றுள்ளது.

* முழுச் சுகாதாரத் திட்டத்தின் கீழ், 2001–2002 ஆம் ஆண்டு முதல் மத்திய மற்றும் மாநில அரசுகள் ரூ.173.88 கோடி நிதி ஒதுக்கீட்டில், 17,36,810 தனிநபர் இல்லக் கழிப்பறைகள், 21,979 பள்ளிக்கழிப்பறைகள், 17,892 அங்கன்வாடி கழிப்பறைகள் மற்றும் 608 மகளிர் ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன.

* ஊரகப்பகுதிகளில் 66 இலட்சத்து 61 ஆயிரத்து 965 கட்டடங்களில், மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை தவிர, 1,36,026 திறந்த வெளி மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

* கிராமப்புறங்களில் 869 பழமையான ஊருணிகள் ரூ.18.47 கோடி செலவில் புனரமைக்கப்பட்டுள்ளன.

* 13 மாவட்டங்களில் வறுமையின் கோரப்பிடியில் சிக்குண்டு தவித்த சுமார் 25,000 நெசவாளர் குடும்பங்களின் துயர்துடைக்க ரூ.14.47 கோடி ஒதுக்கீட்டில் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப் படுகிறது.

* உடல் மற்றும் மனவளர்ச்சி குன்றியோர் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு, இராமநாதபுரம், கோவை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் சுய தொழிலை மேம்படுத்திட ரூ.8.11 கோடி செலவில் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

* 1,54,502 மகளிருக்கு தொழில் முனைவோர் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.103.960 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

* நிலத்தடி நீரை மேம்படுத்தும் நோக்கில், ரூ.168.19 கோடியில் 20,936 கிராமக் குளங்கள் பல்வகை பயன்பாட்டிற்கென மேம்படுத்தப் பட்டுள்ளன.

* சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல், சுகாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் மரபு சாரா எரிசக்தியைப் பயன்படுத்தும் திட்டத்தின் கீழ், 1,222.573 கி. மீட்டர் நீளத்திற்கு பிளாஸ்டிக் கழிவுடன் கூடிய தார்ச்சாலை மற்றும் 3,925 சூரிய ஒளியால் இயங்கும் தெருவிளக்குகள் அமைக்கப்பட்டன. மேலும், 916 தனிநபர் கழிப்பிடங்கள் மரபு சாரா எரிவாயுக் கலன்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.

* சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், ரூ.1,357.51 கோடி மதிப்பீட்டில், 5,53,681 பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் வாயிலாக ரூ.21.67 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப் பட்டன.

* வறட்சி நிவாரணப் பணிகளில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு கூலியாக 9.53 இலட்சம் மெ.டன் அரிசியும், ரூ.197.72 கோடி ரொக்கமும் வழங்கப்பட்டன.

* ரூ.86.21 கோடியில், 13,928 கதிரடிக்கும் நெற் களங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

* ரூ.127.85 கோடியில், 12,974 மகளிர் சுயஉதவிக் குழுக்களின் பயன்பாட்டிற்காக கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

* ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ், ரூ.507.26 கோடி செலவில், 1,50,553 புதிய தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. ரூ.90.39 கோடி மதிப்பீட்டில் 82,455 கச்சா வீடுகள் மேம்பாடு செய்யப்பட்டன.

* பிரதம மந்திரி கிராம வளர்ச்சித்திட்டத்தின் கீழ், ரூ.91.33 கோடி மதிப்பீட்டில், 26,541 வீடுகள் கட்டித் தரப்பட்டன.

* பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், 10,34,490 உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில், 68,966 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.69.59 கோடி மதிப்பிலான சுழல் நிதியும், 17,737 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.145.92 கோடி மதிப்பீட்டில் மானியத்துடன் கூடிய பொருளாதார உதவிகளும் ரூ.5.67 கோடி பொருளாதார உதவிகள் 7,812 தனி நபர்களுக்கு வழங்கப்பட்டு, ஆக 2,81,771 உறுப்பினர்களது வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

* ரூ.277.79 கோடியில் மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான 13,062 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன.

* சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.1,005.80 கோடியில், 69,157 பல்வேறு பணிகள் செய்து முடிக்கப் பட்டுள்ளன.

* 11,573 கிராம நிருவாக அலுவலகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

* தன்னிறைவுத் திட்டத்தின் கீழ், ரூ.195 கோடி மதிப்பீட்டில் 11,764 பல்வேறு அடிப்படை வசதிகளை உருவாக்கும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

### சிறப்பு சிற்றூராட்சிகள்

* சிறப்பு சிற்றூராட்சிகளில் ரூ. 384.33 கோடி மதிப்பீட்டில் 8,540.57 கி.மீ. சாலைகள் மேம்படுத்தப் பட்டுள்ளன.

* சிறப்பு சிற்றூராட்சிகளில் 69,011 தெரு விளக்குகள் ரூ.35.94 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளன.

* 4,842.38 கி.மீ வடிகால் / மழை நீர் வடிகால்கள் ரூ.101.70 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

* குடிநீர் திட்டப் பணிகள் ரூ.121.66 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* இதரப் பணிகளான கட்டடப் பணிகள், கழிப்பறைகள் போன்றவை ரூ.144.79 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக ரூ.18.72 கோடி மதிப்பீட்டில் ஹட்கோ, வாம்பே மற்றும் டி.என்.யூ.டி.பி.–2 திட்ட நிதியுதவியுடன் 720 ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டு, பயனாளிகள் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

* 2005–2006ஆம் ஆண்டில் முழு சுகாதாரத் திட்டம் தமிழகத்தில் 28 மாவட்டங்களில் ரூ.42 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

* சுவர்ண ஜெயந்தி நகர்ப்புற கூலி வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், ரூ.1.91 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 25,376 மனித வேலை நாட்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

* வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள 8,089 பயனாளிகளுக்கு சுவர்ண ஜெயந்தி சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், ரூ.2.32 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பயனாளிகளுக்கு தொழில்கள் மேற்கொள்ள பல்வேறு தொழிற் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. மேற்படி பயனாளிகளின் பொருட்களை விற்பனை செய்ய கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

* 1,032 சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு பல்வேறு தொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. சுனாமிக்கு பிறகு மொத்தம் 1,740 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவர்களுக்கும் பயிற்சி மற்றும் தொழிற்கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

* வீட்டு உபயோகப் பொருள்கள், குழாய் பழுது பார்த்தல், கொத்து வேலை செய்தல் மற்றும் சிறிய பழுதுகளைப் பார்த்தல் முதலானவற்றில் மகளிர் குழுக்களுக்கு உரிய பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்கள் மூலமாக முக்கியமான சிறப்பு

சிற்றூராட்சிகளில், மொத்தம் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் 15 சேவை மையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

* பிக்கட்டி, பொன்னம்பட்டி, புல்லம்பாடி, குரும்பலூர், இலுப்பூர், மேல்பட்டாம்பாக்கம், அனந்தபுரம், செஞ்சி, வடலூர், வள்ளாலப்பட்டி, பரவை, பூதிபுரம் ஆகிய 12 சிறப்பு சிற்றூராட்சிகளில் சோதனை முறையில் வரி வசூல், குடிநீர் பராமரிப்பு, திடக்கழிவு மேலாண்மை ஆகிய திட்டங்கள் சுய உதவிக் குழுக்கள் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

* திடக்கழிவு மேலாண்மை திட்டம், வேலூர் மாவட்டம், காந்திநகர் சிறப்பு சிற்றூராட்சியில் துவக்கப்பட்டு, மிக சிறப்பாக நடைபெற்று வருகிறது. அண்மையில் நிர்மல் கிராம் புரஷ்கார் கிராமிய விருது வழங்கிய விழாவில் மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்கள் இத்திட்டத்தை வெகுவாக பாராட்டியுள்ளார்கள்.

* தருமபுரி மாவட்டம், பாலக்கோடு சிறப்பு சிற்றூராட்சியிலும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்குட்பட்ட 21 சிறப்பு சிற்றூராட்சிகளிலும் ரூ.4 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இத்திட்டம் புராதனம், சுற்றுலா, தொழில் தொடர்பான இதர 150 சிறப்பு சிற்றூராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

* சிறப்பு சிற்றூராட்சி பகுதிகளில் சிறப்பு சிற்றூராட்சிக்கு சொந்தமான கட்டடங்கள் / குடியிருப்பு வீடுகள் / வணிகம் / தொழிற் கூடம் / தனியார் கட்டடங்கள் / ஏரிகள் / குளங்கள் / ஊருணிகள் / கிணறுகள் ஆக மொத்தம் 21,88,348 மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

* 2003 – 2004 மற்றும் 2004 – 2005 ஆம் ஆண்டுகளில் 602 மழை நீர் சேகரிப்புப் பணிகள் ரூ.3.45 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் தரத்தை உயர்த்தும் பொருட்டு 2005 – 2006 ஆம் ஆண்டு சிறப்பு சிற்றூராட்சிகளில் ரூ.9.75 கோடி மத்திய அரசு மானியமும், ரூ.3.25 கோடி மாநில அரசு மானியத்துடனும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

* ஆழிப்பேரலையினால் கடும் பாதிப்பு ஏற்பட்டு மனித உயிர்கள், உடைமைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு பெருஞ்சேதம் ஏற்பட்ட பகுதிகளில் உடனடியாக ரூ.76 இலட்சம் மதிப்பீட்டில் துயர் துடைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்படி சிறப்பு சிற்றூராட்சிகளில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்ட 938 துப்புரவு பணியாளர்களது சேவையைப் பாராட்டி, ஒவ்வொருவருக்கும் ரூ.2,500 வீதம் வெகுமதி அளிக்கப்பட்டது. மேலும், ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் ரூ.52.13 கோடி மதிப்பீட்டில் மறு வாழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

* 561 சிறப்பு சிற்றூராட்சிகளிலும் கணினிகள் பொருத்தப்பட்டு, பொதுமக்களுக்கு கணினியின் மூலம் உடனுக்குடன் பிறப்பு, இறப்பு குறித்து பதிவு செய்தல் மற்றும் அதற்குரிய சான்று வழங்கப் படுகிறது. மேலும், வீட்டு வரி, தொழில் வரி, குடிநீர் வரி, வரியில்லா இனங்கள் மற்றும் அலுவலக நிருவாகம் ஆகியவை கணினிமயமாக்கப் பட்டுள்ளன.

* திரவக்கழிவு மேலாண்மைத் திட்டம் சூலூர் சிறப்பு சிற்றூராட்சியை முன்னோடியாகக் கொண்டு மேலும் 18 சிறப்பு சிற்றூராட்சிகளில் விரிவுபடுத்தப் படவுள்ளது.

* புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டத்தின் கீழ், 3 எரிசக்திக் கலன்கள், 15 கழிப்பறையுடன் இணைந்த கரிம வாயுக் கலன்கள், 704 சூரிய ஒளியில் இயங்கும் தெரு மின் விளக்குகள் ஆகியவை தற்போது இயங்கி வருகின்றன.

* ரூ.1 கோடி செலவில் ஆரல்வாய்மொழி சிறப்பு சிற்றூராட்சியில் காற்றின் சக்தி கொண்டு இயங்கும் காற்றாலை அமைக்கப்படவுள்ளது.

* * *

# நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை

**ஊரகக் குடிநீர்த் திட்டம் :**

- ❖ 28,888 ஊரகக் குடியிருப்புகளுக்கு தனி மின் விசைத் திட்டங்கள் மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூலமாக, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டது. மேலும் 1,635 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அளிக்கப்படும். ஆக மொத்தம் 30,523 குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளிக்கப்படும்.

- ❖ கைப்பம்புகளிலிருந்து குடிநீர் பெறுவதில் கிராமப்புற மகளிருக்கு இருந்த கடின நிலையை எளிதாக்கிட, 39,051 கையிறைப்பான்களை மாற்றித் தரைமட்டத் தொட்டியுடன் கூடிய சிறு மின்னிறைப்பான் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும், 745 சிறு மின்னிறைப்பான் திட்டங்கள் நிறைவேற்றப்படும். ஆகமொத்தம் 39,796 சிறு மின்னிறைப்பான் திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

- ❖ 217 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ரூ.1,513.87 கோடி மதிப்பீட்டில் 98 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றப்பட்டு பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும், 25 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ரூ.164.71 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்படும். ஆகமொத்தம் 242 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ரூ.1,678.58 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்படும்.

- ❖ பிரதம மந்திரி கிராம யோஜனா திட்டம், "நபார்டு" நிதி உதவித் திட்டம் மற்றும் விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், தடுப்பு அணைகள், கசிவு நீர்க் குட்டைகள், நிலத்தடித் தடுப்பணைகள் உள்ளிட்ட 2,182 நிலத்தடி நீர் செறிவூட்டல் கட்டமைப்புகள் ரூ.57.29 கோடி செலவில் உருவாக்கப் பட்டுள்ளன. மேலும் 250 நீர் செறிவூட்டல் கட்டமைப்புகள் ரூ.5 கோடி செலவில் நிறைவேற்றப் படும். ஆக மொத்தம் 2,432 நீர் செறிவூட்டல் கட்டமைப்புகள் ரூ.62.29 கோடி செலவில் நிறைவேற்றப்படும்.

- ❖ மத்திய அரசின் சுவாஜல்தாரா ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் கீழ், மக்கள் பங்களிப்புடன் ரூ.50.99 கோடி மதிப்பீட்டில் 1,403 குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும் 77 குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்படும். ஆகமொத்தம் 1,480 ஊரகக் குடிநீர்த் திட்டங்கள் ரூ.54.50 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்படும்.

- ❖ ஊரகப் பகுதிகளிலுள்ள 19,833 அரசுப் பள்ளிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. இத்துடன் அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளிக்கப்பட்டுவிட்டது.




- ❖ ஊரகப் பகுதிகளிலுள்ள 1,226 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு குடிநீர் வசதிகள் செய்யப் பட்டுள்ளன.

- ❖ இராமநாதபுரம் மாவட்டத்தில் நரிப்பையூரில் உவர் நீரை நன்னீராக்கும் கலன்கள் புனரமைக்கப்பட்டு 296 குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்குவது நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

- ❖ மத்திய அரசின் பகுதி சீரமைப்புத் திட்டத்தின் கீழ், மக்கள் பங்களிப்புடன் கோயம்புத்தூர், வேலூர், பெரம்பலூர், கடலூர், காஞ்சிபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் ரூ.207.70 கோடி செலவில் 9,328 குடிநீர்த் திட்டங்கள் ஊரகப் பகுதிகளில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- ❖ ஊருணிகள், குளங்கள், குட்டைகள் ஆகிய 9,772 புராதன நீராதாரங்கள் ரூ.14.90 கோடி செலவில் சீரமைக்கப்பட்டன.

**நகரகக் குடிநீர்த் திட்டம் :**

- ❖ 303 நகரங்களுக்கு தனித்திட்டங்கள் மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூலமாக 65 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும், 11 நகரங்களுக்கு, குடிநீர்த் திட்டப் பணிகள் நிறைவேற்றப்படும். ஆகமொத்தம், 314 நகரங்களில் வாழும் 68.50 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர்த் திட்டப் பணிகள் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

- ❖ ஊரகக் குடிநீர்த் திட்டப் பணிகளுக்காக ரூ. 2,400 கோடி செலவிடப்பட்டுள்ளது. மேலும் ரூ.175 கோடி செலவிடப்படவுள்ளது.

- ❖ நகரகக் குடிநீர்த் திட்டப் பணிகளுக்காக, ரூ.620 கோடி செலவிடப்பட்டுள்ளது. மேலும், ரூ.30 கோடி செலவிடப்படவுள்ளது.

- ❖ பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகளுக்காக ரூ.186 கோடி செலவிடப்பட்டுள்ளது. மேலும், ரூ.18 கோடி செலவிடப்படவுள்ளது.

**சுனாமி நிவாரணப் பணிகள்**

- ❖ சுனாமியால் பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம், கடலூர் ஆகிய நகராட்சிகள் மற்றும் நாகப்பட்டினம், கடலூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கன்னியாகுமரி, திருவள்ளூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உள்ள 204 குடியிருப்புகளில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

- ❖ மேலும் சுனாமியால் பழுதடைந்த குடிநீர்த் திட்டங்களுக்கு புனரமைக்கத் தேவையான ஆழ்துளை கிணறுகள், நீருறுஞ்சு கிணறுகள், நீரேற்று குழாய்கள், பகிர்மானக் குழாய்கள் மற்றும் மின்னிறைப்பான்கள் அமைக்கும் பணிகள் ரூ.5.60 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டன.

## பாதாளச் சாக்கடைத் திட்டம்

- ❖ பாதாளச் சாக்கடைத் திட்டம் 4 மாநகராட்சிகள் மற்றும் 11 நகராட்சிகளிலும் சேர்த்து மொத்தம் 15 உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- ❖ தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் நிதி நிறுவன உதவியுடன் ஆலந்தூர் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு பயனுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

- ❖ அம்பத்தூர், திருவொற்றியூர், காஞ்சிபுரம், ஆம்பூர், இராணிப்பேட்டை, வாலாஜாபேட்டை, திருப்பூர், தாம்பரம், பல்லாவரம், ஆவடி மற்றும் செங்கல்பட்டு ஆகிய நகராட்சிகளில் புதிய பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் அமைக்க சாத்தியக்கூறுகள் கண்டறியப்பட்டு நடப்பாண்டில் இத்திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ.1,800 கோடி ஆகும். புதிய பாதாளச் சாக்கடைத் திட்ட ஆய்வுப்பணிகள் 30 நகராட்சிகளில் நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் தொடங்கப்பட உள்ளன.

- ❖ கடந்த நான்கு ஆண்டுகளில் தொடர்ந்து பருவமழை பொய்த்த காரணத்தால் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் பல்வேறு வறட்சி நிவாரணப் பணிகளை, ரூ.16.16 கோடியில் மேற்கொண்டு, 2,384 பணிகள் தேர்வு செய்து அனைத்து பணிகளும் இவ்வாண்டு முடிக்கப்பட்டன.

- ❖ 2003–2004ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் எடுத்துக்கொள்ளப்பட்ட 21 புதிய திட்டப்பணிகளில் 10 பணிகள் நகராட்சிகளிலும் ஒரு பணி மாநகராட்சியிலும் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் யாவும் இவ்வாண்டில் முடிக்கப்பட உள்ளன.

- ❖ 2003–2004ஆம் ஆண்டில் குடிநீர் வழங்கலை மேம்படுத்துவதற்கான மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், இராஜபாளையம், மன்னார்குடி மற்றும் திண்டுக்கல் ஆகிய நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன. 2004–2005ஆம் ஆண்டில் குடிநீர் வழங்கல் திட்டங்கள் விருதுநகர், செங்கல்பட்டு, பொள்ளாச்சி, கோபி, துறையூர், சிவகங்கை, போடி, கம்பம் மற்றும் ஈரோடு ஆகிய 10 நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட உள்ளன. இப்பணிகள் யாவும் முன்னேற்ற நிலையில் உள்ளன.

- ❖ வெள்ளப்பெருக்கினால் ஏற்படும் சேதத்தைத் தவிர்க்கும் பொருட்டு உடனடி நடவடிக்கையாக சென்னையை சுற்றியுள்ள 8 நகராட்சிகளில் புதிய வடிநீர்க் குழாய்கள் அமைத்தல், ஏற்கெனவே பழுதடைந்துள்ள சாலைகளை சரிசெய்தல் ஆகிய 175 பணிகள் ரூ.31.12 கோடி செலவில் உடனடி நிவாரண நடவடிக்கையாக அடிப்படை வசதிக் கட்டமைப்பு திட்டம் உருவாக்கப்பட்டு போர்க்கால அடிப்படையில் முடிக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் ரூ.91.74 கோடி செலவில் கீழ்க்கண்டவாறு இரண்டாம் கட்டமாக பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

- ❖ அரசுக் கட்டடங்கள் 7,647, தனியார் வீடுகள், வணிக வளாகங்கள், கல்வி நிறுவனங்கள் 23,15,520, நீராதாரங்கள் 36,977, சாலையோரங்கள் 2,546, நடைபாதைகள் 99, தெருக்கள் 2,335, நகராட்சி, மாநகராட்சி குளங்கள் 409, பாலங்கள் மற்றும் சிறுபாலங்கள் 365 ஆகியவற்றில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் செய்யப்பட்டுள்ளன.

- ❖ 2003–2004ஆம் ஆண்டில், 23,65,898 கட்டமைப்புகளில், மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

- ❖ நீர்நிலை அமைப்புகளை புனரமைத்தல், சீரமைத்தல், புதுப்பித்தல் போன்ற சிறப்புத் திட்டப் பணியின் கீழ் 594 கோயில் குளங்கள், குட்டைகளில் (176 கோயில் குளங்கள், 418 ஏரிகள், குட்டைகள்) பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- ❖ பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், நகர்ப்புற சுயவேலை வாய்ப்புத் திட்டம், நகர்ப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம், நகர்ப்புற கூலி வேலை வாய்ப்புத் திட்டம், தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், குடியிருப்பு மேம்பாடு ஆகிய திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- ❖ நகராட்சி செயற்பாடுகளை கணினி மூலம் செயல்படுத்த 18 வகையான கணினி மென்பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவை பிறப்பு, இறப்பு, சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, வரியில்லா இனம், கட்டட வரைபட

ஒப்புதல் மற்றும் பல பணிகளாகும். 18 வகையான மென்பொருள்களில் 14 வகையான முக்கிய மென்பொருள்கள், அனைத்து நகராட்சிகளிலும் மாநகராட்சிகளிலும் செயல்முறைப்படுத்தப் பட்டுள்ளது.

- வால்மீகி அம்பேத்கர் ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ், 2001–2002இல் 525 சுகாதார வளாகங்கள் ரூ.52.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டன.

- ஒவ்வொரு நகராட்சியிலும் 10 கழிப்பறைகள் கொண்ட சிறிய வளாகங்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டு, ரூ.36.20 கோடி மதிப்பீட்டில் 905 சுகாதார கழிப்பறைகள் கட்டுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 905 அலகுகளில் இதுவரை 760 அலகுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 145 அலகுகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- திடக்கழிவு மேலாண்மைத் திட்டம், மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்ச திட்டத்தில் ஒரு கொள்கையாக அறிவிக்கப்பட்டு அதனை நடைமுறைப்படுத்துவதில் தீவிரமாக உள்ளது.

- 2004–2005ஆம் ஆண்டில் பகுதி–2 திட்டம் மூலம் ரூ.150 இலட்சம் 40 நகராட்சிகளுக்கு நிலம் வாங்க, 25 சதவிகிதம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ், ஏற்கெனவே உள்ள உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காக அரசு மாநிலச் சமநிதியின் மூலம் ரூ.448 இலட்சம், 62 நகராட்சிகளுக்கும் ரூ.408 இலட்சம், 5 மாநகராட்சிகளுக்கும் கடந்த மார்ச் 2004ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. மேலும், திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் உள்ள உள்கட்டமைப்புகளை மேம்படுத்த ரூ.600 இலட்சம் சென்னைப் பெருநகரத்தைச் சுற்றியுள்ள 8 நகராட்சிகளுக்கு வழங்கப்பட உள்ளது.

- உடுமலைப்பேட்டை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை செயல்படுத்த ரூ.120 இலட்சம் செலவில் திட்டம் தயாரித்து நிதியுதவிக்காக மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்தினை அணுகியுள்ளது. மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் 50 சதவிகிதம் நிதிஉதவி தர இசைந்துள்ளது.

- 2001–2002ஆம் ஆண்டு அடிப்படை வசதிகள் திட்டத்தின்கீழ், நகர்மன்றக் கூடம், பேருந்து நிலையத்தில் சிமெண்ட் கான்கிரீட் பாதை கட்டும்பணி, பயணியர் விடுதி மேம்பாட்டுப்பணி, குடிநீர் வழங்கும் பணி மேம்படுத்துதல் ஆகிய பணிகளுக்காக ரூ.5 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- குறைந்த வருவாய் உள்ள நகராட்சிகளின் நிதிப்பற்றாக்குறையை ஈடுசெய்ய அரசு ரூ.10 கோடி அனுமதித்துள்ளது.

- நகராட்சிகளில் 143 தாய்சேய் நல விடுதிகள் உள்ளன. 24 நகராட்சிகளுக்கு ரூ.30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 32 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- 11ஆவது நிதிக்குழு பரிந்துரையின்கீழ், 2001–2002 மற்றும் 2002–2003ஆம் ஆண்டுகளில் அனைத்து நகராட்சி மற்றும் மாநகராட்சிகளுக்கு ரூ.7,595.25 இலட்சம் மானியம் வழங்கப்பட்டது. 50 சதவிகித உள்ளாட்சி நிறுவனங்களின் பங்குத் தொகையில் நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் 10,131 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2003–2004ஆம் ஆண்டிற்கு ரூ.3,143 இலட்சம், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. 2,776 எண்ணிக்கையிலான பராமரிப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2004–2005ஆம் ஆண்டிற்கு ரூ.2,514இலட்சம் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. 2,573 எண்ணிக்கையிலான பராமரிப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- 2001–2002ஆம் ஆண்டில் நகராட்சிகளால் எடுத்துக் கொள்ளப்பட்ட 406.82 கி.மீ. சாலைகள் ரூ.16.72 கோடி செலவில் தரம் உயர்த்தி அமைக்கப்பட்டுள்ளன.

- 2002–2003ஆம் ஆண்டில் 556.82 கி.மீ. சாலைகள் ரூ.41.94 கோடி செலவிலும் , 2003–2004ஆம் ஆண்டில் 627.945 கி.மீ. சாலைகள் ரூ.54.90 கோடி செலவிலும், 2004–2005ஆம் ஆண்டில் 1100.973 கி.மீ. சாலைகள் ரூ.97.18 கோடி செலவிலும் தரம் உயர்த்தி அமைக்கப்பட்டுள்ளன.

- நகராட்சிகளில் தெருவிளக்குகள் அமைக்கும் பணியில் சாதாரணத் தெரு விளக்குகளை, குழல்விளக்குகளாகவும், சோடியம் ஆவி விளக்குகளாகவும் மாற்றுவதற்கு 2001–02இல் ரூ.3.69 கோடி செலவில் 2,729 தெரு விளக்குகளும், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.1.265 கோடி செலவில் 3,552 தெரு விளக்குகளும், 2003–2004ஆம் ஆண்டில் ரூ.1.87 கோடி செலவில் 4,795 தெருவிளக்குகளும், 2004–2005ஆம் ஆண்டில் ரூ.6.288 கோடி செலவில் 10,284 தெருவிளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன.

## சென்னை மாநகராட்சி

- சென்னை மக்களின் ஈடுபாடு மற்றும் பங்கேற்பினை துரிதப்படுத்தி, அடிப்படை வசதிகளை மேம்படுத்த "என்றென்றும் சென்னை" – ஒரு புதிய திட்டம் (Chennai Forever Initiative ) என்ற திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

- சென்னை நகரில் பேருந்துச் சாலைகள் 332.14கி.மீ. நீளத்தில் ரூ.117.81 கோடி செலவில் புதுப்பிக்கப் பட்டுள்ளன. 2003–2004 மற்றும் 2004–2005இல் பேருந்துச் சாலைப் பணிகள் வேறு

எப்போதும் இல்லாத அளவில் அதிகமாக நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் ரூ.52.95 கோடி செலவில் மாநகராட்சி சாலைப் பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

❖ சென்னை நகரில் உட்புறச் சாலைகள் 2,707.18 கி.மீ. நீளத்தில் ரூ.252.45 கோடி செலவில் போடப்பட்டுள்ளன. கடந்த 2003–2004, 2004–2005 மற்றும் 2005–2006 நவம்பர் வரை 1,970.69 கி.மீ. நீளத்திற்கு ரூ.157.06 கோடி செலவில் உட்புறச் சாலைப் பணிகள் நடைபெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். டிசம்பர் 2005 முதல் மார்ச் 2006 வரை உட்புறச் சாலைப் பணிகளுக்கு ரூ.39 கோடி செலவிடப்படும்.

❖ 2005ஆம் ஆண்டு அக்டோபர்–நவம்பர் திங்களில் நகரில் பெய்த தொடர் கடுமழையால் பாதிக்கப்பட்ட சாலைகளை உடனடியாகப் பழுதுபார்க்கவும் பிற நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் ரூ.20 கோடியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள்.

❖ ரூ.28.84 கோடி செலவில் 612.54 கி.மீ நீளமுள்ள நடைபாதைகள் புதியதாக அமைக்கப்பட்டுள்ளன. இதில் 137 கி.மீ நீளமுள்ள நடைபாதைகளைப் பழுதுபார்க்கும் பணிகளும் அடங்கும். இதில் 2003–2004இல் 332.74 கி.மீ. நீளத்தில் ரூ.14.39 கோடி செலவில் முன்பு எப்போதும் இல்லாத அளவில் நடைபாதைப் பணிகள் நடைபெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

❖ சென்னை குடிநீர் வாரியக் குடியேற்று நிலையங்களுக்கு அருகிலுள்ள சாலைகள் மற்றும் வெள்ளத்தினால் அடிக்கடி பாதிக்கப்பட்டு சேதமடையும் சாலைகளை சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாக மாற்ற வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். அதன்படி 3.17 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.1,029 இலட்சம் செலவில் மாற்றியமைக்கப் பட்டுள்ளன.

❖ 9,178 புதிய தெரு விளக்குகள் மற்றும் 254 கி.மீ. நீளத்திற்கு புதிய மின்வடம் அமைக்கும் பணிகளுக்கு மொத்தம் ரூ.13.40 கோடி செலவிடப் பட்டுள்ளது. 12 உயர்கோபுர மின்விளக்குகளும் நகரில் அமைக்கப்பட்டுள்ளன. டிசம்பர் 2005 முதல் மார்ச் 2006 வரை தெருவிளக்குகளுக்காக ரூ.4 கோடி செலவிடப்படும்.

❖ கட்டடம் கட்டுவதற்கான அனுமதி, மண்டல அலுவலகங்களிலேயே வழங்கப்பட்டு வருகிறது. இதனால் பொதுமக்கள் தாங்கள் வீடுகட்டும் பகுதிக்கு அருகிலேயே உள்ள மண்டலத்தில் கட்டட அனுமதி பெறுவதற்கு ஏதுவாகிறது.

❖ 2001–2002லிருந்து 2005–2006 நவம்பர் திங்கள் வரை மழைநீர்க்கால்வாய்கள் புதிதாகக் கட்டுதல், புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்தும் 411 பணிகள் ரூ.4,074.01 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்டன. 27 கால்வாய்கள் ரூ.585.88 இலட்சம் செலவில் தூர்வாரப்பட்டன.

❖ 2003–2004ஆம் ஆண்டில் மொத்தம் 1,785 இலட்சம் செலவிலும், 2004–2005இல் ரூ.1,585 இலட்சம் செலவிலும், மழைநீர்க் கால்வாய்கள் மற்றும் கால்வாய்களில் சீரமைப்பு மற்றும் தூர்வாரும் பணிகள் சிறப்பான அளவில் மேற்கொள்ளப்பட்டன.

❖ திடக்கழிவு அகற்றுதல் மூலம் தற்போது நாள் ஒன்றுக்கு அகற்றப்படும் குப்பையின் அளவு 3,336 டன் ஆகும்.

❖ 2003ஆம் ஆண்டு முதல், பொதுமக்களின் ஆதரவோடு சென்னை மாநகராட்சியில் துப்புரவு பணியாளர்கள் வீட்டுக்கு வீடு சென்று குப்பை பெற்று வரும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இப்பணியில் 1,700 மூன்று சக்கர வண்டிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

❖ கொடுங்கையூரில் குப்பை கொட்டும் வளாகத்தில் நாள்தோறும் 500 டன் குப்பையினை உரமாக்கும் தொழிற்சாலை ரூ.10.05 கோடி செலவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது .

❖ சென்னை நகரைப் பசுமைமிகு நகரமாக்க பூங்காக்கள், சாலை ஓரப்பூங்காக்கள், போக்குவரத்து தீவுப்பூங்காக்கள் ஆகியவை அமைக்கப்பட்டு வருகின்றன. இதில் குறிப்பாக 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.17 கோடி செலவில் இப்பணிகள் நகரெங்கும் சிறப்பாக நிறைவேற்றப் பட்டு வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 16.09.2005 அன்று சென்னை நகரில் புதிதாக உருவாக்கப்பட்ட மற்றும் புதுப்பிக்கப்பட்ட பூங்காக்களைத் திறந்து வைத்தது குறிப்பிடத் தக்கதாகும். சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளின் இரு புறங்களிலும் இந்த ஆண்டில் 10,000 மரக்கன்றுகள் நடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

❖ மெரினா நீச்சல் குளம் ரூ.50 இலட்சம் செலவில் மேலும் எழிலுடன் சீரமைக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 23.10.2004 அன்று திறந்து வைக்கப்பட்டது.

❖ 2001–2002ஆம் ஆண்டில் ரூ.169.50 கோடியாக இருந்த சொத்துவரி 2004–2005இல் ரூ.200 கோடியைத் தாண்டி ரூ. 220.55 கோடியாக உயர்ந்துள்ளது.

- 2001–2002இல் ரூ. 28.20 கோடியாக இருந்த தொழில்வரி வசூல் 2004–2005இல் ரூ.46.22 கோடியாக உயர்ந்துள்ளது. 2005–2006இல் இது மேலும் உயர்ந்து ரூ.55 கோடியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- மண்டலம்–5இல் ஆரிங்டன் சாலை சந்திக்கடவில் ரூ.5.79 கோடி செலவில் வாகனச் சுரங்கப்பாதை அமைக்கும் பணியும், மண்டலம்–9இல் பாரதிதாசன் காலனியில் எம்.வி.ஆர்.நகர் கால்வாயின் குறுக்கே ரூ.9.70 இலட்சம் செலவில் பெட்டக வடிவ பாலமும், மண்டலம்–5இல் அண்ணா நகர் 7வது பிரதான சாலையையும், முத்துமாரியம்மன் காலனியையும் இணைத்து ரூ.11.85 இலட்சம் செலவில் புதிய பாலங்கள் அமைக்கும் பணியும் நடைபெற்று வருகின்றன.

- சென்னை மாநகரில் 44 இடங்களில் காசநோய் நுண்நோக்கி மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. 10 மண்டலங்களிலும் காசநோய் மையங்கள் உள்ளன.

- சார்ஸ் தொற்று நோயினால் பாதிக்கப்படும் உயிர்களைக் காக்க, உயிர் காக்கும் நவீன கருவிகள் ரூ.18 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

- தொற்றுநோய் மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவம் சாரா பணியாளர்கள் தங்குவதற்கு வசதியாக 10 குடியிருப்புகள் கட்ட ரூ.35 இலட்சம் செலவில் அக்டோபர் திங்கள் 2005 முதல் கட்டுமானப் பணிகள் தொடங்கப் பட்டுள்ளன.

- மலேரியா நோய் இல்லாத சென்னையை உருவாக்கும் திட்டம் 2002–ஆம் ஆண்டு செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் ஆகிய மாதங்களில் செயல்படுத்தப்பட்டது.

- மலேரியா நோயைத் துல்லியமாகக் கண்டுபிடிக்க அமெரிக்க நாட்டிலிருந்து க்யூ.பி.சி. எனப்படும் அதி நவீன கருவிகள் ஒவ்வொன்றும் ரூ.4.50 இலட்சம் செலவில், இறக்குமதி செய்யப்பட்டு 11 மையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநகராட்சி இப்பரிசோதனையை இலவசமாக அளிக்கிறது.

- 2004 ஆம் ஆண்டு முதல் தேசிய யானைக்கால் நோய்த் தடுப்பு திட்டத்தின் கீழ் ஒரு நாள் ஒட்டு மொத்த டி.இ.சி. மாத்திரை வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், யானைக்கால் நோயால் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் 3 இலட்சம் மக்களுக்கு அவர்கள் வீட்டிற்குச் சென்று மாத்திரைகள் வழங்கப்படுகின்றன.

- சென்னை மாநகராட்சி எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சங்கம் சென்னை நகரில் மேற்கொண்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளால் இந்த ஆண்டு மட்டும் 1.26 இலட்சம் மக்கள் பயனடைந்தார்கள்.

- சென்னை மாநகராட்சி எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சங்கத்தின் (CAPACS) உதவியினால் 11 அரசு மருத்துவமனைகளில் இயங்கி வரும் இரத்த வங்கிகளின் (Blood Banks ) செயல்பாடு அதிகரித்து வருகிறது.

- நகரில் மக்கள் நடமாட்டங்கள் மிகுந்த திரைப்பட அரங்குகள், ரயில் நிலையம் மற்றும் பேருந்து நிலையங்கள் போன்ற இடங்களில் ஆணுறை விற்பனை செய்யும் 500 தானியங்கி இயந்திரங்களை சென்னை மாநகராட்சி எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சங்கம் நிறுவியுள்ளது.

- 2004–2005ஆம் ஆண்டுகளில் 10 இடுகாடுகளைச் சீரமைக்கும் பணி ரூ.72 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- 11 வயது முதல் 19 வயது வரையிலான குடிசை வாழ் வளர் இளம் பெண்களுக்கு உடல் மற்றும் மனரீதியான பிரச்சினைகளுக்கு தீர்வு மற்றும் மருத்துவச் சேவை அளித்து இரும்புச் சத்து மாத்திரை வாரத்திற்கு ஒன்று வீதம் 52 வாரம் அளிக்கப்படுகிறது.

- சைதாப்பேட்டை மற்றும் பெருமாள்பேட்டையில் 19.07.2003இல் தொடங்கப்பட்ட 24 மணி நேர மருத்துவமனைகள் மக்களுக்கு சிறந்த முறையில் தொண்டாற்றி வருகின்றன.

- சுகாதாரக் கல்வி விழிப்புணர்வுத் திட்டம், புளியந்தோப்பு மற்றும் சாந்தோம் மண்டலத்திலுள்ள அனைத்து நலவாழ்வு நிலையங்களிலும் 1.1.2005 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- தேவையற்ற கர்ப்பத்தை தவிர்க்கும் வகையில் சாந்தோம் மற்றும் புளியந்தோப்பு மையங்களில் மருத்துவரீதியான கருக்கலைப்பு தொடங்கப் பட்டுள்ளது.

- பேறுகாலப் பெண்துணைத் திட்டம், 1.06.2004 முதல் 24 மணி நேரமும் இயங்கும் இரண்டு மருத்துவ மனைகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளில்தான் முதன்முதலில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 9.8.2005 அன்று சென்னை மாநகராட்சியின்

அனைத்து நலவாழ்வு நிலையங்களிலும், கர்ப்பப்பைவாய் புற்றுநோய்த் தடுப்புத் திட்டம் தொடங்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகிறது. இதில் 30 வயது முதல் 45 வயது வரையிலான பெண்களுக்குப் புற்றுநோய்த் தடுப்புக்கான சிகிச்சையளிக்கப்படுகிறது. இதுவரை 2,050 பெண்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு, 127 பெண்களுக்குத் தேவையான சிகிச்சை அளிக்கப்பட்டது.

❖ 7 மாநகராட்சிப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும், ஒரு நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

❖ மாநகராட்சிப் பள்ளிகளில் சத்துணவுக் கூடங்கள், பள்ளிக் கட்டடங்களில் ரூ.14.27 கோடி செலவில் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

❖ கூடுதல் வகுப்பறைகள், பள்ளிக்கட்டடங்கள், அறிவியல் ஆய்வுக் கூடங்கள் ஆகியவை ரூ.22.23 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன.

❖ கணினிகள், அறிவியல் உபகரணங்கள், இருக்கைகள், விளையாட்டு உபகரணங்கள், நூல்கள் ஆகியவற்றுக்கு ரூ.2.45 கோடி செலவிடப்பட்டுள்ளது.

❖ 90 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட மையங்களின் கட்டமைப்புகளில் குடிநீர், மின்சாரம், வகுப்பறை மற்றும் சுகாதாரமான சமையலறை வசதி ஆகியவற்றை ரூ.2.50 கோடி செலவில் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

❖ 2004–2005இல் அனைத்து மாநகராட்சிப் பள்ளிகளில் குழந்தை மையக் கற்றல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

❖ அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப் படுகின்றன.

❖ குழந்தைத் தொழிலாளர்கள் என அடையாளம் காணப்பட்ட 5,000 குழந்தைகளுக்கு அறிவொளி இயக்கத்தின் மூலம் கல்வி கற்பிக்கப்படுகிறது. இதற்காக நடமாடும் பள்ளி வசதியும் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

❖ கடந்த ஆண்டுகளில் ரூ.5,084.95 கோடி சிறுசேமிப்பு வசூல் செய்யப்பட்டுள்ளது. 2004–2005இல் ரூ.3,171.46 கோடிக்கு மேல் சிறுசேமிப்பு வசூல் செய்யப்பட்டு சாதனை படைக்கப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

★ ★ ★

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

**உயர்கல்வி சிறப்பு உதவித் தொகை திட்டம்**

✶ கல்விக் கடன் உதவித்தொகை திட்டம் 2002–2003ஆம் ஆண்டு முதல் உயர்கல்வி சிறப்பு உதவித்தொகை திட்டமாக செயல்பட்டு வருகிறது. இதற்காக பட்டப்படிப்பிற்கு ரூ.6,500ம் பட்ட மேற்படிப்பு மற்றும் தொழிற் கல்வி படிப்புக்கு ரூ.7,000மும் வழங்கப்பட்டு வருகிறது. மருத்துவக் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்க்கு 25% கடனாகவும், 75% மானியமும் மற்ற படிப்புகளுக்கு முழு மானியமும் வழங்கப்படுகிறது. இதுவரை ரூ.2,278.19 இலட்சத்தில் 34,136 மாணவ, மாணவிகள் பயனடைந்துள்ளனர்.

✶ ஆதிதிராவிடர், பழங்குடியினர், மதம் மாறிய கிருத்துவ இன மாணவிகளுக்கு பட்டப்படிப்பு வரை அளிக்கப்பட்டு வந்த இலவசக் கல்வித் திட்டம் 2001–2002இல் முதுகலை பட்டப்படிப்பு வரை நீட்டிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை ரூ.112.25 இலட்சம் செலவிடப்பட்டு, 11,053 மாணவிகள் பயனடைந்துள்ளனர்.

✶ பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தில் 2004–2005இல் ரூ.6 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, முழுவதும் செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 3ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை 60,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளும், 6ஆம் வகுப்பு கல்வி பயிலும் 30,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளும் பயனடைந்துள்ளனர்.

✶ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகளில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச்/ஏப்ரல் திங்களில் நடைபெறும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு, பள்ளி இறுதி பொதுத் தேர்வின் தேர்ச்சி விழுக்காட்டினை அதிகரித்துக் காண்பிக்கும் தலைமை ஆசிரியர்கள் மற்றும் பாட ஆசிரியர்களை ஊக்குவிக்கும் பொருட்டு மேல்நிலை/உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் பாட ஆசிரியர்களுக்கு ஊக்கப் பரிசுத்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் வாயிலாக 1,480 ஆசிரியர்களுக்கு ஊக்கப் பரிசுத் தொகையாக ரூ.13,62,750 வழங்கப்பட்டது.

✶ 2001 முதல் 2005 வரை கூடுதல் வகுப்பறைகள் மற்றும் அறிவியல் ஆய்வுக்கூடங்கள் ரூ.204.60 இலட்சம் செலவில் கட்டப்பட்டது.

* 96 வண்ண தொலைக்காட்சிப் பெட்டிகள் முதுகலை/கல்லூரி/ஐடிஐ ஆகிய விடுதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

* அரசு கட்டடத்தில் இயங்கும் ஆதிதிராவிடர் நலத்துறை விடுதிகளுக்கு மட்டும் எரிவாயு இணைப்புகள் அமைத்துத் தரப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 1,078 விடுதிகளில் 886 விடுதிகள் அரசு கட்டடத்தில் இயங்கி வருகின்றன. அவற்றில் 469 விடுதிகளுக்கு எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

* 2005–2006 பகுதி–II திட்டத்தின் கீழ் 100 விடுதிகளுக்கு எரிவாயு இணைப்புகள் வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் சிறப்புக் கூறு திட்டத்தின் கீழ், 2005–2006ஆம் ஆண்டில் 78 விடுதிகளுக்கு எரிவாயு இணைப்புகள் வழங்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

## பழங்குடியினர் நலத்துறை

* விழுப்புரம் மாவட்டம் வெள்ளிமலையில் பழங்குடியினர் மாதிரி உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளி ரூ.3.35 கோடியில் தொடங்கப்பட்டுள்ளது.

* கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு ரூ.49.54 இலட்சம் மதிப்பில் சூரிய சக்தி மின் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

* கோவை மாவட்டம், தோலம்பாளையம் முதல் கோப்பனேரி வரை ரூ.310 இலட்சம் மதிப்பில் சாலை வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

* ரூ.150 இலட்சம் மதிப்பில் 2 மாணவ விடுதி மற்றும் 9 மாணவியர் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன.

* ஒவ்வொரு ஆண்டும் பழங்குடியினர் நல பொருளாதார மற்றும் அடிப்படைக் கட்டுமான வசதிகளுக்காக ரூ.1,228.62 இலட்சம் பழங்குடியினர் துணைத் திட்டம் சிறப்பு மைய நிதியாக செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

* ரூ.63 இலட்சம் மதிப்பில் பழங்குடியினருக்கு வீடுகள் மற்றும் மின்வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

* ரூ.1,945.69 இலட்சம் மதிப்பில் பழங்குடியினருக்கு சாலை, குடிநீர் மற்றும் மின்சார வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

* ரூ.70 இலட்சம் மதிப்பில் நாமக்கல் மாவட்டம் முள்ளுக்குறிச்சி முதல் நரியங்காடு வரை சாலை வசதி செய்து தரப்பட்டுள்ளது.

* உதகை பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தில் ரூ.120 இலட்சம் மதிப்பில் ஒரு அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

* கோவை மாவட்டத்தில் ரூ.70 இலட்சம் மதிப்பில் ஐந்து இணைப்புச் சாலை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.


* உதகையில் பழங்குடியினர் மேம்பாட்டிற்காக மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக ரூ.568.26 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

## தாட்கோ

* தாட்கோ நிறுவனத்தின் மூலம் நிலமற்ற ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த மகளிர் 1,840 நபர்களுக்கு நிலம் வாங்கி வழங்கும் திட்டம் 2001 – 2005 ஆம் ஆண்டு வரை ரூ.6.50 கோடி செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

* 2005–2006இல் நிலம் வாங்கி வழங்கும் திட்டத்தில் 1,925 நிலமற்ற ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மகளிருக்கு ரூ.24.32 கோடி மதிப்பிலான நிதிஉதவிகள் வழங்கப்பட்டன.

* தனி நபர் கடன் திட்டத்தில் 5,034 நபர்களுக்கு ரூ.13.65 கோடி மதிப்பிலான நிதிஉதவிகள் வழங்கப்பட்டுள்ளன.



* சுய உதவிக்குழுக்களுக்கான பொருளாதார உதவித் திட்டத்தில் 788 சுயஉதவிக் குழுக்களுக்கு 11,727 நபர்கள் பயனடையும் வகையில் ரூ.15.29 கோடி மதிப்பிலான நிதிஉதவிகள் வழங்கப் பட்டுள்ளன.

* 1,808 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக ரூ.4.67 கோடி மதிப்பிலான நிதிஉதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் 26,959 நபர்கள் பயனடைந்துள்ளார்கள்.

* மாவட்ட ஆட்சியர்களின் விருப்புரிமை நிதியாக 1,577 நபர்களுக்கு ரூ.1.28 கோடி மதிப்பிலான நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

* 8,193 இளைஞர்களுக்கு ரூ.5.43 கோடி செலவில் நிதியுதவிகள் மற்றும் வேலைவாய்ப்புகள் பெறும் தொழில் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

* 15,922 மகளிருக்கு சுயஉதவிக் குழுக்கள் மூலம் ரூ.0.81 கோடி செலவில் தொழில் முனைவோர் பயிற்சி நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

* சுகாதாரப் பணியாளர்கள் மறுவாழ்வு அடையும் வகையில் தனி நபர் கடன் திட்டம் மூலம் 204 நபர்களுக்கு ரூ.51கோடி மதிப்பிலான நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

* சுகாதாரப் பணியாளர்கள் மறுவாழ்வுத் திட்டத்தின் மூலம் (சுபமதி) 30 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.0.25 கோடி மதிப்பிலான நிதிஉதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

* இளைஞர்களுக்கான சிறப்பு பொருளாதார வேலைவாய்ப்புத் திட்டம் மூலம் 399 நபர்களுக்கு ரூ.1 கோடி மதிப்பிலான நிதிஉதவிகள் வழங்கப் பட்டுள்ளன.

* புதிய தேசிய துப்புரவுப் பணியாளர் புனரமைப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ், 426 குழுக்களுக்கு ரூ.1.04 கோடி மதிப்பிலான நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

* மத்திய சிறப்பு நிதியிலிருந்து ரூ.1 கோடி மதிப்பிலான நிதி உதவிகள் ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை கட்டமைப்பு வசதி ஏற்படுத்த விடுவிக்கப் பட்டுள்ளது.

* தாட்கோ பொறியியல் பிரிவு மூலம் ஆதிதிராவிட மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில், ரூ.4,770.72 இலட்சம் செலவில் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. மேலும், ரூ.4,727 இலட்சம் செலவில் 150 விடுதிகள் கட்ட ஆணையிடப்பட்டு, 133 விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன.

* 2004–2005இல் தாட்கோ, பொறியியல் பிரிவின் வழியாக ஆதிதிராவிட மாணவ/மாணவியர்கள் பயன்பெறும் வகையில், 177 விடுதிகள் ரூ.55.76 கோடி செலவில் கட்டுவதற்கு அனைத்துப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

* மாணவியர் விடுதி, சுற்றுச்சுவர் வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்கள் ரூ.2.39 கோடி செலவில் கட்டுவதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளதை அடுத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

✶ ✶ ✶

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

* 2001–2002 ஆம் ஆண்டு முதல் 2005–2006 ஆம் ஆண்டு வரை அடிப்படை வசதிகளின்றி தனியார் கட்டடங்களில் இயங்கிவந்த 761 விடுதிகளுக்கு ரூ.235 கோடி செலவில் கட்டடங்கள் கட்ட ஆணைகள் வெளியிடப்பட்டு 301 விடுதிகளுக்கு கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய விடுதிகளுக்கு கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

* பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ / மாணவியர்களுக்கு புதிதாக 108 பள்ளி / கல்லூரி விடுதிகள் ஆண்டிற்கு ரூ.4.75 கோடி செலவில் பிப்ரவரி, 2006 முதல் துவக்கப்பட உள்ளது.

* பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் தங்கி 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு ரூ.91 இலட்சம் செலவில் ஆங்கிலம் – ஆங்கிலம் – தமிழ் அகராதி மற்றும் பூகோள வரைபட புத்தகம் (Atlas) இலவசமாக 2005–2006இல் வழங்கப்படும்.

* பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளுக்கு மின்வசதி, குடிநீர் வசதி, சுற்றுச்சுவர் வசதி மற்றும் கழிப்பறை வசதி போன்ற அடிப்படை வசதிகள் ரூ.154.76 இலட்சம் செலவில் செய்து கொடுக்கப் பட்டுள்ளன.

* பள்ளி மாணவ/மாணவியர் விடுதிகளில் வழங்கப்பட்டு வரும் உணவின் தரத்தை மேம்படுத்த மாதாந்திர உணவுக் கட்டணம் 1.10.2001 முதல் ரூ.225லிருந்து ரூ.300ஆக உயர்த்தப்பட்டது. அரசால் அங்கீகரிக்கப்பட்ட 39 தனியார் விடுதிகளில் தங்கியுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்கள் உணவுக் கட்டணம் 1.6.2004 முதல் ரூ.150லிருந்து ரூ.200 ஆக உயர்த்தப்பட்டு 1,920 மாணவர்கள் பயனடையும் வகையில் ரூ.9.60 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

* 2001–2002 ஆம் ஆண்டு முதல் 2004–2005 ஆம் ஆண்டு வரை ரூ.1.26 கோடி செலவில் 332 விடுதிகளுக்கு சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.



★ ஒவ்வொரு விடுதிக்கும் ரூ.1,000 வீதம் ரூ.9.72 இலட்சம் செலவில் 972 விடுதிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ 2001–02இல் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர் நலத்துறையினரால் நடத்தப்படும் ஒவ்வொரு விடுதிக்கும், ரூ.3,000 வீதம் ரூ.29.16 இலட்சம் செலவில் 972 விடுதிகளில் உள்ள நூலகங்களுக்குப் புத்தகங்கள் வழங்கப் பட்டுள்ளன. 2004–2005இல் 59 பிற்படுத்தப்பட்டோர், 29 மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் கல்லூரி விடுதிகளுக்கு ரூ.4.40 இலட்சம் செலவில் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ மலைப் பிரதேசங்களில் உள்ள 18 விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களுக்கு ரூ.17 இலட்சம் செலவில் இரண்டு அடுக்கு மரப்படுக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.

★ 2005–2006ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு அரவை இயந்திரங்கள், பாத்திரங்கள், பாய்கள் ஆகியன ரூ.45.43 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

★ ரூ.23.10 இலட்சம் செலவில் விடுதிகளில் பணிபுரியும் தொகுப்பூதியச் சமையல் உதவியாளர்களின் தொகுப்பூதியத்தை மாதம் ரூ.500லிருந்து ரூ.850ஆக 1.4.2005 முதல் உயர்த்தி வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

★ 2005–2006இல் கல்லூரி விடுதிகளில் 775 மாணவ/ மாணவியர் இடங்களும், பள்ளி விடுதிகளில் 2,500 மாணவ/ மாணவியர் இடங்களும் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு கூடுதலாக ரூ.78.25 இலட்சம் செலவில் ஒப்பளிக்கப்பட்டு இயக்குநர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி பகிர்ந்தளிக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

★ கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் அளிக்கும் மிகு விரைவு திட்டத்தின் கீழ் குடிநீர் வசதி, கழிவறை வசதி, கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள், கணினி அறைகள் ஆகிய பணிகள் ரூ.15.60 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ 2001–2002 ஆம் ஆண்டு முதல் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்ட பகுதிகளில் ரூ.12.53 கோடி செலவில், சாலை, தெருவிளக்கு, குடிநீர் மற்றும் வடிகால் போன்ற அடிப்படை வசதிகள் உருவாக்கப் பட்டுள்ளன.

★ அரசுப் பணியில் சேர்வதற்கான குறைந்தபட்ச கல்வித் தகுதியுடைய பிற்படுத்தப்பட்டோருக்கு அதிகபட்ச வயது வரம்பு 30–லிருந்து 32–ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

★ 2001–2002ஆம் ஆண்டு முதல் 2004–05 ஆம் ஆண்டு வரை பல்வேறு வேலைவாய்ப்புக்கான பயிற்சித் திட்டங்களின் கீழ் ரூ.5.22 கோடி செலவிடப்பட்டுள்ளது. 2005–06–ல் இதற்கென ரூ.90.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ 2005–2006ஆம் ஆண்டில் 500 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்த நபர்களுக்கு கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி ரூ.73.80 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

★ தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரைச் சேர்ந்த பயிற்சி பெற்ற 5,000 பெண்கள் சிறுதொழில் தொடங்க, ஒவ்வொருவருக்கும் ரூ.10,000 வீதம் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் ரூ.5 கோடி கடன் உதவி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம், இதுவரை 87,176 மகளிருக்கு சிறுதொழில் தொடங்க கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.17.44 கோடி கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

★ பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் பொருளாதாரத்தை மேம்படுத்த இலவசமாகத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ், இதுவரை 3,189 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. 2005–2006 ஆம் நிதி ஆண்டில் 1,000 தையல் இயந்திரங்கள் வழங்கப்படும்.

★ பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் பொருளாதாரத்தை மேம்படுத்த இலவசமாக சலவைப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ், இதுவரை 6,000 சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. 2005–2006ஆம் நிதி ஆண்டில் 3,000 சலவைப் பெட்டிகள் வழங்கப்படும்.

★ தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், இஸ்லாமியர்கள் அதிகமாக வசிக்கும் மாவட்டங்களில் இருந்து 1,000 இஸ்லாமிய

இளைஞர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். 213 இஸ்லாமிய இளைஞர்களுக்கு கடனுதவியாக ரூ.69.32 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

✶ தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 121 இஸ்லாமிய இளைஞர்களுக்கு ஆட்டோக்கள் வாங்க ரூ.101 இலட்சம் கடன் உதவி வழங்கப்பட்டு, 121 ஆட்டோக்கள் வழங்கப்பட்டுள்ளன.

✶ பல்வேறு திட்டங்களின் கீழ் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 2005–2006 ஆம் ஆண்டில் இதுவரை ரூ.3.43 கோடி சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த பயனாளிகளுக்கு கடனாக வழங்கப் பட்டுள்ளது.

✶ 2004–2005 ஆம் ஆண்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் +1 மற்றும் +2 பயிலும் 2,68,604 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவியருக்கு ரூ.48.14 கோடி செலவில் இலவச மிதிவண்டிகள் வழங்கப்பட்டன.

✶ 2005–2006ஆம் ஆண்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் பிற்படுத்தப்பட்ட / மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்த +1 பயிலும் மாணவியர், அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அரசு உதவி பெற்று +1, +2 வகுப்புகள் சுய நிதி அடிப்படையில் நடத்தப் பெறும் பள்ளிகளில் +1, +2 பயிலும் மாணவர்கள் மற்றும் அரசு உதவி பெற்று +1, +2 வகுப்புகள் சுய நிதி அடிப்படையில் நடத்தப்படும் பள்ளிகளில் +1, +2 பயிலும் மாணவியர் ஆகியோருக்கு ரூ.83.49 கோடி செலவில் 4,66,594 மிதிவண்டிகள் வழங்கப்பட்டன.

✶ பல்வேறு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 2004–2005இல் 12,08,800 மாணவர்களுக்கு உதவித் தொகையாக ரூ.67.67 கோடி வழங்கப்பட்டது. 2005–2006 ஆம் ஆண்டில் 12,58,000 மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்க ரூ.66.42 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

✶ கல்வி நிறுவனங்களில் இயங்கும் விடுதிகளில் உள்ள கல்வி உதவித்தொகை பெறும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான உண்டி / உறையுள் கட்டணம் ரூ. 32.27 இலட்சம் செலவில் உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

✶ அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களும் ரூ.25.52 இலட்சம் செலவில் கணினி மயமாக்கப்பட்டுள்ளன.

✶ 2003–2004 ஆம் ஆண்டு முதல் தேர்ந்தெடுக்கப் பட்ட 12 தர்காக்களில் நன்கொடையாளர்கள் வழங்கும் தொகை மூலம் உணவு அளிக்கும் திட்டத்தினை தமிழ்நாடு வக்ஃபு வாரியம் செயல்படுத்தி வருகிறது.

✶ வறுமை நிலையில் உள்ள சிறுபான்மை இன மக்களுக்கு நாள்தோறும் உணவளிக்கும் நோக்கில் மாநிலச் சிறுபான்மையினர் நல ஆணையத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளை ஒன்றினை உருவாக்க அரசு ஆணை வெளியிடப்பட்டு இவ்வறக்கட்டளைக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து ரூ.1.00 கோடி நிரந்தர வைப்புத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வறக்கட்டளை, நன்கொடையாளர்கள் வழங்கும் நன்கொடைகள் மூலமும் நிதியினை திரட்டிக் கொள்ளும். சிறுபான்மை மக்களுக்கு உணவு வழங்கும் திட்டம் சென்னையில் ஒரு தேவாலயத்தில், 25.12.2005 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

✶ தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக இதுவரை அரசு மானியமாக ரூ.50 இலட்சம் வழங்கப்பட்டு, சென்னையில் 10,000 சதுர அடி பரப்பளவில் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

✶ தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மசூதிகள் மற்றும் தர்காக்களைப் பழுதுபார்க்க இதுவரை ரூ.210 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

✶ தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் நிருவாகச் செலவுகளுக்காக 2005–2006 ஆம் ஆண்டில் அரசு மானியமாக ரூ.40 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது.

✶ தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் நிருவாகச் செலவுகளுக்காக 2005–2006 ஆம் ஆண்டிற்காக அரசு மானியமாக ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.


✶ உலமா ஓய்வூதியமாக மாதமொன்றுக்கு ரூ.500 வீதம் 1,804 பயனாளிகளுக்கு 2005–2006ஆம் ஆண்டில் ரூ.1.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15.11.2005 அன்று நடைபெற்ற அனைத்திந்திய மாநில வக்ஃப் வாரியக் கூட்டத்தில் உலமா ஓய்வூதியத்தை ரூ.500–லிருந்து ரூ.750–ஆக உயர்த்திட அறிவித்ததற்கிணங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

✶ முஸ்லீம் மகளிர் உதவிச் சங்கம் திரட்டும் நிதிக்கு இணையான தொகையை தமிழக அரசு மானியமாக வழங்குகிறது. 2005–2006 ஆம் ஆண்டில் இதற்காக அரசு மானியமாக ரூ.2,33,275 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✶ 1986 ஆம் ஆண்டு முஸ்லீம் பெண்கள் (விவாகரத்து மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின்படி, மணவிலக்கு பெற்ற முஸ்லீம் பெண்களின் பராமரிப்பு வகைக்கான செலவினத்திற்கு ரூ. 6.00 இலட்சம் தமிழ்நாடு வக்பு வாரியத்திற்கு அரசு வழங்கியுள்ளது.

✶ ✶ ✶

# கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை



கால்நடைப் பராமரிப்பு

* தடுப்பூசித் திட்டத்தின் கீழ், கடந்த 5 ஆண்டுகளில் வெக்கை (மற்றும்) கால், வாய் நோய் தடுப்பூசிக்காக ரூ.123.32 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. தேசிய வெக்கை நோய்த் தடுப்பை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதால், தமிழகம் வெக்கை நோயில்லா மாநிலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

* இராணிக்கெட் நோயிலிருந்து கோழிகளைப் பாதுகாக்க 40.00 இலட்சம் இராணிக்கெட் நோய்தடுப்பு மருந்து ஆண்டுதோறும் வழங்கப் படுகிறது. வெறிநாய்க்கடித் தடுப்பூசித் திட்டத்தின்கீழ் வெறிநாய்க்கடித் தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கடந்த 5 ஆண்டுகளில் ரூ.1,293.57 இலட்சம் செலவில் 1,382.12 இலட்சம் கால்நடைகள் பயனடைந்துள்ளன.

* 36 விழுக்காடு கால்நடைகளும், 20 விழுக்காடு எருமைகளும் செயற்கை முறைக் கருவூட்டல் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் இறுதியில் 67 விழுக்காடு கால்நடைகளும், 56 விழுக்காடு எருமைகளும் கொண்டுவரப்படும். உறைவிந்து உற்பத்திக்காக தமிழகத்தில் 4 உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

* தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மற்றும் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை ஆகிய நிறுவனங்களில் உள்ள 5,834 செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்கள் மூலம் கடந்த 5 ஆண்டுகளில் 201.52 இலட்சம் செயற்கை முறைக் கருவூட்டல்கள் ரூ.3,022.8 இலட்சம் செலவில் நடைபெற்றுள்ளன.

* கால்நடை மற்றும் கோழியினங்களுக்கு மருத்துவ வசதி இல்லாத பின் தங்கிய கிராமங்களில் சிறப்புக் கால்நடைப் பாதுகாப்பு முகாம்கள் நடத்தி கால்நடைகளுக்கு இலவசமாகச் சிகிச்சை அளிக்கப் படுகிறது. ரூ.993.41 இலட்சம் செலவில் 23,835 கால்நடைப் பாதுகாப்பு முகாம்கள் நடைபெற்றதில் 278.59 இலட்சம் கால்நடைகள் பயனடைந்துள்ளன.

* தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் மூலம் ரூ.2,028 இலட்சம் செலவில், மாநிலத்தில் உள்ள உறைவிந்து உற்பத்தி நிலையங்களைப் பலப்படுத்துதல், களக் கருவூட்டல் பணிக்குத் தேவையான இடுபொருட்களை வழங்குதல், சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 614 புதிய கருவூட்டல் பணியாளர்களை உருவாக்கி கருவூட்டல் பணியில் ஈடுபடுத்துதல், அனைத்து கருவூட்டல் நிலையங்களுக்கும் தடையில்லாமல் திரவ நைட்டிரஜன் வழங்குதற்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளைப் பலப்படுத்துதல், கணினி மூலம் அனைத்துக் கருவூட்டல் பணிகளையும் ஒருங்கிணைத்தல், கருவூட்டல் பணியில் ஈடுபட்டுள்ள வல்லுநர்கள், பணியாளர்களுக்குத் தேவையான பயிற்சிகளை அளித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பால்வளம்

* இலாபத்தில் இயங்கி வந்த 3,960 பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் கடந்த 5 ஆண்டுகளில் 7,080 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

* அதேபோல், நட்டத்தில் இயங்கிய 3000 பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் 465 சங்கங்களாக குறைக்கப்பட்டுள்ளது.

* நாளொன்றுக்கு சராசரி பால் கொள்முதல் 17.77 லட்சம் ஆக இருந்ததை, 21.69 லட்சமாக உயர்த்தப்பட்டது.

* பால் விற்பனை 14.19 லட்சம் லிட்டராக இருந்ததை 14.43 லட்சம் லிட்டர் ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

* ரூ.93,200.00 இலட்சம் மதிப்பிலான பால் உபபொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

* ரூ.9.25 கோடி மதிப்பில், தூயபால் உற்பத்தி திட்டம் தொடங்கப்பட்டு, 39,000 பால் உற்பத்தியாளர்கள் பயனடைய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

* ரூ.2,271 இலட்சம் மதிப்பில் புதிய புனரமைப்புத் திட்டம் ஒன்று, மத்திய அரசும் மாநில அரசும் 50:50 என்ற பங்களிப்பின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு பால் உற்பத்தியாளர்களுக்குப் பால் பணம் நிலுவை இல்லாமல் வழங்குவதற்கும், ஒன்றியங்கள் திறம்பட இயங்கவும், வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனால் விழுப்புரம், ஈரோடு, தர்மபுரி மாவட்டங்கள் பயனடைகின்றன.

* 2002 – 2003ஆம் ஆண்டு முதல், சுய உதவிக்குழுக்கள் மூலம் மகளிருக்குப் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், கிராமப்புறத் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மகளிரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ரூ. 649.463 இலட்சம் மதிப்பில், 10,000 மகளிருக்கு பால் பண்ணை பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது.

* ரூ.3.12 கோடி மதிப்பில், தீவிர பால் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில், பால் பதப்படுத்துதல், விற்பனை செயல்பாடுகளுக்குத் தேவையான உபகரணங்கள் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

* ரூ. 394.00 இலட்சம் மதிப்பில் பாலின் தரத்தை ஆரம்ப நிலையிலேயே உயர்த்துவதற்காக, 39 மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவப்பட்டுள்ளன.

* இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் பால் உற்பத்தி யாளர்களுக்கு அதிகபட்ச கொள்முதல் விலையாக லிட்டருக்கு ரூ.10.50 வழங்குகிறது.

* இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் பால் நுகர்வோருக்கு மிகக் குறைவான விலையில் லிட்டருக்கு ரூ.12.50 வீதம் விற்கப்படுகிறது.

* நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர்கள் ஆகிய இருதரப்பினர்களின் தனி நபர் வருமானம் உயர வழிவகை செய்யும் நோக்கத்தில் விற்பனை விலையை உயர்த்தாமல் கொள்முதல் விலை ரூ.1 உயர்த்தி, இந்த விலை உயர்வால் 4 லட்சம் பால் உற்பத்தியாளர்கள் ரூ.124 கோடிக்கு பயனடைந்துள்ளனர்.

* ஆவின் வரலாற்றில் முதல் முறையாக டெல்லி மதர் டைரி மற்றும் கல்கத்தா பால் பண்ணைகளுக்குப் பால் மற்றும் பால் பவுடர் வழங்குவது குறித்து நீண்டகால வியாபார உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு, கடந்த 2 ஆண்டுகளில் ரூ.196.38 இலட்சம் லிட்டர் பால் மற்றும் 12,000 மெ.டன் பால் பவுடர் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

* ஆவின் வரலாற்றில் முதல் முறையாக திருமலை – திருப்பதி தேவஸ்தானத்திற்கு 2004–2005ஆம் ஆண்டு ரூ. 28.07கோடி மதிப்பில் 2,580 மெ. டன் நெய் விற்கப்பட்டுள்ளது.

* ஆவின் வரலாற்றில் முதல் முறையாக அகில இந்திய அளவில் கூட்டுறவு அமைப்பில் ஏற்றுமதி உரிமம் பெற்றுள்ள 20 நிறுவனங்களில் ஆவின் நிறுவனங்களான சேலம் மற்றும் ஈரோடு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் ஏற்றுமதி உரிமம் பெற்று, டெட்ரா பேக் பால், நெய் மற்றும் பால் பவுடர் ஆகியவற்றை ரூ. 55.52 லட்சம் மதிப்பில், ஏற்றுமதி செய்துள்ளன

* ஜனவரி 2006ல் ஆவின் நிறுவனத்தின் கீழ் இயங்கும் உதகை ஜெர்சி மையக்கரு மற்றும் பொலிகாளைப் பண்ணையின் தரமான செயலாற்றல், மற்றும் தரமான உறைவிந்து குச்சி உற்பத்திக்கு தேசிய அளவில் "ஏ" கிரேடு சான்றிதழ் மற்றும் விருது கிடைத்துள்ளது.

* ஆவின் வரலாற்றில் முதல் முறையாக சென்னை மாநகர 4 பால் பண்ணைகள் ஐ.எஸ்.ஓ. மற்றும் எச்.ஏ.சி.சி.பி. தரச்சான்றிதழ்கள் பெற்றுள்ளன. இச்சான்றிதழ்கள், கோடக்ஸ் அலிமென்டாரியஸ் குழுமத்தால் நிர்ணயிக்கப்பட்ட சர்வதேசத் தரத்தினை இந்தப் பால் பண்ணைகளின் தயாரிப்புகள் உறுதி செய்வதைச் சுட்டிக் காட்டுகின்றன. இந்தியாவில் உள்ள மாநிலக் கூட்டுறவுப் பால் நிறுவனங்களின் கீழ் இயங்கும் 10 பால் பண்ணைகள் மட்டுமே இந்த தரச்சான்றிதழ்கள் பெற்றுள்ள நிலையில் 10ல் 4 பண்ணைகள் நமது மாநிலத்தில் உள்ளன.

**மீன்வளம்**

* கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்களுக்கு ரூ.37,000/– மதிப்பீட்டில் 2,000 இலவச வீடுகள் ஒவ்வொரு ஆண்டும் கட்டி வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 4,449 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

* சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு மீனவரும் மாதம் ரூ.75/–ஐ தனது பங்குத் தொகையாக 8 மாதங்களுக்கு வழங்கவேண்டும். மைய மற்றும் மாநில அரசுகள் தங்களது பங்காகத் தலா ரூ.37.50–ஐ 8 மாதங்களுக்கு அளித்து, இதன் மூலம் வரும் மொத்தத் தொகையான ரூ.1200/–லிருந்து மீன்பிடிப்பில்லாத காலங்களில், அதாவது 4 மாதங்களுக்கு மாதம் ரூ.300/– வீதம் மீனவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், ரூ. 9,058.59 இலட்சம் செலவில்

8,45,115 மீனவர்களும், ரூபாய் 1,752.68 இலட்சம் செலவில் 1,68,529 மீனவ மகளிரும் பயனடைந்துள்ளனர்.

* மீனவர் குழுக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு பயனாளி மீனவருக்கான காப்பீட்டு பிரிமியத்தொகை ரூ.14–ஐ மைய மற்றும் மாநில அரசுகள் சமமாகப் பகிர்ந்து அளிக்கும். மீனவர்களிடமிருந்து காப்பீட்டு பிரிமியத்தொகை எதுவும் வசூலிக்கப்படுவதில்லை. இத்திட்டத்தின் கீழ், மீனவர் இறந்தாலோ அல்லது முழு ஊனம் அடைந்தாலோ ரூ.50,000–மும், பகுதி ஊனம் அடைந்தால் ரூ.25,000–மும் வழங்கப்படும். இதன் மூலம் ரூ.13,435.62 இலட்சம் செலவில் 19,17,302 மீனவர்கள் பயனடைந்துள்ளனர்.

* மீனவர்களுக்கு விற்கப்படும் டீசல் எண்ணெய்க்கு விற்பனைவரி தள்ளுபடி செய்தல் திட்டத்தின்மூலம் மாநிலத்தில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் உபயோகிக்கும் உயர்வேக டீசல் எண்ணெய்க்கு 100 விழுக்காடு விற்பனை வரி விலக்கு அளிக்கப்படும். இதன்மூலம் 20,200 படகுகளுக்கு ரூ.6,300.00 இலட்சம் செலவில் வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.


* மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து உயர்வேக டீசல் எரி எண்ணெய்க்கு ரூ. 457.80 இலட்சம் மானியம் அளித்துள்ளன. இதன் மூலம் 4,216 மீனவர்கள் பயனடைந்துள்ளனர்.

* தமிழ்நாட்டில் 10 மீன் இறங்கு தளங்கள் அனைத்துக் கட்டமைப்பு வசதிகளுடன் ரூ.13.12 கோடி மதிப்பீட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 இடங்களில், 5 இடங்களில் கட்டுமானப் பணி முடிவுற்றுள்ளது. ஏனைய 5 இடங்களில் கட்டுமானப் பணி நடைபெற்று வருகின்றது.

* தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம் மூலம் ரூ. 2,222.72 இலட்சம் செலவில் ஈமு பறவை ஆராய்ச்சி நிலையம் அமைத்தல் ஐ.எஸ்.ஓ.9001 தரச்சான்று பெறுதல், மகளிர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சுய உதவி குழுக்கள் மூலம் புழக்கடை வான்கோழி வளர்ப்பில் பெண்களை ஊக்குவித்தல் மற்றும் பிற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

* * *

# உயர்கல்வித்துறை




* அரசு உறுப்புக் கல்லூரிகளில் 41 புதிய இளங்கலை அறிவியல் பாடப்பிரிவுகள் மற்றும் 68 முதுகலை அறிவியல் பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.

* ஆண்டிபட்டி, சாத்தான்குளம் மற்றும் கூடலூர் ஆகிய இடங்களில் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.

* வேலைவாய்ப்பு மற்றும் ஆலோசனை வழங்கும் மையங்கள் அனைத்து அரசு உறுப்புக் கல்லூரிகள் மற்றும் உதவி பெறும் கல்லூரிகளில் நிறுவப்பட்டுள்ளன.

* தமிழ்நாட்டில் 134 கல்லூரிகள் தேசிய தகுதி மற்றும் தர நிர்ணயக் குழுவால் தரநிர்ணயம் செய்யப் பட்டுள்ளன.

* 15 அரசு உறுப்புக் கல்லூரிகள், 45 அரசு உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் 7 சுயநிதி கல்லூரிகளுக்கு, தன்னாட்சித் தகுதி வழங்கப்பட்டுள்ளது.

* சென்னை மாநிலக்கல்லூரியில் பார்வையிழந்த மாணவர்களுக்கு, கணினி பயிற்சி அளிக்கும் கணினி மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

* 2004–2005 ஆம் கல்வி ஆண்டு முதல் கிராமப்புற மாணவர்கள் பயனடைவதற்காக, பி.இ./பி.டெக் பட்டப்படிப்புகளில் மாணவர்கள் சேர்க்கையின் போது கடைபிடிக்கப்பட்டு வந்த வயது வரம்பு மற்றும் கூடுதல் முயற்சிகள் எண்ணிக்கை குறித்த வரம்பு நீக்கப்பட்டுவிட்டன.

* 2004–2005ஆம் கல்வி ஆண்டு முதல் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாமாண்டு சேர்க்கைக்கு வயது உச்சவரம்பு நீக்கப்பட்டுள்ளது.

* தமிழகத்திலுள்ள பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களை ஆங்கிலத்தில் நல்ல முறையில் பேசவும், எழுதவும் ஆற்றல் மிக்கவர்களாக ஆக்கும் பொருட்டு பயிற்சி அளிப்பதற்கு தொழில்நுட்பக்கல்வி இயக்ககம், பிரிட்டிஷ் கவுன்சிலுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மற்றும் பிரிட்டிஷ் துணை ஹைகமிஷனர் முன்னிலையில், 25.8.2004 அன்று சென்னையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (Memorandum of Understanding) கையொப்ப மிடப்பட்டுள்ளது. வர்த்தக ஆங்கிலக் கல்விச் சான்றிதழ் தேர்வு பிரிட்டிஷ் கவுன்சில் மூலம் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் உள்ளூர் தேர்வுக்குழு மூலமாக சான்றிதழ்கள் வழங்கப்படும்.

* உலகவங்கி நிதியுதவியுடன் இந்தியஅரசு, பொறியியல் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில், தொழில்நுட்பக்கல்வியை மேம்படுத்தும் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தில், இரண்டாவது கட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட ஏழு மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். தொழில்நுட்பக் கல்வி வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டத்தில் பங்கு பெறும் கல்லூரிகளுக்கு (ஐந்து அரசினர் பொறியியற் கல்லூரிகள், மூன்று அண்ணா பல்கலைக் கழகத்தைச் சார்ந்த கல்லூரிகள் மற்றும் மூன்று அரசினர் பல்தொழில்நுட்பக் கல்லூரிகள்) முதற்கட்டமாக ரூ.63.21 கோடி அனுமதிக்கப் பட்டுள்ளது. மேலும், ஆயுட்கால ஒதுக்கீடாக ரூ.96.16 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. மாநில அரசும் இதற்கென நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

* அண்ணா பல்கலைக்கழகம் இணைப்புவகைப் பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டதையடுத்து, நாட்டிலேயே மிகப்பெரிய தொழில்நுட்பப் பல்கலைக்கழகமாக அண்ணா பல்கலைக்கழகம் திகழ்கிறது.

* அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள கல்லூரிகளுக்கு மிகத் தரம் வாய்ந்த விரிவுரைகள் அளிப்பதற்கு, கல்விக்கென அர்ப்பணிக்கப்பட்டுள்ள எடுசாட் (Edusat) எனப்படும் செயற்கைக் கோளை அண்ணா பல்கலைக்கழகம் பயன்படுத்தி வருகிறது

* முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களை கோயம்புத்தூர், திருச்சி, மதுரை போன்ற வட்டார மையங்களுக்கு வரவழைத்து, அந்நிறுவனங்களில் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்தை அண்ணா பல்கலைக்கழகம் தொடங்கியுள்ளது. பிரபலம் பெறாத கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்கள்கூட இதனால் பயனடைந்துள்ளனர்.

* அனைத்துத் தரப்பு மக்களும், உயர்கல்வி பெறத்தக்க வகையில், சென்னையில் “தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக் கழகம்”, 2002–2003–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, தற்போது பல்வேறு பாடப் பிரிவுகளில் 50,000 மாணவர்களுடன் இயங்கி வருகிறது.

* திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம் மற்றும் வேலூர் மாவட்டங்களிலுள்ள மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள பிரிவினர் அதிக அளவில் கல்வி வசதி பெறுவதற்காக “திருவள்ளுவர்” பெயரால் புதியதாக பல்கலைக்கழகம், 2002–2003ஆம் ஆண்டில் வேலூரில் தொடங்கப்பட்டுள்ளது.

* கண்பார்வையற்ற, கைகால் ஊனமுற்ற மாணவர்களுக்காக அரசு கல்வியியல் கல்லூரிகள் ஒவ்வொன்றிலும் 5 இடங்கள் (7 கல்லூரிகளில் மொத்தம் 35 இடங்கள்) ஏற்படுத்தப்பட்டுள்ளன.

* சென்னைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டு 150 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி, அரசு இப்பல்கலைக்கழகத்திற்கு புதிய மீநுண்தொழில் நுட்ப மையம் (Centre for Nanosciences) தொடங்குவதற்கு ரூபாய் 5 கோடி மானியம் வழங்குகிறது.

* * *


# பள்ளிக்கல்வித்துறை

* தமிழ்நாட்டில், 6 முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வி வழங்கிட, “அனைவருக்கும் கல்வித் திட்டம்” 2001–2002ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ.1,649 கோடி செலவில் இத்திட்டம் நிறைவேற்றக் கருதப் பட்டுள்ளது.

* அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ், 31.3.2004 வரை, பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், அடிப்படை வசதிகள் மற்றும் பராமரிப்புப் பணிகள், மேலும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்குதல் ஆகியவை ரூ.357.15 கோடி செலவில் நிறைவேற்றப் பட்டுள்ளன.

* கடந்த 5 ஆண்டுகளில் 1,274 புதிய தொடக்கப் பள்ளிகள் துவங்கப்பட்டுள்ளன. 2,790 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப் பட்டுள்ளன. 394 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. 406 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

* முதல் முறையாக கல்வித்துறைக்காக ‘நபார்டு’ வங்கியிடம் நிதியுதவி பெற்று ஆறு கட்டங்களாக 1,583 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் வகுப்பறைகள், ஆய்வகக் கட்டடங்கள்,



குடிநீர், கழிப்பிட வசதி போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூ.709.91 கோடி செலவில் பணிகள் தொடங்கப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளன.

* ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கையில் ஒற்றைச் சாளர முறை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

* அங்கீகாரம் ரத்து செய்யப்பட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயின்று, பாதிக்கப்பட்ட சுமார் 20,000 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு தற்போது 15,670 மாணவர்கள் பயிற்சியினை முடித்துள்ளனர். அடுத்தகட்டமாக, 3,576 மாணவர்கள் 2004-05 ஆம் ஆண்டில் பயிற்சியினை மேற்கொண்டு வருகின்றனர்.

* 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று பாடங்கள் வரை தோல்வியுறும் மாணவர்களுக்கு உடனடி மறுதேர்வு நடத்தப்பட்டு வருகிறது.

* பள்ளிகளில் பி.டி. ஆசிரியர் மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் நியமனத்தில் வயது வரம்பு நிர்ணயம் செய்யாமல் வெளிப்படையான போட்டித் தேர்வு மூலம் திறமை வாய்ந்த ஆசிரியர்களை, ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்ந்தெடுக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. வேலை வாய்ப்பகம் மூலம் நியமிக்கப்படும் இடைநிலை ஆசிரியர், உடற்கல்வி ஆசிரியர் மற்றும் சிறப்பு ஆசிரியர் நியமனத்திற்கான அதிகபட்ச வயது வரம்பினையும் அரசு நீக்கியுள்ளது.

* மெட்ரிகுலேஷன் பள்ளிகளை மேற்பார்வையிட தனி இயக்ககம் அமைக்கப்பட்டு அப்பள்ளிகள் வரையறுக்கப்பட்டுள்ள வசதிகளுடன் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

* சென்னையில் கன்னிமாரா நூலகத்தில் நிரந்தரப் புத்தகக் கண்காட்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் 867 கிராமப்புற நூலகங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

* இசை, கலை, பேச்சுத்திறன் போன்றவற்றில் திறமையுள்ள மாணவர்களைக் கண்டறிந்து, அதனை வெளிக்கொணர இளைஞர் விளையாட்டுத் திறன் திட்டம் தொடங்கப் பட்டுள்ளது.

* தமிழ்நாட்டில் பயிலும் அனைத்து மாணவர்களும் தமிழ் கற்பதை உறுதி செய்யும் நோக்குடன் அறிவியல் தமிழ் என்ற பாடம் மாநிலத்தில் உள்ள அனைத்து வகைப் பள்ளிகளிலும் எல்.கே.ஜி முதல் 12ஆம் வகுப்பு வரை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

* பள்ளிகளில் மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தை உயர்த்த கற்றலில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்கு தனி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.


* ஆங்கிலத்தில் மாணவர்களின் திறனை மேம்படுத்த 2003-2004ஆம் ஆண்டு முதல் புதியதொரு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, 600 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கில மொழிப் பயிற்சி ஆய்வுக் கூடங்கள் நிறுவ ஆணையிடப் பட்டுள்ளது.

* குழந்தைகளின் பெயருக்கு முன்பாக அவர்களுடைய தந்தையின் பெயரின் முதல் எழுத்து மட்டுமே தலைப்பெழுத்தாகக் குறிப்பிட்டு வந்த நடைமுறையினை மாற்றி, பெற்றோர்களின் விருப்பப்படி தாயின் பெயரில் உள்ள முதல் எழுத்தையும், அதனையடுத்து தந்தையின் பெயரில் உள்ள முதல் எழுத்தையும் தலைப்பெழுத்தாகக் குறிப்பிடலாம். அல்லது தாயின் பெயரில் உள்ள முதல் எழுத்தையோ அல்லது தந்தையின் பெயரில் உள்ள முதல் எழுத்தையோ தலைப்பெழுத்தாகப் பயன் படுத்தலாம் என ஆணையிடப்பட்டுள்ளது.

* 2004-2005 ஆம் ஆண்டு முதல், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் அனைத்திலும் முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரையில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் 75 விழுக்காடு வருகைப்பதிவு இருக்கும் பட்சத்தில் தொடக்கக் கல்வியின் தரமும் உறுதி செய்யப்பட்டு, தேக்கமின்றித் தேர்ச்சி அளிக்கப்படும்.

* பள்ளிகளில் சேராத குழந்தைகள், ஆதரவற்றோர், தெருவோரக் குழந்தைகள், எய்ட்ஸ்/எச்.ஐ.வி ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களின் குழந்தைகள் மற்றும் பாலியல் சுரண்டலால் பாதிக்கப் பட்டவர்களின் குழந்தைகளை பிறப்புச் சான்றிதழ் மற்றும் சாதிச் சான்றிதழ் போன்றவற்றினை வற்புறுத்தாமல் பள்ளிகளில் எந்த நேரத்திலும் சேர்ப்பதற்காகச் சேர்க்கை விதிகள் தளர்த்தப் பட்டுள்ளன.

* தொடக்கப் பள்ளிகளில், மாணவர்கள் இடைநிற்றல் விகிதம், 2001–2002ஆம் ஆண்டில் 16 விழுக்காடு என்ற நிலையிலிருந்து 2003–2004 ஆம் ஆண்டில் 8 விழுக்காடாகக் குறைந்தது. 2004–2005ஆம் ஆண்டில் இது 6 விழுக்காடாகக் குறைந்துள்ளது. இதே போன்று நடுநிலைப் பள்ளி இடைநிற்றல் விகிதமும், 2004–2005ஆம் ஆண்டில் 9 விழுக்காடாகக் குறைந்துள்ளது.



### கூடுதல் சாதனைகள்

* 695 அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும் 235 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் அறிவியல் ஆய்வகம் கட்டுவதற்காக தமிழ்நாடு பாடநூல் கழகத்தில் உபரியாக உள்ள தொகையிலிருந்து ரூ.71.03 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* 2001–2002ஆம் ஆண்டு முதல் 2005–2006ஆம் ஆண்டு வரை 58,282 ஆசிரியர் காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு அனுமதித்துள்ளது. மேலும் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள நடுநிலை வகுப்புகளில் (upper primary classes) பயிலும் மாணவர்களின் கல்வித் தரத்தை மேலும் உயர்த்த ஏதுவாக கூடுதலாக 3,010 வட்டார வள ஆசிரியர் பயிற்றுநர்கள் மற்றும் 167 ஆசிரியர் பணியிடங்கள், அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

* 2005–2006ஆம் ஆண்டு முதல் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் நிதியுதவி பெறாத பிரிவுகளில் பயிலும் அனைவருக்கும் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை இலவச பாடநூல் வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

* அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை கல்வி கற்கும் மாணவ மாணவியரின் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் இறந்து விட்டதாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ பாதிக்கப்படுகின்ற அந்த மாணவ மாணவியர் ஒவ்வொருவருக்கும் ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) நிதி வழங்கப்படும். அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையை அந்த மாணவ / மாணவியரின் கல்வி / பராமரிப்புச் செலவிற்கு பயன்படுத்த ஆணை வழங்கப்பட்டுள்ளது.

* மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகள் அனைத்தும் கட்டுமான உறுதித்தன்மை மற்றும் பாதுகாப்பு விதிமுறைகளை நிறைவு செய்யும் வகையில் பள்ளிக் கல்வித்துறையில் உரிய அலுவலர்களின் ஒப்புதல் பெற அரசு துரிதநடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

* 11, 12ஆம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவ மாணவியருக்கும் மிதிவண்டி வழங்கப்பட்டு வருகிறது. பள்ளிகளில் மிதிவண்டி நிறுத்தங்கள் அமைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்காக கூடுதலாக ரூ.7.02 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

* 2005ஆம் ஆண்டு ஏற்பட்ட மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 22 மாவட்டங்களில் உள்ள 1 முதல் 12ஆம் வகுப்பு வரை அரசு / நிதியுதவி பெறும் பள்ளிகளில் சுயநிதி அடிப்படையில் பயிலும் மாணவர்களில் மழை வெள்ளத்தால் பாடப் புத்தகங்களையும் குறிப்பேடுகளையும் இழந்து விட்டவர்களுக்கு இலவசமாக பாடநூல்களும் குறிப்பேடுகளும் வழங்கப்பட்டுள்ளன.


* எழுத்தறிவு விகிதத்தில் ஆண், பெண் இருபாலருக்குமிடையே உள்ள இடைவெளியை நிரப்பிடும் வகையில் 15–35 வயதுப் பெண்களின் எழுத்தறிவுத் திறனை உயர்த்திட பெண்களுக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டம் ரூ.4 கோடியில் உருவாக்கப்பட்டுள்ளது.

* மைக்ரோ சாஃப்ட் நிறுவனம் அசிம் பிரேம்ஜி பவுண்டேஷன் மற்றும் இன்டெல் கணினி நிறுவனங்களுடன் இணைந்து கணினி வழி கல்வி கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை 9,000 ஆசிரியர்கள் மற்றும் 15.29 இலட்சம் மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர்.

* மேலும் மைக்ரோ சாஃப்ட் நிறுவனத்தின் "கணினி கல்வி" (project shiksha) திட்டத்தின் கீழ் 7 மாவட்டங்களில் கணினி பயிற்சி மையங்கள் 9.12.2005 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மைக்ரோ சாஃப்ட் நிறுவனத் தலைவர் திரு. பில்கேட்ஸ் அவர்களின் முன்னிலையில் துவக்கி வைக்கப்பட்டது.

* * *

# மக்கள் நல்வாழ்வுத்துறை



* ரூ.104.47 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள அரசு பொது மருத்துவமனையின் இரு பிரம்மாண்டமான புதிய கட்டடங்கள், 1.7.2005 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகிறது. இம்மருத்துவமனை இந்தியாவிலேயே ஒரு மாபெரும் அரசு மருத்துவமனையாகத் திகழ்கிறது.

* கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஆசாரிப் பள்ளத்தில் ஒரு புதிய மருத்துவக் கல்லூரியும், வேலூரில் ஒரு புதிய மருத்துவக் கல்லூரியும் துவக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் அரசு மற்றும் அரசு சார்ந்த துறையில் 14 மருத்துவக் கல்லூரிகள் செயல்படுகின்றன.

* வேலூர், தேனி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரியில் உள்ள மருத்துவக் கல்லூரிகளுக்கு ரூ.187.29 கோடி மதிப்பில் கட்டமைப்பு வசதியை மேம்படுத்தவும் மற்றும் ரூ.54.11 கோடி மதிப்பில் உபகரணங்கள் மற்றும் மருத்துவக் கருவிகள் வழங்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* புதிய மற்றும் ஏற்கெனவே செயல்பட்டு வரும் மருத்துவக் கல்லூரிகளைச் சீராக இயக்கும் பொருட்டு 190 இளம் பேராசிரியர்கள்/பேராசிரியர்கள் மற்றும் 500 பயிற்றாசிரியர்கள்/உதவிப் பேராசிரியர்கள் பணியிடங்கள் தோற்றுவிக்கப் பட்டுள்ளன.

* தமிழ்நாட்டில் சமுதாயத்தில் பின்தங்கிய மற்றும் ஏழை எளிய மக்களின் சுகாதார வசதியை மேம்படுத்துவதற்காக, உலக வங்கி நிதி உதவியுடன், ரூ.597.15 கோடி செலவில் 'தமிழ்நாடு சுகாதாரத் திட்டம்' மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

* தரம் வாய்ந்த மருத்துவ சேவையை பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு வழங்குவதில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. இம்மருத்துவ சேவையை மேலும் மேம்படுத்த, "பேறுசார் மற்றும் குழந்தை நலத்திட்டத்தின்" கீழ் ரூ.426 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* 106 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 30 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவ மனைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இந்த மருத்துவமனைகளில் எக்ஸ்ரே கருவிகள், இசிஜி, அல்ட்ராசோனோகிராம், அறுவை சிகிச்சை அரங்குகள் மற்றும் ஆய்வுக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 180 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 24 மணி நேர பிரசவ சேவை அளிக்கின்றன.

* அரசு ஆரம்ப சுகாதார மையங்கள், அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பணிபுரிவதற்கென 2,322 மருத்துவ ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

* தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் மூலம் 2000–2001இல் ரூ.96.45 கோடி மதிப்பில் மருந்துகளும், 2004–2005ல் மருந்துகள் ரூ.120.48 கோடி மதிப்பீட்டில் மருந்துகளும் வாங்கப் பட்டது.

* வெறிநாய்க்கடியால் ஏற்படும் இறப்பினைத் தடுப்பதற்காக, வெறிநாய்க்கடி மருந்து (Tissue Culture and Anti Rabies Vaccine) அனைத்து மருத்துவமனைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி ஒதுக்கீடு 2001–2002ஆம் ஆண்டில் ரூ.1.06 கோடியாக இருந்து 2004–2005இல் ரூ.15 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

* உயரிய தரமான மருத்துவக் கல்வி மற்றும் மருத்துவச் சேவையை வழங்கியமைக்காக சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் அதனுடன் இணைந்த அரசு பொது மருத்துவமனைக்கு ஐ.எஸ்.ஓ. 9001 : 2000 என்ற தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

* ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் சர்ஜிக்கல் கேஸ்ட்டோ என்ட்ரோலஜி துறையில் ரூ.5 கோடி செலவில் கல்லீரல் மாற்று சிகிச்சைப் பிரிவு (Liver Transplant Unit) ஒன்று அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* மனநலக்காப்பகம் தரமான மனநல மருத்துவ சேவை வழங்குவதில் தலையாய மருத்துவ மனைகளில் ஒன்றாகத் திகழ்கிறது. அதன் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு ரூ.1.05 கோடி செலவில் புதிய நிருவாக கட்டடம் கட்டப்பட்டு 9.8.2005 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப் பட்டது.

* தாம்பரத்தில் உள்ள நெஞ்சக மருத்துவமனை எச்.ஐ.வி./எய்ட்ஸ் மற்றும் காசநோயாளிகளுக்கு

சிகிச்சை அளிப்பதில் முன்னோடி மருத்துவ மனையாகத் திகழ்கிறது.

* அமெரிக்காவிலுள்ள அட்லாண்டா நோய்க் கட்டுப்பாட்டு மையத்தின் உதவியுடன் தாம்பரம் அரசு நெஞ்சக மருத்துவமனையில் ரூ.4.50 கோடி செலவில் ஆய்வுக் கூடம் ஒன்று ஏற்படுத்தப் பட்டுள்ளது.

* கிராமப்புறங்களிலுள்ள மக்களுக்கு நல்ல தரமான மருத்துவ வசதிகள் செய்து தர வேண்டுமென்று தமிழ்நாடு அரசு உறுதி கொண்டுள்ளது. இதனை செயல்படுத்துவதற்காக 106 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இந்த மருத்துவமனைகளில் எக்ஸ்ரே கருவிகள், இசிஜி, அல்ட்ராசோனோகிராம், அறுவை சிகிச்சை அரங்குகள் மற்றும் ஆய்வுக்கூடங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. மேலும், 180 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24 மணி நேர பிரசவ சேவை அளிக்கப்பட்டு வருகிறது.

* திருப்பூர், திருவண்ணாமலை, விழுப்புரம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் நாமக்கல் ஆகிய ஏழு மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் அதிநவீன மருத்துவ ஆய்வுக் கருவிகள் கொண்ட மண்டல நோய் கண்டறியும் மையங்கள் ரூ.21 கோடி செலவில் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

* தமிழ்நாட்டில் ஐந்து மருத்துவமனைகள், மாவட்டத் தலைமை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப் பட்டுள்ளன.

* மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் பொது மக்கள் தேவையான இரத்தத்தைப் பெற வசதியாக எந்நேரமும் செயல்படும் விதத்தில் 112 இரத்த வங்கிகளும், சேமிப்பு நிலையங்களும் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

* நெடுஞ்சாலை விபத்து நிவாரண மையங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்துள்ளார்கள். தேசிய நெடுஞ்சாலைகளில் அமைந்துள்ள பத்து மருத்துவமனைகளில், விபத்து மற்றும் அவசர கால சிகிச்சையை மேற்கொள்ளுவதற்கான வசதிகள் மேம்படுத்தப் பட்டுள்ளன.

* 600 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கும் வகையில் 12 புதிய அரசு செவிலியர் பள்ளிகள் திறக்கப் பட்டுள்ளன. மேலும், தற்போதுள்ள 9 செவிலியர் பயிற்சிப் பள்ளிகளில் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 745–லிருந்து 1,195 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. மதுரை மருத்துவக் கல்லூரியில் புதிதாக ஒரு பி.எஸ்சி., (செவிலியர்) பாடப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

* அரசு மருத்துவக் கல்லூரிகளில், 11 புதிய மருத்துவம் சாரா பட்டயம் மற்றும் சான்றிதழ் பயிற்சிப் படிப்புகள் துவங்கப்பட்டுள்ளன.

* அரசு மருத்துவ நிலையங்களில் செவிலியர் பணியை மேம்படுத்த 4,221 செவிலியர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

* பொதுமக்களுக்கு சிறப்பாகச் சேவை ஆற்றிடும் பொருட்டு அரசு மருத்துவமனைகளிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் 570 மருந்தாளுநர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

* சுனாமியினால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம் அரசு மருத்துவமனை ரூ.10 கோடி செலவில் மறுசீரமைக்கப்படுகிறது.

* சுனாமி பேரழிவால் ஏற்கெனவே குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொண்டு குழந்தைகளை இழந்த பெற்றோர்க்கு, இலவச மறுஅறுவை சிகிச்சை செய்துகொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அங்கீகரிக்கப்பட்டுள்ள தனியார் மருத்துவ மனைகளில் இந்த அறுவை சிகிச்சை ஒன்றுக்கு ஆகும் செலவாக ரூ.25,000 வழங்கப்படுகிறது.

* மாநில அரசின் இடைவிடாத முயற்சியின் காரணமாக ரூ.47 கோடி மதிப்பில் இந்திய அரசும், தமிழ்நாடு அரசும் கூட்டு முயற்சியாக தேசிய சித்தா நிலையம் ஒன்று துவக்க இந்திய அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

* இந்திய மருத்துவ முறைக்கு மேலும் அதிக முக்கியத்துவம் அளிக்கும் வகையில், ஏற்கெனவேயுள்ள 617 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலுள்ள சித்த மருத்துவப் பிரிவுகளுடன் கூடுதலாக 184 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் சித்த மருத்துவப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

* 8,682 கிராம சுகாதார செவிலியர்களுக்கு அவர்கள் பணிபுரியும் பகுதிகளில், மக்களின் சிறு நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கென, இந்திய மருத்துவமுறை மருந்துப் பெட்டிகள், ஆண்டொன்றிற்கு ரூ.24.31 கோடி செலவில் வழங்கப்பட்டு வருகின்றன.

* 2001–2002ஆம் ஆண்டில் ரூ.4.75 கோடியாக இருந்த இந்திய மருத்துவத்திற்கான மருந்து நிதி ஒதுக்கீடு 2004–2005–ஆம் ஆண்டில் ரூ.13.03 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

* மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் மதுரை அரசு இராசாசி மருத்துவமனையுடன் தொலைதூர மருத்துவ வசதியோடு இணைக்கப் பட்டுள்ளது.

* தமிழ்நாட்டின் எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் புற்றுநோய், இதயநோய் ஆகியவற்றைக் கண்டறிய சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. இதன் மூலம் 26.93 இலட்சம் மக்கள் பயனடைந்தனர்.

* இளம் பிள்ளை வாத நோயை முற்றிலுமாக ஒழித்து விட்ட பெருமையை தமிழகம் பெற்றுள்ளது. இது வழக்கமாக கொடுக்கப்படும் சொட்டு மருந்து திட்டம் மூலமும், போலியோ சிறப்பு முகாம்கள் மூலமும் சாதிக்கப்பட்டதாகும்.

* சிறு குடும்பம் என்ற நிலையை ஏற்படுத்த தமிழ்நாட்டில் பல திட்டங்கள் செயல்படுத்தப் பட்டுள்ளதால் மக்கள் தொகையைக் கட்டுப் படுத்தும் முயற்சியில் தமிழ்நாடு பெரும் புகழைப் பெற்றுள்ளது. ஐந்தாண்டுகளில் 19,51,429 அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன.

* தீவிர யானைக்கால் நோய்த்தடுப்பு முகாம் நடத்தப்பட்டு, யானைக்கால் நோய் எந்தெந்த மாவட்டங்களில் அதிகமாக காணப்படுகிறதோ அங்கெல்லாம் DEC மாத்திரை விநியோகிப்பதன் மூலம் யானைக்கால் நோய் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. இம்முகாமின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள 268 இலட்சம் மக்கள் பயன் பெற்றுள்ளனர்.

* தொலைதூர மற்றும் பழங்குடி மக்களுக்கு சேவை செய்யும் பொருட்டு பொது சுகாதார இயக்ககத்தின் கீழ் 46 புதிய நடமாடும் சுகாதாரக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் 10.66 இலட்சம் மக்கள் கடந்த 5 ஆண்டுகளில் பயன் அடைந்துள்ளனர்.

* தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கிராமங்களிலும் பிறவி ஊனமுற்ற குழந்தைகளைக் கண்டறிய ஒரு கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இக்கணக்கெடுப்பு இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழ்நாட்டில் நடத்தப்பட்டது. முதல்கட்டமாக மறுசீரமைப்பு அறுவை சிகிச்சை செய்வதற்கு “மேல் உதடு பிளவு'' மற்றும் “மேல் அன்னப் பிளவு'' குறைபாடு உள்ள 5,162 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்யப் பட்டுள்ளது. தமிழ்நாட்டை “ மேல் உதட்டு பிளவு'' மற்றும் “மேல் அன்னப் பிளவு'' இல்லாத மாநிலமாக உருவாக்குவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விழிப்புணர்வு முகாமைத் தொடங்கி வைத்தார்கள்.

* தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புற மக்களுக்கு தரம் வாய்ந்த பல் மருத்துவ சிகிச்சை அளிப்பதற்காக 24 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் மருத்துவ சிகிச்சை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

* பெருநகர் மற்றும் கிராமப்புறங்களில் வாழும் பொதுமக்களுக்குத் தரமான கண் சிகிச்சை சேவைகள் அளித்திட அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும் ரூ. 1.65 கோடி செலவில் நவீன மற்றும் உயர் தொழில் நுட்பத்துடன் கூடிய கண் அறுவை சிகிச்சைக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

* ஐந்தாண்டுகளில் 19,33,040 நபர்களுக்கு கண்புரை அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. 97,33,739 பள்ளி மாணவர்களுக்குக் கண்பார்வை பரிசோதனை செய்யப்பட்டு 1,37,326 பேர்களுக்குக் கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன. கண்தானம் மூலமாக 12,567 கண்கள் சேகரிக்கப் பட்டிருக்கின்றன.

* பள்ளி மாணவர்களுக்கு கண் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டு, 85.6 இலட்சம் மாணவர்கள் இதுவரை பயன் பெற்றுள்ளனர்.

* கருவுற்ற மகளிரைப் பரிசோதனை செய்தபோது, எய்ட்ஸ் தாக்கம் 2001ஆம் ஆண்டில் 1.13% ஆக இருந்தது, அது 2004இல் 0.65% ஆகக் குறைந்து உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

* 1,000 உயர்கல்வி நிலையங்களில் பயிலும் கல்லூரி மாணவர்களுக்கு எச்.ஐ.வி./ எய்ட்ஸை தடுக்கும் திறனை வழங்கும் முகமாக ரூ. 75 இலட்சத்தில் சிவப்பு ரிப்பன் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 77 இலட்சம் மாணவர்கள் இடம் பெற்றுள்ளனர்.

* 31 இலட்சம் சுய உதவிக் குழு உறுப்பினர்களிடையே எச்.ஐ.வி./ எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு ரூ.2.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* அரசின் பாதுகாப்பு மற்றும் உதவித் திட்டத்தின் கீழ் ஏறத்தாழ 40,000 எச்.ஐ.வி./ எய்ட்ஸ் நோயாளிகள் பயனடைந்துள்ளனர். அவர்களில் 4,100 நோயாளிகளுக்கு ஆன்டி ரேட்ரோ வைரஸ் மருந்துகள் இலவசமாக அளிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொண்டு வருகிறார்கள்.

* 275 மையங்களில், “ பெற்றோர் நோய் – சேய்க்குப் பரவாத் திட்டம்'' (கர்ப்பிணித் தாயிடமிருந்து கருவிலிருக்கும் குழந்தைக்கு எச்.ஐ.வி. தொற்றுநோய் ஏற்படாமல் தடுக்கும் திட்டம்) தொடங்கப்பட்டுள்ளது.

* அனைத்து மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளிலும் மிக குறைந்த கட்டணத்தில் சி.டி.ஸ்கேன் வசதியை மருத்துவப் பணிகள் கழகம் மூலமாக ஏழை, எளியோருக்கு அரசு வழங்கி வருகிறது. மேலும், சென்னை அரசு பொது மருத்துவமனையிலும், மதுரை அரசு இராசாசி மருத்துவமனையிலும் குறைந்த கட்டணத்தில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதியை தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் மூலமாக ஏழை, எளியோருக்கு அரசு வழங்கி வருகிறது.

* * *

# கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்துறை



- "புங்கர் பீமா யோஜனா" திட்டத்தின்கீழ் 2004-05ஆம் ஆண்டு முதல் நெசவாளர்கள் செலுத்த வேண்டிய காப்பீட்டுக் கட்டணம் ரூ.130ஐ மாநில அரசே செலுத்தி வருகிறது. இப்புதிய காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கைத்தறி நெசவாளர்கள் இயற்கை மரணம் எய்தினால் ரூ.50,000/-மும், விபத்தினால் மரணமடைந்தால் ரூ.80,000/-மும் நெசவாளரின் வாரிசுதாரர்களுக்கு காப்பீட்டுத் தொகையாக வழங்கப்படுகிறது. இது தவிர கருணைத் தொகையாக கோ–ஆப்டெக்ஸ் சார்பில் ரூ.15,000மும் வழங்கப்படுகிறது. 2004-2005ஆம் ஆண்டிற்கு ரூ.98.93 இலட்சமும், 2005-06ஆம் ஆண்டிற்கு ரூ.152.39 இலட்சமும் காப்பீட்டுக் கட்டணமாக கைத்தறி நெசவாளர்கள் சார்பாக மாநில அரசு செலுத்தியுள்ளது. இப்புதிய திட்டத்தின்கீழ், 1,17,220 நெசவாளர்கள் சேர்க்கப்பட்டு பயன்பெற்று வருகின்றனர்.

- நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் குழந்தைகளில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காலாண்டுக்கு ரூ.300 வீதம் கல்வி உதவித் தொகை புங்கர் பீமா யோஜனா திட்டத்தின் கீழ் வழங்கப் படுகிறது. 2004-05ஆம் ஆண்டில் 9,473 மாணவ மாணவியர்களுக்குக் கல்வி உதவித் தொகையாக ரூ.85,25,700 வழங்கப்பட்டுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டில் 16,021 மாணவ மாணவியர்களுக்குக் கல்வி உதவித் தொகை வழங்கப்படவுள்ளது.

- கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தில், சரக்குத் தேக்கத்தினைக் குறைக்க கைத்தறித் துணி விற்பனைக்கு வழக்கமாக வழங்கப்படும் 20% தள்ளுபடியுடன் 10% கூடுதல் தள்ளுபடி, சிறப்புக் கழிவு, கைத்தறி கண்காட்சிகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் ரூ.2,388.58 கோடி மதிப்பிற்குக் கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.2,947.46 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதன்விளைவாக, 31.05.2001 தேதியில் ரூ.442.34 கோடியாக இருந்த சரக்கிருப்பு 31.12.2005 அன்று ரூ.230.17 கோடியாகக் குறைந்துள்ளது.

- அரசின் நிதி நெருக்கடி காரணமாக இலவச வேட்டி சேலை திட்டம் செயல்படுத்த இயலாத நிலையில் கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்பட்டபோது இலவச வேட்டி சேலை திட்டத்தில் ஈடுபட்டு வந்த 22,072 கைத்தறி நெசவாளர்களுக்கு 29.7.2002, 21.8.2002 மற்றும் 15.9.2002 ஆகிய நாட்களில் 3 கட்டங்களாக 20 கிலோ அரிசி வீதம் மொத்தம் 1,324.38 மெட்ரிக் டன் அரிசி ரூ. 84.10 இலட்சம் செலவில் இலவசமாக வழங்கப்பட்டது.

- 2002-2003ஆம் ஆண்டில் "மலிவு விலை வேட்டி சேலை திட்டம்'' அறிமுகப்படுத்தப்பட்டு சேலை ஒன்றினை ரூ.40க்கும், வேட்டி ஒன்றினை ரூ.30க்கும் விற்பனை செய்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தேங்கியிருந்த 57.00 இலட்சம் வேட்டிகள் மற்றும் 59.34 இலட்சம் சேலைகள் ரூ.40.84 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டது.

- பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு வட்டி மானியத் தொகையாக அரசு ரூ.33.80 கோடி வழங்கியுள்ளது.

- 2004ஆம் ஆண்டு பொங்கல் திருநாள் முதல், 111 இலட்சம் சேலைகளும், 111 இலட்சம் வேட்டிகளும் ரூ.187.48 கோடி செலவில் இலவசமாக வழங்கப்பட்டன. இத்திட்டம் 2005-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப் பட்டு, 1.11 கோடி பாலிகாட் சேலைகளும், 1.11 கோடி பாலிகாட் வேட்டிகளும் ரூ.173.00 கோடி செலவில் இலவசமாக வழங்கப்பட்டன. 2006 ஆம் ஆண்டில் 1.64 கோடி பாலிகாட் சேலைகளும், 1.64 கோடி பாலிகாட் வேட்டிகளும் ரூ.256 கோடி செலவில் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

- 250 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை சார்ந்த 13,500 நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் ஆண்டொன்றுக்கு ரூ.40 கோடி செலவில் இலவசச் சீருடை வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுவதோடு பருத்தியாலான துணிகளுக்கு பதிலாக பாலியஸ்டர் இழை கலந்து தரத்துடன் கூடிய சீருடைத் துணிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

- 2000-01ஆம் ஆண்டில் இலாபத்தில் இயங்கி வந்த 320 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 2004-05ஆம் ஆண்டில் 605 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

- நெசவாளர்களின் நலன் கருதித் தள்ளுபடி மானியம் 2002-2003ஆம் ஆண்டில் ரூ.75.00 கோடியாகவும், 2003-04ஆம் ஆண்டில் ரூ.88.00 கோடியாகவும், 2004-05 ஆம் ஆண்டில் ரூ.92.00 கோடியாகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2005-06 ஆம் ஆண்டிற்கும் தள்ளுபடி மானியத் திட்டத்திற்கென ரூ.98.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 735 நெசவாளர் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் நெசவாளர் குடும்ப ஓய்வூதியம் ரூ.250லிருந்து ரூ350ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

- இறந்த நெசவாளர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் மொத்தக் காப்பீட்டுத் தொகை ரூ.60,000/-லிருந்து ரூ.65,000/-ஆக உயர்த்தப் பட்டுள்ளது.

- 25,000 நெசவாளர்களை மதிப்பு கூடிய மற்றும் ஏற்றுமதி இரக துணிகளை உற்பத்தி செய்ய ஊக்குவிக்கும் வகையில் "ஸ்வர்ண ஜெயந்தி கிராம சுயவேலைவாய்ப்பு திட்டத்தின்" கீழ் ரூ.25.30 கோடி மதிப்பில் ஒரு சிறப்புத் திட்டம் உருவாக்கப்பட்டு, இத்திட்டம் 13 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- சென்னிமலை பகுதி நெசவாளர்களுக்கு ஒரே இடத்தில் ரூ.686.80 இலட்சம் செலவில் 1,010 தொழிற்கூடத்துடன் கூடிய வீடுகள் அடங்கிய மிகப்பெரிய நெசவாளர் காலனி கட்டப்பட்டுள்ளது.

- மகளிர் கைத்தறி நெசவாளர்கள் சுயமாக வேலை செய்து வருவாய் ஈட்டும் வகையில் 5,001 மகளிர் நெசவாளர்களுக்கு தையல் மற்றும் இதர வேலைவாய்ப்புகளுக்கான பயிற்சி ரூ.20 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

- ரூ.2,000 மதிப்புள்ள சாதாரண விசைத் தறிகளை தறி ஒன்றுக்கு ரூ.5,000 மானியத்துடன் நவீனமாக்க ரூ.1.00 கோடி மதிப்பில், விசைத்தறி பதிவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்டு 1,316 சாதாரண விசைத்தறிகள் உயர்ரக விசைத்தறிகளாக நவீனப்படுத்தப்பட்டன.

- கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்றுமதி இரக உற்பத்தியினை மேற்கொள்ள ஊக்குவிக்கப்பட்டு, கடந்த 5 ஆண்டுகளில் ரூ.1,015.42 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்துள்ளனர்.

- கூட்டுறவு நூற்பாலைகள் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பெற்றுள்ள கடன் நிலுவைத் தொகையினை செலுத்துவதற்காகக் கூட்டுறவு நூற்பாலைகளுக்கு, அரசு ரூ.76.57 கோடி வழங்கியுள்ளது.

- பாரத ஸ்டேட் வங்கியில் வாங்கியுள்ள கடன் நிலுவையினைச் செலுத்துவதற்காகத் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்திற்கு, அரசு ரூ.112.37 இலட்சம் வழங்கியுள்ளது.

- ரூ.65.77 கோடி மதிப்பில், கூட்டுறவு நூற்பாலைகளிலுள்ள 3,624 தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் பயன்பெறும் வகையில், தன்விருப்ப ஓய்வுத் திட்டத்தினை செயல்படுத்தியுள்ளது.

- ரூ.14.95 கோடி மதிப்பில், கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் 638 பணியாளர்களுக்குச் சிறப்புத் தன்விருப்ப ஓய்வுத் திட்டத்தினைச் செயல்படுத்தியுள்ளது

- பல் மருத்துவக் கல்லூரியில் பி.டி.எஸ். பட்டப்படிப்பு பயிலும் நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த மாணவ மாணவியருக்கு ரூ.3,000/- வீதம் டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை யிலிருந்து கல்வி உதவித் தொகையாக வழங்கப் படுகிறது.

- கைத்தறித் துணிகளில் புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்தி விற்பனையை அதிகரிக்க அகமதாபாத்திலுள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனம் மூலம் ரூ.48.50 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் உருவாக்கப்பட்டு 1,289 புதிய வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டு இத்திட்டம் காஞ்சிபுரம், ஆரணி, சேலம், கோவை, கரூர், ஈரோடு மற்றும் பரமக்குடி ஆகிய பகுதிகளில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் செயல்படுத்தப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இப்புதிய வடிவமைப்பு கைத்தறித் துணிகள் 05.11.2004 அன்று முதல் விற்பனைக்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டன.

- பல்லடம், குமாரபாளையம் மற்றும் ஆண்டிபட்டி ஆகிய பகுதிகளில் உயர் தொழில் நுட்ப நெசவுப் பூங்காக்கள் அமைக்க மைய அரசு கொள்கையளவில் ஒப்புதல் அளித்துள்ளதன் அடிப்படையில், மேற்படி பூங்காக்கள் அமைக்க மாநில அரசு பங்காக ரூ.13.22 கோடி வழங்கியுள்ளது.

- மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதன் அடிப்படையில் சென்னைக்கருகிலுள்ள இருங்காட்டுக்கோட்டை மற்றும் திருப்பூர் ஆகிய இரண்டு பகுதிகளில் மொத்தம்

ரூ.44.31 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசுப் பங்கு ரூ.29.76 கோடி மற்றும் மாநில அரசுப் பங்கு ரூ.14.55 கோடி ஆயத்த ஆடைப் பூங்காக்கள் அமைக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

➢ மாநிலத்தில் உள்ள ஜவுளி நகரங்களில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மத்திய அரசின் நிதியுதவி ரூ.31.79 கோடியைப் பயன்படுத்தி ரூ.46.81 கோடி மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மற்றும் திருப்பூரில் ஜவுளித் தொழில் மையங்களுக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த மைய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. காஞ்சிபுரம் திட்டத்தைச் செயல்படுத்த மாநில அரசு ரூ.5.00 கோடியை முன்பணமாக வழங்கியுள்ளது.

➢ பட்டுச் சேலைகளிலுள்ள ஜரிகையின் அளவீட்டினை அறிய ரூ.22.84 இலட்சம் செலவில் ''எக்ஸ்–ரே ஊடுகதிர்ப் பகுப்பாய்வு இயந்திரம்'' காஞ்சிபுரத்தில் நிறுவப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய பகுதிகளில் ''எக்ஸ்–ரே ஊடுகதிர்ப் பகுப்பாய்வு இயந்திரம்'' நிறுவ ரூ.40.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

➢ விசைத்தறி நெசவாளர்களின் குறைகளைக் களையவும், ஆலோசனைகள் வழங்கவும் சென்னையில் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அலுவலகத்திலும், மாவட்ட அளவில் 18 சரக அலுவலகங்களிலும் ***விசைத்தறி வளர்ச்சிப் பிரிவுகள் (Powerloom Development Cell)*** உருவாக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

➢ சந்தை நிலவரத்தை முன்கூட்டியே அறியவும், கைத்தறித் துணிகளின் விற்பனையை மேம்படுத்தவும், சென்னையிலுள்ள கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அலுவலகத்தில் ''புள்ளி விவர மற்றும் சந்தை நிலவர நுண்ணாய்வு மையம்'' **(Data and Market Intelligence Cell)** ரூ.5.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

➢ நெசவாளர்களுக்கு நல்ல பணிச் சூழலை உருவாக்கும் நோக்கத்தில், கடந்த 5 ஆண்டு முதல் நெசவாளர்களுக்கு 17,021 தறிக்கூடங்கள் கட்ட மானியமாக ரூ.8.27 கோடி வழங்கப்பட்டுள்ளது.

➢ கூட்டுறவு நூற்பாலைகள் பஞ்சு கொள்முதல் செய்த வகையில் பஞ்சு வியாபாரிகள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை ரூ.19.6232 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் முதல் தவணையாக ரூ.9.8116 கோடி கூட்டுறவு நூற்பாலைகளின் சார்பாக பஞ்சு வியாபாரிகளுக்கு மாநில அரசு வழங்கியுள்ளது.

➢ கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தைச் சீரமைப்பதற்காக ரூ.39.50 கோடியும், பங்கு மூலதனத்தை வலுப்படுத்த ரூ.18 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

➢ உலகமயமாக்கலால் ஏற்படக் கூடிய விளைவுகளை எதிர்கொள்ளும் வகையில் தமிழகத்தின் பாரம்பரியமிக்க காஞ்சிபுரம் பட்டுப்புடவை, பவானி ஜமக்காளம் மற்றும் மதுரை சுங்குடிப் புடவை ஆகியவைகள் பூகோளக் குறியீடு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு காப்புரிமை பெறப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

➢ 2001க்கு முன்னர் 5 ஆண்டுகளில் ரூ.42 கோடி அளவிற்குத் தேங்கி கிடந்த கதர் இரகங்களில் ரூ.3 கோடி மதிப்புள்ள கதர் வேட்டிகள், முதியோர் உதவித் திட்டத்தின்கீழ் ஒய்வூதியம் பெறுவோர்களுக்கு வழங்கப்பட்டு ரூ.3.09 கோடி மதிப்புள்ள கதர் இரகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேலும், ரூ. 40 கோடி அளவில் மேற்படி இரகங்கள் விற்கப்பட்டு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. தற்போது இருப்பு ஏதும் இல்லை.

➢ கடந்த 2001ஆம் ஆண்டிற்கு முன்பு விற்பனையாகாமல் தேங்கிக் கிடந்த ரூ.10.64 கோடி மதிப்புள்ள அழுக்கடைந்த கதர் இரகங்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் வழங்கப்பட்ட தள்ளுபடி மானியத்தை பயன்படுத்தி ஏப்ரல் 2005 முடிய ரூ.9.07 கோடி மதிப்பிற்கும், நவம்பர் 2005 வரை ரூ.72.12 இலட்சம் மதிப்பிற்கும் கதர் இரகங்கள் விற்பனை செய்யப்பட்டு பெருமளவில் இருப்பு குறைக்கப்பட்டுள்ளது.

➢ கடந்த ஆண்டுகளில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் ரூ.15.69 கோடி மதிப்பிலான சோப்பு உற்பத்தி செய்யப்பட்டது. தேன் ரூ.2.51 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. தோல் ரூ.9.76 கோடி அளவில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

➢ கதர் நூல் உற்பத்தி மற்றும் துணி உற்பத்தியில் ஈடுபட்டு அவர்களின் வருவாயில் 10 விழுக்காட்டுத் தொகையினை நலநிதியாகச் செலுத்த முன்வரும் நூற்பாளர்கள்/நெசவாளர் பெருமக்களுக்கு 60 வயதைக் கடக்கும் நிலையில் மாதம் ரூ.200 வீதம் ஒய்வூதியம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

* * *

# மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை

* அரசின் வருவாயைப் பெருக்க வேண்டி, இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான விற்பனைக் கட்டணம் 3.6.2003 முதல் நீக்கப்பட்டது.

* கருப்பஞ்சாற்று கசண்டு 27.15 இலட்சம் டன் அளவில் உற்பத்தி செய்யப்பட்டு, 2.24 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு வெளிமாநிலங்கள்/ வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, மொத்தம் ரூ.4.48 கோடி மதிப்பிலான தொகை நிருவாகக் கட்டணமாக அரசு வருவாய் ஈட்டியுள்ளது.

* எத்தனால் கலந்த பெட்ரோலைத் தமிழகத்தில் அறிமுகப்படுத்த எடுத்த முடிவினைத் தொடர்ந்து 5 வடிப்பாலைகளுக்கு அரசு அனுமதி வழங்கி உள்ளது. எண்ணெய் நிறுவனங்கள் மூலம் 105.32 இலட்சம் லிட்டர் எத்தனால் எடுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.

* மொத்தம் 5,785 வழக்குகளில் 18,143 கிலோ உலர் கஞ்சாவும் 379 வழக்குகளில் 5,13,559 கிலோ கஞ்சா செடிகள் மற்றும் 110 வழக்குகளில் 78 கிலோ ஹெராயினும் கைப்பற்றப்பட்டன.

## திரைப்படத் தொழிலுக்கு புத்துணர்வு

* தமிழக அரசு, திரைப்படத் தொழில்துறையை மீண்டும் புத்துணர்வுப் பாதையில் செலுத்தும் வகையில், காணொலி திருட்டுகளைத் தடுக்கும் சட்டத் திருத்த ஆணை பிறப்பித்து 2004 அக்டோபர் திங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது.

* இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் மற்றும் பீர் மற்றும் அதன் மீதான விற்பனை வரி மூலம் கிடைத்த வரி வருவாய் 2000–2001ஆம் ஆண்டில் 3,373.56 கோடி ரூபாயிலிருந்து 2004–2005ஆம் ஆண்டில் ரூ.4,764.59 கோடியாக உயர்ந்துள்ளது. இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள் மற்றும் பீர் மூலம் ஆயத்தீர்வை வருவாய் மற்றும் இவற்றின் மீதான விற்பனை வரி 2005–2006ஆம் ஆண்டில் முதல் ஒன்பது மாதங்களில் ரூ.4,492.44 கோடியாக உள்ளது. 2004–2005ஆம் ஆண்டில் இதே கால அளவில் முதல் ஒன்பது மாதங்களுக்கு ஆயத்தீர்வை மற்றும் அதன் மீதான விற்பனை வரி வருவாய் ரூ.3,404.04 கோடி ஆகும். இது கடந்த ஆண்டை விட ரூ.1088.40 கோடி கூடுதலாக குறிப்பிடத்தக்க அளவு அதிகமாக உயர்ந்துள்ளது.

* கடந்த 5 ஆண்டுகளில், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் பல சிறப்பான நிருவாக மாற்றங்கள் செய்யப்பட்டு, தமிழ்நாட்டில் எந்த இடமும் விடுபடாமல் அனைத்து மாவட்டங்களிலும் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

## மறுவாழ்வுக் குழுக்கள்

* "மறுவாழ்வுக் குழுக்கள்'' மூலம் மறுவாழ்விற்காக கடந்த 2 ஆண்டுகளில் ரூ.4.28 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2004–2005ஆம் ஆண்டில் ரூ.2.50 கோடி நிதி செலவிடப்பட்டு 2,121 நபர்கள் பயனடைந்துள்ளனர். 2005–2006ஆம் ஆண்டிற்கு ரூ.2.50 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

* கடந்த 5 வருட காலங்களில், (மே 2001 முதல் அக்டோபர் 2005 வரை) 10,80,470 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 9,95,846 நபர்கள் கைது செய்யப்பட்டனர். 3,22,19,270 லிட்டர் கள்ளச்சாராயமும், 5,02,53,173 லிட்டர் ஊறலும், 22,45,278 சாராயப் பாக்கெட்டுகளும், 18,45,072 லிட்டர் தெளிந்த சாராவியும், 8,24,564 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான பாட்டில்களும், 22,005 வாகனங்களும் கைப்பற்றப்பட்டன.

* காவல் சமாதான நடவடிக்கைக் கட்டணமாக ரூ.6,24,98,587 வசூலிக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற அபராதக் கட்டணமாக ரூ.21,52,01,179 பெறப்பட்டுள்ளது.

* * *

# வணிக வரித்துறை

* 2005–06 ஆம் ஆண்டின் (டிசம்பர் 2005 முடிய) மொத்த வணிக வரி வசூல் ரூ.12,157 கோடியாகும். இதன் வளர்ச்சி வீதம் 19.98 விழுக்காடாகும். கடந்த 5 ஆண்டுகளில் ஈட்டப்பட்ட வருவாய் ரூ. 56,295 (டிசம்பர் 2005 முடிய) கோடியாகும்.

* தமிழ்நாடு அரசுத் துறைகள், தமிழ்நாடு மின்சார வாரியம், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், தமிழ்நாடு குடிநீர் – வடிகால் வாரியம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், மருத்துவச் சேவை வாரியம் மற்றும் அரசு போக்குவரத்துக் கழகம் ஆகியவற்றிற்கு, விற்பனை செய்யப்படும் பொருட்களுக்கு (வாகன எண்ணெய்கள், டீசல் மற்றும் சிமெண்ட் தவிர) 4 சதவீத வரிச்சலுகை அளிக்கப்பட்டது.

* வர்த்தகம் பிற மாநிலங்களுக்குச் செல்வதைத் தவிர்க்கும் வகையில் தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு குடிநீர் – வடிகால் வாரியம், சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் ஆகியவற்றின் ஒப்பந்தக்காரர்களுக்கு விற்பனை செய்யப்படும் பொருட்களுக்கும் பொருந்துமாறு சலுகை அளிக்கப்பட்டது.

* கரும்புச் சாற்றின் கழிவு மீதான வரிவீதம் 30 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாகக் குறைக்கப் பட்டது.

* கூட்டுறவு நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் சாகோ செர்வ், சேலம் என்ற அரசு சார்புடைய கூட்டுறவு நிறுவனத்திற்கு 3 சதவீத கூடுதல் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் மீதான விற்பனை வரி 2 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக உயர்த்தப்பட்டது. எனினும், நடப்பு ஆண்டில், வரிவிழுக்காடு 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

* சென்னை பெட்ரோலியம் கார்ப்போரேசன் லிமிடெட் என்ற வணிக நிறுவனத்தின் முழு உற்பத்தித் திறனையும் பயன்படுத்திக் கொள்ளும் வகையிலும், பெட்ரோலியப் பொருட்கள் மூலம் பெறப்படும் அரசின் வருவாயை அதிகரிக்கும் வகையிலும் லூப் பேஸ் எண்ணெய் கொள்முதல் மீதான 7 சதவீத வரியினை உயவு எண்ணெய் (Lubricants) மீதான விற்பனை வரியில் ஈடு செய்து கொள்ள (set off) பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

* சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (SIDCO) வழங்கப்படுகிற மெழுகின் மீது தற்போது 12 சதவீத வரி விதிக்கப்பட்டு வருகிறது. சிறு வணிகர்கள் மற்றும் சிறு தொழில்துறை வளர்ச்சியடைய ஏதுவாக வரிச்சுமையினை குறைக்கும் பொருட்டு, சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (SIDCO) மூலம் சிறு தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மெழுகிற்கு, விற்பனை வரி 4 சதவீதமாகக் குறைக்கப் பட்டுள்ளது.

* இதுவரை 12 சதவீத வரிவிதிப்பிற்கு உட்படுத்தப் பட்டு வந்த மின்சாரக் கட்டுப்பாட்டுப் பலகைகளை இனிமேல் படிவம்–17 மூலம் வாங்கும் பொழுது, அவை மூலதனப் பொருளாகக் (capital goods) கருதப்பட்டு, 3 சதவீத வரி விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

* ரப்பர் தொழிலுக்கு உதவிடும் வகையில் இயற்கை ரப்பர் வெளி மாநில விற்பனையின் மீது செலுத்தப்படும் 4 விழுக்காடு வரியினை, தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய கொள்முதல் வரியில் சரி செய்துகொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.

* தொலைத் தொடர்புத் துறைக்கு உதவிடும் வகையிலும் இத்துறையில் நாட்டின் பிற பகுதிகளில் உள்ள வணிகர்களுடன் போட்டியிடும் வகையிலும் இதுவரை மத்திய அரசுத்துறையாக இருந்து, தற்போது அரசு நிறுவனமாக குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு விற்கப்படும் தொலைத் தொடர்பு சாதனங்கள் மீதான வரி 12 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

* மதிப்புக் கூட்டுவரியின் தன்மையை உணர்ந்திடும் வகையில் சோதனை முயற்சியாக, மின்சாதனங்கள் மின்கருவிகள், மின் பொருட்கள், கையால் தயாரிக்கப்பட்ட சோப்புகள், இயந்திரத்தினால் தயாரிக்கப்பட்ட தீக்குச்சிகள் மற்றும் காகிதம் ஆகியவை தயாரிப்பதற்காக படிவம்–17 அளித்து கொள்முதல் செய்யப்பட்ட மூலப்பொருட்களின் மீது செலுத்தப்பட்ட 3 சதவீத வரியினை இப்பொருட்களின் விற்பனை வரியிலிருந்து ஈடு செய்து கொள்ளும் (set off) முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

❖ அச்சுத்துறை சந்திக்கும் இடர்களைக் குறைக்கும் வகையில், உள் மாநிலத்தில் கொள்முதல் செய்யப்படும் காகிதம் மற்றும் மை மீது செலுத்தப்பட்ட கொள்முதல் வரியினைச் சரி செய்து கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. மேலும், அச்சுப் பொருட்கள் தொடர்பான வழக்குகளைக் குறைக்கும் வகையில், அச்சிட்ட பொருட்கள் விற்பனை அல்லது ஒப்பந்தப் பணி அனைத்திற்கும் 3 சதவீத இணக்க வரி செலுத்த வகை செய்யப்பட்டுள்ளது.

❖ வணிகர்களுக்கு உதவிடும் வகையில், சுய வரிவிதிப்பு முறைக்கு, ரூபாய் ஒரு கோடியாக இருந்த மொத்த விற்பனைத் தொகை வரம்பு, தற்பொழுது ரூபாய் பத்து கோடியாக உயர்த்தப் பட்டுள்ளது. முந்தைய ஆண்டு வரிவிதிப்பு நிலுவையினைக் குறைக்கும் வகையில் சுருக்க வரிவிதிப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

✶ அரசு சார்பு நிறுவனமான "டீ செர்வ்" மூலம் விற்பனை செய்யப்படும் தேயிலைக்கு உள் மாநில விற்பனை வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகவும், மாநிலங்களிடை விற்பனை மீதான வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

✶ எத்தனால் கலந்த பெட்ரோல் தயாரிப்பதற்காக எத்தனால் மீதான உள்மாநில விற்பனை வரி 12 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.

✶ வணிகர்களின் கோரிக்கைகளைக் கருத்திற் கொண்டு, பிளாஸ்டிக் மூலப்பொருட்கள், பி.வி.சி ரெசின் , பொட்டாசியம் குளோரேட், லேப், சோடா ஆஷ், காஸ்டிக் சோடா, குளோரின், அலுமினியம் போன்றவற்றின் மீதான நுழைவு வரி 1.7.2002 முதல் 3 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்குறிப்பிட்ட நுழைவு வரியினை உள்மாநில விற்பனை வரியிலிருந்து முழுவதுமாகவும் மாநிலங்களிடை விற்பனை வரியிலிருந்து 50 விழுக்காடும் ஈடு செய்து கொள்ள (Set off) வகை செய்யப்பட்டுள்ளது.

✶ அரிசி விற்பனை மீது விதிக்கப்பட்ட 2 விழுக்காடு வரி விலக்கிக் கொள்ளப்பட்டது.

✶ உடல் வளர்ச்சியைப் பேணும்பொருட்டு, தின் பண்டமான பேரீச்சம்பழத்தின் மீதான வரிவீதம் 12.2.2004 முதல் 12 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.

✶ சிறுநீரக சிகிச்சை மற்றும் எய்ட்ஸ் நோய்க்குப் பயன்படுத்தப்படும் பத்து உயிர் காக்கும் மருந்துகளுக்கும் முழு வரிவிலக்கு வழங்கப்பட்டுள்ளது.

✶ கைவினைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் கைவினைப்பொருட்கள் மீதான வரிவீதம், 12.2.2004 முதல் 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.

✶ சுற்றுச்சூழல் பாதிப்பைத் தடுக்கும் சுமார் 25 கருவிகளுக்கான வரிவீதம் 12 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.

✶ இந்திய இசைக் கருவிகளுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

✶ கோழித் தீவனம் தயார் செய்ய பயன்படும் சுண்ணாம்புக்கல் மீதான விற்பனை வரி 12 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.

✶ கூட்டுறவு நிறுவனங்கள் விற்பனை செய்யும் நுகர்வோர் பொருட்கள் மீதான ஒரு சதவீத மறுவிற்பனை வரி ரத்து செய்யப்பட்டது.

✶ மத்திய அரசு நிறுவனமான கேஸ் அதாரிட்டி ஆப் இந்தியா லிமிடெட் மூலம் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு விற்கப்படும் இயற்கை எரிவாயுவின் மீதான விற்பனை வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப் பட்டுள்ளது.

✶ மத்திய அரசு நிறுவனமான கேஸ் அதாரிட்டி ஆப் இந்தியா லிமிடெட் மூலம் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு விற்கப்படும் இயற்கை எரிவாயுவிற்கு மறு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

✶ தாமதமாக செலுத்தப்படும் விற்பனை வரித்தொகை மீது மாதம் ஒன்றிற்கு 2 விழுக்காடு வட்டி விதிக்கப்படுகிறது. உரிய நாளிலிருந்து முதல் 90 நாட்களுக்குள் செலுத்தப்படும் வரித் தொகைக்கு, மாதத்திற்கு 1.5 சதவீதமும் அதன்பிறகு மாதத்திற்கு 2 சதவீதமும் வரி விதிக்க சட்டத் திருத்தம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

✶ திரைப்படக் கருவிகள் ஒப்பந்த வாடகை மீதான விற்பனை வரிக்கு 28.9.2007 வரை 3 ஆண்டுகளுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது.

✶ 29.9.2004 அன்று நிலுவையில் உள்ள மேற்படி விற்பனை வரி நிலுவைகளை வசூலிக்க எடுக்கப்பட்ட தீவிர நடவடிக்கைகள் கைவிடப் பட்டன.

✶ மீனவர்களுக்கு விற்கப்படும் டீசல் எண்ணெய்க்கு, இயந்திரப் படகுகள் வைத்திருக்கும் மீனவருக்கு ஆண்டுக்கு 50,000 கிலோ லிட்டர் மற்றும் டீசல் என்ஜின் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகள் வைத்திருக்கும் மீனவருக்கு ஆண்டுக்கு 45,000 கிலோ லிட்டர் வீதம் வரிவிலக்கு அளிக்கப் பட்டுள்ளது.

✶ அயல்நாட்டுக் கப்பல்களுக்கு விற்கப்படும் உயர்வேக டீசல் எண்ணெய், மென் டீசல் மற்றும் எரி உலை எண்ணெய் மீதான விற்பனை வரிவீதம் முறையே 25 மற்றும் 16 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.

✶ உள்மாநில தயாரிப்புத் தொழிற்சாலை நிறுவனங் களுக்கு கூடுதல் வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

✶ சுனாமி பேரழிவால் பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு, டான்செம் நிறுவனத்தால் விற்கப்படும் சிமெண்ட், ஆஸ்பெஸ்ட்டாஸ் கூரைத் தகடுகள் மற்றும் இதர பொருட்களுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

* சுனாமி பேரழிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விற்பனை செய்யப்படும் புதிய மரக்கட்டுமரம், புதிய FRP கட்டுமரம், புதிய மரம் / FRP வல்லம், பழுதடைந்த இயந்திரப் படகுகளைச் சரிசெய்யத் தேவைப்படும் பொருட்கள், கண்ணாடி இழை படகுகள் உட்பட புதிய இயந்திரப் படகுகள், பழைய பழுதடைந்த கட்டு மரங்களைப் பழுது பார்க்கத் தேவைப்படும் மரம் உள்ளிட்ட பொருட்களுக்கு 1.4.2005 முதல் ஓராண்டுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

* சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வழங்க, சேவை நிறுவனங்களுக்கு விற்கப்பட்ட கிரீவ்ஸ் மெரைன் பொறி பொருத்தப்பட்ட 102 கண்ணாடி இழை படகுகளுக்கும் 18.2.2005 முதல் 31.3.2005 முடிய விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப் பட்டது.

* பின்னலாடைத் தொழிலின் மாநிலங்களிடை விற்பனைக்கு 10 விழுக்காடு வரியினை செலுத்திவிட்டு 9 விழுக்காடு தொகையினை மானியமாகத் திருப்பி அளிக்கும் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

* கணினி உபரிப் பொருட்களின் மாநிலங்களிடை விற்பனை மீதான மத்திய விற்பனை வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* சி மற்றும் டி படிவத்துடன் மேற்கொள்ளப்படும் கணினி உபரி மற்றும் உதிரி பாகங்களுக்கான இடைமாநில விற்பனை மீதான மத்திய விற்பனை வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.

* கேளிக்கைப் பூங்காக்கள் மீது விதிக்கப்பட்ட வரி வீதம் 20 விழுக்காட்டிலிருந்து 10 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* கேளிக்கை வரி வீதங்கள் – மாநகராட்சி மற்றும் சிறப்பு நிலை நகராட்சிகளில் பழைய திரைப் படத்திற்கான வரி 25 விழுக்காட்டிலிருந்து 15 விழுக்காடாகவும், புதிய திரைப்படத்திற்கு 20 விழுக்காட்டிலிருந்து 10 விழுக்காடாகவும் குறைக்கப்பட்டுள்ளது. பிறபகுதிகளில் அனைத்துத் திரைப்படங்களுக்கும் இணக்க வரி முறைக்குப் பதிலாக 10 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.

* தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்கென தங்கும் விடுதிகளின் மீது விதிக்கப்பட்டு வந்த ஆடம்பர வரி வீதம் குறைக்கப்பட்டுள்ளது. நாளொன்றுக்குத் தங்குவதற்கான கட்டணம் ரூ.200 முதல் ரூ.499 வரைக்கான வரி 15 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகவும் ரூ.500 முதல் ரூ.999 வரைக்கான வரி 20 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாகவும் ரூ.1,000 அல்லது அதற்கு மேலுள்ளவற்றிற்கு 25 சதவீதத்திலிருந்து 12.5 சதவீதமாகக் குறைக்கப் பட்டுள்ளது.

* தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் மீதான ஆடம்பர வரி நீக்கப்பட்டுள்ளது.

* பாதுகாப்புப் பணிக்கு இறக்குமதி செய்யப்படும் கார்கள் மற்றும் இரண்டு சக்கர வாகனங்களுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

* சிமெண்ட் மற்றும் வெள்ளை சிமெண்ட் மீது விதிக்கப்பட்டிருந்த நுழைவு வரி விலக்கப் பட்டுள்ளது.

* கொச்சி ரிஃபைனரீஸ் லிமிடெட் எண்ணெய் நிறுவனம், வெளி மாநிலத்திலிருந்து கொண்டு வரும் பட்டியலிடப்பட்ட பொருட்களுக்கு விதிக்கப்படும் நுழைவு வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

* உள்மாநில உற்பத்தியாளர்கள் வெளி நாட்டிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்து, தயாரிப்பிற்குப் பயன்படுத்தும் பட்டியலிடப்பட்ட பொருட்களுக்கு, நுழைவு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப் பட்டுள்ளது.

* 100 விழுக்காடு ஏற்றுமதி அடிப்படையிலான அலகுகள் மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டலத்திலுள்ள நிறுவனங்கள் வெளி நாட்டிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யும் பட்டியலிடப்பட்ட பொருட்களுக்கு நுழைவு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

* தனியார் துறையைச் சார்ந்த மூன்று மின் உற்பத்தி நிறுவனங்கள் கொள்முதல் செய்யும் Low Sulphur Heavy Stock மீதான நுழைவு வரி, 16 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாகக் குறைக்கப் பட்டுள்ளது.

* ஒரு புதிய சமாதானத் திட்டம் 1.7.2002 முதல் 31.10.2002 வரையிலான காலத்திற்கென அறிமுகப்படுத்தப்பட்டு அரசுக்கு ரூ.10.43 கோடி வரி நிலுவை வசூல் செய்யப்பட்டது. ரூ.45.40 கோடி வரையிலான நிலுவைத் தொகை ஈடு செய்யப் பட்டது.

* வரி விதிப்பில் உள்ள முரண்பாடுகளைக் களைய சிறப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

## பதிவுத் துறை

* கடந்த 5 ஆண்டுகளில் ஆவணப் பதிவுக் கட்டணம், முத்திரைத் தீர்வை மற்றும் இதர கட்டணங்கள் வாயிலாக ரூ.8,167.91 கோடி (டிசம்பர் 2005 முடிய) வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. 2005–2006ஆம் ஆண்டில் (டிசம்பர் 2005 முடிய) ஈட்டப்பட்ட வருவாய் ரூ.1,640.41 கோடி ஆகும். வளர்ச்சி 26.24 சதவீதம்.

* இதுவரை, 350 அலுவலகங்கள் கணினி மயமாக்கப்பட்டு, பொது மக்களுக்கு, சொத்துப் பதிவு நடவடிக்கைகளில் பழைய நடைமுறைப்படி பல நாட்கள் ஆகும் நிலையை மாற்றி ஒரு மணி நேரத்திற்குள்ளாக முடித்திடும் வகையில் சேவை புரிகின்றன.

* நடப்பாண்டில் (2005–2006) மேலும், 150 சார்பதிவாளர் அலுவலகங்கள் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படும்.

* தகவல் தொழில் நுட்ப நடைமுறை "ஸ்டார்'' (திறந்த மற்றும் வெளிப்படையான பதிவுமுறை செயல் பாடு) ரெஜிநெட் (http:/www.tnreginet.net) (பதிவு வலைப்பின்னல்) ஆகிய இரு நிலைகளாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

* நாட்டிலேயே முதல் முறையாக, "ரெஜிநெட்" வழியாக எந்தவொரு சொத்தின் வில்லங்கச் சான்று தகவல்களையும் வேறு எந்த ஒரு இடத்திலிருந்தும் பெறுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

* 1.10.2002 முதல் 29.11.2002 வரை நடைமுறையில் இருந்த "சமாதான் திட்டம்'' மூலம் சார்பதிவாளரால் ஆவணத்திற்குக் கோரப்பட்டவாறு ஆட்சேபிக்கப் படும் முத்திரைத் தீர்வை / பதிவுக் கட்டணத்தில் 60 சதவீதம் மட்டும் செலுத்தி ஆவணத்தைத் திரும்பப் பெறும் வசதி செய்யப்பட்டது. மொத்தமிருந்த 91,101 ஆவணங்களில் 50,694 ஆவணங்கள் ரூ.95.95 கோடி முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் வசூலிக்கப்பட்டு, திருப்பி அளிக்கப் பட்டுள்ளன.

* 28.12.2004 முதல் 30.4.2005 வரை அமலில் இருந்த சமாதான் திட்டத்தின்படி, சார்பதிவாளர் முன்மொழிந்த மதிப்பின்படி செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வைக்கும் ஏற்கெனவே செலுத்தப் பட்டுள்ள முத்திரைத் தீர்வைக்கும் உள்ள வேறுபாட்டுத் தொகையில் 60 சதவீதம் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்தி பொதுமக்கள் தங்கள் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். நிலுவையாக உள்ள 57,081 ஆவணங்களில் 33,067 ஆவணங்களுக்கு ரூ.88.30 கோடி வசூலிக்கப்பட்டு, முடிவு செய்யப் பட்டுள்ளன.

* உரிம மாற்ற ஆவணங்களுக்கு நகர்ப்புறங்களில் விதிக்கப்பட்ட 8 சதவீத முத்திரைத் தீர்வை மற்றும் கிராமப் பகுதிகளில் விதிக்கப்பட்ட 7 சதவீத முத்திரைத் தீர்வை ஆகியவற்றை அனைத்து பகுதிகளுக்கும் 6 சதவீதம் எனவும் மாற்றுத் தீர்வையை 5 சதவீதத்திலிருந்து 2 சதவீதம் ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது.

* குடும்ப உறுப்பினர்களுக்கிடையேயான சொத்துப் பரிமாற்றம் குறித்த பத்திரங்களுக்கு சந்தை மதிப்பின் மீது முத்திரைத் தீர்வை 1 சதவீதத்தில் உச்சமாக ரூ.10,000 மற்றும் பதிவுக் கட்டணம் 1 சதவீதத்தில் உச்ச கட்டணமாக ரூ.2,000. ஆவணங்களைப் பொறுத்து ஒவ்வொரு பங்கிற்கும் இந்த வரம்பு பொருந்தும்.

* 2004–2005ஆம் ஆண்டு வரவு – செலவு திட்டத்தின் போது, சாதாரண அடமானம் – தீர்வை 4 சதவீதத்திலிருந்து 1 சதவீதம் ஆக குறைக்கப்பட்டு உச்ச தீர்வை ரூ.20,000ம் மற்றும் பதிவுக் கட்டணம் 1 சதவீதத்தில் உச்ச கட்டணமாக ரூ.5,000ம் ஆக குறைக்கப்பட்டது.

- ☐ சுவாதீன அடமானம் – தீர்வை மற்றும் மிகுவரி 3 சதவீதம் மற்றும் 1 சதவீதம் குறைக்கப் பட்டுள்ளது. பதிவுக் கட்டணம் 1 சதவீதத்தில் உச்ச வரம்பு ரூ.2 இலட்சமாக்கப்பட்டுள்ளது.

- ☐ உரிமை ஆவணங்கள் வைப்பீடு – முத்திரைத் தீர்வை 0.5 சதவீதத்தில் உச்ச தீர்வை ரூ.5,000 பதிவுக் கட்டணம் 1 சதவீதத்தில் உச்ச கட்டணம் ரூ.1,000/–

- ☐ கைமாற்றுத் தொகையின் பேரிலான அதிகார ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

- ☐ குத்தகை ஆவணங்களின் மீதான முத்திரைத் தீர்வை கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| குத்தகைக் காலம் | உத்தேச வீதம் |
|---|---|
| 30 ஆண்டுகளுக்குக் குறைவாக | 1 சதவீதம் |
| 31 ஆண்டுகளுக்கு மேற்பட்டு 99 ஆண்டுகளுக்கு உட்பட்ட காலத்துக்கு | 4 சதவீதம் |
| 100 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேலாக | 8 சதவீதம் |
| பதிவுக் கட்டணம் 1 சதவீதத்தில் உச்சக் கட்டணமாக | ரூ.5,000 |

* நடப்பு வழிகாட்டிப் பதிவேட்டில் உள்ள முரண்பாடுகளைக் களைய மதிப்பீட்டுக் குழு அமைக்கப்பட்டது.

* * *

# கூட்டுறவுத்துறை

* விவசாயிகளுக்கான வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடித் திட்டம் 2001ன் கீழ் விவசாயிகளுக்கு ரூ.226.56 கோடி அளவிற்கு வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 6,11,193 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

* 2002–2003ஆம் ஆண்டில் ஏற்பட்ட வறட்சி காரணமாகவும், வேளாண் உற்பத்தியில் ஏற்பட்ட இழப்பு காரணமாகவும் ரூ.250 கோடி குறுகிய காலப் பயிர்க்கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்றும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்திற்கு அரசு தன் பங்காக ரூ.20 கோடிக்கு ஒப்புதல் அளித்தது.

* 2002–2003ஆம் ஆண்டில் நிலவிய வறட்சியின் காரணமாக ஏற்பட்ட இன்னல்களைத் தீர்க்கும் வகையில் பாதிக்கப்பட்ட சிறு மற்றும் குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற கடன்களின் மீதான வட்டியை அரசு தள்ளுபடி செய்தது. இந்நோக்கத்திற்காக அரசு ரூ.61.05 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2,40,000 விவசாயிகள் பயனடைந்தனர்.

* 2003–2004ஆம் ஆண்டில் விவசாயிகளால் செலுத்தப்பட வேண்டிய பயிர்க்கடன்கள் மீதான வட்டி மற்றும் அபராத வட்டி ஆகியவற்றை ரூ.62 கோடி அளவிற்கு அரசு தள்ளுபடி செய்தது. இத்திட்டத்தின் கீழ் 2,43,000 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

* நீலகிரி மாவட்டத்தில் தேயிலை உற்பத்தியாளர்கள் பெற்ற கடன்கள் மீதான தவணை கடந்த வட்டியைத் தள்ளுபடி செய்ய அரசால் ரூ.1.80 கோடி அனுமதியளிக்கப்பட்டது.

* 1999ஆம் ஆண்டுக்கு முன் மாற்றியமைக்கப்பட்ட மத்திய காலக் கடன் மற்றும் மத்திய கால மாற்றுக் கடன்களில், 31.3.2004 அன்று நிலுவையில் இருந்த கடன்கள் மீண்டும் ஒரு தொகுப்புக் கடனாக மாற்றியமைக்கப்பட்டது. இதற்காக அரசால் ரூ.68.95 கோடி வழங்கப்பட்டுள்ளது.

* இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழக அரசுதான் 31.3.2004 அன்று நிலுவையிலிருந்த பயிர்க்கடன் மற்றும் அதன் மீதான வட்டியை, 5 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் கடனாக மாற்றியமைத்து (Reschedulement) அதில், முதல் இரண்டு ஆண்டுகளுக்குக் கடனைக் கட்ட வேண்டியதில்லை என்றும், அடுத்த மூன்று ஆண்டுகளில் அக்கடனையும் வட்டியையும் திருப்பிச் செலுத்த வேண்டும் என்றும் ஆணையிட்டு உள்ளது. இத்திட்டத்தின் கீழ், 31.12.2005 அன்றுள்ளபடி ரூ.1,615.11 கோடி அளவிற்கு 8,25,611 விவசாயிகளின் கடன்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

* 31.3.2004 அன்று நிலுவையிலிருந்த மாற்றியமைக்கப்பட தகுதி வாய்ந்த பயிர்க்கடன்கள் மீதான வட்டித் தொகை மற்றும் அதன் மீதான 30.6.2006 வரை ஏற்படும் வட்டித் தொகை ஆக மொத்தம் ரூ.645 கோடியைத் தள்ளுபடி செய்ய அரசால் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

* விவசாயிகள், தற்போது நிலவிவரும் வட்டி விகிதத்தில் கடன் பெறுவதை உறுதி செய்வதற்காகப் பயிர்க்கடனுக்கான வட்டி விகிதம் 12% லிருந்து 9% ஆக குறைக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழக அரசுதான் பயிர்க்கடன் மீதான வட்டியை இந்த அளவிற்குக் குறைத்துள்ளது.

* 2004–2005ஆம் ஆண்டில் கூட்டுறவு வங்கிகள் ரூ.1,037 கோடி விவசாயிகளுக்குப் பயிர்க்கடன் வழங்க வேண்டும் என நிர்ணயிக்கப்பட்ட குறியீடு அளவைவிட அதிக அளவில் 5,29,446 விவசாயிகளுக்கு ரூ.1,080.58 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது.

* நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்றவர்களுக்கு நிவாரணம் அளிக்கவும், நீண்டகாலமாக உள்ள நிலுவைத் தொகைகளை வசூலித்திட வழிவகுத்திடவும் ஒட்டுமொத்த கடன் தீர்வுத் திட்டம் (One Time Settlement) என்ற திட்டத்தை அரசு அறிவித்தது. இதுவரை 32,008 நபர்கள் ரூ.42.47 கோடி அளவிற்குப் பயனடைந்துள்ளனர்.

* சிறு தேயிலை பயிரிடுவோர்களின் துயர் துடைக்கும் நோக்கத்துடன், இன்கோசர்வ் நிறுவனம் பதப்படுத்திய தேயிலைத் தூளைப் பொது விநியோக நியாயவிலைக் கடைகளின் மூலம் விற்பனை செய்யும் திட்டத்தின் கீழ் இதுவரை 11,134 மெ.டன் ஊட்டி தேயிலைத்தூள் ரூ.101.12 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

* கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் மூலம் அயோடின் கலந்த உப்பு விற்பனை செய்யும் திட்டத்தில் இதுவரை 78,235 மெட்ரிக் டன் உப்பு ரூ.19.56 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

* கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் மூலம் காதிப்பொருட்கள் விற்பனை செய்யும் திட்டத்தின் கீழ் இதுவரை ரூ.5.94 கோடிக்கு விற்பனை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

* கூட்டுறவு வங்கிகளால் பல்வேறு நோக்கங்களுக்காக 2001–2002 முதல் 2005–2006 (செப்டம்பர்) வரை வழங்கப்பட்டுள்ள குறுகிய கால விவசாயக் கடன், மத்திய காலக்கடன், நீண்டகால விவசாயக் கடன், நகைக்கடன், பண்ணைசாராக் கடன், வேளாண்மை உற்பத்தி ஈட்டுக்கடன், தொழில் கடன், வீட்டு வசதிக் கடன் மூலம் வழங்கப்பட்ட தொகை ரூ.28,801.30 கோடி ஆகும்.

* கூட்டுறவு வங்கிகளின் பெண் அங்கத்தினர் களுக்காகச் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களில்

கடந்த 4½ ஆண்டுகளில் வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.468.39 கோடி ஆகும். இத்திட்டத்தின் மூலம் 3,59,752 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

* தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கடன்தாரர்களுக்கு மாநில அரசின் பங்கு ரூ.42.47 கோடியையும் சேர்த்து ஒட்டு மொத்தமாக ரூ.97.92 கோடி அளவிற்கு 1,95,354 நபர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

* சிறு மற்றும் குறு விவசாயிகளைப் பொறுத்த வரையில் 31.3.2001 அன்று செயல் இழந்த சொத்துக்களாக நிலுவையிலுள்ள அசல் மற்றும் வட்டியினைச் செலுத்துவோருக்கு 31.3.2001 அன்றுள்ள அபராத வட்டி 1.4.2001 முதல் செலுத்தும் தேதி வரைக்கான வட்டி, கூடுதல் வட்டி மற்றும் அபராத வட்டி ஆகியவை முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும். இத்திட்டத்தின் பயனாக ரூ.145.90 கோடி தள்ளுபடி செய்யப்பட்டு மாநிலத்திலுள்ள 1,78,550 சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன் பெறுவர்.

* நீண்ட காலப் பண்ணைக் கடன் பெற்ற பெரிய விவசாயிகளைப் பொறுத்தவரையில் 31.3.2001 அன்று செயல்இழந்த சொத்துக்களாக நிலுவையிலுள்ள அசல், வட்டி மற்றும் 1.4.2001 முதல் செலுத்தும் தேதி வரை உள்ள வட்டியில் 50 சதவீதமும் செலுத்துவோருக்கு, 31.3.2001 அன்று நிலுவையில் இருந்த அபராத வட்டியும் 1.4.2001 முதல் செலுத்தும் தேதிவரைக்கான வட்டியில் 50 சதவீதமும் கூடுதல் வட்டி மற்றும் அபராத வட்டியும் முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும். இத்திட்டத்தின் மூலம் ரூ.92.12 கோடி தள்ளுபடி செய்யப்பட்டு 57,430 விவசாயிகள் பயன் பெறுவர்.

* இதர பண்ணை சாராக் கடன்தாரர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் 31.3.2003 அன்று செயல் இழந்த சொத்துக்களாக நிலுவையில் உள்ள அசலையும், செலுத்தும் தேதி வரையிலான மொத்த வட்டியினையும் செலுத்தினால், 31.3.2003அன்று நிலுவையில் உள்ள அபராத வட்டி, அதன் பின்னர் விதிக்கப்படும் கூடுதல் வட்டி மற்றும் அபராத வட்டி ஆகியவை முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும். இத்திட்டத்தின் மூலம் ரூ.42.28 கோடி தள்ளுபடி செய்யப்பட்டு, 17,990 கடனாளிகள் பயன்பெறுவர்.

* தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 31.3.2004 அன்றயை தேதியில் ரூ.356.01 கோடி அளவுக்கு நடுத்தரக் காலப் பண்ணைக் கடன் நிலுவையில் உள்ளது. விவசாயிகள் இக்கடன்களைச் சுலபமாகத் திருப்பிச் செலுத்துவதற்காக, இந்தக் கடனையும் நபார்டு வங்கியின் வழிமுறையின்படி முதல் 2 ஆண்டுகளுக்குக் கடன் தவணை ஒத்திவைப்பு அளித்து, அடுத்த மூன்று ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தக் கூடிய கடனாக மாற்ற அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

* நகர கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்றுள்ள பயனாளிகள் ஏற்கெனவே பெற்ற தங்களது பழைய கடன்களுக்கு தற்போதைய நடப்பு வட்டி வீதத்திலேயே 1.4.2001 முதல் வட்டி வீதத்தை முன்தேதியிட்டு குறைத்து ஆணையிடப்பட்டுள்ளது. இச்சலுகையினைப் பெறுவதற்கு கடன்தாரர்கள் செலுத்த வேண்டிய தொகையில் 25% தொகையை ஆணை பிறப்பிக்கப்பட்ட மூன்று மாதங்களுக்குள் செலுத்தி மீதித் தொகையை அடுத்த ஆறு மாதங்களில் செலுத்திட வேண்டும். இத்திட்டம் நிலுவையில் உள்ள அனைத்துக் கடன்களுக்கும் பொருந்தும்.

## உணவுத் துறை

* மைய அரசின் விலை நிர்ணயப்படி பொது விநியோகத்திட்டத்தின் கீழ், மண்ணெண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு ரூ.9.00 முதல் ரூ.9.60 வரை விற்கப்படவேண்டும். ஆனால், இவ்வரசு 09.03.2002 முதல் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மண்ணெண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு ரூ.8.40 முதல் ரூ.9.00 வரை மானிய விலையில் விற்பனை செய்ய ஆணையிட்டு செயல்படுத்தப் படுகிறது. கூடுதல் மானியத்தை தமிழக அரசே ஏற்றுள்ளது.

* பல மாநிலங்களில் ஏழை எளியோருக்கு ஒரு கிலோ ரூ.6.00 என்ற அடிப்படையிலும் மற்றவர்களுக்கு ரூ.8.00 முதல் ரூ.9.00 என்ற விலையிலும் அரிசி வழங்கப்படுகிறது. இந்த அரசு எந்த பாகுபாடுமின்றி அனைத்துக் குடும்பங்களுக்கும் உரிய அளவு அரிசியைக் கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்ற ஒரே விலையில் தொடர்ந்து வழங்கி வருகின்றது. அதிலும் தரமான அரிசியையே வழங்கி வருகிறது.

* இதுவரை குடும்ப அட்டை பெறாமல் விடுபட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு குடும்ப அட்டை வழங்கும் வகையில் மாநிலம் முழுவதும் 49,31,757 மனுக்கள் பெறப்பட்டன. இந்த மனுக்கள் அனைத்தும் விசாரணை செய்யப்பட்டு அதில் 37,70,195 விண்ணப்பதாரர்கள் குடும்ப அட்டை பெற தகுதி உள்ளவர்கள் என்று கண்டறியப்பட்டு குடும்ப அட்டைகள் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன. இதில், 31.03.2005 வரை 36,59,720 குடும்ப அட்டைகள் விநியோகிக்கப்பட்டுவிட்டன. நிராகரிக்கப்பட்ட குடும்பங்களிடமிருந்து குடும்ப அட்டை வேண்டி 7,35,695 மேல் முறையீடு மனுக்கள் பெறப்பட்டன. அவற்றில் 2,93,155 தகுதியானவை என்று கண்டறியப்பட்டு அவற்றில் 2,49,048 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

* தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளும் குடும்ப அட்டைதாரர்களின் வசதியினைக் கருதி ஞாயிற்றுக்கிழமைகளிலும் இயங்கி வருகின்றன.

* ஆண்டுதோறும் மார்ச் 15ஆம் நாள் உலக நுகர்வோர் உரிமை தினமாகவும் மற்றும் டிசம்பர் 24ஆம் நாள் தேசிய நுகர்வோர் தினமாகவும் மாநில அளவில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. ✶

# தொழில்துறை



* டைசல் உயிரி தொழில் நுட்ப பூங்கா ரூ. 62.5 கோடி முதலீட்டில் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 10.11.2004 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. புகழ் பெற்ற தொழில் நிறுவனங்கள் இப்பூங்காவிலுள்ள ஆராய்ச்சிக் கூடங்களில் தங்களுடைய ஆராய்ச்சித் திட்டங்களை ஏற்படுத்தி வருகிறார்கள். மேலும் ரூ.10 கோடி முதலீட்டில் உயிரியல் ஆராய்ச்சிக்குத் தேவையான முக்கிய கருவிகளை ஏற்படுத்த உள்ளார்கள். மேலும் டைசல் உயிரி தொழில்நுட்ப பூங்கா தனது இரண்டாவது விரிவாக்கத் திட்டத்தைச் செயல்படுத்த உள்ளது.

* டான்செம் நிறுவனத்தின் அரியலூர் சிமெண்ட் ஆலையின் அதிக பட்ச மாதாந்திர உற்பத்தித் திறன் பயன்பாடு 154.80 சதவிகிதமாகவும், அதிகபட்ச மாதாந்திர விற்பனை 66,502 மெட்ரிக் டன் எனவும் சாதனை எட்டப்பட்டுள்ளது.

## அசெண்டாஸ்

* ரூ.140.30 கோடி முதலீட்டில் தரமணியில் 14.9.2005 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இரண்டாவது தகவல் தொழில்நுட்பப் பூங்காவின் முதல் நிலை (I Phase) "அசெண்டாஸ்" நிறுவனத்தை மேம்பாட்டாளராகக் கொண்டு தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் இணைத்துறையில் துவங்கி வைக்கப்பட்டது. தொழில் வளாகங்களை மேம்படுத்தவும் அவற்றின் கட்டுமான வசதிகள் மற்றும் அதன் துணைக்கான பிற வசதிகளையும் உயர்த்துவதற்கு இந்நிறுவனம் செயல்படும்.

## தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் சாதனைகள்

* தமிழ்நாடு அரசின் நிறுவனமான தமிழ்நாடு கனிம நிறுவனம் 1978ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நிறுவப்பட்டது. இந்தியாவில் கிரானைட் கற்களை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி செய்யும் மிகப் பெரிய நிறுவனமாக விளங்குகிறது.

* டாமின் கிரானைட் பாறைகளை வெட்டியெடுத்து ஏற்றுமதி செய்வதுடன் உள்ளூர் சந்தையின் தேவைகளையும் பூர்த்தி செய்து வருகிறது.

* 2001–ல் இருந்த 34 குவாரிகளின் இயக்கம் தற்பொழுது 2005–2006ல் 60 ஆக அதிகரித்துள்ளது

* கனிம வளம் மற்றும் சுற்றுப்புற சூழல் பாதுகாப்பதற்காக தமிழ்நாடு கனிம நிறுவனம் 2001 – 2002ஆம் ஆண்டிலிருந்து 2005 – 2006 ஆம் ஆண்டுவரை மொத்தம் ரூ.7.23 கோடி முதலீடு செய்து சில குவாரிகளை நவீன மயமாக்கியுள்ளது.

* 1996–97 ஆண்டு முதல் 2000–01 முடிய கிரானைட் பாறைகளின் உற்பத்தி மொத்தம் 87,559 க.மீ. மட்டுமே ஆகும். ஆனால் 2001–02ஆம் ஆண்டு முதல் 2005–06 (நவம்பர் '05) முடிய மொத்தம் 1,51,484 க.மீ கிரானைட் பாறைகளை உற்பத்தி செய்யப் பட்டுள்ளது. இந்த சாதனையானது முந்தைய ஆண்டுகளை விட 73 சதவீதம் கூடுதலாகும்.

* தமிழ்நாடு கனிம நிறுவனம், மாதேப்பள்ளியில் கிரானைட் ஒடுகள் தொழிற்சாலை ஒன்றினை ரூபாய் இரண்டு கோடி முதலீட்டில் நவீனப் படுத்தியுள்ளது. அதன் உற்பத்தித் திறன் 21,300 ச. மீட்டர் அளவிலிருந்து 33,600 சதுர மீட்டராக அதிகரித்துள்ளது. நடப்பு ஆண்டில் ரூ.33 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

* சிவகங்கை கிராபைட் தொழிற்சாலை 2005 – 2006 ஆம் ஆண்டு (நவம்பர் 2005 முடிய) 3,800 மெட்ரிக் டன் செழுமைப்படுத்திய கிராபைட் உற்பத்தி செய்தும், ரூ. 625 இலட்சம் மதிப்பிற்கு 4,450 மெட்ரிக் டன் விற்பனை செய்தும் உள்ளது.

* தமிழ்நாடு கனிம நிறுவனம் 2004–2005ஆம் ஆண்டில் வரிக்கு முன் ஆதாயமாக ரூ.5.20 கோடி ஈட்டியுள்ளது. சென்னைக்கு அருகாமையில் உள்ள இருங்காட்டுக்கோட்டை சிப்காட் வளாகத்தில் ரூ.32.82 கோடி திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு கனிம நிறுவனம் கிரானைட் அறுத்து மெருகேற்றும் தொழிற்சாலை நிறுவ நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இத்தொழிற்சாலையில் ஆண்டொன்றுக்கு 14,400 ச.மீ. அளவு பெரிய அளவிலான கட்டட ஒடுகள் உற்பத்தி செய்யப்பட உள்ளது. இத்தொழிற்சாலை மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.5 கோடி நிகர லாபம் ஈட்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

★ தமிழ்நாடு கனிம நிறுவனம் எர்ணாவூரில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கிரானைட் ஓடுகள் மெருகூட்டும் தொழிற்சாலை ஒன்றினை அமைக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இதன் மூலம் உள்ளூர் வாடிக்கையாளர்கள் அதிகம் பயன்பெறுவர்.

## பி.எம்.டபிள்யூ நிறுவனம்

★ ஜெர்மனியைச் சேர்ந்த பி.எம்.டபிள்யூ நிறுவனம் உலகளவில் உள்ள சிறந்த வாகன உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றாகும். இந்நிறுவனம் தற்பொழுது இந்தியாவில் ஒரு கார் தொழிற் சாலையை அமைக்கத் திட்டமிட்டு முதல் கட்ட மூலதனம் மூன்று முதல் ஐந்து ஆண்டுகளில் ஏறக்குறைய 40 மில்லியன் அமெரிக்க டாலராக (சுமார் ரூ.180 கோடி) இருக்கும். "புதிய தொழிற் கொள்கை 2003"ன் படி, மூன்று ஆண்டுகளில் ரூ.300 கோடிக்கு மேல் மூலதனம் செய்யப்படும் திட்டங்களுக்கு மாநில அரசு சிறப்புத் தொகுப்புச் சலுகைகளை (structured package of support) வழங்கும். ஆனால், பி.எம்.டபிள்யூ நிறுவனத்தின் இத்திட்டம் "மூன்று ஆண்டுகளில் ரூ.300 கோடிக்கு மேல் மூலதனம்" என்ற குறைந்த பட்ச மூலதன வரம்பைத் தளர்த்தி சிறப்புத் தொகுப்புச் சலுகைகளை வழங்கலாம் என 11.7.2005 அன்று அமைச்சரவையில் ஒப்புதல் வழங்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 8.12.2005 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

★ தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் ஏப்ரல் 2001–ஆம் ஆண்டிலிருந்து நவம்பர் 2005 வரையிலான காலங்களில் ரூ.1,030 கோடி மதிப்பிலான கடன் உதவி அனுமதிக்கப்பட்டு, ரூ.751 கோடி கடனுதவியாக வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 64,743 பேர்களுக்கு புதிதாக வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது.

★ தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 2003–2004ஆம் ஆண்டில் ரூ2.21 கோடி ஆதாயம் ஈட்டியுள்ளது. இதன் தொடர்ச்சியாக 2004–2005ஆம் ஆண்டும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ரூ.156 கோடி நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

★ தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் இந்திய தரக்கட்டுப்பாட்டுச் செயலகத்திலிருந்து ஐஎஸ்ஓ 9001 / 2000 என்ற தரக்கட்டுப்பாட்டுச் சான்றிதழை பெற்றுள்ளது.

★ ★ ★

# சட்டத்துறை




❖ திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு விளையாட்டு மைதானம் அமைத்திட ரூ.7 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டுள்ளது.

❖ மாநில மற்றும் மைய அரசுகளின் 117 சட்டங்கள், தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

❖ டாக்டர் அம்பேத்கர் அரசு கல்லூரியை இந்திய தேசிய சட்டப் பள்ளியின் தரத்திற்கு உயர்த்தி, அதில் ஐந்தாண்டு பி.ஏ.பி.எல்.,(ஹானர்ஸ்) பட்டப்படிப்பில் 80 மாணவர்களைச் சேர்த்திட அனுமதி வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டது. 2002–2003ஆம் கல்வியாண்டு முதற்கொண்டு ஐந்தாண்டு பி.ஏ.பி.எல்.,(ஹானர்ஸ்) சட்டப் படிப்பு தொடங்கப்பட்டு, தற்போது நான்காம் ஆண்டு வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

❖ சட்டக் கல்லூரி மாணவர் சேர்க்கையில், சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான இடஒதுக்கீடு மூன்றாண்டு சட்டப் படிப்புக்கும், ஐந்தாண்டு சட்டப்படிப்புக்கும் முறையே 6, இடங்கள் மற்றும் 7 இடங்கள் என இருந்தது. இதனை 2002–2003ஆம் கல்வியாண்டு முதல் முறையே 10 இடங்களாகவும், 11 இடங்களாகவும் அதிகரித்து ஆணையிடப் பட்டுள்ளது.

❖ திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய அரசு சட்டக் கல்லூரிகளில் 3 ஆண்டு மற்றும் 5 ஆண்டு சட்டப் படிப்புகளுக்கு முதலாண்டு மாணவர் சேர்க்கைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களின் எண்ணிக்கையை அதிகரித்து அரசு ஆணையை பிறப்பித்துள்ளது. அதிகரிக்கப்பட்ட இடங்களின் விவரம் பின்வருமாறு :

| வ. எண். | கல்லூரியின் பெயர் | ஏற்கெனவே ஒப்பளிக்கப்பட்டிருந்த இடங்கள் | | திருத்தி ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் | |
|---|---|---|---|---|---|
| | | 3 ஆண்டு | 5 ஆண்டு | 3 ஆண்டு | 5 ஆண்டு |
| 1. | அரசு சட்டக் கல்லூரி, திருச்சி | 91 | 91 | 200 | 160 |
| 2. | அரசு சட்டக் கல்லூரி, கோயம்புத்தூர் | 91 | 91 | 200 | 160 |
| 3. | அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி | 80 | 80 | 200 | 160 |
| | மொத்தம் | 262 | 262 | 600 | 480 |

❖ திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் அரசு சட்டக் கல்லூரிகளில் விளையாட்டு மைதானங்கள் அமைப்பதற்காக, கோயம்புத்தூர் அரசு சட்டக் கல்லூரிக்கு ரூ.12 இலட்சம், திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரிக்கு ரூ.8 இலட்சம் ஆக மொத்தம் ரூ.20 இலட்சம் வழங்கப்பட்டு, அக்கல்லூரிகளில் விளையாட்டு மைதானங்கள் அமைக்கும் பணி பொதுப்பணித் துறையால் நடைபெற்று வருகிறது.

❖ திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரி மாணவர் சேர்க்கைக்கு இடங்களின் எண்ணிக்கை 2002–2003ஆம் கல்வியாண்டு முதல் அதிகரிக்கப் பட்டுள்ளதன் விளைவாக, ரூ.105 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

❖ கோயம்புத்தூர் அரசு சட்டக் கல்லூரி மாணவர் சேர்க்கைக்கு இடங்களின் எண்ணிக்கை 2002–2003ஆம் கல்வியாண்டு முதல் அதிகரிக்கப் பட்டுள்ளதன் விளைவாக, ரூ.85 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைகளைக் கட்டுவதற்காக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

❖ சென்னை, டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி மாணவர்கள் இந்தியாவின் சார்பில் சட்ட மாணவர் பயிற்சி வழக்குவாத சர்வதேசப் போட்டியில் கலந்துகொள்வதற்கு அரசால் நிதியுதவி வழங்கப்படுகிறது.

❖ 2005–2006ஆம் ஆண்டில் பகுதி - II திட்டத்தில் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரிக்கு நூலகக் கட்டடம் கட்ட அரசு ரூ.100 இலட்சம் ஒதுக்கீடு செய்து பொதுப்பணித் துறையால் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

❖ 2005–2006ஆம் ஆண்டில் பகுதி - II திட்டத்தில் மதுரை அரசு சட்டக் கல்லூரியில் விளையாட்டு மைதானம் அமைத்திட ரூ.2.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பொதுப்பணித்துறையால் பணி நடைபெற்று வருகிறது.

❖ 2005–2006ஆம் ஆண்டில் பகுதி - II திட்டத்தில் திருநெல்வேலி அரசு சட்டக்கல்லூரி மாணவிகளுக்கு விடுதிக் கட்டடம் கட்டிட ரூ.118.45 இலட்சம் அரசால் வழங்கப்பட்டு, பொதுப்பணித் துறையால் பணி நடைபெற்று வருகிறது.

❖ தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் விவசாயத் தொழிலாளர்கள், சிறு மற்றும் குறு விவசாயிகள் குடும்பத்தைச் சேர்ந்த சட்டக் கல்லூரி மாணவர்களுக்கும், உதவித்தொகை வழங்கிட அரசால் ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

❖ சட்டத்துறை (ஆட்சி மொழி (சட்டப்) பிரிவு) மூலம் மே 2001 முதல் நவம்பர் 2005 வரை, 107 மையச் சட்டங்களும், 51 தமிழ்நாடு சட்டங்களும் ஆகமொத்தம் 158 சட்டங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு புத்தக வடிவில் அச்சிடப்பட்டுள்ளன.

❖ மேலும், 21 மையச்சட்டங்களும், 3 மாநிலச் சட்டங்களும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு, புத்தக வடிவில் அச்சிட அரசு மைய அச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

❖ 2005ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இந்திய அரசமைப்பின் நாளது தேதி வரையிலான திருத்தச் சட்டங்கள் தமிழில்

மொழிபெயர்க்கப்பட்டு, மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

❖ அரசு சட்டக் கல்லூரி ஆசிரியர்களால் தமிழாக்கம் செய்யப்பட்ட 32 மையச் சட்டங்கள் மற்றும் 90 மாநிலச் சட்டங்கள் தற்போது ஆய்வில் உள்ளன. இவற்றுள், 46 சட்டங்கள் குறித்த பணிகள் முடிக்கப்பட்டு அச்சிடும் பணி நடைபெற்று வருகின்றது.

❖ சட்டப் பல்கலைக்கழகத்தில் சீர்மிகு சட்டப்பள்ளி 2002–2003ஆம் கல்வியாண்டு முதல் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. அப்பள்ளியில் பி.ஏ.பி.எல்.,(ஹானர்ஸ்) என்ற ஐந்தாண்டு பட்டப்படிப்பில் 40 மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். சீர்மிகு சட்டப் பள்ளிக்கான கட்டடங்கள் சட்டப் பல்கலைக்கழக வளாகத்திலேயே கட்டப்பட்டுள்ளன. கட்டடத்தின் கீழ்தளத்தினைக் கட்டுவதற்காக தமிழக அரசு ரூ.75 இலட்சம் ஒதுக்கீடு செய்தது. ரூ.130 இலட்சம் செலவில் தரைத் தளம் மற்றும் முதல் தளம் ஆகியவை கட்டப்பட்டுள்ளன.

❖ கடந்த 17.9.2003 அன்று செங்கல்பட்டில் சட்டப்பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரி ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அக்கல்லூரியில் 3 ஆண்டு பி.எல். பட்டப்படிப்பில் 80 மாணவர்களும், 5 ஆண்டு பி.எல் பட்டப்படிப்பில் 160 மாணவர்களும் அனுமதிக்கப் படுகின்றனர். அக்கல்லூரிக்கென செங்கல் பட்டிலுள்ள என்.ஜி.ஓ. நகரில் 10 ஏக்கர் நிலத்தினை தமிழக அரசு வழங்கியுள்ளது. அக்கல்லூரிக்கு வகுப்பறைகள், நூலகம் மற்றும் கல்லூரி அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி ரூ.172 இலட்சம் செலவில் நடைபெற்று வருகிறது.

❖ 2005ஆம் ஆண்டில் இரண்டு முழுநேர முதுகலை பட்டப் படிப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. அவை, நுண்ணறிவு சொத்துரிமைகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப சட்டங்கள் ஆகும்.

❖ வணிகச் சட்டம், நுண்ணறிவு சொத்துரிமைச் சட்டங்கள், தகவல் தொழில்நுட்ப சட்டங்கள், சுற்றுச் சூழல் சட்டங்கள் பிரிவுகளில் 2004–2005ஆம் கல்வியாண்டிலிருந்து முதுகலை பட்டயப் படிப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

❖ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகமும் ஒருங்கிணைந்த இந்தியக் காப்பீட்டு நிறுவனமும் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தின்படி, 2003–2004ஆம் ஆண்டு முதல் பொதுக் காப்பீட்டு சட்டம் மற்றும் செயல்முறையில் முதுகலைப் படிப்பு, தொலைதூரக் கல்வித் திட்டத்தில் பயிற்றுவிக்கப் பட்டு வருகிறது.

❖ பல்கலைக்கழக வளாகத்திற்குள்ளேயே நிருவாக அலுவலகங்கள் மற்றும் பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி பிரிவுகளுக்கும் கட்டடங்கள் கட்டுவதென முடிவெடுக்கப்பட்டு, ரூ.190 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடங்களை அமைக்கும் பணியானது ஏற்கெனவே தொடங்கப்பட்டு இரண்டு மாதங்களில் முடிவடையக் கூடிய நிலையில் உள்ளது.


❖ மாணவர்களின் நலனுக்காக சிற்றுண்டிச் சாலை மற்றும் வாகன நிறுத்துமிடம் அமைக்கப் பட்டுள்ளது.

❖ 25–5–2005 அன்று, அரசு சட்டக் கல்லூரி ஆசிரியர்களால் எழுதப்பட்ட 27 தமிழ் சட்டப் புத்தகங்களை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள்.

❖ 19.11.2004 அன்று பல்கலைக்கழகத்தில் “சட்ட உதவிக் குழு” நிறுவப்பட்டுள்ளது.

❖ சீர்மிகு சட்டப் பள்ளியின் நூலகத்தில் மாணவர்களின் வசதிக்காக 14 நோட்ஸ் (NODES) மற்றும் ஒரு செர்வர் (SERVER) கொண்ட கணினி ஆய்வுக்கூடம் நிறுவப்பட்டுள்ளது. அனைத்துக் கணினிகளும் லான் (LAN NETWORK) வலைப் பின்னலால் இணைக்கப்பட்டுள்ளன.

★ ★ ★



பேரறிஞர் அண்ணா அவர்களின் 37ஆவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 3.2.2006 அன்று, சென்னையில் உள்ள அண்ணா நினைவிடத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.
(படம் 116ஆம் பக்கம்)

# தகவல் தொழில்நுட்பவியல் துறை



### தமிழ்நாடு மின்னணு நிறுவனம்

* தகவல் தொழில்நுட்பவியல் முதலீடுகளுக்கு உகந்த இடமாக தமிழகத்தை உருவாக்கவும், அரசின் மின் ஆளுகை மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் செயல்பாடுகள் மூலமாகவும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதையும் குறிக்கோளாகக் கொண்டு 2002–ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற கனெக்ட் 2002 நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தகவல் தொழில்நுட்பவியல் கொள்கை 2002 வெளியிடப்பட்டது. தமிழக அரசின் தகவல் தொழில் நுட்பவியல் கொள்கை 2002, முற்போக்கு முயற்சிகளைக் கொண்டுள்ளதாலும், நமது மாநிலம் உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகளோடு நிறைந்த மனித வள ஆற்றலைக் கொண்டுள்ளதாலும் தமிழகம் தகவல் தொழில்நுட்பவியலுக்கு மிகச் சிறந்த இடமாக உலக அரங்கில் பெயர் பெற்றுள்ளது. வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து உயர்ந்து கொண்டிருக்கும் தமிழகத்தில், 2000–2001ஆம் ஆண்டில் ரூ.3,116 கோடி அளவில் இருந்த தகவல் தொழில்நுட்பவியல் ஏற்றுமதி, சென்ற 2004–2005ஆம் ஆண்டில் ரூ. 10,730 கோடியை அடைந்துள்ளது. மேலும், இந்த ஏற்றுமதியின் அளவு 2005–2006 ஆண்டில் ரூ.15,000 கோடியைத் தாண்டும் என எதிர்பார்க்கப் படுகிறது.

* இந்தியத் தகவல் தொழில்நுட்பவியல் துறையில் ஐந்து பெரிய நிறுவனங்களான டாடா கன்சல்டன்சி சர்வீஸஸ், விப்ரோ, இன்போசிஸ், சத்யம் மற்றும் எச்.சி.எல் ஆகியவை சென்னையில் தங்களுடைய மாபெரும் விரிவாக்கத் திட்டங்களை அறிவித்துள்ளன.

* 2005 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சென்னையில் நடைபெற்ற கனெக்ட் 2005 நிகழ்ச்சியின் போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைக் கொள்கை 2005, வெளியிடப்பட்டது. இந்தக் கொள்கையின் முக்கிய நோக்கம் உலக அளவில் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைத் துறைகளின் தலைநகரமாக தமிழகத்தை உருவாக்குவது ஆகும். இந்தக் கொள்கை தமிழகத்திற்கு அதிகபட்ச அளவில் உலக முழுவதிலுமிருந்து தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவை முதலீடுகளைக் கொண்டு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

* இதுவரை தனியார் துறையில் 70–க்கும் மேற்பட்ட தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்களை 20 மில்லியன் சதுர அடி பரப்பளவில் உருவாக்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 2006, ஏப்ரல் மாதத்திற்குள் 6 மில்லியன் சதுர அடி பரப்பளவு உள்ள கட்டடங்கள் கட்டி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பூங்காக்களில் ஏற்கெனவே மிகப்பெரிய பன்னாட்டு தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களான வெரிசான், டாடா கன்சல்டன்சி சர்வீஸஸ், காக்னிசன்ட் டெக்னாலஜி சொல்யூஷன்ஸ், சத்யம், ஹெக்சாவேர், சின்டெல், 24/7 கஸ்டமர் கேர் மற்றும் பிலிப்ஸ் ஆகியவை இடம் பெற்றுள்ளன. இப்பூங்காக்கள் மூலம் 1,50,000த்துக்கும் மேற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

* கனெக்ட் (CONNECT) 2001, 2002, 2003, 2004 மற்றும் 2005 நிகழ்ச்சிகள் வாயிலாக தகவல் தொழில் நுட்பவியல் சேவைகளில் வங்கி, நிதிச் சேவை, காப்பீடு, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து ஆகிய துறைகளில் சென்னையை உலகின் தகவல் தொழில்நுட்பவியல் துறையின் தலைநகரமாக மாற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், அறிவுசார் தொழில் நகரிய மேம்பாட்டுக்கான சிறப்புத் திட்டம் தொடங்கப்பட்டு உள்ளது.

* தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் (Information Technology Enabled Services - ITES) மற்றும் வணிக செய்முறை வெளித்திறன் பெறல் (Business Process Outsourcing-BPO) ஆகியவற்றில் குறிப்பாக வங்கி, நிதிச் சேவைகள் மற்றும் காப்பீடு துறைகளில் தமிழ்நாடு, இந்தியாவின் வலிமைமிக்க முக்கிய இணைப்பு மையமாக வளர்ந்து வருகிறது.

* பொது மற்றும் தனியார் தகவல் சேவையாளர்கள் (Public and Private Communication Providers - PPCPs) இணைந்து ஏறக்குறைய 44,000 கிலோ மீட்டர் தூர அளவிற்கு கண்ணாடி ஒளி இழை வடங்களை (Optic Fibre Cable -

OFC) மாநிலம் முழுவதும் பதித்துள்ளதன் மூலம் இந்தியாவிலேயே தமிழகத்தை பெரும்பான்மை பகுதிகளோடு இணைத்த வகையில் முதன்மை மாநிலமாக உயர்த்தி உள்ளது. பன்னாட்டு தொடர்புக்காக பார்தி நிறுவனத்தால் 8.2 டெராபைட் திறன் கொண்ட ஏற்கெனவே பதிக்கப்பட்டுள்ள ஒளிஇழைவட இணைப்புக்கு கூடுதலாக விதேஷ் சன்ச்சார் நிகாம் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு 5.12 டெராபைட் திறன் கொண்ட ஒளிஇழைவடத்தை ஆழ்கடலில் பதிக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

* மாநிலத்தில் உள்ள தலைசிறந்த ஐந்து பல்கலைக் கழகங்கள், ஏழு தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவைத் தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைந்து 280 மணி நேர "எல்காட் மாதிரி தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவை பயிற்சி" வகுப்புகளை எல்காட் நிறுவனம் உருவாக்கியுள்ளது.

* 7 தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைத் தொழில் நிறுவனங்கள் மூலமாக 45 பேராசிரியர் களுக்கு சென்னையில் 6 நாள் பயிற்சி அளிக்கப் பட்டது.

* தமிழக அரசு, எல்காட் நிறுவனம் மூலமாக தேசிய அளவில் நடைபெற்ற நிகழ்வுகளான கனெக்ட் 2001, 2002, 2003, 2004 மற்றும் 2005, பெங்களூர் ஐடி.காம், இந்தியா சாப்ட் மற்றும் பன்னாட்டு பொருட்காட்சிகளான சிபிட் 2003, கோலாலம்பூரில் 2003 டிசம்பர் 2 முதல் 6 வரை நடைபெற்ற இன்க்ரெடிபில் இந்தியா 2003, ஹாங்காங் ஐசிடி எக்ஸ்போ 2004, ஜிடெக்ஸ் துபாய் 2004 மற்றும் கொரியாவில் நடைபெற்ற இன்டர்நேஷனல் எக்ஸ்போசிஷன் ஆன் கவர்மென்ட் இன்னோவேஷன்ஸ் ஆகியவற்றில் கலந்து கொண்டுள்ளது.

* மின்னணு பரிமாற்றத்திற்குத் தேவையான பாதுகாப்பு சம்பந்தப்பட்ட அடிப்படை ஆதாரங்களான உருவாக்கம், சேமிப்பு, கிடங்கு, ஒளிபரப்பு மற்றும் மீட்பு ஆகியவைகள் குறித்த விஷயங்களை மின்னணு செய்தி பரிமாற்றம் மற்றும் பாதுகாப்புச் சங்கம் (Society for Electronics Transactions and Security - SETS) கவனிக்கிறது.

* இச்சங்கத்தின் தலைமை அலுவலக செயல்பாடு களுக்கு சென்னை தெரிவு செய்யப்பட்டது. இதற்காக அச்சங்கத்திற்கு மூன்றாண்டுகளுக்கு வாடகை இல்லாமல் 5,000 சதுர அடி கட்டடத்தை அரசு வழங்கியதுடன் தரமணியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். அறிவு நகரத்தில் 3 ஏக்கர் நிலத்தை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், ஒரு முறை செலுத்தக்கூடிய உறுப்பினர் கட்டணமான ரூ.60 இலட்சம் இச்சங்கத்திற்குத் தமிழக அரசு சார்பாக வழங்கப்பட்டுள்ளது. இச்சங்கத்தின் செயல்பாடுகள் சென்னையில் ஜூன் 2003–இல் தொடங்கப்பட்டன.

* தமிழக அரசு எல்காட் நிறுவனம் மூலமாக இந்தியத் தொழில் கூட்டமைப்புடன் இணைந்து தயாரிக்கப் பட்ட அறிக்கையின் அடிப்படையில் தகவல் தொழில் நுட்பவியலை மேம்படுத்த கோயம்புத்தூரில் சில இடங்களில் உள்ள நிலங்களை அடையாளம் கண்டுள்ளது. இதற்காக எல்காட் நிறுவனம் பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைந்து தகவல் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பூங்காவை பாரதியார் பல்கலைக்கழக வளாகத்தில் 109 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்க பாரதியார் பல்கலைக்கழகத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding - MoU) கையெழுத்திட்டுள்ளது. கோயம்புத்தூர் நகரை தகவல் தொழில்நுட்பவியல் துறைக்கு உகந்த இடமாக மேம்படுத்த "கோயம்புத்தூர் ஐடி.காம்" (Coimbatore IT.COM) என்ற மாநாடு 2001, 2002, 2003, 2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் கோயம்புத்தூரில் இந்தியத் தொழில் கூட்டமைப்புடன் இணைந்து நடத்தப் பெற்றது.

* ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களுக்காக பொது மற்றும் தனியார் கூட்டமைப்பில் சுயஉதவிக் குழுக்கள் (Self Help Groups - SHG) ஊரகப் பகுதிகளில் அமைக்கப்பட்டு அவற்றின் மூலம் சேவை வழங்குதல் இணையதள ஊரகச் சேவை ராசியில் உள்ளடங்கியதாகும். 2,500 ராசி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

* தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னைக் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் ஆகியவற்றின் சேவைகளை உள்ளடக்கிய 10 முன்னோடி மையங்களில் மின்னணு சேவை வழங்கல் செயல்பட்டு வருகின்றது.

* மின் ஆளுகை வழிகாட்டி திட்டமிடுதலை உருவாக்கவும் தேசிய மின் ஆளுகைத் திட்டத்தின் கீழ் குறிக்கோள் பணித் திட்டங்களுக்கான கருத்துருக்களை உருவாக்குவதற்காகவும் ஆலோசகர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த ஆலோசகர்கள் பணித்திட்டங்களுக்கான துறைகளை ஆய்வு செய்து கொண்டிருக்கின்றனர்.

* சென்னைத் தலைமையகத்தில் 1,000 இணைப்புகளுடன் கூடிய உள்பேசி இணைப்பகம் ரூ.76 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த இணைப்பகங்கள் தலைமைச் செயலகத்தில் தகவல் தொடர்பு தரத்தை மேம்படுத்தியுள்ளன.

* முக்கியமான முடிவுகளை மேற்கொள்வதற்கு 2Mbps கொள்ளளவு உள்ள உயர்தர கணினி தலைமைச் செயலகத்தில் ரூ.63 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது. இதன் மூலம் தலைமைச் செயலகத்தில் மின் அஞ்சல் தகவல் வலை வாயிலாக

துரிதமான முடிவுகளை எடுக்க உதவுகிறது. இந்த இணையதள இணைப்பை 2Mbps–லிருந்து 4 Mbps–க்கு உயர்த்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

* நில ஆவணங்களைக் கணினி மயமாக்குதல் திட்டம், பட்டா நகல்கள் ரூ. 20 செலுத்தினால் கிடைக்கக்கூடிய வகையில் (தமிழ்நாட்டில் உள்ள 206 வட்ட அலுவலகங்களிலும்) செயலாக்கப்பட்டுள்ளது. நில உரிமையாளர்கள் ரூ.2 செலுத்தினால் தங்கள் நிலம் பற்றிய விவரங்களை இதன் மூலம் அறியமுடியும்.

* மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் மின் ஆளுகை தொடக்க முயற்சி மேற்கொள்ளப் பட்டு மக்கள் சேவைக்காக மின் ஆளுகையை இணையதளம் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தச் சேவை எல்லாவிதமான வரி வசூலிப்பிற்கும் ஏதுவாக உள்ளது.

* தமிழ்நாடு மருத்துவப்பணித் தொகுதி கழகம் கணினிமயமாக்கப்பட்ட மருந்து பகிர்ந்தளித்தல் நிருவாக முறையை நடைமுறைப்படுத்தியுள்ளது.

* தமிழக அரசு தற்பொழுது நடைமுறையில் உள்ள தேயிலை ஏலமுறையை முற்றிலுமாக மாற்றி மின்னணு மூலம் தேயிலை ஏலமுறையை அறிமுகப்படுத்த உள்ளது. இத்திட்டத்தின் மூலம் தேயிலை ஏலத்திற்கான வழிமுறைகள் கணினி மயமாக்கப்படும். இந்த மின்னணு மூலம் தேயிலை ஏலமுறை உலகிலேயே முதன்முறையாக அறிமுகப் படுத்தப்பட்டு உள்ளது என்றால் அது மிகையாகாது.

* 86 வட்டார போக்குவரத்து அலுவலகங்கள் / பிரிவு அலுவலகங்கள் அனைத்திலும் மென்தகடு ஓட்டுநர் உரிம அட்டைகள் வழங்கப்படுகின்றன. போக்குவரத்துத்துறை 17 வட்டார போக்குவரத்து மற்றும் பிரிவு அலுவலகங்களில் கணினி மூலம் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. இந்த 17 அலுவலகங்களும் சென்னையில் உள்ள போக்குவரத்துத் துறையின் சேவையகத்தில் இணைக்கப்பட்டு வணிக நடவடிக்கைகள் தினமும் சேவையகத்தில் மேலேற்றப்படுகிறது. கூடுதலாக 40 வட்டார போக்குவரத்து அலுவலகங்களையும் கணினிமயமாக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

* சொத்துப் பதிவுத் துறையில் ஸ்டார் திட்டம் என்று அழைக்கப்படும் இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள 325 பதிவுத் துறை அலுவலகங்களும் மைய சேவையகத்துடன் இணைக்கப்பட்டு வலை தளத்தில் பார்வையிட செய்யப்பட்டுள்ளது.

* 140க்கும் அதிகமான சார் பதிவாளர் அலுவலகங்களை கணினிமயமாக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

* ஒன்பது வேளாண்மை ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் கணினிமயமாக்கப்பட்டு, வேளாண்மைப் பொருட்களின் விலை விவரங்களை விவசாயிகளுக்கு உடனடிச் சேவை மூலமாக தொடர்ந்து வழங்குகிறது.

* 29 மாவட்ட கருவூலங்களும், 205 துணை கருவூலங்களும், சென்னையில் 7 சம்பள மற்றும் கணக்கு அலுவலகங்களும், ஓய்வூதிய அலுவலகங்களும் கணினிமயமாக்கப்பட்டு இயங்குகின்றன.

* 1,200 கிராம பஞ்சாயத்துக்கள் கணினிமயமாக்கப் பட்டுள்ள நிலையில், இந்த வருடத்தில் 5,500 கிராம பஞ்சாயத்துக்களும் மற்றும் மீதமுள்ள 6,000 கிராம பஞ்சாயத்துக்களும் கணினிமயமாக்கப்பட ஒரு முன்னோடியான முயற்சி எடுக்கப்பட்டு உள்ளது.

* வணிகவரித்துறையில் 323 மதிப்பீட்டு வட்டங்களும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

* சிறுதொழில் துறையானது புதிய தொழில் முனைவோர்களுக்கு மாவட்ட அலுவலகங்களில் உடனடிச் சேவை மூலமாக “தற்காலிக சிறுதொழில் பதிவுச் சான்றிதழ்” வழங்க வழி செய்துள்ளது. இந்தச் சேவை மாநிலத்தில் அங்கீகரிக்கப்பட்ட 255 தனியார் கணினி மையங்கள் மூலம் வழங்கப்படுகிறது. இத்திட்டம் நாட்டிலேயே முதன்மையானது.

* 127 வட்ட அலுவலகங்களில் தொடுதிரை தகவல் சாதனம் அமைக்கப்பட்டுள்ளதன் மூலம் பொது மக்கள் நிலம், பட்டா, மதிப்பீடு, பிறப்பு போன்ற தகவல்களை ஒரு முறை தொடுதல் மூலம் பெறலாம்.

* தொலை உணர்தல் மற்றும் நிலவியல் தகவல் முறைக் கருவி வனத்துறையின் தலைமை அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. வனத் துறையின் அனைத்து வட்டார, மண்டல மற்றும் சரக அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

* மாவட்டங்களை இணைக்கும் செயல்பாட்டின் மூலம் பொதுமக்களின் குறை தீர்க்கும் அமைப்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அலுவலகத்தில் நிறுவப் பட்டுள்ளது.

* சிறுசேமிப்பு திட்டங்களைப் பற்றி தகவல் அளிப்பதற்கு தானியங்கி பதிலளிப்பு முறை அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

* அண்ணா பல்கலைக்கழகத்தில் அறிவுக் களஞ்சிய மையம் அமைப்பதற்காக 22.3.2003 அன்று தமிழக அரசு, அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் சன் மைக்ரோ சிஸ்டம்ஸ் ஆகியோருக்கிடையே

ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.

* சென்னையில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காக மின் இணைப்பு துண்டிப்பு மற்றும் மின் இழப்பு குறித்த புகார்களை உடனுக்குடன் கவனித்து சரி செய்ய 'அழைப்பு மையம்' (Call Centre) ஒன்று ரூ. 45 இலட்சம் மதிப்பீட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 12.11.2003 அன்று துவக்கி வைக்கப்பட்டது. மின் இணைப்பு துண்டிப்பு மற்றும் மின் இழப்பு குறித்த புகார்களை உடனுக்குடன் கவனித்து சரிசெய்ய ரூ. 51.62 இலட்சம் செலவில் திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் அமைந்துள்ள தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகங்களில் அழைப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அழைப்பு மையங்கள் 1.3.2005 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ஒளிபட கலந்துரையாடல் மூலம் துவக்கி வைக்கப்பட்டது.

* தொலைபேசி எண் 100 மூலம் பெறப்படும் சட்டம் மற்றும் ஒழுங்கு சம்பந்தப்பட்ட புகார்களை கவனிக்கவும் தொலைபேசி எண் 103 மூலம் பெறப்படும் போக்குவரத்து குறித்த புகார்களைக் கவனிக்கவும் சென்னை மாநகர காவல் துறைக்காக எழும்பூரில் உள்ள நவீன கட்டுப்பாட்டு அறையில் ஒரு அழைப்பு மையம் (12 முகவர்கள், 4 வி.எச்.எப் இயக்கர்கள் மற்றும் ஒரு கண்காணிப்பாளர்) ரூ.135 இலட்சம் மதிப்பீட்டில் எல்காட் நிறுவனத்தின் மூலம் நிறுவப் பட்டது. இந்த அழைப்பு மையத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 18.2.2004 அன்று துவக்கி வைத்தார்கள்.

* அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினிக் கல்வி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ரூ.18,973 இலட்சம் மதிப்பீட்டில் 1,197 அரசு மேல்நிலைப்பள்ளிகளில் இத்திட்டம் செயல்படுகிறது.

* அரசினர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், சட்டம் மற்றும் மருத்துவக் கல்லூரிகள் என மொத்தம் 76 கல்லூரிகளில் 14,000 மாணவர்களுக்குத் தகவல் தொழில்நுட்பவியல் கல்வி அளிக்கப் பட்டிருக்கிறது.

* ஸ்டார் திட்டத்தின் (பதிவுத் துறையில் எளிமையாக்கப்பட்ட, ஒளிவுமறைவற்ற நிருவாகம்) கீழ் பதிவுத் துறையின் 325 பதிவு அலுவலகங்களைக் குறிப்பிட்ட காலத்திற்கு அனுபவ உரிமையளிக்கும் மற்றும் சேவை அடிப்படையில் கணினிமயமாக்கும் பணியினை எல்காட் நிறுவனம் இரண்டு கட்டங்களாக மேற்கொண்டது. குறுந்தகடுகளில் நுண்ணாய்வு மற்றும் சேமிப்பு செய்வதன் மூலம் ஆவணங்கள் பாதுகாப்பது, வில்லங்கச் சான்றிதழ்கள் மற்றும் சான்றளிக்கப்பட்ட நகல்கள் வழங்குவது ஆகியவற்றைப் பொதுமக்கள் இத்திட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்ளலாம். மீதமுள்ள 150 பதிவு அலுவலகங்களை கணினிமயமாக்கும் பணி நடைபெற்று வருகிறது.

* ரெஜிநெட் – பதிவுத் துறையின் மாநில அளவிலான ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள 325 பதிவு அலுவலகங்களும் இணைக்கப்பட்டு, மக்களுக்குப் பதிவுத் துறை சம்பந்தமான விளக்கங்களை விரைவாகவும், தரமாகவும் அளிப்பதற்கு ஏற்றாற்போல் வடிவமைக்கப் பட்டிருக்கிறது. மாநிலத்தின் எந்த பதிவுத் துறை அலுவலகத்திலிருந்தும், எந்தவொரு உடமைகளுக்கும் வில்லங்க சான்றிதழ் அளிப்பதே ரெஜிநெட்டின் நோக்கமாகும்.

* புழக்கத்தில் இருந்த ஆறு வருட கால பழைய 152 இலட்சம் குடும்ப அட்டைகளை மாற்றி புதிய அட்டைகளை மறுபடி வழங்க தமிழ்நாடு அரசு முடிவு செய்தது. 2005 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 37.68 இலட்சம் புதிய குடும்ப அட்டைகள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டன. 2005 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை குடும்ப அட்டை பெறாத குடும்பங்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்க தமிழக அரசால் முடிவு செய்யப்பட்டு, இந்தக் குடும்ப அட்டை உருவாக்கும் பணி எல்காட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. தவறில்லாத அட்டை அச்சிடப்பட, நுண்ணாய்வு, இரண்டு முறை தகவல் சேர்ப்பு மற்றும் ஒப்பீடு முறை செயல்படுத்தப்பட்டது. மூன்று மாத கால அவகாசத்திற்குள் மறுபடி வழங்கப்பட உள்ள 151 இலட்சம் குடும்ப அட்டைகள் அச்சிடப்பட்டு பொது விநியோகத் துறையிடம் வழங்கப்பட்டது.

* குடும்ப அடையாள அட்டைகளை அச்சடிக்கும் பணியினை அரசு எல்காட் நிறுவனத்திடம் ஒப்படைத்தது. ஒரு மாத காலத்திற்குள் 66.36 இலட்சம் அட்டைகள் அச்சிடப்பட்டு மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டன. கூடுதல் அட்டைகளை அச்சிடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

* விவசாயத் தொழிலாளிகள் மற்றும் சிறு மற்றும் குறுவிவசாயிகள் பயன்பெற உதவும் தமிழக முதலமைச்சரின் விவசாயிகள் பாதுகாப்புத் திட்டம் புதிய முயற்சியுடன் தொடங்கப்பட்டுள்ளது.

* தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் சான்றிதழ்க் கல்வியையும், பட்டக் கல்வியையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஜூன் 2002 இல் தொடங்கி வைத்தார்கள்.

* பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 175 மாணவர்கள் முதல் அடிப்படைநிலை சான்றிதழ் கல்வி மற்றும் இடைநிலைக் கல்வியை நிறைவு செய்துள்ளனர். சான்றிதழ் கல்வி தொடர்பான பாடங்கள் குறுந்தகட்டிலும் கிடைக்கின்றன.

* முதல் முயற்சியாகப் பட்ட வகுப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாகிய பட்டயப் படிப்பிற்குரிய 4 தாள்களுக்கும் இணைய வழியாக 20 தேர்வுகளையும், 4 எழுத்துத் தேர்வுகளையும் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் நடத்தியுள்ளது.

* தமிழ் இலக்கிய நூல்களின் சிறந்த தொகுப்பாக உள்ள இந்த மின்நூலகத்தைப் பலரும் பயன்படுத்தும் பொருட்டு, நூலகக் கட்டணம் நீக்கப் பட்டது. ஆண்டு தோறும் கூடுதலான புத்தகங்கள் இணையதளத்திலிடப்பட்டு வருகின்றன. தற்போது 217 புத்தகங்கள் (93,817 பக்கங்கள்) இணைய தளத்திலிடப்பட்டுள்ளன.

* நூல்களையும், அகராதிகளையும் தவிர, பல்வேறு துறைகளைச் சார்ந்த இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட கலைச்சொற்கள் அடங்கிய 29 கலைச்சொற்களஞ்சியங்களும் மின்நூலகத்தில் இடம் பெற்றுள்ளன.

* 137 சைவ, வைணவக் கோயில்கள் பற்றிப் புகைப் படம் மற்றும் ஒளிக்காட்சிகள் அடங்கிய காட்சியகம் இடம் பெற்றுள்ளது.

* சான்றிதழ்க் கல்விக்குப் பதிவு, பட்ட வகுப்பிற்குப் பதிவு, பாடங்களைப் பார்வையிட மட்டும் பதிவு, நூலகத்தைப் பயன்படுத்தப் பதிவு என பல்வேறு கல்வித் திட்டத்தின் கீழ், 58 நாடுகளைச் சேர்ந்த 9,561 மாணவர்கள் பதிவு செய்துள்ளனர்.

* தமிழர்கள் பயனடையும் வகையில், தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் ஒருங்கிணைப்பு மையங்கள் அமெரிக்கா, கனடா, மலேசியா, இலங்கை, மொரீசியஸ், சுவிட்சர்லாந்து, ஜெர்மனி, ரியூனியன், பிரான்சு, ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளில் நிறுவப்பட்டுள்ளன.

* கணினித் தமிழ் வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் தமிழ் மென்பொருள்களை உருவாக்க, தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதியின் (டி.எஸ்.டி.எப்.) கீழ், தமிழக அரசு நிதி வழங்கியுள்ளது.


* தமிழ் இணையப் பல்கலைக்கழக மாணவர்கள் மேலும் பயன்பெறும் வண்ணம், தொலைக்காட்சி கருத்தரங்கு வசதியுடன், இணையத் தள வகுப்பறை ஒன்று ரூ.12.5 இலட்சம் செலவில் அமைக்கப் பட்டுள்ளது.

* தமிழ்நாட்டிற்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் குறைந்த அளவு தமிழைக் கற்று, தங்கள் அலுவல்களை மேற்கொள்ளும் வகையில், பயணியர் தமிழ்ப் பாடங்கள் தயாரிக்கப்பட்டு, இணையத் தளப்படுத்தும் நிலையில் உள்ளன.

* எல்லா வகையான தமிழ் எழுத்துருக்களையும் அடையாளங்காணும் தேடுபொறி ஒன்று, உருவமைக்கப்பட்டுள்ளது.

* 'தமிழ் இணையம் 2003 (TI 2003)' மாநாடு ஆகஸ்டு திங்கள் 22-ஆம் நாள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கிவைக்கப் பெற்றது. இம்மாநாட்டில் பல்வேறு நாடுகளிலிருந்து 245 சார்பாளர்கள் கலந்து கொண்டனர். ✶

# வருவாய்த்துறை



* 2001–2002 முதல் 2005–2006 ஆண்டுகளில் டிசம்பர் 2005 முடிய 4,48,485 வீட்டுமனை மற்றும் 28,140 நில ஒப்படைகள் வழங்கப்பட்டுள்ளன.

* மாநிலத்திலுள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களில் கணினி செயல்பட தேவையான இடம் தேர்வு செய்தல், மூன்றடுக்கு மின் இணைப்பு, குளிர்சாதன வசதி, தடையில்லா மின் இணைப்பு சாதனம், கணினி அறைகலன்கள் உட்பட அனைத்து உள்ளமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 31.12.2003 வரையிலான காலத்திற்கு தமிழ்நாட்டில் உள்ள மொத்த கிராமங்களில் நகர்ப்புறஞ் சாராத (Rural Villages) கிராமங்களின் "அ" பதிவேடு மற்றும் சிட்டா பதிவுகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

* மாநிலத்திலுள்ள 206 வட்டங்களில் 201 வட்டங்கள் On-line–க்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இந்த 201 வட்டங்களிலும் நில உடைமைதாரர்கள் அவர்களுக்குத் தேவையான "அ" பதிவேடு மற்றும் சிட்டா நகல்களைக் கணினி மூலம் பெறும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

* புள்ளி விவரங்கள் சேகரித்து கணினியில் பதிதல் மற்றும் கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளும் செலவினத்திற்காக இதுவரை மைய அரசால் 513.00 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இதில் ரூ.509.67 இலட்சம் இதுவரை செலவிடப்பட்டுள்ளது. அதே போன்று 206 வட்டங்களுக்கும் கணினிகள் வழங்கிட 714 இலட்சம் ரூபாயும் மைய அரசிடமிருந்து பெறப்பட்டு செலவிடப்பட்டுள்ளது.

* நிருவாகத்தைப் பொதுமக்களுக்கு அருகாமையில் எடுத்துச் செல்லவும் நிருவாக செயல்பாட்டின் மேம்பாட்டில் கணினி வகிக்கும் முக்கியப் பங்கை உணர்த்தும் வகையிலும் மாவட்டத்திற்கு ஒரு வட்டம் என மாதிரி வட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டு

30 வட்டங்களில் தொடுதிரை தகவல் கணினி மேடை (TSCK) நிறுவிட அரசால் உத்தரவிடப் பட்டு, 15.4.2002 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டத்தில் துவக்கப்பட்டு ஏனைய வட்டங்களிலும் அதே தினத்திலிருந்து செயல்பட்டு வருகிறது, மாநிலத்தின் இதர வட்டங்களிலும் தொடுதிரை கணினி தகவல் மேடை அமைக்க பகுதி - II திட்டத்தின் கீழ் ரூ.175.60 இலட்சம் அரசால் வழங்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக 97 வட்டங்களில் தொடுதிரை தகவல் கணினி மேடை நிறுவப்பட்டுள்ளது.

- ✶ நில அளவை ஆவணங்களைக் கணினிமயமாக்கும் திட்டத்தின்கீழ் கீழ்நிலைப் பணியாளர்களுக்குக் கணினியில் பயிற்சி வழங்க முடிவெடுக்கப்பட்டு இதுவரை 8,521 பணியாளர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. முதலணியில் 16 வட்டாட்சியர் மற்றும் துணை வட்டாட்சியர் ஆகியோர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

- ✶ செங்கல்பட்டு, குடவாசல், ஈரோடு மற்றும் கோபிச்செட்டிப்பாளையம் ஆகிய நான்கு வட்டங்களில், புலப்படங்கள் கணினி மயமாக்கும் திட்டம் இரண்டு முன்னோடித் திட்டமாக மேற்கொள்ளப்பட்டது. இந்நான்கு வட்டங்களிலும் சுமார் 1.22 இலட்சம் புலப்படங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன.

- ✶ கணினி வசதிகள், கீழ்மட்ட அளவிலும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் கிராம அளவு முதல் மாவட்ட அளவு வரை உள்ள அனைத்து நில நிருவாக நடைமுறைகளையும் கணினி மூலம் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டு, பெரம்பலூர் மாவட்டத்தில் ஒரு முன்னோடித் திட்டமாக மேற்கொள்ளத் திட்டம் வகுக்கப்பட்டு பெரம்பலூர் மாவட்டத்தில் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும், 3 சார் பதிவாளர் அலுவலகங்களிலும் கணினிகள் பொருத்தப்பட்டு கணினி மூலம் தகவல் பரிமாற்றம் நடைபெற்று வருகிறது.

- ✶ நிலவியல் தகவல் முறைக்கு அதிக முக்கியத்துவம் மற்றும் நம்பகத் தன்மை ஏற்பட்டு வரும் நிலையில், முன் எப்பொழுதும் இல்லா வகையில் தற்சமயம் மிகத் துல்லியமான டிஜிடல் கடாஸ்ட்ரல் நில அளவை தேவை உணரப் படுகிறது. இதனால் விண்கோள் சமிக்ஞை கொண்டு அளவிடும் (Global Positioning System) ஒரு முன்னோடித் திட்டத்தை ரூ.120 இலட்சம் செலவில் மேற்கொள்ள அரசு அனுமதி வழங்கியுள்ளது.

- ✶ நில வரைபடங்களை நகல் எடுத்து பாதுகாத்து வைத்துக் கொள்ள மத்திய மாநில நிதி உதவியுடன் ரூ.40 இலட்சம் பெறப்பட்டு இதுவரை 29 மாவட்டங்களின் கிராம வரைபடங்களை ஸ்கேன் செய்யும் பணி முடிவடைந்துள்ளது.

- ✶ சென்னையில் அண்ணா பல்கலைக்கழக உதவியுடன் நவீன நில அளவைப் பயிற்சிப் பள்ளியில் (C, STAR) 01.06.2005 முதல் பயிற்சி வகுப்புகள் துவக்கப்பட்டுள்ளன.

- ✶ 2005 அக்டோபர் வரை நிலச்சீர்திருத்த சட்டத்தின் கீழ் நில ஒப்படை செய்யப்பட்ட நிலம் 1,86,617 ஏக்கர். இதனால் பயனடைந்தோர் 1,47,829 பேர். 1.4.2001 முதல் 31.10.2005 வரை தாழ்த்தப்பட்டோர், மலைசாதியினர் மற்றும் 5,482 பேருக்கு 6,939 ஏக்கர் நிலம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

- ✶ வருவாய்த்துறையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நேரடியாக உதவியாளர் பணி நியமனம் செய்தும், இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் ஆகியோருக்குத் தகுதி அடிப்படையில் உதவியாளர்களாகப் பதவி உயர்வு வழங்குவதன் மூலமும் உதவியாளர் நிலை காலியிடங்கள் பூர்த்தி செய்யப்படுகின்றன. அதில் 10% தேர்வுநிலை கிராம நிருவாக அலுவலர்களுக்கு ஒதுக்கீடு செய்து விருப்பம், முதுநிலை மற்றும் தகுதி அடிப்படையில் அவர்களை உதவியாளர்களாக பதவி உயர்வு மூலம் நியமனம் செய்தும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி மாநில அளவில், மாவட்டங்களில் ஏற்பட்ட 10% காலியிடங்களில் இதுவரை 60 தேர்வு நிலை கிராம நிருவாக அலுவலர்களுக்கு உதவியாளர்களாக பதவி உயர்வு வழங்கப் பட்டுள்ளது.

### ஆட்சி எல்லைகள் சீரமைத்தல்

- ✶ மாவட்ட நிருவாகம் மேலும் பயனுள்ளதாகவும், பொதுமக்களுடைய தேவைகளுக்குப் பரிவுள்ளதாக இருப்பதற்காகவும், பின்தங்கிய பகுதிகளை மேம்படுத்தவும், சட்ட ஒழுங்குப் பிரச்சினைகள் மற்றும் இயற்கை இடர்பாடு ஏற்படும் காலங்களில் உதவவும், மக்கள் நலப் பணிகள் தாமதமின்றி நடைபெறவும், அவசியம் ஏற்படும் போது பெரிய மாவட்டங்கள் சீரமைக்கப்பட்டு, புதிய மாவட்டங்கள் படிப்படியாக உருவாக்கப்படுகின்றன. இதன் விளைவாக தற்போது, 30 மாவட்டங்கள், 73 கோட்டங்கள், 206 வட்டங்கள், 1,120 உள் வட்டங்கள், 17,244 கிராமங்கள் உள்ளன.

* தருமபுரி மாவட்டத்தைப் பிரித்து கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய கிருஷ்ணகிரி மாவட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 9.2.2004இல் தொடங்கிவைக்கப்பட்டுள்ளது.

* விழுப்புரம், கரூர், பெரம்பலூர், நாமக்கல், திருவள்ளூர், தேனி மற்றும் திருவாரூர் ஆகிய 7 மாவட்டங்களில் வருவாய்த்துறை மற்றும் வருவாய்த்துறை அல்லாத அலுவலக மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டவும், உள்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கவும், மொத்தம் ரூ.7,396.88 இலட்சம் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

* பெரம்பலூர் மாவட்ட பெருந்திட்ட வளாகம் உருவாக்கப்பட்டு பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு ரூ.716 இலட்சம் ஒதுக்கப்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. மேலும் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் முகாம் அலுவலகங்கள் ரூ.72 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

* கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட புதிய மாவட்டமான கிருஷ்ணகிரியில் மாவட்ட பெருந்திட்ட வளாகம் அமைக்கவும் மற்றும் மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலகம் மற்றும் சுற்றுலா மாளிகை கட்டுவதற்காகவும் ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

* பதினோராவது நிதிக்குழுவின் கீழ், 258 அரசு கட்டடங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மொத்தம் 252 கட்டடங்கள் ரூ.7,833.44 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மாவட்ட நிருவாகத்தின் செயல்பாடுகளை நவீனப் படுத்துவதற்காக ரூ.598.70 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள்**

* [illegible].8.2004 முதல் 11.8.2004 வரை நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து அனைத்து மாவட்டங்களின் கோட்ட அலுவலகங்களுக்கும் நிகரி மற்றும் நகல் எடுக்கும் கருவிகள் வழங்குவதற்கும், அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு இணையதள தொடர்பு ஏற்படுத்த கூடுதல் தொலைபேசி இணைப்பு வழங்குவதற்கும் மொத்தம் ரூ.111.39 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்படி வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

* 2001 ஆம் ஆண்டு முதல் 2004ஆம் ஆண்டு வரை மொத்தம் 11,618 கட்டடங்கள் ரூ.77.54 கோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டு கிராம நிருவாக அலுவலர்களுக்கு வழங்கப்பட்டன.

* பகுதி II திட்டத்தில் 2001–2002 முதல் 2004–2005 வரை ஆத்தூர் கோட்டாட்சியர் அலுவலகம், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலகம் ஆகியவை ரூ.95.20 இலட்சம் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டது. மேலும் ,7 சீருந்துகள் மற்றும் 20 ஈப்புகள் மொத்தம் ரூ.120 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு மாவட்டங்களுக்கு அளிக்கப்பட்டன.

* 5,394 வருவாய் கட்டடங்கள் அனைத்திலும் மழைநீர் சேகரிப்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

* மனுநீதித் திட்டத்தின்கீழ், 2001ஆம் ஆண்டு முதல் 30.9.2005 வரை 11,28,646 மனுக்கள் பெறப்பட்டு 5,03,130 மனுக்களின் கோரிக்கைகள் ஏற்கப்பட்டன. 4,15,674 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. ஆகமொத்தம் 9,18,804 மனுக்கள் முடிவு செய்யப்பட்டன. நிலுவையில் உள்ள 2,09,842 மனுக்கள் ஆய்வில் உள்ளன.

* மக்கள் குறை தீர்க்கும் நாள் திட்டத்தின் கீழ், சென்ற 2001ஆம் ஆண்டு முதல் 30.9.2005 வரை 20,10,108 மனுக்கள் பெறப்பட்டன. இவற்றில் 15,16,673 மனுக்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் 8,10,229 மனுக்களில் உள்ள கோரிக்கைகள் ஏற்கப்பட்டன. 7,06,044 மனுக்களில் உள்ள கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. 4,93,435 நிலுவையில் உள்ள மனுக்கள் ஆய்வில் உள்ளன.

* 2006ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு 1,63,46630 (1.64 கோடி) சேலைகளும் 1,63,46630 (1.64 கோடி) வேட்டிகளும் வழங்க அரசு ஆணையிட்டு தகுதியான பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

**சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு தமிழக அரசின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகள்**

* 26.12.2004 அன்று காலை 6.28 மணிக்கு இந்தோனேசியாவின் வடக்கு சுமத்தரா கடற்கரைப் பகுதியில் 9.0 ரிக்டர் அளவில் ஏற்பட்ட மிகப் பெரிய நில நடுக்கத்தின் தாக்கத்தால், இந்தியாவின் கடலோரப் பகுதிகள் குறிப்பாக தென்பகுதிக்குட்பட்ட தமிழகம், கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம் உள்ளிட்ட பகுதிகள் தாக்குதலுக்குள்ளாகின. சுனாமி ஆழிப் பேரலைகளின் கடும் தாக்குதலால் தமிழகத்தின் கடலோர மாவட்டங்கள் பெருத்த சேதமடைந்தன.

* நாகப்பட்டினம், கன்னியாகுமரி, கடலூர், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், திருவாரூர், தஞ்சாவூர், இராமநாதபுரம், தூத்துக்குடி,

திருநெல்வேலி மற்றும் புதுக்கோட்டை ஆகிய 13 கடலோர மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன. இம்மாவட்டங்களில் போர்க்கால அடிப்படையில் அரசால் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன.

1. உடனடியாக அமைக்கப்பட்ட நிவாரண மையங்கள் – 304;
2. நிவாரண மையங்களில் தங்க வைக்கப்பட்ட மக்கள் 2 இலட்சத்து 37 ஆயிரம் பேர்;
3. கூடுதலாக அமைக்கப்பட்ட நிவாரண மையங்கள் – 412;
4. நிவாரண மையங்களில் தங்க வைக்கப்பட்ட மக்கள் 3 இலட்சத்து 9 ஆயிரம்;
5. 547 மருத்துவர்கள் கொண்ட குழுக்கள் மூலமாக பாதிக்கப்பட்டோருக்குத் தேவையான நோய் முன்னெச்சரிக்கை சிகிச்சை அளிக்கப்பட்டது.

✶ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட துரித நடவடிக்கையின் காரணமாக, நிவாரண மற்றும் மறுவாழ்வுப் பணிகளை கண்காணிக்க மாநில அளவில், சிறப்பு அலுவலர் மற்றும் இணை ஆணையர் (நிவாரணம் மற்றும் மறுவாழ்வு), மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பல அலுவலர்களை உள்ளடக்கிய குழு உடனடியாக அமைக்கப்பட்டு நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

✶ ஆழிப்பேரலைகளால் ஏற்பட்ட பேரழிவு பற்றிய செய்தியினை அறிந்த உடன், பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேடுதல், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை உடனடியாக மேற்கொள்ள உத்தரவு பிறப்பித்தார்.

✶ பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் மாவட்ட ஆட்சியர்களை உடனடியாகத் தொடர்பு கொண்டு, வருவாய்த் துறை, காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறை, மருத்துவ மற்றும் சுகாதாரப் பணிகள் துறை, கடலோரக் காவல்படை மற்றும் முப்படைகளின் உதவியுடன் போர்க்கால அடிப்படையில், தேடுதல், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை விரைவாக மேற்கொள்வதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதிப் படுத்தினார்.

✶ சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடி நிவாரணமாக 65 கோடி ரூபாய் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

- பாதிக்கப்பட்ட வள்ளம், படகு வைத்திருக்கும் மீனவர்களுக்கு மாற்று மீன்பிடி வலை வாங்கிட தலா 20 ஆயிரம் ரூபாய் வீதம் 10 ஆயிரம் மீனவர்களுக்கு 20 கோடி ரூபாய்.
- கட்டுமரம் பயன்படுத்துவோருக்கு மாற்று மீன்பிடி வலை வாங்கிட தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் 20 ஆயிரம் மீனவர்களுக்கு 20 கோடி ரூபாய்
- வள்ளம், படகுகளைப் பழுதுபார்க்க/மறு கட்டுமானம் செய்ய 15 ஆயிரம் ரூபாய் வீதம் 10 ஆயிரம் படகுகளுக்கு15 கோடி ரூபாய்
- சேதமடைந்த 20 ஆயிரம் கட்டு மரங்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் 20 ஆயிரம் கட்டுமரங்களுக்கு 20 கோடி ரூபாய்

✶ இதர நிவாரணப் பணிகளுக்காக 395 கோடியே 56 இலட்சம் ரூபாய்

- வலையுடன் கூடிய மரக் கட்டு மரங்களை மறு கட்டுமானம் செய்திட 32 ஆயிரம் ரூபாய் முழு மானியம் அல்லது சேதமடைந்த மரக்கட்டுமரங்களை இழந்தோருக்கு எப்.ஆர்.பி. கட்டுமரம் வாங்கிட 35 சதவீதம் மானியத் தொகை குறைந்த பட்சமாக, 52 ஆயிரத்து 500 ரூபாய். அதிகபட்சமாக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்.
- பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ சேதமடைந்த எப்.ஆர்.பி. கட்டுமரங்களை (இயந்திரம் மற்றும் வலையுடன்) மறு கட்டுமானம் செய்ய 50 சதவீதம் மானியத் தொகை குறைந்த பட்சமாக 75 ஆயிரம் ரூபாய். அதிகபட்சமாக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்.
- பகுதியாகவோ அல்லது முழுவதுமாகவோ சேதமடைந்த மரம் / வள்ளம் (எஞ்சின் மற்றும் வலையுடன்) மறு கட்டுமானம் செய்ய 50 சதவீதம் மானியத் தொகை குறைந்தபட்சமாக, 75 ஆயிரம் ரூபாய். அதிகபட்சமாக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்.
- இயந்திரப் படகுகளை பழுது நிவர்த்தி செய்ய 60 சதவீதம் மானியம் அதிகபட்சமாக 3 இலட்சம் ரூபாய்.
- இயந்திரப் படகுகளை மறு கட்டுமானம் செய்ய 35 சதவீதம் மானியம் அதிகபட்சமாக 5 இலட்சம் ரூபாய்.
- பாதிக்கப்பட்ட மீனவர்களின் வள்ளம் படகுகள், கட்டு மரங்கள், மீன்பிடி வலைகள், மோட்டார் படகுகள் மற்றும் பழுது நிவர்த்தி/மறு கட்டுமானம் செய்யும் பொருட்டு, நாளதுவரையில் 105 கோடியே 64 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.
- இதன் பயனாக, 38 ஆயிரத்து 172 மீன்பிடி வலைகளும் (வள்ளம் / கட்டுமரம்), 29 ஆயிரத்து 904 கட்டுமரங்களுக்கு கூடுதல் நிதியுதவியும், 4 ஆயிரத்து 164 புதிய வள்ளங்களும், 2 ஆயிரத்து 377 இயந்திரப் படகுகள் பழுது

நிவர்த்தி செய்யப்பட்டும், 2 ஆயிரத்து 754 இயந்திரப் படகுகளுக்குப் புதிய இஞ்சின்களும் வழங்கப்பட்டுள்ளன.

* கடலூர் மாவட்டத்தில் இறால், நண்டு பண்ணைகள் மற்றும் மீன் விதைப் பண்ணை உரிமையாளர்கள் மற்றும் மீன்போக்குவரத்து (வாங்கல் / விற்றல்) வியாபாரம் செய்வோரின் பனிக்கட்டி உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றில், சுனாமியால் தங்களது உடைமைகளை இழந்தோருக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கிட 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* மீன்பிடி நடவடிக்கைகளை மீண்டும் மேற்கொள்ளவும், மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் படகு நிறுத்தும் மையங்களைப் பழுதுபார்க்கவும், ஆழப்படுத்தவும் 6 கோடியே 64 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கிட அரசு உத்தரவிட்டுள்ளது.

* சென்னை மாவட்டத்தில் மீன்பிடி துறைமுகத்தைப் பழுது நீக்கி சீரமைத்திட 4 கோடியே 30 இலட்சம் ரூபாய் வழங்கிடவும், தஞ்சாவூர் மாவட்டம், மல்லிப்பட்டினம் சரக்கு இறக்கும் துறைமுகத்தைப் புதுப்பித்திட 55 இலட்சம் ரூபாய் வழங்கிடவும், கன்னியாகுமரி மாவட்டத்தில் சின்னமுட்டம் படகுத் துறையை சீரமைக்க 5 இலட்சம் ரூபாயும், அங்கு பழுதடைந்த படகுகளைப் பழுது நிவர்த்தி செய்யும் பணியினைத் துரிதப்படுத்திட ஒரு கோடியே 89 இலட்சம் ரூபாய் வழங்கிடவும் அரசு உத்தரவிட்டுள்ளது.

* மீன்வளர்ச்சித் துறைக்கு புதிய அச்சடிக்கும் இயந்திரம் வாங்கிட 2 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாயும் மற்றும் எதிர்பாராத செலவினங்களை மேற்கொள்ள 3 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* இழப்பு மதிப்பீட்டு அறிக்கையினைத் தயாரிக்கும் பொருட்டு, பணியில் ஈடுபடுத்தப்பட்ட பணியாளர்களுக்குரிய வசதி மற்றும் எதிர்பாராதச் செலவினங்களுக்காக 50 இலட்சம் ரூபாயும், நாகை மாவட்டத்தில் படகுகளைப் பழுது நிவர்த்தி செய்திட உபயோகப்படுத்தப்படும் மரப்பெட்டிகளுக்கு தலா 75 ஆயிரம் ரூபாய் வீதம் 10 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* கட்டுமரம், புதிய எப்.ஆர்.பி. கட்டுமரம் மற்றும் வள்ளம் ஆகியவற்றினை வாங்கிடவும், கட்டுமரம் மற்றும் இயந்திர படகுகளின் பழுதுகளை நிவர்த்தி செய்திடவும் மற்றும் நார் கண்ணாடி படகுகளில் இணைக்கப்படும் மரங்களுக்கு விதிக்கப்படும் விற்பனை வரியைத் தள்ளுபடி செய்திடவும் அரசு உத்தரவிட்டுள்ளது.

* தமிழ்நாடு மீன் வளர்ச்சி மேம்பாட்டு நிறுவனத்துக்கு பழுதுகளை சீரமைக்கும் பொருட்டு நிவாரண உதவியாக 6 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

### தற்காலிகக் குடியிருப்புகள்

* சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களில் தற்காலிகக் குடியிருப்பு ஒன்று தலா 8 ஆயிரம் ரூபாய் வீதம் 40 கோடி ரூபாய் செலவில் 50 ஆயிரம் வீடுகள் அமைத்திட திட்டமிடப்பட்டு, முதற்கட்டமாக, 14 ஆயிரத்து 343 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

* தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் மூலமாகவும் 50 ஆயிரம் வீடுகள் அமைத்திட திட்டமிடப்பட்டு முதற்கட்டமாக, 18 ஆயிரத்து 35 வீடுகள் அமைக்கப் பட்டுள்ளன.

* தற்காலிகக் குடியிருப்புகளில் உள்ள மக்களின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றிடும் பொருட்டு, சாலைவசதி, குடிநீர் வசதி, தெருவிளக்கு மற்றும் வீடுகளுக்கு மின்வசதி, தற்காலிக மருத்துவ முகாம் மற்றும் சிறுவர், சிறுமியருக்கான விளையாட்டு சாதனங்கள் அடங்கிய பூங்காக்கள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக பெண்களுக்குத் தையல் உள்ளிட்ட பல்வேறு சுயதொழில்களும் அளிக்கப்பட்டு வருகின்றன.

### நிரந்தரக் குடியிருப்புகள்

* பாதிக்கப்பட்ட ஒரு இலட்சத்து 30 ஆயிரம் குடும்பங்களுக்கு வீடு ஒன்று தலா ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் உறுதியான, அனைத்துப் பேரிடர்களையும் தாங்கிடக் கூடிய வகையில், வீடுகளின் கட்டுமான பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மேலும், அக்குடியிருப்புகளில் சாலை வசதி, குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி, விளையாட்டுப் பூங்கா, சுகாதாரம், மழை நீர் சேகரிப்பு உள்ளிட்ட அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன.

* பழுதடைந்த வீடுகளுக்கு நிவாரண உதவித் தொகையாக 75 ஆயிரம் ரூபாய்.

* முதற்கட்டமாக, பாதிக்கப்பட்ட இடங்களில் (In-situ) 6 ஆயிரத்து 307 வீடுகளும், மாற்று இடங்களில் 39 ஆயிரத்து 585 வீடுகளும், ஆக மொத்தம் 45 ஆயிரத்து 892 வீடுகள் கட்டத் திட்டமிடப் பட்டுள்ளது.

* தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக 30 ஆயிரத்து 415 நிரந்தரக் குடியிருப்புகள் அமைத்திட வரைவு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

* அவைகளில் 7 ஆயிரத்து 699 வீடுகளின் கட்டுமானப்பணி தொடங்கப்பட்டு 282 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

* 22 ஆயிரத்து 716 வீடுகளை அமைத்திடும் பொருட்டு, பூர்வாங்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

* மேலும், பாதிக்கப்பட்ட மக்களை மாற்று இடங்களில் குடியமர்த்திடும் பொருட்டு 45 ஆயிரத்து 514 கூடுதல் வீடுகளும் அரசால் கட்டப்பட உத்தேசிக்கப் பட்டுள்ளது.

* அனைத்து வீட்டு வசதி கட்டுமானப் பணிகளுக்காக 1,551 கோடியே 39 இலட்சம் ரூபாய் உலக வங்கியினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* ஒன்பது கடலோர மாவட்டங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீடுகள் மற்றும் இதர வசதிகள் அளித்திடும் பொருட்டு, நிலம் கையகப்படுத்திட 23 கோடியே 20 இலட்சம் ரூபாய் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

* தற்காலிகக் குடியிருப்புகளில் பழுதடைந்த கூரைகளை சீரமைக்கவும், கழிவறை, குளியலறை சமூகக் கூடங்கள் ஆகியவற்றினை அமைத்திட, குடியிருப்பு ஒன்றுக்கு 2 ஆயிரம் ரூபாய் வீதம் 5 கோடியே 46 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

* தற்காலிகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோகம், மின் விளக்கு வசதி ஏற்படுத்திட கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 70 இலட்சம் ரூபாயும், நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு ஒரு கோடி ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது.

* இறந்தோரின் குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 8 ஆயிரத்து 3 நபர்களில், இதுவரை 6 ஆயிரத்து 697 இறந்தோரின் குடும்பங்களுக்கு 66 கோடியே 97 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

* சுனாமி தாக்குதலால் கை, கால் மற்றும் கண்களை இழந்தோருக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் வீதமும், கடுமையான காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றோருக்கு தலா 5 ஆயிரம் ரூபாய் வீதமும், ஆகமொத்தம் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் வழங்கிட அரசால் ஆணையிடப்பட்டு, 2 ஆயிரத்து 937 நபர்களுக்கு, ஒரு கோடியே 47 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

* மேலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் கடுமையான காயம் அடைந்தோருக்கு நிவாரண உதவித் தொகை வழங்கிட 71 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

* வீடு மற்றும் உடமைகளை இழந்த ஒரு இலட்சத்து 50 ஆயிரம் குடும்பங்களுக்கு தலா 4 ஆயிரத்து 912 ரூபாய் வீதம் நிவாரண உதவித் தொகை வழங்கிட 73 கோடியே 68 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* நாளது வரையில், ஒரு இலட்சத்து 18 ஆயிரத்து 586 குடும்பங்களுக்கு 58 கோடியே 25 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

* கடலோரப் பகுதிகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் மற்றும் அவை தொடர்பான சிறு தொழில் புரியும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் குடும்பங்களுக்கு நிவாரண உதவித் தொகையாக தலா 2 ஆயிரத்து 912 ரூபாய் வீதம் வழங்கிட 45 கோடி ரூபாய் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

* மேலும், தினசரி வேலைவாய்ப்பு இழந்த மற்றும் கடலோரத்தில் வசித்து பாதிக்கப்பட்ட 24 ஆயிரத்து 764 மீனவர்களுக்கும் தலா 2 ஆயிரத்து 912 ரூபாய் நிவாரண நிதியுதவி வழங்கிட 7 கோடியே 43 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு நாளதுவரையில், ஒரு இலட்சத்து 76 ஆயிரத்து 484 மீனவர்களுக்கு 51 கோடியே 39 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

* நடமாடும் கடை உரிமையாளர்கள் மற்றும் தற்காலிகக் கடை உரிமையாளர்களுக்கு ஏற்பட்ட இழப்பீட்டிற்கு தலா 2 ஆயிரம் ரூபாயும், நிரந்தரக் கடை உரிமையாளர்களுக்கு ஏற்பட்ட இழப்பிற்கு தலா 5 ஆயிரம் ரூபாயும் நிவாரண உதவித் தொகை வழங்கிட 5 கோடி ரூபாய் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

* சுனாமியால் பாதிக்கப்பட்ட 3 இலட்சம் குடும்பங்களுக்கு பிப்ரவரித் திங்கள் 2005 முதல் மே திங்கள் 2005 வரை 30 கிலோ அரிசி மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களோடு, உதவித் தொகையாக ஆயிரம் ரூபாயினையும் மாதந்தோறும் வழங்கிட 122 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த 5 ஆயிரத்து 654 குடும்பங்களுக்கு இவ்வுதவிகளை வழங்கிடும் பொருட்டு, ஒரு கோடியே 73 இலட்சம் ரூபாயும், கன்னியாகுமரி மாவட்டத்தில் மேலும் 2 ஆயிரத்து 764 குடும்பங்களுக்கு ஒரு கோடியே 27 இலட்சம் ரூபாயும் வழங்கிட அரசு உத்தரவிட்டுள்ளது.

* சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் முதல் வகுப்பு தொடங்கி 12 ஆம் வகுப்பு வரையில், பயிலும், ஒரு இலட்சத்து 5 ஆயிரத்து 264 மாணவர்களுக்கு இலவசமாக பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

* மேலும் அம்மாணவர்களுக்கு தமிழ்நாட்டு பாடநூல் கழகம் மூலமாகவும், பாடப்புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்களையும் வழங்கிட ஒரு கோடியே 56 இலட்சம் ரூபாய் வழங்கி அரசு உத்தரவிட்டுள்ளது.

* 2 கோடியே 91 இலட்சம் ரூபாய் செலவில், 69 ஆயிரத்து 55 மாணவர்களுக்கும், 67 ஆயிரத்து 944 மாணவிகளுக்கும் தலா இரண்டு இணை சீருடைகள் வழங்கப்பட்டு பயனடைந்துள்ளனர்.

* சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சார்ந்த மாணவர்களின் கல்விக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணம் ஆகியவற்றை 1.1.2005 முதல் 2005–2006 கல்வியாண்டு வரையிலான கட்டணங்களை அரசே செலுத்தும் என்றும், மேலும் 1.3.2005 முதல் 2005–2006 கல்வியாண்டு வரையிலான தேர்வுக் கட்டணங்களிலிருந்தும் விலக்களித்திட ஆணையிடப்பட்டு 3 கோடியே 77 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது. மேலும், விழுப்புரம் மாவட்டத்திற்கு 20 இலட்சம் ரூபாயும், நெல்லை மாவட்டத்திற்கு 31 இலட்சம் ரூபாயும் வழங்கியுள்ளது.

* சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள 121 பள்ளிகளில் பயின்று பொதுத்தேர்வு எழுதவுள்ள மாணவர்களுக்கு தனியே பொதுத்தேர்வு நடத்தப்படும் என அரசு அறிவித்ததனடிப்படையில், பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குத் தனியே பொதுத் தேர்வு நடத்தப்பட்டது. அதன் பயனாக, இத்தேர்வு எழுதியவர்களின் தேர்ச்சி விகிதங்கள் மற்றைய பொதுத் தேர்வுகளின் விகிதங்களைக் காட்டிலும் அதிகமாக இருந்தது.

* பாதிப்படைந்த பொருட்களை நீக்குதல், இறந்தோரை அடக்கம் செய்தல் போன்ற எதிர்பாராத செலவினங்களுக்காக 6 கோடியே 35 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு 4 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

* சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடிழந்த குடும்பங்களுக்கு டிரங்குப் பெட்டி, ஸ்டவ் அடுப்பு, எவர்சில்வர் குடம் ஆகிய பொருட்கள் வழங்கிட 9 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதன் மூலம் ஒரு இலட்சத்து 4 ஆயிரத்து 835 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

* சுனாமியால் இறக்க நேரிட்டோரின் சடலங்களை மீட்கும் மகத்தான பணியினை மேற்கொண்ட, நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் பணியாற்றும் 4 ஆயிரத்து 799 துப்புரவுத் தொழிலாளர்களுக்கு ஊக்கத் தொகையாக தலா ரூ.2 ஆயிரத்து 500 வீதம் ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் வழங்கப் பட்டுள்ளது.

* பாதிக்கப்பட்ட மக்களைத் தற்காலிக குடியிருப்புக்கு மாற்றிடவும், நிவாரணப் பொருட்களை எடுத்துச் செல்லவும் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியருக்கு ஒரு கோடி ரூபாயும் சென்னை மாவட்ட ஆட்சியருக்கு 10 இலட்சம் ரூபாயும் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

* சுனாமியால் ஏற்பட்ட பயிர் சேதங்களுக்காக, ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒரு கோடியே 80 இலட்சத்து 13 ஆயிரத்து 930 ரூபாயில் 83 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் இழப்பீட்டு தொகையாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், சுனாமியால் பாதிக்கப்பட்ட 13 ஆயிரத்து 569.29 எக்டர் விவசாய நிலங்களில் படிந்துள்ள உப்பு மண்ணை சீர்படுத்தும் பொருட்டு, ரூ.16 கோடியே 96 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 3 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவிடப் பட்டுள்ளது. மேலும், பயிர் சேதங்களுக்காக நிவாரணம் வழங்கும் பொருட்டு, காஞ்சிபுரம் மாவட்டத்திற்குக் கூடுதல் ஒதுக்கீடாக 29 ஆயிரத்து 971 ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது.

* சுனாமியால் பாதிக்கப்பட்ட பழத் தோட்ட நிலங்களுக்கு ஒரு எக்டேருக்கு 12 ஆயிரத்து 500 ரூபாய் வீதம் 669.82 எக்டேர் நிலங்களின் நிவாரணப் பணிகளுக்காக 83 இலட்சத்து 72 ஆயிரம் ரூபாய் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

* சுனாமியால் பாதிக்கப்பட்ட மற்றும் உயிர் இழந்த கால்நடை இனங்களுக்காக நிவாரணம் வழங்க, 2 கோடியே 80 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு நாளதுவரையில், ஒரு கோடியே 75 இலட்சம் ரூபாய் நிவாரண உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

* கன்னியாகுமரி மாவட்டத்தில் கீழமணக்குடி மற்றும் மேலமணக்குடி ஆகிய கிராமங்களை இணைத்திடும் தற்காலிகப் பாலத்தின் கட்டுமானப் பணியானது, ஒரு கோடி 40 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. ஆழிக்கால், கொட்டில்பாடு மற்றும் மரமடை உள்ளிட்ட கிராமங்களில் ஒரு கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரைத் தடுப்புச் சுவரினை அமைத்திட 2 கோடி ரூபாயும், மேலமணக்குடி கிராமத்தில் கடற்கரை தடுப்புச் சுவர் அமைத்திட 19 இலட்சம் ரூபாயும், சின்னமுட்டம் படகுத் துறையில் ஏற்பட்டுள்ள பழுதுகளைச் சீரமைக்க 5 இலட்சம் ரூபாயும், கன்னியாகுமரி படகுத் துறையிலுள்ள பழுதுகளைச் சீரமைக்க ஒரு இலட்சத்து 89 ஆயிரம் ரூபாயும் ஒதுக்கப் பட்டுள்ளது. மீன் பிடிக்கும் பெரிய வலைகளை இழந்தோருக்கு நிவாரண உதவியாக, ஒரு கோடி ரூபாய் வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.

* நாகை, கடலூர், சென்னை, காஞ்சிபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில், சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறு தொழில் நிறுவனங்களைப் புதுப்பிக்கும் பொருட்டு 35 சதவீத மானிய நிதி உதவியாக 79 இலட்சம் ரூபாய் வழங்கிட அரசு உத்தரவிட்டுள்ளது.

* இராமநாதபுரம் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட உப்பளங்களின் கரைகளைச் சீரமைக்க 10 இலட்சம் ரூபாய் வழங்கிட அரசு உத்தரவிட்டுள்ளது.

* சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், பழுதடைந்த மின் கம்பங்கள், மின் கம்பிகள் மற்றும் மின் மாற்றிகள் ஆகியவற்றினை உடனடியாகச் சீரமைத்திட தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நிவாரண உதவியாக 10 கோடி ரூபாயும், தற்காலிகக் குடியிருப்புகளில், பழுதடைந்த குடிநீர் குழாய்கள், கைப் பம்புகள், குடிநீர் கிணறுகள், குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள், மின் மோட்டார்கள் ஆகியவற்றைச் சீரமைக்க தமிழ்நாடு குடிநீர் – வடிகால் வாரியத்திற்கு நிவாரண உதவியாக, 14 கோடியே 25 இலட்சம் ரூபாயும் மற்றும் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு நிவாரண உதவியாக 50 இலட்சம் ரூபாயும் வழங்கிட அரசு உத்தரவிட்டுள்ளது.

* நகரப் பகுதிகளில் நிவாரணப் பணியில் ஈடுபட்ட நகராட்சி நிருவாகத்துறை பணியாளர்கள், அத்தியாவசிய பொருட்கள் மற்றும் வாகனங்களுக்கான வாடகை உள்ளிட்ட பல்வேறு செலவினங்களுக்காக ஒரு கோடியே 2 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய் வழங்கிட அரசு உத்தரவிட்டுள்ளது.

* சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், பெற்றோரை இழந்த குழந்தைகளுக்காக கடலூர், நாகப்பட்டினம் மற்றும் நாகர்கோவில் ஆகிய மாவட்டங்களில் 3 மறுவாழ்வு இல்லங்கள் தொடங்கப்பட்டு, ஒவ்வொரு இல்லத்திலும் 100 குழந்தைகள் வரை தங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுவரையில் கடலூர் இல்லத்தில் 73 குழந்தைகளும், நாகப்பட்டினம் இல்லத்தில் 109 குழந்தைகளும் நாகர்கோவில் இல்லத்தில் 39 குழந்தைகளும் சேர்க்கப் பட்டுள்ளனர்.

* பாதிக்கப்பட்ட ஆதரவற்ற வளர் இளம் பெண்கள் அனைவரும் தமிழக அரசின் சார்பில் நடத்தப்படும் சேவை இல்லங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர். கன்னியாகுமரி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் 2 புதிய சேவை இல்லங்கள் தொடங்கப்பட்டு, நாகப்பட்டினம் மாவட்ட இல்லத்தில் 70 வளர் இளம்பெண்களும், கடலூர் மாவட்டத்தில் இயங்கிவரும் இல்லத்தில் 75 வளர் இளம் பெண்களும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் நலன் பேணிட, 41 இலட்சத்து 74 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

* ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் ஆதரவற்ற வளர் இளம் பெண்கள் ஆகிய ஒவ்வொருவரின் பெயரிலும் தலா 5 இலட்சம் ரூபாய் வைப்பு நிதியாக சேமித்திட அரசு உத்தரவிட்டுள்ளது.

* திருமணமாகாத 18 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற வளர் இளம் பெண்கள் சேவை மையங்களில் அனுமதிக்கப்பட்டு, வேலை வாய்ப்பு தொடர்பான பயிற்சிகளை வழங்கவும், அவர்களது பெயரில் தலா 3 இலட்சம் ரூபாய் வைப்பு நிதியாகவும் சேமித்திட தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

* கன்னியாகுமரி, காஞ்சிபுரம் மற்றும் நாகை ஆகிய மாவட்டங்களில் 19 குடும்பங்களில் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 19 இலட்சம் ரூபாய் வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது.

* 242 நபர்களுக்கு முதியோர் உதவித் தொகையும், 80 நபர்களுக்கு ஊனமுற்றோர் உதவித் தொகையும், 294 நபர்களுக்கு ஆதரவற்ற விதவை உதவித் தொகையும், 50 நபர்களுக்கு ஆதரவற்ற விவசாய கூலி உதவித் தொகை என மாத உதவித் தொகையினை விரிவாக்கி வழங்கிட அரசு உத்தரவிட்டுள்ளது.

* சாலைகளை மேம்படுத்த, மறு கட்டமைப்பு செய்ய மற்றும் புதிய சாலைகள் அமைத்திட மாநில நெடுஞ்சாலைத் துறைக்கு 64 கோடியே 15 இலட்சம் ரூபாய் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

* சென்னையில் கடற்கரைக்கு அருகாமையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா மற்றும் எம்.ஜி.ஆர் ஆகியோரின் நினைவகங்களை சீரமைக்கும் பொருட்டு 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து அரசு உத்தரவிட்டுள்ளது.

**சுனாமி மறுசீரமைப்புத் திட்டம்**

* உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் சுனாமி மறுசீரமைப்புத் திட்டம் (423 மில்லியன் டாலர்) ஓராயிரத்து 852 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 18.5.2005 அன்று தொடங்கி வைத்தார்கள்.

* 122 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாதிக்கப்பட்டோரின் வாழ்வாதாரங்களைச் சீரமைத்தல், 85 கோடியே 41 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாதிப்படைந்த பொதுக் கட்டடங்கள் மற்றும் கடற்கரையோர நிலம் மற்றும் காடுகளைச் சீரமைத்தல், 41 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தொழில்நுட்ப உதவி உள்ளிட்ட பல்வேறு பயிற்சியளித்தல், 52 கோடியே 56 இலட்சம் ரூபாய் செலவில் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் ஆகிய பணிகள் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட உள்ளன.

* ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன், சுனாமி மறுகட்டமைப்பு திட்டத்திற்கு 629 கோடியே 63 இலட்சம் ரூபாய் (143.75 மில்லியன் டாலர்) வழங்கி அனுமதியளித்துள்ளது.

* 218 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வாழ்வாதாரங்களை மேம்படுத்துதல், 39 கோடியே 86 இலட்சம் ரூபாய் செலவில் சாலைகள் மற்றும் பாலங்கள் அமைத்தல், 77 கோடியே 53 இலட்சம் ரூபாய் செலவில் துறைமுகங்களைச் சீரமைத்தல், 100 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர் வசதி மற்றும் பொது சுகாதார வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவை மேற்கொள்ளப்படும்.

* கிராமப்புற மற்றும் நகர்ப்புற கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் திட்டத்தில் 35 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் நகர்ப்புற கட்டமைப்பு வசதி, 143 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் கிராமப்புற கட்டமைப்பு வசதி, 4 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் திறன் மேம்பாடு மற்றும் நடைமுறைப் படுத்துதல் பணியும், திட்டமிடல் மற்றும் கட்டுமானப் பணிகளை மேற்பார்வையிடல் மற்றும் தொழில்நுட்ப அறிவுரை உள்ளிட்ட பணிகளுக்காக 9 கோடியே 68 இலட்சம் ரூபாய் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

**வறட்சி நிவாரணம்**

* தமிழகத்தில் 2000, 2001 மற்றும் 2002 ஆண்டுகளில் சராசரி மழைக்கும் குறைவான மழை பெய்ததால் குடிநீர் பிரச்சினையைச் சமாளிக்கும் பொருட்டு 2002–2003 ஆம் ஆண்டில் ரூ.16,810.60 இலட்சமும், 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.18,136.97 இலட்சமும் இயற்கை இடர்பாடு நிவாரண நிதி / தேசிய பேரிடர் எதிர்பாரா நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப் பட்டது. மேற்படி நிதி ஒதுக்கீட்டில் 2002–2003ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.10,120.61 இலட்சமும், பேரூராட்சிகளுக்கு ரூ.2,174.86 இலட்சமும், நகராட்சிகளுக்கு ரூ.1,338.26 இலட்சமும், மாநகராட்சிகளுக்கு ரூ.677.65 இலட்சமும் ஒதுக்கப்பட்டது. இதில் சென்னை நகருக்கு ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும், தமிழ்நாடு குடிநீர்–வடிகால் வாரியத்திற்கு ரூ.10 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இது தவிர, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் தொகுதி திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து ஊரக / நகரப் பகுதிகளில் குடிநீர் பணிகளுக்கு ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் ரூ.15 இலட்சம் ஒதுக்கீடு செய்ய அரசு உத்தரவிட்டது. இதற்காக ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

* 2003–2004ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.6,118.60 இலட்சமும், பேரூராட்சிகளுக்கு ரூ.2,381.86 இலட்சமும், நகராட்சிகளுக்கு ரூ.1,451.51 இலட்சமும், மாநகராட்சிகளுக்கு ரூ.8,185 இலட்சமும் ஒதுக்கப்பட்டது. இதில் சென்னை மாநகருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.80 கோடியும் அடங்கும்.

* 2002ஆம் ஆண்டில் கடுமையான வறட்சியினாலும், காவேரி டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் சாகுபடிக்கு மேட்டூர் அணையில் போதிய நீர் வரத்து இல்லாததாலும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புத் திட்டங்களை அறிவிக்கும் வகையில் 24.06.2002 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தஞ்சையில் ரூ.164.16 கோடிக்கான சிறப்பு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்த ஆணையிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

* தமிழ்நாட்டில் நிலவிய கடுமையான வறட்சியினைச் சமாளிக்க தமிழக அரசு 2002–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், விரிவான கோரிக்கை மனு மூலம் மத்திய அரசின் தேசிய பேரிடர் எதிர்பாரா நிதியிலிருந்து ரூ.720 கோடி நிவாரண நிதி கோரியது. மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பிரதமர் அவர்களுக்கு 23.10.2002 அன்று அனுப்பிய கடிதத்தில் ரூ.1,434 கோடி நிவாரணத் தொகையையும், வேலை வாய்ப்பினை உருவாக்கும் பொருட்டு 5.5 இலட்சம் மெட்ரிக் டன் கூடுதல் உணவு தானியங்களை ஒதுக்கீடு செய்யுமாறும் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார். இதனைத் தொடர்ந்து தேசிய பேரிடர் எதிர்பாரா நிதியிலிருந்து ரூ.228.20 கோடி நிதியினை தமிழகத்திற்கு வழங்க மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டது. பேரிடர் நிவாரண நிதியில் மீதமிருந்த தொகையினைக் கழித்த பிறகு, மத்திய அரசு ரூ.133.09 கோடி வழங்கியது. இத்தொகை வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பல்வேறு நிவாரண பணிகளுக்காக வழங்கப்பட்டுள்ளது.

* 2002 ஆம் ஆண்டு டெல்டா மாவட்டங்களில் நிலவிய வறட்சியைக் கருதி, தீபாவளிப் பண்டிகையை வறட்சியால் பாதிப்புக்குள்ளான விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர் குடும்பங்களும் மகிழ்ச்சியாகக் கொண்டாடும் வகையிலும், நிலமற்ற விவசாயத் தொழிலாளர் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ.210/– மதிப்புள்ள ஒரு பரிசுப்பை வழங்கப்பட்டது. இதற்கான மொத்த செலவு ரூ.21.28 கோடி ஆகும்.

* வறட்சியால் முழுதும் மற்றும் பகுதியாக பாதிக்கப்பட்ட 39 இலட்சம் தென்னை மரங்கள் வகையிலான நிவாரண உதவித் தொகையாக ரூ.30.50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் ரூ.21.65 கோடி ரூபாய் 20 மாவட்டங்களில் உள்ள பாதிப்படைந்த 1,05,553 தென்னை விவசாயிகளுக்கு நிவாரணமாக வழங்கப் பட்டுள்ளது.

* தமிழ்நாட்டில் 2002 ஆம் ஆண்டில் தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவமழை பொய்த்து விட்ட

காரணத்தால், வறட்சியால் பாதிக்கப்பட்டு வறிய நிலையில் உண்ண உணவின்றி வருந்தும் விவசாயத் தொழிலாளர் மற்றும் சிறு, குறு விவசாய குடும்பத்தினர் அனைவருக்கும் 15.1.2003 பொங்கல் தினம் முதல் கிராமப்புற சத்துணவு மையங்கள் மூலம் மதிய உணவு வழங்கப்பட்டது. 4.2.2003 அன்றைய நிலவரப்படி இத்திட்டத்தில் 14.03 இலட்சம் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் சிறு, குறு விவசாயிகள் பயனடைந்தனர்.

* வறட்சியால் பாதிக்கப்பட்ட சிறு / குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயக் கூலிகள் ஆகியோரின் குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 30 கிலோ இலவச அரிசி வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, சென்னை தவிர்த்து அனைத்து மாவட்டங்களிலும் மொத்தமாக 9.65 இலட்சம் குடும்பங்கள் பயனடைந்தன.

* தீவிர வறட்சியினைக் கருத்திற் கொண்டு, எஸ்.ஜி.ஆர்.ஒய். வேலைக்கு உணவு திட்டத்தின் கீழ், சென்னை நீங்கலாக தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியாக அரசு அறிவித்தது.

* சென்னை தவிர்த்து ஏனைய மாவட்டங்களில் 2002–2003ஆம் ஆண்டின் குறுவை மற்றும் சம்பா பருவங்களில் நிலவிய வறட்சி காரணமாக பயிர் செய்யப்பட்ட பரப்பில் 50 விழுக்காடு மற்றும் அதற்கு மேலும் பயிர் உற்பத்தி இழப்பை அடைந்த விவசாயிகளுக்கும் தங்கள் நிலங்களை பயிரிடாமல் விட்ட விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்குவதற்காக அரசு 323.56 கோடி அனுமதித்தது. இத் தொகையில் ரூ.240.07 கோடி ரூபாய் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு 28,93,268 விவசாயிகள் பயனடைந்தனர்.

* தமிழகத்தில் நிலவி வந்த தீவிர வறட்சியின் காரணமாக 2003 ஆம் ஆண்டு பார்வையிட வந்த மத்தியக் குழுவிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விரிவான வறட்சி நிவாரண கோரிக்கை மனு ஒன்றினை அளித்தார். அதில் வறட்சி நிவாரணத்திற்காக ரூ.2,094 கோடியும், வேலைக்கு உணவு திட்டத்தின் கீழ் 9 இலட்சம் மெட்ரிக் டன் கூடுதல் உணவு தானியங்களும் கோரப்பட்டன.

* 2003–2004இல் வறட்சியால் பாதிக்கப்பட்ட 28 மாவட்டங்களில் வேலை வாய்ப்பினை உருவாக்கும் பொருட்டு ரூ.341.92 கோடி ரூபாய்க்கான வேலைக்கு உணவு திட்டங்கள் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

* காவிரி டெல்டா மாவட்டங்களில் வறட்சியின் காரணமாக சம்பா நெல் சாகுபடி செய்யாமல் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் துயர் துடைக்கும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.217.09 கோடியிலான சிறப்பு நிவாரண திட்டங்களைச் செயல்படுத்த ஆணையிட்டார்.

* எஸ்.ஜி.ஆர்.ஒய். சிறப்புக் கூறு (வேலைக்கு உணவு) திட்டத்தின் கீழ் 2002–2003 ஆம் ஆண்டு 1.25 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியும், 2003–2004 ஆம் ஆண்டு பிப்ரவரி வரை 3.75 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியும், 2004ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் 3.04 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியும் இதுவரை தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டு வருகிறது. இரண்டாம் கட்டமாக 1.50 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியும் பண ஊதியமாக ரூ.77.25 கோடியும், வேலைக்கு உணவு திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டு நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டு வருகிறது.

* வறட்சியின் காரணமாக கால்நடைகளை வாய் மற்றும் பாத நோய்களிலிருந்து பாதுகாக்கவும், வறட்சியால் பாதிக்கப்பட்ட 22 மாவட்டங்களில் உள்ள 313 ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை பராமரிப்பு மையங்களில் குடிநீர் வசதி ஏற்படுத்தவும், பெரிய மற்றும் சிறிய கால்நடை தீவன உற்பத்தி பண்ணைகளின் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காகவும் மற்றும் கிராமங்களில் கால்நடை தீவன மேம்பாட்டிற்காகவும் ரூ.20 கோடி அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

* 6 மாவட்டங்களில் உள்ள கால்நடை பராமரிப்பு மையங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க ரூ.162 இலட்சமும், புதுக்கோட்டை மாவட்டத்தில் மீதமுள்ள கால்நடை பராமரிப்பு மையங்களில் குடிநீர் வசதி ஏற்படுத்த ரூ.16.60 இலட்சமும் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

* கால்நடை பராமரிப்புத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.20 கோடியில் தருமபுரி, ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களின் வனப்பகுதியில் உள்ள யானைகள் மற்றும் வன விலங்குகளின் குடிநீர் தேவைக்காக 79 ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பதற்காக ரூ.76.10 இலட்சம் மாற்று ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

* பாதிக்கப்பட்ட மல்பரி தோட்ட விவசாயிகளுக்கு நிவாரணமாக ரூ.75.92 இலட்சம் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

* காவிரி டெல்டா மாவட்டங்களில் செயற்கை மழை பொழிய வைக்க 20 செயற்கை மழை

மையங்களை அமைக்கும் பொருட்டு ரூ.2 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

✶ தமிழகத்தில் நிலவி வரும் கடுமையான வறட்சியினைச் சமாளிக்க மத்திய அரசின் தேசிய பேரிடர் எதிர்பாரா நிதியிலிருந்து ரூ.1,584 கோடி நிவாரண நிதியும், வேலை வாய்ப்பை உருவாக்கும் திட்டங்களுக்காக கூடுதலாக 10.8 இலட்சம் டன் உணவு தானியங்களும் வழங்கக் கோரும் விரிவான கோரிக்கை மனு ஒன்றினை 2004–ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தமிழக அரசு சமர்ப்பித்துள்ளது.

✶ பசலி ஆண்டு 1412 (1.7.2002 முதல் 30.6.2003) மற்றும் 1413 (1.7.2003 முதல் 30.6.2004) ஆகியவற்றுக்கான நிலவரியைத் தள்ளுபடி செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

✶ சம்பூர் கிராமின் ரோஜ்கர் யோஜனா சிறப்புக் கூறின் கீழ் வேலை வாய்ப்பை உருவாக்கும் பொருட்டும் குடிநீர் வழங்கு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டும், சென்னை நீங்கலாக மாநிலத்தின் அனைத்து 20 மாவட்டங்களையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியாக அரசு அறிவித்தது.

✶ 2003–2004 நிதி ஆண்டிற்கு, வறட்சி நிலையை சமாளிக்க 581.35 கோடியை இயற்கை இடர்பாடு நிவாரண நிதி / தேசிய பேரிடர் எதிர்பாரா நிதியிலிருந்து வெவ்வேறு அரசு ஆணைகள் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✶ மாநிலத்தில் நிலவி வரும் வறட்சியினை சமாளிக்கும் பொருட்டு, பேரிடர் நிவாரண நிதி / தேசிய பேரிடர் எதிர்பாரா நிதியிலிருந்து வறட்சி நிவாரணத் திட்டங்களுக்கு 2004–2005 நிதியாண்டில் ஏப்ரல் மாதத்திலிருந்து பிப்ரவரி 2005 வரை ரூ.22,887.90 இலட்சம். மேலும் சென்னை மாநகரில் குடிநீர் வழங்கும் பொருட்டு ரூ.207.90 கோடி வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது 2005–2006–ஆம் ஆண்டில் (அக்டோபர் வரை) ரூ.18.40 கோடி, மாவட்டங்களில் குடிநீர் தேவைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் ரூ.5.00 கோடி வேலூர் மாவட்டத்திற்கு மட்டும் தனியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வெள்ளம்**

✶ 2005 அக்டோபரில் வடகிழக்குப் பருவ மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளவும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கவும், சென்னை மற்றும் இதர சில மாவட்டங்களுக்கு ரூ.180 கோடி தொகையினை வழங்க அரசால் உத்தரவிடப்பட்டது. வெள்ளத்தால் இறந்துபோன 137 நபர்களுடைய வாரிசுதாரர்களுக்கு தலா ரூ.50,000 மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரணநிதியிலிருந்து வழங்கப்பட்டது.

✶ திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம், திருச்சி, திருவாரூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், தருமபுரி, கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, ஈரோடு, சேலம், வேலூர் மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களுக்கும் மற்றும் சென்னை மாநகராட்சிக்கும் நெடுஞ்சாலை, பாலங்கள், ஆற்றுப்பாசன ஆதாரம், ஏரிகள், அரசு கட்டடங்கள் போன்றவைகளைப் பழுதுபார்க்க ரூ.50 கோடி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

✶ இதைத்தவிர, கீழ்க்கண்ட சிறப்பு நிவாரணப் பணிக்காக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்க ரூ.130 கோடி அரசால் ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளது.

✶ முழுமையாக பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு (தலா ஒரு குடும்பத்திற்கு) ரூ. 2000, 10 கிலோ அரிசி, ஒரு சேலை, ஒரு வேட்டி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் மற்றும் பகுதியாக பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு (தலா ஒரு குடும்பத்திற்கு) ரூ.1000, 10 கிலோ அரிசி, ஒரு சேலை, ஒரு வேட்டி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவை வழங்கப்பட்டன.

✶ சென்னை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் வெள்ளத்தால் சூழப்பட்டு, குடும்ப அட்டை வைத்திருப்பவர்கள் அல்லது குடும்ப அட்டை வழங்க கணக்கெடுப்புப்பணி முடிக்கப்பட்ட குறைந்த வருவாய் உள்ள பகுதிகளில் உள்ள தெருக்களில் வசிக்கும் எல்லா குடும்பங்களுக்கும் ரூ.2000 (ஒரு குடும்பத்திற்கு), 10 கிலோ அரிசி, ஒரு சேலை, ஒரு வேட்டி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவை வழங்கப்பட்டன.

✶ கனமழை மற்றும் பெரு வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்களைக் கணக்கிட்டு மத்திய அரசிடமிருந்து தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.13,685 கோடி உதவித்தொகை வழங்கக்கோரும் கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

✶ ✶ ✶

# வேளாண்மைத்துறை



* 2001–2002 ஆம் ஆண்டு உணவுப்பயிர் 35.01 இலட்சம் எக்டர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டது. 2005–2006 ஆம் ஆண்டு உணவுப்பயிர் 39 இலட்சம் எக்டரில் சாகுபடி செய்யப்படும் என கணக்கிடப்பட்டுள்ளது.

* கடும் வெள்ள பாதிப்பு ஏற்பட்ட போதிலும், 2005–06ஆம் ஆண்டு உணவு தானிய உற்பத்தி 80 இலட்சம் மெ.டன்கள் என்ற அளவை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் 2000–01ஆம் ஆண்டு 9.38 இலட்சம் மெ.டன்கள் என்ற அளவில் இருந்த சிறுதானிய உற்பத்தி 13.5 இலட்சம் மெ.டன்கள் என்ற அளவை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்**

* மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், 2001–2002 ஆம் ஆண்டு துவக்கி வைக்கப்பட்டது. 2005 ஆம் ஆண்டு வரை 3,82,040 ஏக்கர் தரிசு நிலங்கள் 69 கோடி ரூபாய் செலவில் விளை நிலங்களாக மாற்றப்பட்டு 1,05,607 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

* தேசிய மானாவாரி நீர்ப்பிடிப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் (NWDRA) மூலம் 4,10,935 ஏக்கர் பரப்பில், மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு பணிகள் ரூ.69.22 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டு, 4,99,422 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

* தென்னையில் செம்பான் சிலந்தியை கட்டுப்படுத்த 2004–05 ஆம் ஆண்டு ரூ.9.5 கோடி செலவில் 141.426 இலட்சம் மரங்களுக்கு பயிர்பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு 67,782 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

* உலக தென்னை தினத்தை முன்னிட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2.9.2004க்கு பிறகு கிராமப்புறங்களில் பிறந்த பெண்குழந்தைகளுக்கு தலா 2 தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்படும் என அறிவித்தார்கள். இத்திட்டத்தில் 3,01,530 தென்னங்கன்றுகள் 1,50,765 பெண் குழந்தைகளின் குடும்பங்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

* மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த மாற்றுப்பயிர் சாகுபடி திட்டத்தின் கீழ் காட்டாமணக்கு சாகுபடி பரப்பை அதிகரிக்க தேவையான நல்ல தரமான காட்டாமணக்கு விதைகளை உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு வழங்க ரூ. 1.50 கோடி செலவில் முன்னோடி தாய் தோட்டம் 1,500 ஏக்கரில் அரசு பண்ணைகளில் அமைக்கப்படுகிறது.

* 2004 டிசம்பர் 26 அன்று ஏற்பட்ட சுனாமி பேரலையின் காரணமாக பாதிக்கப்பட்ட 8460 எக்டர் பயிருக்கு நிவாரணத்தொகை ரூ.1.80 கோடி உடனடியாக வழங்கப்பட்டது. மேலும் மீண்டும் சாகுபடிக்கு ஏற்ற நிலங்களாக மாற்ற காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகளுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ரூ.16.96 கோடி அளவில் நிவாரண உதவியும் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள 680 விவசாயிகளுக்கு தேசிய வேளாண் காப்பீடு திட்டம் மூலம் ரூ.1.16 கோடி காப்பீடு தொகையும் வழங்கப்பட்டுள்ளது.

* 2002 ஆம் ஆண்டு வறட்சியால் பாதிப்புக்குள்ளான 1,05,553 தென்னை விவசாயிகளுக்கு, ரூ.21.65 கோடி இழப்பீடாக அரசு வழங்கியுள்ளது.

* மக்காச்சோளம், பயறு மற்றும் எண்ணெய்வித்து பயிர்களின் சாகுபடியினை ஊக்குவிக்க, 5 ஆண்டுகளுக்கு ரூ.250 கோடி மதிப்பீட்டில் விளை பொருட்களை விவசாயிகளுக்கு இலாபகரமான விலையில், ''நாஃபெட்'' மூலம் கொள்முதல் செய்யும் வகையில் ஒரு ஒப்பந்தம் மாண்புமிகு முதலமைச்சர் முன்னிலையில் 29.9.2005 அன்று கையெழுத்திடப் பட்டுள்ளது.

* ஆண் தொழிலாளர்களுக்கு ஒருநாளைக்கு ரூ.54/– லிருந்து ரூ.80/– (6 மணி நேர வேலைக்கு) பெண் தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு ரூ.45/–லிருந்து ரூ.70/– (5 மணி நேர வேலைக்கு) என விவசாயத் தொழிலாளர்களுக்கு கணிசமாக தினக்கூலியை அரசு உயர்த்தியுள்ளது.

* தமிழகத்தில் உள்ள 86 இலட்சம் விவசாயத் தொழிலாளர்களும், 51 இலட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகளும் பயன்பெறும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உழவர் பாதுகாப்புத் திட்டம் 15.8.2005 முதல் செயல்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் உள்ள

18 வயது முதல் 65 வயது வரை உள்ள விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் சிறு / குறு விவசாயிகள் அனைவரும் இத்திட்டத்தில் உறுப்பினர்களாக சேர்க்கப்படுவார்கள். ஆண் / பெண் வேறுபாடின்றி இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையலாம். இத்திட்டத்தில் விபத்து, இறப்பு / ஈமக்கிரியை, திருமணம், கல்வி, மகப்பேறு / கருச்சிதைவு மற்றும் ஒய்வூதியம் ஆகியவற்றிற்கு நிதி உதவி வழங்கப்படும். இத்திட்டத்தில் உறுப்பினராக பதிவு செய்ய செலுத்த வேண்டிய பதிவுக்கட்டணம் ரூ.10/-ஐ அனைத்து விவசாயத் தொழிலாளர்களுக்கும் மற்றும் சிறு, குறு விவசாயிகளுக்கும் அரசே முழுமையாக வழங்கும்.

* தமிழ்நாடு பண்ணை மகளிர் வேளாண் வணிகம் மற்றும் விரிவாக்க திட்டத்தின் மூலம் 25,000 பண்ணை மகளிர் மற்றும் பண்ணை மகளிர் தொழிலாளர் குழுக்கள் அமைக்கப்படுகிறது. இத்திட்டம் ரூ.5.59 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

* கண்காட்சி ஊர்திகள் மற்றும் முன்பருவ முகாம்கள் மூலம் "தீவிர வேளாண் விரிவாக்கத் திட்டம்'' மாநிலத்தின் அனைத்து 17,244 கிராமங்களில் உள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில், 9.2.06 முதல் செயல்படுத்தப்படுகிறது.

* 2005-2006ஆம் ஆண்டு பருத்தி ஆலைகளுடன் இணைந்து 8,600 ஏக்கரில், ஒப்பந்த சாகுபடி முறையில் பருத்தி சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது.

* மானாவாரி பயிர்களின் மேம்பாட்டிற்காக பன்னாட்டு ஆராய்ச்சி மையம் (ICRISAT), மானாவாரி பகுதிகளுக்கான மத்திய ஆராய்ச்சி மையம் (CRIDA) மற்றும் வேளாண்மை பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் வேளாண் சார்ந்த துறைகளை இணைத்து மானாவாரி பண்ணை உயர்மட்ட மேம்பாட்டு குழு அமைக்கப்பட்டுள்ளது. மானாவாரி நில மேம்பாட்டு பணிகளில் முதல் கட்டமாக, மாதிரி மண் மற்றும் நீர்பாதுகாப்பு தொழில்நுட்ப செயல்விளக்க பூங்கா ஒன்று அண்ணா பண்ணையில் ரூ.98.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

* மாநில மானாவாரி பகுதிக்கான தலைமை நிலையம் புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைக்க திட்ட அறிக்கை மற்றும் செயல் திட்டம் தயாரிக்கப்படும்.

* 2005-2006 ஆம் ஆண்டு கரும்பு உற்பத்தி திறனை 50 சதவீத அளவிற்கு உயர்த்த சொட்டுநீர் பாசனத்துடன் கூடிய உர மேலாண்மை தொழில்நுட்பம் 375 எக்டர் பரப்பில் முன்னோடி செயல்விளக்க திட்டமாக ரூ.1.08 கோடி செலவில் மேற்கொள்ளப்படுகிறது.



* 2005-06 ஆம் ஆண்டில் 1.40 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ. 49 இலட்சம் செலவில் இலை வண்ண அட்டைகள் வழங்கப்படுகின்றன.

* விவசாயிகள் வேளாண் சம்பந்தப்பட்ட அனைத்து விவரங்களையும் அறிந்து கொள்ள ஏதுவாக 900 வேளாண் விரிவாக்க அலுவலர்கள் மற்றும் வேளாண் விஞ்ஞானிகளுக்கு செல்போன்கள் ரூ.61.50 இலட்சம் செலவில் 2005-2006 ஆம் ஆண்டில் வழங்கப்படும்.

* வேளாண்துறையில் பணிபுரியும் தொழில்நுட்ப அலுவலர்களின் தொழில்நுட்பத் திறனையும், மேல்நிலை அலுவலர்களின் மேலாண்மை திறனை மேம்படுத்தவும் ரூ.50 இலட்சம் செலவில் பயிற்சிகள் வழங்கப்படும்.

* வேளாண்மைத் துறைக்கு தனி இணைய தளம் ஏற்படுத்த ராசி திட்டத்துடன் இணைந்து செயல்பட ரூ.5 இலட்சம் செலவில் திட்டம் 2005-06ல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை

* 2005-06ஆம் ஆண்டில், தேனி, ஈரோடு, திருநெல்வேலி, வேலூர், மதுரை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய ஏழு மாவட்டங்களில் செயல்படுத்துவதற்காக அரசு ரூ. 992.95 இலட்சம் துல்லியப் பண்ணையத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்துள்ளது.

* 11 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் 500 ஏக்கரில் காட்டாமணக்கு மாதிரிப் பண்ணைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

* மேட்டுப்பாளையம் தமிழ்நாடு வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திடமிருந்து 600 கிலோ காட்டாமணக்கு விதைகள் பெறப்பட்டு, நடவு செய்யப்பட்டுள்ளன.

* தேயிலை வாரியமும், தோட்டக்கலைத் துறையும் இணைந்து, தேயிலை தர மேம்பாடு குறித்து,

விவசாயிகளுக்கு விளக்குவதற்காக கிராம அளவிலான விழிப்புணர்ச்சி முகாம்கள் ரூ.63 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன.

**நீலகிரி மாவட்டத்தில் மாற்றுப் பயிர் மேம்பாட்டுத் திட்டம்**

* நீலகிரி மாவட்டத்தில், 2003–04 மற்றும் 2004–05ஆம் ஆண்டுகளில் மாற்றுப் பயிர் திட்டத்தினை மேம்படுத்த ரூ.1 கோடி மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**மாநிலத் திட்டங்கள்**

**ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்**

* ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தில் 50 விழுக்காடு மானியத்தில் தரமான நடவுச் செடிகளும் உயர் விளைச்சல் ரக காய்கறி விதைகளும் விநியோகிக்கப்படுகின்றன. பழ வகையில் அதிகபட்சமாக ஒரு எக்டேர் பரப்பளவு காய்கறி மற்றும் மலர்கள் பயிரிட அதிகபட்சமாக ஒரு பயனாளிக்கு 0.5 எக்டேர் பரப்பளவு என்ற வீதத்தில் மானியம் வழங்கப்படுகிறது.

**அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்**

* 2,603 எக்டேர் பரப்பளவில், அமையப் பெற்றுள்ள 55 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் சுமார் 86 இலட்சம் தோட்டக்கலைச் செடிகள் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படுகின்றன.

**தோட்டக்கலைப் பயிற்சி மையம்**

* சென்னையில் அமைந்துள்ள மாதவரம், தோட்டக்கலைப் பயிற்சி மையத்தில் ஈராண்டுப் பட்டயப்படிப்பில் ஒவ்வொரு ஆண்டும் 40 மாணவர்கள் வரை சேர்க்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படுகின்றது. கிருஷ்ணகிரி மாவட்டம், தளியில் ஒரு புதிய தோட்டக்கலைப் பயிற்சி மையம் ரூ.10.16 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் துவக்கப் பட்டுள்ளது.

* ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பல்லாண்டு பழவகைப் பயிர்களைப் பயிரிடத் திட்டமிடப்பட்டு, ஒரு பழங்குடி விவசாயிக்கு அதிகபட்சமாக 0.40 எக்டேர் பரப்பிற்கு தரமான நடவுச் செடிகள் 75 விழுக்காடு மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

* மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 25 விழுக்காடு மானியத்தில், தோட்டக்கலைப் பயிர் சாகுபடியாளர்களுக்கு தரமான நடவுச் செடிகள், காய்கறி விதைகள், வேளாண் கருவிகள் மற்றும் இதர இடுபொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன.

* மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மலைச் சரிவுகளில் 10 விழுக்காட்டிற்குக் குறைவாக உள்ள இடங்களில் காய்கறிகள் சாகுபடிகளை மேற்கொள்ள விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர். இத்திட்டத்தால் நடவுச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு மானியத்தில் விநியோகிக்கப்படுகின்றன.

**தேசிய தோட்டக்கலை இயக்கம்**

* தமிழ்நாடு அரசு, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையினால் மத்திய அரசு நிதியுதவியுடன் 2005–06ஆம் நிதி ஆண்டிலிருந்து தேசிய தோட்டக்கலை இயக்கம் செயல்படுத்தப் படுகிறது. 2005–2006ஆம் நிதியாண்டில் ரூபாய் 75.72 கோடி செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

* இப்பல்கலைக்கழகத்தினைச் சார்ந்த ஏழு கல்லூரி வளாகங்களிலும், 32 ஆராய்ச்சி நிலையங்களிலும், 13 வேளாண் தொழில் நுட்ப பரிமாற்ற மையங்களிலும் ஆராய்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன. குறிப்பிடத்தக்க வகையில் இப்பல்கலைக்கழகம் இந்த 5 ஆண்டுகளில், 36 பயிர் ரகங்களை வெளியிட்டுள்ளது. இதில் 3 உயர் விளைச்சல் தரக்கூடிய நெல் ரகம், 11 சிறுதானியங்கள், 2 பயிர் வகைகள், 2 பருத்தி வகைகள், 1 எண்ணெய்வித்துப் பயிர், 2 தென்னை ரகங்கள், 2 பழ வகைகள் மற்றும் 3 காய்கறிப் பயிர்களும் அடங்கும்.

* ஏடிடீஆர் 47 மற்றும் 48 நெல், வீரிய ஒட்டு மக்காச்சோளம், கோ.எச்(எம்)4 காராமணி, கோ(சிபி)7, தென்னை–ஏஎல்ஆர் (சிஎன்)1 உள்ளிட்ட பயிர் ரகங்கள் மற்றும் பேராக் கலப்பை, நெல் உமி வெப்ப எரிவாயுக்கலன், நிலக்கடலை காய் பிரித்தெடுக்கும் கருவி உள்ளிட்ட பண்ணைக் கருவிகளை விவசாய பெருமக்கள் பயனடையும் வகையில் வெளியிட்டுள்ளது.

**வேளாண்மைக்கல்வி**

* நான்கு புதிய வேளாண் இளமறிவியல் கல்வி பாடத்திட்டங்கள் கடந்த 5 ஆண்டுகளில் தொடங்கப்பட்டுள்ளன. இளந்தொழில்நுட்பவியல் (வேளாண் உயிரியல் தொழில்நுட்பம்), இளந்தொழில்நுட்பவியல் (தோட்டக்கலை), இளந்தொழில்நுட்பவியல் (உணவு பதனஞ் செய்தல்),



இளந்தொழில்நுட்பவியல் (ஆற்றல் மற்றும் சூழ்நிலை பொறியியல்) ஆகிய பல்வேறு தொழில் ரீதியான வேளாண் பாடத்திட்டங்கள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 66 வளாகத் தேர்வுகள் நடத்தப்பட்டு 685 பட்டதாரிகளுக்கு பல்வேறு தனியார் நிறுவனங்களில் வேலை அளிக்கப் பட்டுள்ளது. 55 வேளாண் மாணவர்கள் பல்வேறு இந்திய ஆட்சிப் பணித்தேர்வுகளில் தேர்வு பெற்றுள்ளனர்.

**வேளாண்மைப் பொறியியல் துறை திட்டங்கள்**

* 2001–2002ஆம் ஆண்டில் ரூ.547.25 இலட்சம் செலவில் குந்தா, கீழ்பவானி மற்றும் வைகை நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 4,473 எக்டேர் நிலத்தில் பணிகள் செயல்படுத்தப்பட்டன. 2002–2003ஆம் ஆண்டில் ரூ.521.26 இலட்சம் செலவில் தேனி மாவட்டத்திலுள்ள வைகை நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 3,058 எக்டேர் நிலத்தில் பணிகள் செயல்படுத்தப் பட்டன. 2003–2004ஆம் ஆண்டில் ரூ.614.19 இலட்சம் செலவில் தேனி மாவட்டத்திலுள்ள வைகை நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் தருமபுரி மாவட்டத்திலுள்ள தென்பெண்ணை ஆறு நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் 3,812 எக்டேர் நிலத்தில் பணிகள் செயல்படுத்தப்பட்டன. 2004–2005ஆம் ஆண்டில் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள தென்பெண்ணை ஆற்று நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 5,965 எக்டேர் பரப்பில் ரூ.627.52 இலட்சம் செலவில் பணிகள் செயல் படுத்தப்பட்டன. 2005–06ஆம் ஆண்டில் ரூ. 800 இலட்சம் செலவில் தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் சேலம் மாவட்டங்களிலுள்ள தென்பெண்ணை மற்றும் மேட்டூர் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 6,006 எக்டேர் பரப்பில் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. டிசம்பர் 2005 முடிய 5,541 எக்டேர் பரப்பில் ரூ.462.098 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* களர் நில சீர்திருத்தத் திட்டத்தின் கீழ் 2003–2004ஆம் ஆண்டில் 929 எக்டேர் பரப்பில் களர் நில சீர்திருத்தப் பணிகள் ரூ.19.28 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன. 2004–2005ஆம் ஆண்டில் 1,655 எக்டேர் பரப்பில் களர் நில சீர்திருத்தப்பணிகள் ரூ.37.11 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.2005–2006ஆம் ஆண்டில் 1,546 எக்டேர் பரப்பில் களர் நிலங்களை ரூ.50 இலட்சம் செலவில் இத்திட்டத்தின்கீழ் சீரமைக்க பணிகள் நடைபெற்று வருகின்றன. டிசம்பர் 2005 முடிய 781.765 எக்டேர் பரப்பில் ரூ.12.065 இலட்சம் செலவில் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

* நுண்ணிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் 2001–2002 ஆம் ஆண்டில் ரூ.1,393.53 இலட்சம் செலவில் 18,570 எக்டேர் நிலத்தில் பணிகள் செயல்படுத்தப்பட்டன. 2002–2003ஆம் ஆண்டில் ரூ.1,177.04 இலட்சம் செலவில் 13,016 எக்டேர் நிலத்தில் பணிகள் செயல்படுத்தப்பட்டன. 2003–2004ஆம் ஆண்டில் ரூ.332.71 இலட்சம் செலவில் 6,527 எக்டேர் நிலத்தில் பணிகள் செயல்படுத்தப்பட்டன. 2004–2005 ஆம் ஆண்டில் 9,821 எக்டேர் பரப்பில் ரூ.460.87 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

* வேளாண்மையை இயந்திரமயமாக்குதல் திட்டத்தின் கீழ், 2002 முதல் 2005 வரை வேளாண் இயந்திரங்கள் உள்பட பல்வேறு கருவிகள் வாங்க விவசாயிகளுக்கு ரூ.543.88 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில் மானியத் தொகையாக ரூ.250/– இலட்சம் வழங்கிட திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. டிசம்பர் 2005 முடிய இத்திட்டத்தின்கீழ் ரூ.123.04 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

**பாசன நீர் மேலாண்மை – பாசனப் பகுதி மேம்பாட்டுத்திட்டம்**

* 2001–2002ஆம் ஆண்டில் ரூ.3,856.50 இலட்சம் செலவில் 41,864 எக்டேர் நிலத்தில் பணிகள் செயல்படுத்தப்பட்டன. 2002–2003 ஆம் ஆண்டில் ரூ.4,548.63 இலட்சம் செலவில் 1,31,652 எக்டேர் நிலத்தில் பணிகள் செயல்படுத்தப்பட்டன. 2003–2004ஆம் ஆண்டில் ரூ.4,670.14 இலட்சம் செலவில் 55,718 எக்டேர் நிலத்தில் பண்ணை மேம்பாட்டு பணிகளும் 1,10,398 எக்டேர் நிலத்தில் சுழற்சி முறை நீர்ப்பாசனப் பணிகளும் செயல்படுத்தப் பட்டன. மேலும், இத்திட்டத்தினை, கடனா–ராமாநதி, நம்பியார் ஆற்றுப்படுகை, பச்சையார் ஆற்றுப்படுகை, மணிமுத்தாறு பாசனப் பகுதி, ஆணைமடுவு பாசனப் பகுதி, சின்னார் நீர்தேக்கத் திட்டம், மருதாநதி ஆகிய

ஏழு திட்டப்பகுதிகளில் 2004–2005 முதல் செயல்படுத்திட அரசினால் ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் 25,897 எக்டேர் பரப்பில் பண்ணை மேம்பாட்டுத் திட்டப் பணிகளும் 53,317 எக்டேர் பரப்பில் சுழற்சி முறை நீர்ப்பாசனத் திட்டப்பணிகளும் ரூ.3,872.62 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டன. இதுவரை பதிவு செய்யப்பட்ட 698 விவசாயிகள் குழுக்களில் (Farmer's Council) 663 விவசாயிகள் குழுக்களுக்கு மார்ச் 2005 வரை மேலாண்மை மானியமாக ரூ.1,626.514 இலட்சம், உருவாக்கப்பட்ட கட்டுமான பணிகள் பராமரிப்புக்காக வழங்கப் பட்டுள்ளன. 2005–2006 ஆம் ஆண்டில் 20,115 எக்டேர் பரப்பில் பண்ணை மேம்பாட்டுத் திட்டப்பணிகளும் 25,735 எக்டேர் பரப்பில் சுழற்சி முறை நீர்ப்பாசனத் திட்டப்பணிகளும் ரூ.44.08 கோடி செலவில் செயல்படுத்த திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. டிசம்பர் 2005 முடிய 15,020 எக்டேர் பரப்பில் பண்ணை மேம்பாட்டுப் பணிகளும் 17,595 எக்டேர் பரப்பில் சுழற்சி முறை நீர்ப்பாசன பணிகளும் ரூ.2,719.922 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

**நுண்ணிய நீர்ப் பாசனத் திட்டம் (மாநில திட்டம்)**

* இத்திட்டத்தின்கீழ், 2003–2004ஆம் ஆண்டில் ரூ.877.92 இலட்சம் செலவில் 14,713 எக்டேர் பரப்பில் பணிகள் செயல்படுத்தப்பட்டன. 2004–2005ஆம் ஆண்டில் ரூ.357.63 இலட்சம் செலவில் 6,311 எக்டேர் பரப்பில் பணிகள் செயல்படுத்தப்பட்டன. 2005–06இல் இத்திட்டத்தின்கீழ், சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசன பணிகளை ரூ.3 கோடி மானிய உதவியுடன் செயல்படுத்திட அரசாணை பெறப்பட்டுள்ளது.

**பண்ணைக்குட்டைகள் அமைத்தல்**

* ஜூலை 2002 முதல் மார்ச் 2004 முடிய 8,833 பண்ணைக் குட்டைகள் ரூ.2,564.29 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டன. மேலும் 2,093 வறண்ட கிணறுகளை ரூ.264.37 இலட்சம் செலவில் புதுப்பித்து மழை நீர் சேகரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டத்தின்கீழ், மழைநீர் சேகரிப்புப் பணிகள் மேற்கொள்ள மேலும் முக்கியத்துவம் வழங்கப்படுவதுடன் 2005–06ஆம் ஆண்டில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் இத்திட்டத்தினை செயல்படுத்திட திட்டமிடப் பட்டுள்ளது. 2005–06ஆம் ஆண்டில் பண்ணைக் குட்டைகள், தடுப்பணைகள் மற்றும் வறண்ட கிணறுகளை சீரமைத்தல் போன்ற மழைநீர் சேகரிப்புப் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

* பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு பணிகள் 2001 முதல் 2005 வரை ரூ.3.71 கோடி செலவில் 2,702 எக்டேர் நிலத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளன. 2005–2006ஆம் ஆண்டில் 642 எக்டேர் பரப்பில் ரூ.92.90 இலட்சம் செலவில் இத்திட்டத்தின் கீழ் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. டிசம்பர் 2005 முடிய 594.22 எக்டேர் பரப்பில் ரூ.73.74 இலட்சம் செலவில் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

* மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தில் 2001 முதல் 2005 வரை ரூ.13.41 கோடி செலவில் 8,650 எக்டேர் நிலப்பரப்பில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயல்படுத்தப்பட்டன. 2005–2006ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் எட்டு மாவட்டங்களில் 741 எக்டேர் பரப்பில் ரூ.324.38 இலட்சம் செலவில் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. டிசம்பர் 2005 முடிய 637.38 எக்டேர் பரப்பில் ரூ.250.108 இலட்சம் செலவில் பணிகள் செயல்படுத்தப் பட்டுள்ளன.

* மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 2001 முதல் 2005 வரை மண்வளப் பாதுகாப்புப் பணிகள் ரூ.13.95 கோடி செலவில் மேற்கொள்ளப் பட்டுள்ளன. 2005–2006ஆம் ஆண்டில் ரூ.380 இலட்சம் செலவில், 592 எக்டேர் பரப்பில் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. டிசம்பர் 2005 முடிய 208 ஏக்கர் பரப்பில் ரூ.143.787 இலட்சம் செலவில் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

* குழாய் கிணறுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் 2001 முதல் 2005 வரை 20,562 குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. 2005–06ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 3,200 குழாய் கிணறுகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. டிசம்பர் 2005 முடிய 2,907 குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

* வேளாண்மைக்குப் பயன்படும் நீரேற்றப் பம்புகளின் திறனை மேம்படுத்தும் முன்னோடித் திட்டம் ரூ.21.38 இலட்சம் செலவில் செயல்படுத்திட 2003–2004இல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2003–2004ஆம் ஆண்டில் தேனி, கோயம்புத்தூர், விழுப்புரம் மாவட்டங்களில் மூன்று மின்பிரிவுகள் பகுதிகளில் இத்திட்டம் தொடங்கப்பட்டு, 34 விசை இறைப்பான்களின் உபயோகிக்கும் திறன் ரூ.11.12 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளது. 2004–2005ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் 15,309 விசை இறைப்பான்களை மேம்படுத்தும் வகையில் ரூ.919.32 இலட்சம் செலவில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. 2005–06ஆம் ஆண்டில் 16,154 பழைய பம்பு செட்டுகளுக்கு பதிலாக புதிய பம்பு செட்டுகள் வாங்க

விவசாயிகளுக்கு ரூ.10 கோடி மானியம் வழங்க திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. டிசம்பர் 2005 முடிய, 4,160 புதிய பம்பு செட்டுகள் வாங்க விவசாயிகளுக்கு ரூ.207.96 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

**வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை**

✶ தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தை உள்ளடக்கி அமைக்கப்பட்டுள்ள ஓசூர் கொய் மலர்களுக்கான ஏற்றுமதி மண்டத்திலிருந்து ரூ.16.70 கோடி மதிப்புடைய 435 மெட்ரிக் டன் கொய்மலர்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இந்த மண்டலத்தில் அனைத்துஅடிப்படை வசதிகளும் மார்ச் 2006க்குள் முடிக்கப்படும். மேலும், டான்ஃப்ளோரா மூலம் ரூ.10 கோடிக்கு மேல் கொய்மலர்கள் ஏற்றுமதி செய்யப்படும்.

✶ நீலகிரி மாவட்டம் ஊட்டியில் மலர்களுக்கென ரூ.15.89 கோடி மதிப்பீட்டில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் தனியார் உதவியுடன் அமைக்கப்பட்டு வருகிறது.

✶ மாம்பழத்திற்கென தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களை உள்ளடக்கி வேளாண் ஏற்றுமதி மண்டலம் ரூ.24.60 கோடி மதிப்பீட்டில் தனியார் துறை பங்கேற்புடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்றுமதி மண்டலத்திலிருந்து 2005 ஆண்டு மே மாதத்தில் 10 மெட்ரிக் டன் மாம்பழங்கள் சிங்கப்பூர் மற்றும் மலேசியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

✶ முந்திரிக்கென கடலூர் மாவட்டத்தில் ரூ.10.36 கோடி மதிப்பீட்டில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலமாக தனியார் துறை பங்கேற்புடன் வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்பட உள்ளது.

✶ விவசாயிகள், தொழில் முனைவோர் மற்றும் ஏற்றுமதியாளர்கள் பயன்பெறும் வகையில் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய உணவுப் பூங்கா ஒன்று திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் ரூ.13 கோடி மதிப்பீட்டில் 100 ஏக்கர் பரப்பளவில் ஏற்படுத்த, அரசாணை வெளியிடப்பட்டு உள்ளது. மத்திய அரசின் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைச்சகம் இவ்வுணவு பூங்காவிற்கு ரூ.3.25 கோடி மானியம் வழங்க ஒப்புதலளித்துள்ளது.

✶ அனைத்து வசதிகளுடன் கூடிய வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனை தகவல் மையங்கள் ரூ.45 இலட்சம் செலவில் 14 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

✶ அறுவடைக்குப்பின் ஏற்படும் தானிய இழப்பினை குறைக்கும் பொருட்டு, ரூ.9 கோடி செலவில் 2002–2003 முதல் 2004–2005 முடிய 450 உலர்களங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 2005–2006ஆம் நிதியாண்டில் 200 கிராமங்களில் ரூ.4 கோடி செலவில் உலர்களம் கட்டும் பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

✶ தமிழ்நாட்டில் மஞ்சள் பயிருக்கென ஈரோட்டிற்கு அருகில் நசியனூர் மற்றும் வில்லரசம்பட்டி ஆகிய கிராமங்களில் ரூ.36.32 கோடி செலவில் மஞ்சள் வணிக வளாகம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மஞ்சள் வணிக வளாக கட்டுமானப் பணியை தொடங்குவதற்கு ஏதுவாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 27.10.2005 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

✶ 2001–2002 முதல் 2004–2005 முடிய 29 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் ரூ.16.77 கோடி செலவில் நவீன உள் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

✶ பருத்தி தொழில் நுட்ப குழுமம், மும்பை உதவியுடன் ரூ.919 இலட்சம் செலவில் பருத்தி அதிக அளவில் வரத்து வரக்கூடிய விழுப்புரம், திருப்பூர், அன்னூர் மற்றும் மூலனூர் ஆகிய நான்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பருத்தி விற்பனைக்கென சிறப்பு உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

✶ ஈரோடு மாவட்டம் கவுந்தம்பாடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் வெல்லத்திற்கென நவீன உள்கட்டமைப்பு வசதிகள் ரூ.101.60 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

✶ 2001–2002 முதல் 31.12.2005 வரையில் ரூ.404.99 கோடி மதிப்புள்ள 347 உணவு பதப்படுத்துதல் சம்மந்தப்பட்ட திட்டங்களுக்காக ரூ.65.22 கோடி மானியம் வழங்க பரிந்துரைக்கப்பட்டு, அவற்றில் ரூ.26.99 கோடி மானியம் 129 திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

☐ ☐ ☐

# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

### சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

✶ சீர்மிகு சென்னை என்ற இலக்கினை மையமாகக் கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி கடந்த ஆண்டுகளில் (2001 முதல் 2005 வரை) கீழ்காணும் அரிய திட்டங்களை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் செயல்படுத்தியுள்ளது.

✶ கோயம்பேடு சென்னைப் புறநகர் பேருந்து நிலையம்

✶ ஒப்பந்த ஊர்தி பேருந்து நிலையம்

✶ மெரினா கடற்கரை அழகுபடுத்தும் திட்டம்

✶ காய்கறி கழிவினை மூலப் பொருளாக்கி மின் உற்பத்தி செய்யும் திட்டம்.

✶ திரளான துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் இரண்டாம் நிலை

✶ உள் கட்டமைப்பு வசதிகள் முதலீட்டுத் திட்டம்

✶ வரன்முறைப்படுத்தும் திட்டம்

✶ தகவல் தொழில்நுட்ப மற்றும் உயிரி தொழில்நுட்ப கட்டடங்கள் கட்ட கட்டுப்பாட்டு விதிகளில் தளர்வு அளித்தல்.


✶ சமுதாயம் சார்ந்த சுற்றுச் சூழல் மேம்பாட்டுத் திட்டம்

✶ வெளிவட்ட சாலை அமைத்தல்

✶ மேற்காணும் திட்டங்களுடன் வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் உயிரி தொழில்நுட்பத் துறை ஆகியவற்றை ஊக்குவிக்கும் முகமாக, வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளில் சிலவற்றைத் தளர்த்தி மேற்காணும் அபிவிருத்தி திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதனால் தகவல் தொழில்நுட்பம் மற்றும் உயிரிதொழில்நுட்பத் துறை சென்னைப் பெருநகர்ப் பகுதிகளில் வளர்ச்சியடைவதுடன் எதிர்காலத்தில் இப்பகுதிகளில் மிகப் பெரிய பொருளாதார வளர்ச்சி ஏற்படவும் நல்ல வாய்ப்பாக அமையும்.

### சென்னைப் புறநகர் பேருந்து நிலையம்

✶ கோயம்பேட்டில் சுமார் 37 ஏக்கர் பரப்பளவில் ரூ.103 கோடி திட்ட மதிப்பீட்டில், நவீன வசதிகளுடன் கூடிய, ஆசியாவிலேயே பெரிய பேருந்து நிலையமான கோயம்பேடு சென்னைப் புறநகர் பேருந்து நிலையம், 18.11.2002 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, சிறப்பாக இயங்கி வருகிறது. சென்னை விமான நிலையத்திற்கு இணையாக இப்பேருந்து நிலையம் பராமரிக்கப்பட்டு வருவதுடன், பொதுமக்களால் பெரிதும் பாராட்டப்பட்டு வருகிறது.




### ஒப்பந்த ஊர்தி பேருந்து நிலையம்

✶ கோயம்பேட்டில், புறநகர் பேருந்து நிலையத்தின் அருகிலேயே முதன் முதலாக தனியார் ஒப்பந்த ஊர்திகளுக்கான பேருந்து முனையம் ரூ.3 கோடி செலவில் சுமார் 4.5 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

### மெரினா கடற்கரை அழகுபடுத்தும் திட்டம்

✶ உலகிலேயே மிக நீளமான, அழகான இரண்டாவது கடற்கரையாக விளங்கும் அண்ணா நினைவிடம் முதல் கலங்கரை விளக்கம் முடிய உள்ள 3.2 கி.மீ. தொலைவிற்கு மெரினா கடற்கரையின் மணற்பாங்கானப் பகுதிகளை இயந்திரத்தின் மூலம் 36 இலட்சம் செலவில் சுத்தம் செய்யப்பட்டு அழகு படுத்தப்பட்டு வருகின்றது.

### காய்கறிக் கழிவினை மூலப் பொருளாக்கி மின் உற்பத்தி செய்யும் திட்டம்

✶ காய்கறிக் கழிவுகளை மூலப் பொருளாக்கி, அதன் மூலம் மின்சாரம் தயாரிக்கும் மாதிரித் திட்டப் பணிகள், ரூ.6 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம், நாளொன்றிற்கு சுமார் 200 கிலோவாட் மின்சக்தி உற்பத்தி செய்யப்படுவதுடன் 3 டன் இயற்கை உரக்கட்டிகளும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

### திரளான துரித இரயில் போக்குவரத்துத் திட்டம்

✶ இரண்டாவது நிலையில், திருமயிலை தொடங்கி வேளச்சேரி வரையிலான 11.17 கி.மீ. நீளத்திற்கு திட்டப்பணிகளை மேற்கொள்ள மத்திய, மாநில அரசுகள் 33:67 என்ற விகிதாச்சாரத்தில் இணைந்து செயல்பட ஒப்புக் கொண்டுள்ளன. இத்திட்டத்திற்கான திருத்திய மதிப்பீடு ரூ.706.35 கோடியாகும். இரண்டாம் நிலையில் 3.317 கி.மீ. தொலைவிற்கு தரையிலும் 7.85 கி.மீ. தொலைவிற்கு பாலத்தின் மீதும் செல்வதாகவும் அமைய உள்ளது.

### உள்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டுத் திட்டம்

* ✶ சென்னைப் பெருநகரத்தில் வீட்டுவசதி, சாலை வசதி, குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வசதி ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு 2004–2005 ஆம் நிதியாண்டில் ஓராண்டுத் திட்டத்தின் கீழ், ரூ.2007.12 கோடி முதலீடு செய்ய திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

### வரன் முறைப்படுத்தும் திட்டம்

* ✶ 31.03.2002 க்கு முன் அனுமதியின்றி மற்றும் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டடங்களை ஒழுங்குபடுத்தும் திட்டத்தை, தமிழ்நாடு அரசு அறிவித்தது. இதுவரை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் வரன்முறைப்படுத்தும் கட்டணமாக ரூ. 220 கோடி வசூல் செய்து, வட்டித் தொகை ரூ.8.19 கோடியுடன் ரூ.228.19 கோடியினை அரசின் தொகு கணக்கில் செலுத்தியுள்ளது.

### தொழில்நுட்ப மற்றும் உயிரி தொழில்நுட்பக் கட்டடங்கள் கட்ட கட்டுப்பாடு விதிகள் தளர்வு

* ✶ தகவல் தொழில்நுட்பக் கட்டடங்கள் (பையோடெக் பில்டிங்) போன்றவற்றிற்கு வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளில், சில அம்சங்களைத் தளர்த்தி, குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் திட்ட அனுமதியை இக்குழுமம் வழங்கி வருகின்றது.
* ✶ உள்ளாட்சி அமைப்புப் பகுதிகளின் சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்காக, அந்தப் பகுதி மக்களின் பங்களிப்பு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் ஆதரவுடன் ''சுற்றுச் சூழல் மேம்பாட்டுத் திட்டம்'' செயலாக்கப்படுகின்றது.

### வெளிவட்டச் சாலை

* ✶ சென்னை மாநகரின் வடக்கு எல்லையான மீஞ்சூரையும், தெற்கிலுள்ள வண்டலூரையும் இணைக்கும் வெளிவட்டச் சாலை 62.0 கி.மீ. நீளத்தில் அமைய உள்ளது. இதற்கான நில எடுப்புப் பணி துரிதமாக நடைபெற்று வருகின்றது.
* ✶ சென்னைப் பெருநகரப் பகுதியில் உள்ள எலியட்ஸ், திருவான்மியூர், கொட்டிவாக்கம், பாலவாக்கம் மற்றும் நீலாங்கரை கடற்கரைகளில் சுத்தப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம்

* ✶ சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்திற்காக 2003–2004ஆம் நிதியாண்டில் ரூ.1,321.54 கோடியும், 2004–2005 இல் ரூ. 957.66 கோடியும் திட்டப் பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளது. செப்டம்பர் 2005 வரை ரூ. 266.79 கோடி திட்டப் பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்

### நகர குடிசைப்பகுதிவாழ் மக்களுக்கான வீட்டுவசதி

* ✶ தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 2001 முதல் 2005 வரையிலான காலத்தில், 29,312 அடுக்குமாடிக் குடியிருப்புகளும், தனி வீடுகளும் மற்றும் 9,060 கல்நார் கூரை வீடுகளும் நகர்ப்புற குடிசைப்பகுதி வாழ் ஏழை மக்களுக்காக அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகளுக்காகவும் இதர பணிகளுக்காவும் ரூ. 299.50 கோடி செலவிடப்பட்டுள்ளது.
* ✶ சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் 1,624 குடியிருப்புகள் ரூ.14.35 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டப் பகுதியில் கடந்த 5 ஆண்டுகளில் கட்டப்பட்ட அனைத்து 6,500 குடியிருப்புகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டு விட்டன.
* ✶ வெள்ளக்குறைப்பு பணிகள் திட்டத்தின் கீழ் சென்னை, ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதி –2இல் ரூ. 26.16 கோடி செலவில் 3,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

### குடிசைப்பகுதி மாற்று திட்டம்

* ✶ சென்னை மாநகரில் குடிசைப்பகுதிகளில் வாழும் குடிசைவாழ் குடும்பங்களுக்கு, அவர்கள் வாழ்ந்த இடங்களிலேயே ரூ. 10.16 கோடி செலவில் 1,284 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
* ✶ தமிழ்நாடு சிறப்பு நல நிதி – அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல் பணியின் கீழ் வாசுகி நகர் பகுதியில் ரூ.77 இலட்சம் செலவில் 64 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

## சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டம்

### சென்னை செம்மஞ்சேரி பகுதியில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்தல்

* ✶ சென்னை நகரில் செல்லும் முக்கிய நதிகளின் கரைகளில் தூர்வாரும் பணிகளுக்கு இடையூறாக வாழும் குடும்பங்களை மறு குடியமர்வு செய்யும் திட்டத்தின் ஒரு பகுதியாக ரூ. 60.43 கோடி செலவில் 5,164 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

### தீப்பிடிக்காத வீடுகள் அமைத்தல்

* ✶ சென்னை நகரில், நல்ல சுற்றுச்சுவர்களுடன் கூடிய கல்நார் ஒட்டுக் கூரைகள் 9,060 குடும்பங்களுக்கு ரூ. 15.63 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. திருச்சி நகரிலும் 760 குடும்பங்களுக்கு தீப்பிடிக்காத கல்நார் ஒட்டுக் கூரை வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகளுக்காக ரூ.1.13 கோடி செலவிடப் பட்டுள்ளது.

* வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் நகர குடிசைப்பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு ரூ.41.22 கோடி செலவில் கான்கிரீட் தளம், கூரைத் தளம் மற்றும் செங்கல் சுவர்களுடன் 13,521 தனி வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

* தமிழகத்தின் மூன்று பெருநகரங்களான சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய நகரங்களில் ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடிசைவாழ் குடும்பங்களை மறு குடியமர்வு செய்ய மைய அரசின் 11வது நிதிக் குழுவின் சிறப்பு மானிய உதவியினைக் கொண்டு ரூ.49 கோடி செலவில் 5,172 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

* சென்னை மாநகரில் கட்டப்பட்டுள்ள சுமார் 30,514 பழைய அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு ரூ.15.74 கோடி செலவில் கட்டமைப்புப் பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

* சென்னை மாநகரில் தண்ணீர் பற்றாக்குறையால் அவதியுறும் அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப் பகுதிகளில் ரூ.0.76 கோடி செலவில் 100 ஆழ்துளைக் குழாய் கிணறுகள் அமைக்கப் பட்டுள்ளன.

* வாரியத்தால் நிறைவேற்றப்பட்ட அனைத்து 144 அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகளிலும் ரூ. 23.61 இலட்சம் செலவில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

* குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நகர குடிசைப்பகுதிகளை மக்கள் வாழ்வதற்கேற்ப நல்ல உறைவிடமாக மேம்படுத்தும் பொருட்டு ரூ.5.25 கோடி செலவில் 30,124 குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

* வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டத்தின் கீழ் 1,513 குடிசைப்பகுதி வாழ் இளைஞர்கள் ரூ.36.40 இலட்சம் செலவில் பயனடைந்துள்ளனர்.

* குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு திட்டத்தின் கீழ், 8–14 வயதுடைய 3,975 குழந்தைத் தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர். இதற்காக அரசு மானியம் ரூ.35 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.

* மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.195 இலட்சம் செலவில் 19,306 குடிசைப் பகுதி வாழ் மகளிருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

✶

# சுற்றுச்சூழல் மேம்பாட்டுத்துறை



* தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 31.10.2005 வரை ரூ.2,070.80 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதில் மே 2001 முதல் 31.10.2005 முடிய செலவான தொகை ரூ.968.52 இலட்சம் ஆகும். பணிகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளன. பவானியில் பணிகள் நடைபெற்று வருகின்றன. பள்ளிப் பாளையம் நகரத்தில் கழிவுநீர்க் கால்வாயில் செல்லும் கழிவுநீரைத் தடுத்துச் சுத்திகரிப்பு நிலையத்திற்கு எடுத்துச் செல்லவும் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்காகவும் கருத்துரு மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

* தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தை 7 நகரங்களில் புதிதாகச் செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டு, 31.10.2005 வரை ரூ.29,176.10 இலட்சம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், பொதுப்பணித் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் செலவிடப்பட்டுள்ளது.

* சென்னைப் பெருநகர நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.49,152 இலட்சம். கடந்த 2001 ஆம் ஆண்டு தொடங்கப் பட்ட இத்திட்டத்தின் கீழ் ரூ.34,350.94 இலட்சம் செலவிடப்பட்டு, குழாய் பதிக்கும் பணியில் 100 சதவிகிதம் முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் 99.5 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

* தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், உதகை ஏரியின் பணிகளுக்காக பிப்ரவரி 2005 வரை மத்திய அரசிடம் பெற்ற ரூ.171 இலட்சத்தில்

ரூ.162.90 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. நுண்ணுயிர்த் தொழில் நுட்பத்தின் மூலம் உதகை ஏரி தற்போது தூய்மையாகியுள்ளது. கொடைக்கானல் ஏரி பணிகளுக்காகப் பெறப்பட்ட ரூ.200 இலட்சத்தில் ரூ.33.70 இலட்சத்திற்குரிய பணிகள் தற்போது முடிக்கப்பட்டுள்ளன.

* தூத்துக்குடி பகுதியில் வளர்ச்சிப் பணிகளின் தாக்கத்தை தாங்கும் அளவினை அறிவியல் பூர்வமாக மதிப்பீடு செய்யும் பணி ரூ.5.22 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் புதுதில்லி நீர் மற்றும் எரிசக்தி ஆலோசனை சேவை மையம் (வாப்கோஸ்) நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

* சென்ற நான்கு ஆண்டுகளில் 20க்கும் மேற்பட்ட சுற்றுச்சூழல் மேலாண்மை குறித்த கருத்தரங்கங்கள், கருத்துப்பட்டறைகள் நடத்தப்பட்டன. அனைத்து சுற்றுச்சூழல் விழிப்புணர்வுப் பணிகளுக்காக ரூ.53 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

* மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தேசிய பசுமைப் படை திட்டத்தில், தமிழ்நாட்டில் மாவட்டத்திற்கு 150 பள்ளிகள் வீதம் 29 மாவட்டங்களில், 4,350 பள்ளிகளில் தேசிய பசுமைப்படை தொடங்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென ரூ.128.84 இலட்சம் மைய அரசிடமிருந்து பெறப்பட்டு செலவிடப்பட்டுள்ளது.

* சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மேலாண்மை மற்றும் ஆராய்ச்சிக் கட்டுரை ஆகிய பிரிவுகளில் சுற்றுச்சூழல் துறையால் நடத்தப்படும் உலக சுற்றுச்சூழல் தின விழாவின்போது பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை 52 நிறுவனங்கள்/வல்லுநர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

* உலக வங்கியின் உதவியுடன் மத்திய அரசு செயல்படுத்தி வரும் சுற்றுச்சூழல் மேலாண்மைத் திறனை ஊக்குவிக்கும் தொழில்நுட்ப உதவித்திட்டத்தின் கீழ் (EMCB - TAP Environmental Management Capacity Building Technical Assistance Project) சுற்றுச்சூழல் தகவல் மையம் (ENVIS - Environmental Information System) ஒன்று தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல் துறையில் அமைக்கப்பட்டுள்ளது.

* சுற்றுச்சூழல் தகவல் மையத்தினால் 05.12.2002 அன்று உயிர்ப்பன்மயம் குறித்த ஒரு கருத்துருப் பட்டறையும், 27.08.2003 அன்று நதிநீர்ப் பாதுகாப்பு குறித்த கருத்துருப்பட்டறையும் நடத்தப்பட்டன. இத்திட்டத்திற்கென மொத்தம் ரூ.12.44 இலட்சம் மத்திய அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மார்ச் 2005 வரை ரூ.10.92 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

* மத்திய அரசு நிதி உதவியுடன் ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்கும் மாநில சுற்றுச்சூழல் நிலை அறிக்கை தயாரிக்கும் பணி இத்துறையால் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கென மத்திய அரசு ரூ.12.50 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

* கோவில் குன்றுகளில் சூழல் மறுசீரமைப்பு முன்னோடித் திட்டத்தின் கீழ், வேலூர் மாவட்டத்திலுள்ள சோளிங்கர் கோவிலின் குன்றுப் பகுதிகளை ரூ.9 இலட்சம் திட்டச் செலவில் பசுமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தரிசாகவும், தரங்குன்றியும் உள்ள மலைப்பகுதியில் மரக் கன்றுகள் நடும் பணி வனத்துறை மூலம் ரூ.6 இலட்சம் செலவில் நிறைவு பெற்றுள்ளது. மறுசீரமைப்புப் பணிகளின் தொடர்ச்சியாக கோவில் அடிவாரத்திலுள்ள திருக்குளம் தூர்வாரப்பட்டு ரூ.6 இலட்சம் செலவில் புதிய நந்தவனம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ரூ.1.80 இலட்சம் விடுவிக்கப்பட்டு முன்னோடி வேலைகள் முடிவுற்றன.

* மாநிலத்தில் பல்வேறு பல்கலைக்கழகங்களின் வல்லுநர்களிடமிருந்து சுற்றுச்சூழல் ஆராய்ச்சிக் கருத்துருக்கள் பெறப்பட்டு, வல்லுநர் குழு மூலம் மூன்று சிறந்த கருத்துகள் தேர்வு செய்யப்பட்டன. அரசு ஒதுக்கிய ரூ.10 இலட்சத்தில் சென்னை, அண்ணா பல்கலைக்கழகம், கோவை பாரதியார் பல்கலைக்கழகம் மற்றும் சென்னை சி பி ஆர் சுற்றுச்சூழல் கல்வி மையம் ஆகியவற்றில் ரூ.9.78 இலட்சம் செலவில் ஆராய்ச்சித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* கழிவுக் காகிதங்களிலிருந்து, பயனுள்ள காகிதம் தயாரித்து, காகிதப் பை போன்ற பொருட்கள் தயாரிக்கும் பணிகளை ஊக்குவிக்க ரூ.12 இலட்சம் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு ஐந்து மாநகராட்சிகளில் தலா ஒரு தன்னார்வ நிறுவனம் மூலம் சுயஉதவிக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டு இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

* தூய்மை மிகு பசுமைத் தெருக்கள் – முன்னோடித் திட்டம், சென்னை

மாவட்டத்திலுள்ள 40 பள்ளிகளில் சுற்றுச்சூழல் மன்றம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினைச் சிறப்பாக செயல்படுத்த பள்ளி ஒன்றிற்கு ரூ.18,750 வீதம் 40 பள்ளிகளுக்கு ரூ.7.50 இலட்சம் வழங்கப்பட்டு வெற்றிகரமாக செயல்படுத்தப் பட்டு வருகிறது.

* நிலங்கள் பாலைவனமாவதைத் தடுக்கும் முன்னோடித் திட்டம் 100 எக்டேர் பரப்பளவில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப் படவுள்ளது. முதல் கட்டமாக ரூ.3 இலட்சம் விடுவிக்கப்பட்டு முன்னோடி வேலைகள் முடிவுற்றுள்ளன.

* சூழலுக்குகந்த நகரமாக திருவண்ணாமலை நகரினை மாற்றுவதற்குரிய சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் நடப்பு நிதியாண்டில் ரூ.10 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தினை மேற்கொள்ள தகுதியான நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதற்கட்டப் பணிகளை மேற்கொள்ள ரூ.1.99 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

* பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் குன்றில் ரூ.10 இலட்சம் செலவில் பல்வேறு சூழல் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். ரூ.3 இலட்சம் விடுவிக்கப்பட்டு முன்னோடி வேலைகள் முடிவுற்றுள்ளன.

* சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பள்ளிக்கரணை ஏரி, சிட்லபாக்கம் ஏரி, பெரிய ஏரி, திருநீர்மலை, பால்கேணி – பல்லாவரம், மடிப்பாக்கம் ஏரி ஆகிய ஐந்து ஏரிகளின் ஒருங்கிணைந்த சூழல் சீரமைப்புக்காக ரூ.10 இலட்சம் செலவில் ஒரு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## தமிழ்நாடு வனத்துறை

* ஜப்பான் நாட்டின் கூட்டுறவு நிதி வங்கியின் உதவியுடன் கூடிய தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை – I, கூட்டு வன நிருவாகக் கொள்கையுடன் கூடிய நீர்ப்பிரிமுகடு அடிப்படையில் செயல்படுத்தப்பட்டது.

* இத்திட்டத்தின்கீழ், 1.80 இலட்சம் எக்டேர் பரப்பளவில் தரங்குன்றிய காடுகள் மற்றும் இதர நிலங்களில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

* 1.70 இலட்சம் உறுப்பினர்களுடன் கூடிய 568 கிராம வனக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன.

* மாற்று வேலைவாய்ப்பு மூலம் 90,000 க்கும் மேற்பட்ட வனங்களைச் சார்ந்து வாழ்வோர் மற்றும் ஏழை எளியோர் பயனடைந்துள்ளனர்.

* அனைத்து திட்ட கிராமங்களிலும் 1,825 சுயஉதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு 28,000 மகளிர் பயனடைந்துள்ளனர்.

* வனத்தைச் சார்ந்து வாழ்வோர் மற்றும் ஏழை, எளிய பிரிவினர் பயன்பெறும் வகையில் சிறுகடனாக ரூ. 22 கோடி வழங்கப் பட்டுள்ளது.

* மழை நீரைச் சேகரிக்கும் பொருட்டு 620.30 மில்லியன் கன அடிக்கு மேலான கொள்ளளவு கொண்ட 12,728 தடுப்பணைகள் மற்றும் 1,361 கசிவு நீர்க்குட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

* 253.74 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

* தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் IIன் கீழ், 2005–2006ஆம் ஆண்டில் வனங்களை ஒட்டி அமைந்துள்ள கிராமங்கள், பழங்குடியின கிராமங்கள் என 135 கிராமங்களை கூட்டு வன நிருவாகத்தின் கீழ் கொணரும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இது மட்டுமின்றி 29,250 எக்டேர் பரப்பிலுள்ள தரங்குன்றிய காடுகள் மற்றும் பிற வன நிலங்களில் ரூ.85.89 கோடி மதிப்பீட்டில் பணிகள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

* தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தினை சிறப்பாக நடைமுறைப்படுத்திய வேலூர் வனக்கோட்டத்திற்கும், தருமபுரி மாவட்டம் உங்கட்டி கிராம வனக்குழுவிற்கும், திருநெல்வேலி மாவட்டம், புளியங்குடி கிராமம் திரு. என்.எஸ்.ஏ. வேலு முதலியார் அவர்களுக்கும் ரூ.50,000 ரொக்கப்பணம் மற்றும் பதக்கத்தினைக் கொண்ட "இந்திரா பிரியதர்ஷினி விருக்ஷமித்ரா" விருது வழங்கப்பட்டது.

* 2001–2004 வரையிலான 4 ஆண்டுகளில், 2,727.750 மெட்ரிக் டன் சந்தன மரக்கட்டைகளை ஏலம் விட்டதன் மூலம் ரூ.273.07 கோடி வருவாய் ஈட்டப்பட்டது.

* 2005–2006ஆம் ஆண்டில் ஜூலை 2005 வரை 232.320 மெட்ரிக் டன் சந்தன மர ஏல விற்பனை மூலம் ரூ.59.43 கோடி வருவாய் ஈட்டப்பட்டது.

* வனக்குற்றவாளி வீரப்பன் கொல்லப்பட்ட தினத்தில் அதிரடிப்படையினருடன் பணிபுரிந்த வனப் பணியாளர்கள் அனைவருக்கும் தலா ரூ.1 இலட்சமும், 42 வனப்பணியாளர்களுக்கு பதவி உயர்வும் வழங்கப்பட்டது. மேலும், பணியின்

ஈடுபட்ட 51 நபர்களுக்கு ரூ.51 இலட்சமும், உயிரிழந்த 3 வனப்பணியாளர்களின் குடும்ப வாரிசுகளுக்கு ரூ.29.20 இலட்சமும் வழங்கப்பட்டது.

* வீரப்பனைப் பிடிப்பதற்கு உறுதுணையாகப் பணியாற்றிய வன அலுவலர்கள் 50 பேருக்கு வெகுமதியாக ரூ.29 இலட்சமும், பங்கு கொண்டதற்குப் பதக்கமும், 4 வனப் பணியாளர்களுக்குப் பதவி உயர்வு மற்றும் 10 ஓட்டுநர்களுக்கு அவர்கள் பெறும் ஊதிய விகிதத்தில் ஒருபடி மேல்நிலையில் ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு வழங்கிட ஆணையிடப்பட்டது.

* சுனாமி தாக்குதலால் பாதிப்பு ஏற்படாமல் இருக்க தமிழக கடலோரப்பகுதிகளில் கடலோரத் தொடர்தடுப்புத் தோட்டங்கள் மற்றும் சதுப்பு நிலக்காடுகளில் மறு சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள ரூ.10 கோடி மதிப்பீட்டிலான கருத்துருவிற்கு, உலக வங்கி ஒப்புதலளித்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

* வன விரிவாக்க மையத்தின் மூலம் கடந்த 5 ஆண்டுகளில் 297 எக்டேர் நிலப்பரப்பில் 664 முன்னோடி விவசாயிகளின் நிலங்களில் நெல்லி, கட்டு புளி, சவுக்கு, மூங்கில், பலா, வேம்பு, சொர்க்கமரம் போன்ற செடிகளைக் கொண்டு செயல் விளக்கத் தோட்டங்கள் அமைக்கப் பட்டுள்ளன. வன விரிவாக்க மையங்களின் மூலம் 3,500 விவசாயிகளுக்கு மரங்கள் வளர்ப்பது குறித்த தொழில் நுட்பப்பயிற்சியும், சாசர் முறையில் மழைநீர் சேகரித்து மரங்கள் வளர்ப்பது போன்ற பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

* 1,910 விவசாயிகளுக்குப் பயிற்சி முகாம்கள் மூலமாக மண்புழு உரம் தயாரிப்பது, மரக்கன்றுகள் உற்பத்தி செய்தல் ஆகிய பயிற்சிகள் வழங்கப்பட்டன.

* ஈரோடு, தருமபுரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட வனப்பகுதிகளில் உள்ள யானைகள் மற்றும் இதர வன உயிரினங்களின் நீர்த்தேவைக்கு நிலத்தடி நீரைப் பயன்படுத்த 79 ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் நீர்த்தொட்டிகள் ரூ. 76.10 இலட்சத்தில் அமைக்கப்பட்டு வருகின்றன.

* கோயில் யானை மற்றும் தனியாருக்குச் சொந்தமான யானைகளுக்கு முதுமலையில், 2003 –2004ஆம் ஆண்டுகளில் புத்துணர்வு முகாம் நடத்தப்பட்டு நூற்றுக்கணக்கான யானைகள் பயனடைந்தன.

* 2005–2006ஆம் ஆண்டிலும் 21.11.2005 முதல் 7.1.2006 முடிய யானைகள் புத்துணர்வு முகாம் நடத்தப்பட்டுள்ளது.

* முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ், 2001–2002ஆம் ஆண்டு ரூ.102.986 இலட்சம் செலவில் ஐதராபாத்தில் உள்ள விண்வெளித்துறையின் கீழ் இயங்கும் தேசிய தொலையுணர்வு மையத்தின் தொழில் நுட்ப ஆலோசனையுடன் அமைக்கப்பட்ட நவீன மயமான புவித்தகவல் தரவு மையம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 05.06.2003 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

* செயற்கைக்கோள் தொலையுணர்வு படம் மற்றும் புவித்தகவல் முறை ஆகியவற்றைப் பயன்படுத்தி தமிழ்நாட்டில் உள்ள எல்லா மாவட்டங்களுக்கும் "மின்னணு வன வரைபடத்தொகுதி" செய்து முடிக்கப்பட்டுள்ளது. இவ்வன வரைபடத் தொகுதி தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு காப்பு வனங்களின் "வனமூடிய பரப்பினை." குறித்த தகவல்களை (அடர்த்திக்காடுகள் மற்றும் திறந்த காடுகள்) அளிக்கிறது.

* மாநிலத்தில் எல்லா மட்டங்களிலும் புவியியல் தகவல் முறை பயன்பட ஏதுவாக 26 வன ஆட்சிக் கோட்டங்களில் புவியியல் தகவல் முறை வசதி உருவாக்கப்பட்டுள்ளது.

* தொலையுணர்வு மற்றும் புவியியல் தகவல் முறைக்கான அடிப்படைப் பயிற்சி மாநிலத்திலுள்ள பல்வேறு வகையான வனத்துறைப் பணியாளர்களுக்கு இத்தகவல் தரவு மையத்தில் அளிக்கப்படுகிறது. இதுவரை 619 பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

* 2005–2006ஆம் ஆண்டில் புவித்தகவல் தரவு மையத்தின் வளர்ச்சி மற்றும் இதர பணிகளுக்கு ரூ.127.17 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

* ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 200 இலட்சத்திற்கும் மேல் நாற்றுகள் எழுப்பப்பட்டுள்ளன. இதன் பயனாக வன சமூக மற்றும் பண்ணை நிலங்களில் எழுப்பப்பட்ட நாற்றுகளின் உயிர்த் தன்மையும், வளர்ச்சி விகிதமும் அதிகப்படுத்தப்பட்டுள்ளது.

* 50,888 எக்டேர் நிலப்பரப்பிலுள்ள பண்ணைத் தோட்டங்கள் மற்றும் சமூக வனத்தோட்டங்களில் விற்பனை செய்தல் மூலம் அரசுக்கு ரூ.31 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

* 2005–2006ஆம் ஆண்டில் சமூக வனத் தோட்டங்களின் முதல் ஏலம் 18.11.2005இல் நடத்தப்பட்டது. இது வரை மதுரை, விருதுநகர், தூத்துக்குடி சமூக வனத்தோட்டங்கள் ஏலம் விடப்பட்டு ஏலத்தொகையாக ரூ.2.09 கோடி பெறப்பட்டது.

* தஞ்சை மாவட்டத்தில் முதிர்ந்த தேக்கு மரங்களை வெட்டி விற்பனை செய்ததின் மூலம் ரூ.18.77 கோடி அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. 2005–2006ஆம் ஆண்டில் ரூ.4.45 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

* 2,439 அரசுக் கட்டடங்களில் ரூ.96 இலட்சம் செலவில் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

## ரப்பர் கழகம்

* அரசின் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டதன் விளைவாக 2002 – 2003 ஆம் நிதியாண்டில் ரூ.59.27 இலட்சம் நிகர இலாபம் ஈட்டப்பட்டது.

* பல வருடங்களாக விற்பனை செய்யப்படாமலிருந்த முதிர்ந்த ரப்பர் மரங்கள் 2003–2004 இல் விற்பனை செய்யப்பட்டு ரூ.238.13 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டது. இந்த வருவாயிலிருந்து ரூ.113.30 இலட்சம் அரசுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

* 2002–2003 மற்றும் 2003 – 2004 ஆம் ஆண்டுகளில் முறையே 34.30 எக்டேர் மற்றும் 103.60 எக்டேர் பரப்பளவில் அதிக முதிர்வடைந்த ரப்பர் மரங்களை வெட்டிவிட்டு உயரிய வீரிய ரக ரப்பர் மரக் கன்றுகள் மறுநடவு செய்யப்பட்டன. மேலும் ரூ.117.44 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

* இந்த வருடம் தொழிலாளர்களின் 1.4.2002 முதல் 31.7.2004 வரையுள்ள பஞ்சப்படி கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலித்து செப்டம்பர் 2004இல் ரூ.70 இலட்சம் செலவில் தொழிலாளர்களுக்கு நிலுவைத் தொகையுடன் பஞ்சப்படி வழங்க அரசு ஆணை பிறப்பித்தது.

* 1.12.2004 முதல் தொழிலாளர்களுக்கு அரசு புதிய சம்பளம் வழங்க முடிவு செய்து ஆணை பிறப்பித்து, அதன் அடிப்படையில் 1.4.2005இல் புதிய சம்பள ஒப்பந்தம் கையெழுத்தானது.

* 2004–2005ஆம் ஆண்டும், 95.2 எக்டேர் பரப்பளவில் அதிக முதிர்ச்சியடைந்த ரப்பர் மரங்களை வெட்டிவிட்டு மறுஉற்பத்தித் தோட்டம் எழுப்பப்பட்டுள்ளது. இதுபோன்று 2005 – 2006ஆம் ஆண்டிற்கும் ரப்பர் மறு உற்பத்தித் தோட்டம் எழுப்பத் தேவையான ரப்பர் நாற்றங்கால் கீரிப்பாறையில் எழுப்பப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

* ஜெனீவாவை தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகின்ற உலகளாவிய நிறுவனமான, The International Organisation for standerdization and Certification என்ற அமைப்பு அரசு ரப்பர் கழகத்தின் தரத்திற்கும், செயல்பாட்டிற்கும் அரசு ரப்பர் கழகத்திற்கு ISO 9001 : 2000 என்ற பன்னாட்டு தரச்சான்றிதழினை வழங்கியுள்ளது. இச்சான்றைப் பெற்றதன் மூலம் அரசு ரப்பர் கழகம் உலகளாவிய அங்கீகாரமும், தரம் வாய்ந்த ரப்பர் பால், ரப்பர் ஷீட்டுகள் மற்றும் ரப்பர் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதற்கான ஒப்புதலையும் பெற்று பெருமை அடைந்துள்ளது.

## தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் (டேன்டீ)

* முற்றிலுமாக பதியன் ரக (குளோனல்) தேயிலைத் தோட்டங்களை மட்டுமே உருவாக்கி, இந்திய மற்றும் உலக தேயிலைத் தொழில் வரலாற்றில் "டேன்டீ" (தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம்) ஒரு தன்னிகரில்லா இடத்தைப் பெற்றுள்ளது.

* 4,431.192 எக்டேர் பரப்பில் தேயிலைத் தோட்டங்களை உருவாக்கி, நீலகிரியில் முதல் இடத்திலும், தமிழ்நாட்டில் இரண்டாவது இடத்திலும் டேன்டீ இடம் பெறுகிறது.

* தற்பொழுது இக்கழகம், நீலகிரி மற்றும் கோவை மாவட்டத்தில் 4,432 எக்டேர் பரப்பில் தேயிலைத் தோட்டங்களையும், எட்டு தொழிற் சாலைகளையும் கொண்டு, 6,500 நிரந்தரத் தொழிலாளர்கள் மற்றும் 4,000 தற்காலிகத் தொழிலாளர்களுக்கு வேலையளித்து வருகிறது.

* நான்கு வருடங்களுக்குப் பின் 2004 – 2005இல் ரூ.522.97 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. போனஸ் சட்டப்படி 2004–2005ஆம் ஆண்டுக்கான 20 சதவிகிதம் மற்றும் 10 சதவிகிதம் போனஸ், தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு மொத்தம் ரூ.332 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

* இக்கழகத்திலுள்ள டைகர்ஹில் தேயிலைத் தொழிற்சாலைக்குத் தர உயர்வின் காரணமாக கடந்த ஜூலை 2004 ஆம் ஆண்டு, உலகத் தரச்சான்று ISO 9001 : 2000 அளிக்கப்பட்டது.

* 2005 – 2006 ஆம் ஆண்டில் குயின்சோலை மற்றும் ரயான் தேயிலைத் தொழிற்சாலைகளும் மேற்படி தரச் சான்று பெற, தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

□ □ □

# சிறுதொழில்கள் துறை

**புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்**

* வேளாண்சார் மற்றும் உணவு பதப்படுத்தல் சிறு தொழில்களை மாநிலத்தில் உள்ள 385 வட்டாரங்களிலும் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

* 31.12.2005 வரை 1,305 திட்டங்கள் ரூ.820.04 கோடி மதிப்பீட்டில் தொடங்குவதற்கு மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. இதில் 382 திட்டங்களுக்கு நிதி உதவிகள் ஏற்பாடு செய்து தரப்பட்டுள்ளன. மேலும் 175 திட்டங்கள் தொழில் முனைவோரது சொந்த முதலீட்டில் செயல்பட உள்ளன. ரூ. 212.19 கோடி முதலீட்டில் 330 தொழிற் சாலைகள் உற்பத்தியை தொடங்கி உள்ளன.

* இதன் மூலம் 7,981 மகளிர் உட்பட 11,697 கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

* இணைய தளம் மூலம் தற்காலிகச் சான்றிதழ் வழங்கும் முறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 12.9.2002 அன்று தொடங்கப் பட்டது.

* 269 அங்கீகரிக்கப்பட்ட கணினி மையங்கள் மூலம் 31.12.2005 வரை 1,12,544 தற்காலிகச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

* சிறு தொழில் நிறுவனங்களுக்கு மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் நிலுவையிலுள்ள மானிய விண்ணப்பங்களுக்கு 31.12.2005 வரை முதலீட்டு மானியம் ரூ.2,655.63 இலட்சம் வழங்கப்பட்டன.

* குறைந்தழுத்த மின்மானியமாக ரூ.2,813.82 இலட்சமும் மற்றும் மின்னாக்கி மானியமாக ரூ. 98.42 இலட்சமும் வழங்கப்பட்டது.

* இந்திய தர நிர்ணய சான்றிதழ் பெறுதல், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றிற்கு வழங்கப்படும் கடன் மீது பின்முனை வட்டி மானியமாக 3 சதவீதம் வழங்கப்படுகிறது.

* 31.12.2005 வரை 1,17,075 சிறு தொழில் நிறுவனங்களுக்கு சிறு தொழில் நிரந்தர பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ரூ.3,222.68 கோடி நிரந்தர முதலீடு செய்யப்பட்டு, 6,69,718 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

* பொருள் கொள்முதல் செய்த நிறுவனங் களிடமிருந்து வரவேண்டிய நிலுவைத் தொகை ரூ. 1,932.12 இலட்சம் பெற்றுத் தர, சிறு தொழில் நிறுவனங்களுக்கு உதவி புரிந்துள்ளது.

* பிரதமரின் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், 31.12.2005 முடிய 1,11,263 நபர்களுக்கு வங்கிகள் மூலமாக கடன் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அவர்களுள் 83,459 நபர்களுக்கு பணம் வழங்கப்பட்டுள்ளது.

* ஒற்றைச் சாளர முறையில் 31.12.2005 வரை 5,191 மனுக்கள் பெறப்பட்டு, 4,997 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டன.

* 31.12.2005 முடிய ரூ.102.58 கோடி மதிப்பிலான 13,391 மெட்ரிக் டன் "ஊட்டி டீ'' விற்பனை செய்யப்பட்டுள்ளது.

* "டீ செர்வ்'' என்ற புதிய ஏல மையம் 31.12.2005 வரை 36,434 மெட்ரிக் டன் தேயிலைத்தூளை ஏலம் மூலம் விற்பனை செய்துள்ளது.

* இன்கோசர்வ் குன்னூர் நிறுவனம் ரூ. 108.78 கோடி மதிப்பிலான தேயிலைத்தூளை விற்பனை செய்துள்ளது.

* 31.12.2005 முடிய ரூ. 872.60 கோடி அளவில் ஜவ்வரிசி மற்றும் மாவுப் பொருட்கள் சேகோ சர்வ், சேலம் சங்கத்தால் விற்பனை செய்யப் பட்டுள்ளன.

* 2004–2005ஆம் ஆண்டில் ரூ.1.49 கோடி தணிக்கை செய்யப்பட்ட நிகர ஆதாயம் ஈட்டியுள்ளது.

* நடப்பு ஆண்டில் 31.12.2005 முடிய ரூ. 1.99 கோடி உத்தேச ஆதாயம் ஈட்டியுள்ளது.

* தாய்கோ வங்கி 2003–2004 முதல் ரூ. 2.05 கோடி நிகர ஆதாயத்தில் செயல்பட்டு வருகிறது.

* 2004–2005ம் ஆண்டில் இதன் நிகர ஆதாயம் ரூ. 2.43 கோடியாகும்.

* 31.12.2005 வரை ரூ.236.19 கோடி வைப்பு நிதியாகத் திரட்டப்பட்டு ரூ. 186.02 கோடி அளவுக்கு கடன்கள் மற்றும் முன்பணம் தாய்கோ வங்கியில் வழங்கப்பட்டுள்ளன.

* கடமலைக்குண்டு – மைலாடும் பாறை – வருசநாடு முந்திரி பதப்படுத்தும் தொழிற் கூட்டுறவுச் சங்கம் ரூ. 16 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ளது.

* 303 உறுப்பினர்கள் பயனடைந்து உள்ளனர். 31.12.2005 முடிய 31.140 மெட்ரிக் டன் முந்திரிக் கொட்டைகளை இச்சங்கம் கொள்முதல் செய்துள்ளது.

* கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள 5,000 தொழிலாளர்கள் பயனடையும் வகையில் சந்தை வளர்ச்சி நிதியுதவியாக தமிழக அரசால் ரூ. 1.93 கோடி வழங்கப்பட்டுள்ளது.

* 31.12.2005 முடிய கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் ரூ. 4,586 இலட்சத்திற்கு கயிறு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

* தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி) கடந்த ஏப்ரல், 2005 முதல் டிசம்பர், 2005 வரையில் ரூ. 45.38 கோடி மதிப்பிலான பொருட்களை விற்பனை செய்துள்ளது.

* டான்சி நிறுவனத்தின் இரு கைப்பம்புகள் உற்பத்தி செய்யும் தொழிலகங்கள், மூன்று டான்சி எஃகு அறைகலன் தொழிற்சாலைகள், (இராஜபாளையம், வேலூர் மற்றும் பழனியில் இயங்கி வருபவை) மற்றும் தமிழ்நாடு வர்ணங்கள் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனம் (டாப்பாப்) ஆகியவைகள் ISO : 9001 : 2000 தரச்சான்றிதழைப் பெற்று பெருமை படைத்துள்ளன.

## தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்

* சிட்கோ, 41 தொழிற்பேட்டைகளில் 4,972 மனைகளை மேம்படுத்தி உள்ளது. இது தவிர 4,222 தொழிற்கூடங்கள் மற்றும் 200 முதல் 600 சதுர அடி வரை அளவுகள் கொண்ட 1,841 குறுந்தொழிற்கூடங்களைக் கட்டியுள்ளது.

* சிட்கோ முதன் முதலில் இந்தியாவில் மகளிருக்கென தனியான தொழில் பூங்காக்களை உருவாக்கியது. திருமுடிவாக்கத்தில் மகளிருக்கென சிறிய தொழில்மனைகளை ரூ. 54 இலட்சத்தில் உருவாக்கியுள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்பின்படி தமிழகத்தில் 5 மகளிர் தொழிற் பூங்காக்களை பெண்களுக்காகவே உருவாக்க சிட்கோ முயற்சி எடுத்து வருகிறது. இதன்படி, இரண்டு மகளிர் தொழில் பூங்காக்கள் சென்னைக்கு அருகில் உள்ள திருமுல்லை வாயிலிலும், திருச்சி மாவட்டத்தில் உள்ள வாழவந்தான் கோட்டையிலும் உருவாக்கப் பட்டுள்ளன.

* 2004–2005ஆம் ஆண்டில் சிட்கோ நிறுவனம் சென்னையில் விச்சூர் தொழிற் பேட்டை பகுதி – 2 லும், கும்பகோணம் தொழிற்பேட்டை பகுதி – 2லும், மற்றும் சேலத்திலுள்ள கருப்பூர் மகளிர் தொழிற் பூங்காவிலும், மொத்தம் 316 மேம்படுத்தப்பட்ட மனைகளை ரூ. 338 இலட்சத்தில் உருவாக்கி உள்ளது.

* சிட்கோ நிறுவனம் 2005–2006ஆம் ஆண்டில் மீதமுள்ள இரண்டு பெண்கள் தொழிற் பூங்காக்களை மதுரையிலுள்ள கப்பலூரிலும், கோயம்புத்தூரிலுள்ள குறிச்சியிலும் ஏற்படுத்தும். மேலும் திருமுல்லைவாயிலில் பெண்களுக்கென சின்னஞ்சிறிய தொழில்மனைகளையும், மயிலாடுதுறை, விண்ணமங்கலம், கும்பக்குடி, காக்களூர் பகுதி – 2 மற்றும் தேனி ஆகிய இடங்களில் ஐந்து தொழில்நுட்ப பூங்காக்களையும் ரூ. 652.30 இலட்சம் செலவில் மொத்தம் 584 மேம்படுத்தப்பட்ட மனைகளை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

* அரசு நிலங்களில் பெண்கள் தொழிற் பூங்கா ஏற்படுத்தும்பொழுது அந்தத் தொழிற் பூங்காவில் தொழில் முனைவோருக்கு நிலத்தின் விலையில் 50 விழுக்காடு தள்ளுபடி செய்யப்படுகிறது.

* பெண் தொழில் முனைவோருக்கு அவர்கள் நிலத்திற்காக விண்ணப்பம் செய்யும்போது அதற்கு வேண்டிய கடன் உதவி மற்றும் மூலதனத்தை, வங்கியிலிருந்து பெற அதற்குண்டான ஆய்வுக் கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

* நிலத்தின் விலையில் நிருவாகச் செலவிற்கான மதிப்பில், சென்னையைத்தவிர ஏனைய இடங்களில் 15 விழுக்காட்டிலிருந்து 10 விழுக்காட்டிற்குக் குறைக்கப்பட்டுக் கணக்கிடப் பட்டு விலை குறைவாக நிர்ணயம் செய்யப் படுகிறது.

* சிட்கோ 2005ஆம் ஆண்டு டிசம்பர் வரை 7 தொழிற்பேட்டைகளில் 1,080 தொழில் மனைகளை உருவாக்கியுள்ளது. அதில் மூன்று புதிய தொழிற்பேட்டைகளான திருமுல்லைவாயில், வாழவந்தான்கோட்டை, கருப்பூர் மகளிர் தொழிற் பூங்காக்கள் அடங்கும்.

* சிட்கோ நிறுவனம் கடந்த ஐந்து ஆண்டுகளில் (டிசம்பர் வரை) ரூ. 15,840.22 இலட்சம் மதிப்பில் 57,500.927 மெட்ரிக் டன் அளவுள்ள மூலப் பொருட்களை விற்பனை செய்துள்ளது.

* சிட்கோ நிறுவனம் கடந்த ஐந்து ஆண்டுகளில் விற்பனை உதவித் திட்டத்தின் கீழ் ரூ.251.206 இலட்சம் மதிப்பிற்கு வழங்கல் ஆணைகள் பெற்று நிறைவேற்றியுள்ளது. 323 சிறு தொழில் நிறுவனங்கள் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டன.

* சிட்கோ நிறுவனம் சிறுதொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை ஏற்றுமதி செய்ய இணைய தளத்தின் மூலம் விளம்பரப்படுத்தி உதவி புரிந்து வருகிறது. ஏற்றுமதி உதவித் திட்டத்தின் கீழ் இதுவரையில் (டிசம்பர் 2005 வரை) 95 நிறுவனங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

* சிட்கோவின் இணையதளத்தில் சிட்கோவின் திட்டங்கள் ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ள சிறுதொழில் மற்றும் குறுந்தொழில் கூடங்கள் மற்றும் மனைகள் பற்றிய விபர அறிக்கை, சிட்கோ மூலம் விநியோகிக்கப்படும் மூலப்பொருட்களின் விவரங்கள் மற்றும் சிறுதொழில் நிறுவனங்களுக்கான ஆலோசனைகள் போன்றவை இடம் பெற்றுள்ளன.

* சிட்கோவின் இணையதளம் www tansidco.com E-mail:sidco @vsnl.com.


* கிண்டி திரு.வி.க. தொழிற்பேட்டையை ரூ. 1,002.24 இலட்சம் செலவு மதிப்பீட்டில் 'ஒருங்கிணைந்த கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்' (IID) மூலம் மேம்படுத்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஓசூர் தொழிற்பேட்டையில் இத்திட்டம் செயல் படுத்தப்பட்டது.

* கப்பலூர் தொழிற்பேட்டை பகுதி – 1, பேட்டை, காக்களூர், இராணிப்பேட்டை ஆகிய தொழிற்பேட்டைகள் 'கூடுதல் மத்திய உதவித் திட்டத்தின்' மூலம் மேம்படுத்தப்பட உள்ளன. இந்தத் தொழிற் பேட்டைகளைச் சார்ந்த ஒதுக்கீட்டாளர்களின் பங்குத் தொகை பெறப்பட்டவுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

* அம்பத்தூர், திருமுடிவாக்கம் மற்றும் திருமழிசை தொழிற்பேட்டைகள், தொழில் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ரூ. 47.20 கோடி செலவில் மேம்படுத்தப்படவுள்ளது.

* * *

## எரிசக்தித்துறை



* தமிழ்நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் மூலம் மொத்த மின் உற்பத்தித் திறன் 31.10.2005 வரையில் 1,748–மெகாவாட் அதிகரித்துள்ளது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் மொத்த மின் உற்பத்தித் திறன் 31.10.2005 வரை 2,685 மெகா வாட்டானது தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் கட்டமைப்பின் மொத்தத் திறனான 12,596 மெகாவாட்டில் 18 சதவீதம் ஆகும்.

* காற்று சக்தி மூலம் மின் உற்பத்தித் திறனில் 31.10.2005 வரை 1,595 மெகாவாட் அதிகரித்துள்ளது. இதற்கு முந்தைய ஐந்தாண்டுகளில் மொத்தம் 256 மெகாவாட் மட்டுமே அதிகரித்தது. தமிழ்நாட்டில் காற்றாலை மூலம் மொத்த உற்பத்தித் திறன் 31.10.2005 வரை 2,408 மெகாவாட்டாக உள்ளது. இது நாட்டின் மொத்த உற்பத்தித் திறனில் 60 சதவீதமாகும். இந்தியாவில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக தொடர்ந்து இத்துறையில் சாதனைப்படைத்து வருகிறது.

* தமிழகத்தில் சர்க்கரை ஆலைகளில் கரும்பு சக்கையினைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்வதில் 31.10.2005 வரை 132 மெகாவாட் அதிகரித்துள்ளது. இதன் மூலம் 31.10.2005 வரை தமிழ்நாட்டில் மொத்த மின் உற்பத்தித் திறன் 275 மெகாவாட் ஆகும். இது இந்தியாவின் மொத்த உற்பத்தித் திறனில் 30 சதவீதம் ஆகும். இதிலும் தமிழ்நாடு இந்தியாவில் முதன்மை மாநிலமாக திகழ்கிறது.

* சூரிய ஒளிச் சாதனங்களைப் பயன்படுத்தி 31.10.2005 வரை 4,500 சூரிய ஒளி லாந்தர், 1,229 வீட்டு விளக்குகள், 4,346 தெரு விளக்குகள் நிறுவப்பட்டுள்ளன.

* ஊராட்சிகளில் மின்கட்டணச் செலவை குறைக்கும் வகையில் 3,387 சூரிய சக்தி தெருவிளக்குகள் மத்திய அரசு மானியத்துடன் 2003–04ஆம் ஆண்டில் நிறுவப்பட்டுள்ளன. சூரியஒளிசக்தி மூலம் விவசாயத்திற்கும், குடிநீர் இறைப்பதற்கும் 31.10.2005 வரை அரசு

மானியத்துடன் 90 இடங்களில் பம்புகள் நிறுவப்பட்டுள்ளன.

* சூரிய சக்தி சுடுநீர் அமைப்புகள் 500 சதுர மீட்டர் மற்றும் அதற்கு மேல் கட்டப்படும் வணிகரீதியான புதிய கட்டடங்களிலும் 150 சதுர மீட்டருக்கு மேற்படி கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களில் நிறுவுவது கட்டாயமாக்கி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

* அரசு கட்டடங்களில் சூரிய சக்தி சுடுநீர் கலன்கள் அமைப்பதற்கு ரூ.29.24 இலட்சம் நிதியுதவியும், தனியார் கட்டடங்களில் அமைப்பதற்கு ரூ.25.8 இலட்சம் மானியமும் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது.

* தொழிற்சாலைகளில் வெப்பசக்தி மற்றும் மின்சக்தி தேவைகளுக்குத் தாவர எரிசக்தி வாயுக்கலன்கள் (gasifier) அமைப்பதற்கு அரசு மானிய உதவி அளிக்கிறது. 31.10.2005 வரையில் 13 தாவர எரிசக்தி வாயுக்கலன்கள் நிறுவப் பட்டுள்ளன.

* கோவை மாவட்டம் ஊராட்சிகளில் தாவர எரிசக்தி வாயுக்கலன்களை நிறுவுவதில் முதன்மையாக திகழ்கிறது. குடிநீர் இறைப்பதற்கும் மற்றும் தெருவிளக்கு எரிப்பதற்கும் உரிய மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு ஒவ்வொன்றும் 17 கி.வாட் திறனுடன் 9 தாவர எரிவாயுக் கலன்கள் நிறுவப்பட்டுள்ளன. மொத்தம் 32 கலன்கள் நிறுவுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

* 2005–06ஆம் ஆண்டில், மாநில அரசு 29 இடங்களில் தாவர எரிசக்தி கலன் நிறுவுவதற்கு கூடுதல் மானியமாக ரூ.46.40 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

* 31.10.2005 வரையில் 135 – தாவர எரிவாயுக் கலன்கள் ஊராட்சிகளிலும் 17 தாவர எரிவாயுக் கலன்கள் தொழிற்சாலைகளிலும் நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

* மனிதக் கழிவுகளிலிருந்து பெறப்படும் வாயு மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் திட்டத்திற்கு தமிழக அரசு மானியம் வழங்கி வருகிறது. 2003–04ஆம் ஆண்டில் 14 சுகாதார வளாகங்களில் மனிதக் கழிவு எரிவாயுக் கலன்கள் அமைத்து கிடைக்கும் வாயுமூலம் பம்புகளை இயக்கி அந்த வளாகங்களை சுயசார்புடை யவைகளாக மாற்றும் பணியினை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை செய்து வருகிறது. இதைத்தவிர 29 நிறுவனங்களில் மனிதக்கழிவு எரிவாயுக்கலன்கள் அமைக்கப்படுகின்றன. இதற்காக தமிழக அரசு மொத்தம் ரூ.43.5 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. 2004–05ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு மனிதக் கழிவிலிருந்து எரிவாயுக் கலன் 20 எண்ணிக்கைகள் நிறுவுவதற்கு ரூ.20 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது.

* 31.10.2005 வரையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் பயன்பாடுகளை அதிகரிக்கும் வகையில் விழிப்புணர்வு பணியினை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

### தமிழ்நாடு மின்சார ஆய்வுத் துறையின் செயல்பாடுகளும், சாதனைகளும்

* கடந்த ஐந்து ஆண்டுகளில் அக்டோபர் 2005 முடிய 1,294 மின் விபத்துக்களில் புலனாய்வு மேற்கொண்டு விபத்துக்கான காரணம் ஆராயப்பட்டு அதுபோன்ற விபத்துக்கள் மீண்டும் நிகழாமல் இருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. டிசம்பர் 2005 முடிய திட்டமிடப்பட்டவை 1,319.

### தமிழ்நாடு மின்சார வாரியம்

* மாநிலத்தில் 5 ஆண்டுகளில் எந்த ஒரு பகுதியிலும் மின்தடையின்றி, தமிழ்நாட்டில் உள்ள 1.7 கோடி மின் பயனீட்டாளர்களுக்குத் தொடர்ந்து தடங்கல் இல்லாத மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

* தூத்துக்குடி, மேட்டூர் மற்றும் வடசென்னை அனல் மின் நிலையங்கள் சிறப்பாகச் செயல்பட்டு, 2001–02, 2002–03, 2003–04 மற்றும் 2004–05 ஆகிய நான்கு ஆண்டு காலமாக இந்திய அரசின் தங்கப்பதக்கம் / வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றுள்ளன. 2005–06 ஆம் ஆண்டிலும் தங்கப்பதக்கம் பெற தகுதி பெற்றுள்ளன.

* வடசென்னை, தூத்துக்குடி மற்றும் மேட்டூர் அனல் மின் நிலையங்களுக்கு இந்தியத் தரச் செயலக நிறுவனம் ஐ.எஸ்.ஓ. (ISO) – 9002: 1994 தரச் சான்றிதழை வழங்கியுள்ளது. மேற்கண்ட அனல் மின் நிலையங்கள் மேலும் தகுதி மேம்பட்ட ஐ.எஸ்.ஓ. (ISO) – 9001: 2000 தரச் சான்றிதழை பெற்றுள்ளன.

* தூத்துக்குடி மற்றும் எண்ணூரில் உள்ள அனல் மின் நிலையங்கள் 2004–05இல் தமிழக அரசின் சிறப்புப் பாதுகாப்புக்கான விருதுகளில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளன.

* சென்னையில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் திட்டத்தை, தமிழ்நாடு மின்சார வாரியமும் தேசிய அனல் மின் கழகமும் இணைந்து கூட்டு முயற்சியில் செயல்படுத்த உள்ளன.

* தூத்துக்குடியில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் திட்டத்தை, கூட்டு

முயற்சியில் நிறுவ தமிழ்நாடு மின்சார வாரியமும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனமும் இணைந்து செயல்படுத்தவுள்ளன. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 19.06.2003 அன்று கையெழுத்தானது.

* வழுதூரில் எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட 95 மெகாவாட் திறனுடைய வாரியத்தின் சொந்த மின் திட்டம் 13.03.2003இல் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றது.

* குத்தாலத்தில் எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட 101 மெகாவாட் திறனுடைய வாரியத்தின் சொந்த மின் திட்டம் 24.03.2004 முதல் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றது.

* 150 மெகாவாட் திறனுடைய பைக்காரா இறுதி நிலை புனல் மின் திட்டம் நீலகிரி மாவட்டத்தில் 06.09.2005 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

* விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டத்தின் கீழ், 25 துணை தொடர் மற்றும் மின் பகிர்மான திட்டங்கள் பெரும்பாலான மாநிலத்திலுள்ள நகர்ப்புற பகுதிகளை உள்ளடக்கி, மொத்தம் ரூ.968.40 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

* ஊரக வளர்ச்சிக்கான தேசிய விவசாய வங்கியின் உதவியுடன் ரூபாய் 185.75 கோடி செலவில் 14 மாவட்டங்களில் துணை தொடர் மற்றும் மின் பகிர்மான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

* மின்நுகர்வோர்களின் மின்தடை பற்றிய குறைகளை உடனடியாகத் தீர்க்கும் பொருட்டு கணினி மயமாக்கப்பட்ட மின் தடை நீக்கும் மையங்கள் 12.11.2003 முதல் சென்னை மாநகரிலும் 01.03.2005 முதல் கோவை, மதுரை மற்றும் திருச்சியிலும் இயங்கி வருகின்றன.

* விவசாயிகள் மற்றும் குடிசை வாழ் மக்களுக்கு 01.04.2004 முதல் இலவச மின்சாரம் வழங்க தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. இதற்கென மானியமாக முறையே ஒரு வருடத்திற்கு ரூ.196 கோடி மற்றும் ரூ. 16 கோடி வழங்கியுள்ளது. இதன் மூலம் 15.3 இலட்சம் விவசாயிகளும் 9 இலட்சம் குடிசை வாழ் மக்களும் பயனடைகின்றனர். இந்த மானியம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அரையாண்டிற்கு ஒருமுறையாக முன்கூட்டியே வழங்கி வருகின்றது.

* தமிழக மக்களின் நலன் கருதி தமிழக அரசு வீடுகளுக்குப் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கான கட்டணத்தை 16.06.2004 முதல் குறைத்து ஆணையிட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு ரூ.910 கோடி அரசு மின்வாரியத்திற்கு மானியமாக வழங்குகிறது.

* கட்டடங்களுக்கு மின் இணைப்பு வழங்கும்போது கட்டட அனுமதி மற்றும் கட்டட நிறைவுச் சான்றிதழ் ஆகியவை அளிக்குமாறு வலியுறுத்தப்பட்டதை நீக்கி அரசு ஆணை பிறப்பித்து, ஆண்டொன்றுக்கு 6 இலட்சம் பயனீட்டாளர்கள் விரைவில் மின் இணைப்புப் பெற வழிவகை செய்துள்ளது.

* கடந்த 5 ஆண்டுகளில் இயக்கி வைக்கப்பட்ட கூடுதல் மின்னுற்பத்தித் திறன் 2,047 மெகாவாட். கடந்த 5 ஆண்டுகளில் 2,24,523 மில்லியன் யூனிட்டுகள் நுகரப்பட்டது. புதிய துணை மின் நிலையங்கள், அதிக திறனாக்குதல் மற்றும் துணைமின் நிலையங்களில் கூடுதல் வோல்டேஜ் மின்னூட்டியை அறிமுகப்படுத்துதல் உட்பட 262 துணை மின் நிலையங்கள் கடந்த 5 ஆண்டுகளில் இயக்கி வைக்கப்பட்டுள்ளன.

* கடந்த 5 ஆண்டுகளில் 71,423 தொழிற்சாலைகளுக்கும், 35,116 உயர்மட்ட, தரைமட்ட நீர்தேக்கித் தொட்டிகளுக்கும், 1,33,047 தெரு விளக்குகளுக்கும், 24,71,718 வீடுகளுக்கும், 1,52,156 குடிசைகளுக்கும் மற்றும் 1,39,899 பம்புசெட்டுகளுக்கும் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

* கடந்த 5 ஆண்டுகளில் 12,890 மின் திருட்டுகளும், 16,737 பிற முறைகேடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதற்கான அபராதத் தொகை ரூ.109.72 கோடி ஆகும்.

## தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

* மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், இந்நிறுவனம் ரூ.125.44 கோடியை 82,340 பெண் குழந்தைகள் பயன்பெறும் வகையில் வைப்பீட்டுத் தொகையாக பெற்றுள்ளது.

* மேலும் ஒரு கால பூஜை திட்டத்தின் கீழ், 10,106 திருக்கோயில்களுக்காக ரூ.25.27 கோடியை வைப்பீட்டுத் தொகையாக இந்நிறுவனம் பெற்றுள்ளது.

* புதியதாகத் தொடங்கப்பட்ட பள்ளி மாணவர்களது பெற்றோரை காப்புறுதி செய்யும் திட்டத்தின் கீழ், ரூ. 1 கோடி வைப்பீடு நிதியாகப் பெறப்பட்டுள்ளது.

* 2001–2002 முதல் 2004–2005 வரை இந்நிறுவனத்தின் நிகர இலாபம் ரூ.94 கோடியாகும்.

* * *

# தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை



- தொழிலாளர் துறையின் மூலம் 17 தொழிற் சாலைகளின் தொழில் சிக்கல்கள் சுமூகமாகத் தீர்த்து வைக்கப்பட்டன.

- தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக நிருவாகங்கள், தொழிற்சங்கத் தலைவர்களுக் கிடையே, மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடைபெற்று 31.08.2005 அன்று புதிய ஊதிய ஒப்பந்தம் ஏற்பட்டது. இவ்வொப்பந்தம், 1.9.2003 முதல் ஐந்து ஆண்டு காலம் செல்லத்தக்கது. இவ்வொப்பந்தத்தின் மூலம் தொழிலாளர்களுக்கு புதிய ஊதிய நிர்ணயம், அகவிலைப்படி உயர்வு, இடைக்கால நிவாரணத் தொகை மற்றும் பல சலுகைகளும், 1,375 தினக்கூலிப் பணியாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக்குதல் போன்ற பயன்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- நீண்ட காலமாக மூடப்பட்ட நிறுவனங்களில் பணிபுரிந்த 4,167 தொழிலாளர்களுக்கு மாதம் ரூ.250வீதம் உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், இதுவரை ரூ. 60,98,000 உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

- பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு சிரமமின்றி மிகக் குறைந்த செலவில் மிக விரைவாக நீதி கிடைக்க 'லோக் அதாலத்' என்ற மக்கள் நீதிமன்றம் சென்னை மற்றும் மதுரையில் அமைக்கப்பட்டு, 56 வழக்குகள் முடிக்கப்பட்டு கேட்புரிமைதாரர்களுக்கு ரூ. 81,41,389 இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பு சேலம் மாவட்டத்திலும் விரைவில் அமைக்கப்படவுள்ளது.

- சிற்பத் தொழில், வைரம் பட்டைத் தீட்டும் தொழில், சுருட்டு தயாரிக்கும் தொழில் மற்றும் டைமக்ஸன் தொழில் ஆகிய தொழில்கள் குறைந்தபட்ச ஊதிய சட்ட அட்டவணையில் புதியதாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

- 2001–ஆம் ஆண்டில் 4 தொழில்களுக்கும், 2002–ஆம் ஆண்டில் 4 தொழில்களுக்கும், 2003–ஆம் ஆண்டில் 12 தொழில்களுக்கும், 2004–ஆம் ஆண்டில் 27 தொழில்களுக்கும், 2005–ஆம் ஆண்டில் 5 தொழில்களுக்கும் குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்து அறிவிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

- இதுவரை 9,932 கேட்பு மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு, பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.10,42,23,338.13, வழங்கப்பட்டுள்ளது.

- மத்திய அரசின் ஒருங்கிணைந்த பீடித் தொழிலாளர்கள் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ், 2002–2003ஆம் ஆண்டு முதல் 2006–2007ஆம் ஆண்டு வரை 5 ஆண்டுகளில் 10,000 வீடுகள் கட்ட அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய அரசு நிருவாக ஒப்புதல் பெற்ற 284 பயனாளிகள்ஒவ்வொருவருக்கும் ரூ.5,000 வீதம் ரூ.14,20,000 மாநில அரசின் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

- 2005ஆம் ஆண்டுக்குள் அபாயகரமான தொழில்களில் குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றவும், 2007ஆம் ஆண்டுக்குள் அபாயகரமற்ற தொழில்களில் குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றவும் அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தினை மாவட்ட மற்றும் மாநில அளவில் செயல்படுத்த ரூ.1.25 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

- அனைத்து மாவட்டங்களிலும் "மாவட்ட குழந்தைத் தொழிலாளர் தடுப்புக் குழுக்கள்" அமைக்கப்பட்டுள்ளன.

- குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் சிறப்பாகச் செயல் ஆற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு மாநில அரசால் விருது வழங்கப்பட்டு வருகிறது.

- 2003ஆம் ஆண்டிற்கான சிறந்த மாவட்ட ஆட்சியருக்கான விருது கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டது.

- குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு சம்பந்தமாக விழிப்புணர்ச்சி ஏற்படுத்த துண்டுப் பிரசுர வெளியீடு, சிறு நூல்கள், சுவரொட்டிகள் மற்றும் ஸ்டிக்கர்கள் மூலம் விளம்பரப் படுத்தப்படுகின்றன. பேருந்துகளிலும், பொது இடங்களிலும், விளம்பரத் தட்டிகள், சுவரொட்டி மூலம் விளம்பரப்படுத்தப்படுகின்றன.

- சுயஉதவிக் குழுக்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

- இந்திய சுற்றுலா மற்றும் வர்த்தகப் பொருட்காட்சியில் குழந்தைத் தொழிலாளர் முறைக்கெதிரான விளம்பரப் பலகைகள் வைக்கப்பட்டன. அறிவிப்புகள் (Jingles) மற்றும் பொம்மலாட்ட நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

* 418 சிறப்புப் பள்ளிகளில் மீட்கப்பட்ட 16,400 குழந்தைத் தொழிலாளர்கள் கல்வி பயில்கின்றனர்.
* சிறப்புப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு மாதந்தோறும் ரூ.100 உதவித் தொகை வழங்கப் படுகிறது.
* 2001ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 37,708 குழந்தைகள் முறையான பள்ளிகளில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

### தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

* தையற் பயிற்சி மட்டும் இயங்கி வந்த 19 மையங்களில், குழந்தைகள் காப்பகங்கள் தொடங்கப்பட்டுள்ளன.
* 71 தொழிலாளர் நல மையங்களிலும் படிப்பகங்கள் துவங்கப்பட்டுள்ளன.
* அடிப்படை கணினி பயிற்சி பெற, தொழிலாளி மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு மாவட்டத்திற்கு 5 நபர் வீதம் 150 பேருக்கு தலா ரூ.1,000 உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.
* தொழிலாளர் நல மையங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு மின் மோட்டார் இயந்திரம் பொருத்திய தையல் இயந்திரம் ரூ. 3,97,292 மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன.
* கண்கண்ணாடி வாங்க உதவித் தொகை ரூ.200லிருந்து ரூ.400ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.
* ஈமச்சடங்கு உதவித் தொகை ரூ.500லிருந்து ரூ.1,500 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.
* 29,360 தொழிலாளர்களுக்கு ரூ.1,14,52,412 மதிப்பீட்டில் பல்வேறு உதவிகள் வழங்கப் பட்டுள்ளன.
* பொறியியல், மருத்துவம், சட்டம் மற்றும் வேளாண்மை பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு ரூ.1,200லிருந்து ரூ.2,400ஆகவும், பொறியியல் பட்டயம் மற்றும் மருத்துவ பட்டயம் பயிலும் மாணவர்களுக்கு ரூ.720 லிருந்து ரூ.1,440 ஆகவும், தொழிற்பயிற்சி கல்வி பயிலும் மாணவர்களுக்கு ரூ.500 லிருந்து ரூ. 1,000 ஆகவும், மேல்நிலைக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ரூ.600 லிருந்து ரூ.1,200 ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளன.

### தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம்

* தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் 13–5–2001 முதல் 31–10–2005 வரை 60,653 பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ரூ.19,35,77,863 மதிப்பிலான பல்வேறு நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.
* தகுதியுடைய பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.200 ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.
* பதிவு செய்துகொண்ட தொழிலாளர்களின் பெண் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை 10ஆம் வகுப்பிற்கு ரூ.1,000, 11ஆம் வகுப்பிற்கு ரூ.1,000, 12ஆம் வகுப்பிற்கு ரூ.1,500 என வழங்கப்பட்டு வருகிறது.
* மகப்பேறு உதவித்தொகை ரூ.2,000லிருந்து ரூ.4,000 ஆகவும், இயற்கை மரணம் ஏற்பட்டால் ரூ.10,000லிருந்து ரூ.15,000 ஆகவும், கண்கண்ணாடி வாங்க ரூ.250லிருந்து ரூ.500 ஆகவும் உயர்த்தி வழங்க ஆணையிடப் பட்டுள்ளது.
* 31.10.2005 வரை புதிய திட்டத்தின் கீழ் பதிவு பெற்ற 966 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ், ரூ.18,27,678 வழங்கப்பட்டுள்ளது.
* பதிவு பெற்ற பெண் கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளின் நலனுக்காக சென்னை, மதுரை, திருச்சி, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் குழந்தைகள் காப்பகம் விரைவில் ஏற்படுத்தப்படவுள்ளது.

### தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்

* 12.5.2001 வரை தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தில், பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை 9,01,138 ஆகும்.
* 13.05.2001 முதல் 31.10.2005 வரை கடந்த ஐந்தாண்டுகளில் 44,197 பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு ரூ.9,40,89,284 மதிப்பிலான பல்வேறு நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.
* பதிவு செய்து கொண்ட தொழிலாளரின் பெண் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகையாக, 10ம் வகுப்பு படிப்பதற்கு ரூ.1,000, 11ம் வகுப்பு படிப்பதற்கு ரூ.1,000, 12ம் வகுப்பு படிப்பதற்கு ரூ.1,500 என வழங்கப்பட்டு வருகிறது.
* மகப்பேறு உதவித்தொகை ரூ.2,000லிருந்து ரூ.4,000ஆக உயர்த்தப்பட்டது.
* இயற்கை மரணம் ஏற்பட்டால் நிவாரண உதவி ரூ.10,000லிருந்து ரூ.15,000 ஆகவும் உயர்த்தப் பட்டது.
* கண்கண்ணாடி வாங்க ரூ.500 வழங்கப்படுகிறது.
* 31.10.2005 வரை 3,512 தொழிலாளர்களுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ், ரூ.57,61,770 வழங்கப்பட்டுள்ளது.

## தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை

- தொழிற்சாலைகள் சட்டம், 1948இன் கீழ் பதிவு செய்யப்பட்ட மொத்தத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை (31-10-2005 முடிய) 36,393 ஆகும். தொழிற்சாலைகள் சட்டம், 1948இன் கீழ் பயனடைந்த மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கை (31-10-2005 முடிய) 13,11,605 ஆகும்.

- தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையின் மூலம், தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் பணி நிரந்தரம் செய்யும் சட்டத்தின் கீழ், ஒரு தொழிலாளி 24 மாதங்களில் தொடர்ந்து 480 நாட்கள் பணி புரிந்திருப்பின் அவருக்கு அத்தொழிற் சாலையில் பணி நிரந்தரம் செய்ய வழி செய்யப்பட்டுள்ளது. இதன்படி கடந்த 5 ஆண்டுகளில் 25,643 தொழிற்சாலைகளில் 82,860 தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செய்யப் பட்டுள்ளனர்.

- கடந்த 5 ஆண்டுகளில் கடும் முரண்பாடுகள் காணப்பட்ட நிருவாகத்தினர் மீது 10,044 வழக்குகள் தொடரப்பட்டு, நீதிமன்ற அபராதத் தொகையாக ரூ.2,32,31,170 வசூலிக்கப்பட்டுள்ளது.

- கடந்த 5 ஆண்டுகளில் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு சம்பந்தமாக 514 வழக்குகள் தொடரப்பட்டு ரூ.21,05,050 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது. இதனால் அமைப்பு சார்ந்த தொழில்களில் குழந்தைத் தொழிலாளர்களை பணிக்கமர்த்துவது வெகுவாகக் குறைந்துள்ளது.

- தொழிற்சாலைகளில் சிறந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிருவாகத்தினரை ஊக்குவிக்கும் பொருட்டு, அரசு ஆண்டுதோறும், பாதுகாப்பு விருதுகள் வழங்கி வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில், மாநில பாதுகாப்பு விருதுகள் 313 நிருவாகத்தினருக்கு முதல் பரிசும், 228 நிருவாகத்தினருக்கு இரண்டாம் பரிசும் வழங்கப்பட்டன.

- விபத்துத் தடுப்பு நடவடிக்கையில் முக்கியப் பங்கேற்கும் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம், ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசின் "உயர்ந்த உழைப்பாளர்" விருது வழங்கப்படுகிறது. தொழிற்சாலையில் உற்பத்தித் திறனை அதிகரித்தல், பணிச் சூழ்நிலைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்புத் தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றைப் பற்றி பயன்மிக்க கருத்துகள் தரும் தொழிலாளர்களுக்கு, இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன. இதுவரை 168 தொழிலாளர்களுக்கு மொத்தம் ரூ.2,40,000 பகிர்ந்தளிக்கப்பட்டது.

## பயிற்சித் துறை

- மகளிர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ஆண்டிபட்டி, கரூர் மற்றும் நாமக்கல் ஆகிய இடங்களில் புதிய மகளிர் தொழிற் பயிற்சி நிலையங்களும், ஒசூர், தஞ்சாவூர் மற்றும் இராமநாதபுரம் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் மகளிருக்கென புதிய தொழிற் பிரிவுகளும் ரூ.2.79 கோடி செலவில் ஜனவரி 2004 முதல் தொடங்கப்பட்டுள்ளன.

- கிண்டி, மதுரை மற்றும் நாகர்கோவில் ஆகிய மகளிர் தொழிற்பயிற்சி நிலையங்களில் டெஸ்க்டாப் பப்ளிசிங் ஆபரேட்டர் என்ற புதிய தொழிற்பிரிவு ரூ.36 இலட்சம் செலவில் ஆகஸ்ட் 2003 முதல் தொடங்கப்பட்டுள்ளது.

- தொழிற் பயிற்சி நிலையங்களில் கம்மியர் தொழில் மின்னணுவியல், கம்மியர் மெக்கட்ரானிக்ஸ் மற்றும் கம்மியர் வன்பொருள் ஆகிய தொழிற் பிரிவுகள் ஆகஸ்ட் 2005 முதல் 8 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் ரூ. 181.65 இலட்சம் செலவில் தொடங்கப் பட்டுள்ளன.

- திண்டுக்கல் மகளிர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் துணிவெட்டுதலும் தைத்தலும் ஆகிய தொழிற்பிரிவுகள் ரூ.19.05 இலட்சம் செலவில் புதியதாகத் தொடங்கப்பட்டுள்ளன.

- புதிய தொழிற் பிரிவுகளான உணவாக்குதல் (பொது), லித்தொ ஆப்செட் மெஷின் மைண்டர், எண்ணியல் நிழற்பட கலைஞர், தகவல் தொழில் நுட்பம், ஒட்டுநருடன் கூடிய கம்மியர் ஆகியவை 7 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் ரூ.1 கோடி செலவில் ஆகஸ்ட் 2005 முதல் தொடங்கப்பட்டுள்ளன.

- 2004-2005ஆம் வருடத்தில் கம்மியர் (மோட்டார் வாகனம்) தொழிற் பிரிவிற்கு 30 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு ரூ.100 இலட்சம் செலவிலும், கடைசலர் தொழிற் பிரிவிற்கு 17 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு ரூ.34.43 இலட்சம் செலவிலும் புதிய கருவிகள் மற்றும் தளவாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- 2005-2006ஆம் வருடத்தில் 35 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பல்வேறு தொழிற் பிரிவுகளில் புதிய கருவிகள் மற்றும் தளவாடங்கள் ரூ.500 இலட்சம் செலவில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

- பொதுமக்களுக்கு விரைந்து செயலாற்றும் வகையில் 2003-2004 மற்றும் 2004-2005

ஆகிய வருடங்களில் 20 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் ரூ.70 இலட்சம் செலவில் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. 2005–2006ஆம் வருடத்தில் மேலும் 20 தொழிற் பயிற்சி நிலையங்கள் / தொடர் அறிவுரை மையங்கள் மற்றும் 5 மண்டல அலுவலகங்களும் ரூ.30 இலட்சம் செலவில் கணினிமயமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

❖ அக்டோபர் 2001ஆம் வருடம் ரூ.2.78 கோடி செலவில், சென்னை–கிண்டி, ஆலந்தூர் சாலையில் புதிய கட்டடம் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 1.3.2005 அன்று திறந்து வைக்கப்பட்டது.

❖ திருவண்ணாமலை அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் 60 மாணவர்கள் தங்கி பயிற்சி பெற ரூ.40 இலட்சம் செலவில் மாணவர் விடுதி கட்டப்பட்டுள்ளது.

❖ நீடாமங்கலம், அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திற்குப் புதிய கட்டடம் ரூ.142 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது. கட்டுமானப் பணி நிறைவு பெறும் நிலையில் உள்ளது.

❖ திண்டுக்கல் மகளிர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு ரூ.61 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்ட அரசு ஆணை வழங்கி உள்ளது.

❖ ஆண்டிபட்டி மகளிர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு ரூ.70 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டப்படவுள்ளது.

❖ 13 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் ரூ.3.71 இலட்சம் செலவில் தொலைபேசி வசதி செய்யப்பட்டுள்ளன.

❖ அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களை, 2005–2006ஆம் வருடத்தில் ரூ.1 கோடி செலவில் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

❖ தொழிற் பயிற்சி நிலையங்களில் தண்ணீர் வசதியை மேம்படுத்த 2004–2005ஆம் வருடத்தில் ரூ.15 இலட்சம் செலவில் 10 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பம்ப் செட் வசதியுடன் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப் பட்டுள்ளன.

❖ 1964ஆம் வருடம் முதல் தொழிற் பயிற்சி நிலையங்களில் தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களுக்கு அகில இந்திய அளவில் திறனாய்வுப் போட்டி மத்திய அரசால் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை நடைபெற்ற 40 போட்டிகளில் தமிழ்நாடு சிறந்த மாநிலமாக 2001 மற்றும் 2003–ஆம் ஆண்டு உட்பட 20 முறை தேர்வு செய்யப்பட்டு குடியரசுத் தலைவர் அவர்களின் கேடயம் பெற்றுள்ளது. தமிழகத்தில் அளிக்கப்படும் தொழிற் பயிற்சி இந்தியத் துணை கண்டத்திலேயே தரம் வாய்ந்தது என்றால் அது மிகையாகாது.

❖ 500 தொழிற் பயிற்சி நிலையங்களைத் திறன்மிகு மையங்களாக மேம்படுத்தும் மத்திய அரசின் திட்டத்தின் கீழ் 2005–2006 ஆம் ஆண்டு 100மையங்களை மேம்படுத்தப்பட்டதில் தமிழ்நாட்டில் அம்பத்தூர், ஓசூர், கோயம்புத்தூர் மற்றும் திருச்சி ஆகிய அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு மையமும் ரூ.160 இலட்சம் செலவில் இரண்டு ஆண்டுகளில் மேம்படுத்தப்பட உள்ளது. இச்செலவினத்தினை மத்திய அரசும் மாநில அரசும் 75:25 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளும். இத்திட்டத்தின் கீழ் முதலாண்டு அடிப்படைப் பயிற்சி, ஆகஸ்ட் 2005 ஆம் ஆண்டு முதல் நான்கு மையங்களிலும் தொடங்கப் பட்டுள்ளது. பயிற்சியாளர்கள் முழு அளவில் சேர்க்கப்பட்டுள்ளனர். அடிப்படைப் பயிற்சி ஏற்கெனவே உள்ள பயிற்சி வசதிகளைக் கொண்டு அளிக்கப்பட்டு வருகிறது. எனினும் சிறிய அளவில் கட்டடப் பணி மேற்கொள்ளப் படவுள்ளதுடன் கூடுதலாகத் தேவைப்படும் கருவிகள் மற்றும் தளவாடங்கள் ரூ.68.58 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. எஞ்சிய தொகை அடுத்த ஆண்டு முன்னோடி பயிற்சிக்குப் பயன்படுத்தப்பட உள்ளது.

## வேலைவாய்ப்புத் துறை

❖ சமீபத்தில் தோற்றுவிக்கப்பட்ட தருமபுரி மாவட்ட வேலைவாயப்பு அலுவலகம் உட்பட தமிழகத்திலுள்ள 35 வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேலை நாடுவோரின் விவரங்களைப் பதிவு செய்தல், அறிவிக்கப்படும் காலியிடங்களுக்கு மனுதாரர்களின் பெயர்களைப் பரிந்துரைத்தல் ஆகிய பணிகளுடன் தொழில்முறை வழிகாட்டுதல், சுயவேலைவாய்ப்பு வழிகாட்டுதல் ஆகிய முக்கியப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

❖ வேலைவாய்ப்புத் துறையின் இணைய தளம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 6.6.2003 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இந்த இணைய தளத்தில் தமிழகம் முழுவதுமுள்ள 3.01 இலட்சம் தொழில் படிப்பு படித்த மற்றும் முதுநிலைப் பட்டதாரிகளின் பதிவு விவரங்கள் உள்ளன. இந்த இணைய தளம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து இதுவரை 3,23,742–க்கும் மேலானவர்கள் பார்வையிட்டுள்ளனர். 2,144 வேலையளிப்பவர்கள் இந்த இணைய தளத்தை

நாடியுள்ளனர். இந்த இணைய தளத்தில், சென்னை, தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவுதாரர்கள் வேலைவாய்ப்பு அலுவலகம் செல்லாமலேயே "ஆன் லைன்'' முறையில் தங்கள் பதிவுகளைப் புதுப்பிக்க வசதி உள்ளது. இதுவரை 79,758 பதிவர்கள் சென்னை வராமலேயே தங்கள் ஊரிலிருந்து "ஆன்லைன்" முறையிலான புதுப்பித்தல் வசதியைப் பயன்படுத்தியுள்ளனர்.

❖ மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் தொழில்முறை வழிகாட்டி விவரங்கள் ஏராளமாக இந்த இணைய தளத்தில் உள்ளன என்பது இதன் சிறப்பம்சமாகும்.

**தனியார் துறையில் பணியமர்த்தல்**

❖ எல்லா மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் ஒவ்வொரு மாதமும் இரண்டாம் வெள்ளிக் கிழமையன்று தனியார் துறை வேலை அளிப்பவர்கள் மற்றும் வேலைநாடும் மனுதாரர்கள் சந்திக்கின்றனர். நேரடியாகத் தேர்வுகள் நடைபெறுகின்றன. உடனுக்குடன் மனுதாரர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

❖ இதுவரை 20,413 மனுதாரர்கள் தனியார் துறையில் தமிழ்நாட்டிலுள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களால் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர்.

❖ வேலை தேடும் இளைஞர்களின் போட்டித் தேர்வுகளில் போட்டியிடும் திறனை மேம்படுத்த 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் தன்னார்வப் பயிலும் வட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

❖ ஊராட்சி ஒன்றிய தன்னார்வப் பயிலும் வட்டங்களுக்கு தமிழக அரசால் ரூ.146.18 இலட்சமும், மாவட்ட தன்னார்வப் பயிலும் வட்டங்களுக்கு ரூ.85.26 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1,47,038 மனுதாரர்கள் உறுப்பினராகி உள்ளனர்.

❖ பொதுமக்களுக்கு விரைவான மற்றும் புகாரற்ற சேவையை அளிப்பதற்காக தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களும் கணினிமயமாக்கப் பட்டுள்ளன. வேலைவாய்ப்பு அலுவலகங்களின் அனைத்துப் பணிகளும் கணினி வழி மேற்கொள்ளப்படுகின்றன.

❖ கணினி மேம்பாட்டிற்காக 2003–2004 முதல் 2005–2006 ஆண்டுகளில் ரூ.95.40 இலட்சம் வழங்கப்பட்டது.

**ஆதிதிராவிடர் மனுதாரர்களுக்கு தொழிற் கல்வி நுழைவுத் தேர்வுக்கு பயிற்சியளித்தல்**

❖ ரூ.27.09 இலட்சம் செலவில் 6,128 இந்து ஆதிதிராவிடர் மனுதாரர்களுக்கு தொழிற்கல்வி நுழைவுத் தேர்விற்கான பயிற்சியளிக்கப்பட்டு, இதில் 823 மாணவர்கள் பல்வேறு தொழிற் கல்லூரிகளில் பயின்று வருகின்றனர்.

**சுய வேலைவாய்ப்பு**

❖ 9,175 பேருக்கு சுய வேலைவாய்ப்பிற்காக வங்கிகள் மூலம் ரூ.3,859 இலட்சம் கடன் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம்**

❖ திருபெரும்புதூரில் புதியதாக தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் ஒன்று 1.8.2005 முதல் தொடங்கப்பட்டுள்ளது.

❖ நாமக்கல்லில் புதியதாக தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் 10.10.2005 முதல் தொடங்கப் பட்டுள்ளது.

❖ கோயம்புத்தூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் 21.7.2005 சிறுநீரகவியல் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.

❖ நடப்பு நிதியாண்டில் 22 கணினிகள் வாங்கப்பட்டு, மாநிலத்தின் அனைத்துத் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனைகளுக்கும், மண்டல நிருவாக மருத்துவ அதிகாரிகளின் அலுவலகங்களுக்கும் வழங்கப் பட்டுள்ளன.

❖ ரூ.49.50 இலட்சம் செலவில் மாநிலத்தின் அனைத்து தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளிலும், மருந்தகங்களிலும் நவீன மருத்துவக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

❖ ரூ.24.89 இலட்சம் செலவில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளை நவீன மயமாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

❖ புதுதில்லி தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தின் ஒப்புதலுடன் மாநிலத்தின் அனைத்துத் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களையும் கணினி மயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

❖ அனைத்து மண்டல மருத்துவ நிருவாக அலுவலர்களுக்கும் திருச்சி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைக்கும் தொலைபேசி வசதி ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. ❖

# போக்குவரத்துத்துறை

* 18 போக்குவரத்துக் கழகங்களை ஏழு போக்குவரத்துக் கழகங்களாக ஒருங்கிணைத்தல், பெட்ரோலியப் பொருட்களில் கணிசமான சேமிப்பு, மையக் கொள்முதல் திட்டம், மனிதவள உற்பத்தித்திறன், கிலோமீட்டர் திறன், வருவாய்ப் பெருக்கம் மற்றும் சிறந்த தொழிலாளர் உறவு ஆகியவற்றை, போக்குவரத்துக் கழகங்களின் கடந்த ஐந்தாண்டின் சில சாதனைகளாக குறிப்பிடலாம்.

* 18 ஆண்டுகளுக்குப் பிறகு முதன் முறையாக அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தங்களுடைய




சமுகப் பொறுப்புகளை நிறைவேற்றியதுடன், 2003–04ஆம் நிதி ஆண்டில் ரூ.2.38 கோடி இலாபத்தையும், 2004–2005ஆம் ஆண்டில் ரூ.27.62 கோடி இலாபத்தையும் ஈட்டியுள்ளன. எண்ணெய் விலையை மத்திய அரசு தொடர்ந்து பலமுறை உயர்த்தியும் கூட, போக்குவரத்துக் கழகங்கள் இந்தச் சிறப்பான நிலையை சாதித்துள்ளது. மத்திய அரசின் திட்டக்குழு, போக்குவரத்துக் கழகங்களின் இயக்கத்திறன் மற்றும் செயல்திறன் மிகச் சிறப்பாக உள்ளது என்று தொடர்ந்து இரண்டாண்டுகளாகப் பாராட்டியுள்ளது.

* கடந்த ஐந்தாண்டுகளில் போக்குவரத்துக் கழகங்களின் வருவாய்ப் பெருக்கம் 3.5 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. 24.5.2004 அன்று ஒரு நாள் வசூல் ரூ.12.73 கோடி ஈட்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

* இந்த அரசு பொறுப்பேற்றபோது 100.39 சதவிகிதமாக இருந்த கிலோமீட்டர் இயக்கத் திறன், போக்குவரத்துக் கழகங்களின் கடுமையான உழைப்பின் காரணமாக 103.42 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

* கடந்த ஐந்து ஆண்டுகளில் 3,901 புதிய பேருந்துகளை வழித்தடத்தில் போக்குவரத்துக் கழகங்கள் இயக்கியுள்ளன.

* 2003–2004ஆம் நிதியாண்டில், 487.92 கோடி பயணிகள் பயணம் செய்துள்ளனர். இது 2004–2005ஆம் ஆண்டில், 508.54 கோடியாக உயர்ந்துள்ளது.

* போக்குவரத்துக் கழகங்கள் எடுத்த நடவடிக்கைகள் காரணமாக ஒரு லிட்டர் எண்ணெயில் 4.27 கிலோ மீட்டர் ஓட்டம் தந்த பேருந்துகள் 4.78 கிலோ மீட்டர் ஓட்டத்தைத் தந்தன என்பது குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக மட்டும் போக்குவரத்துக் கழகங்கள் ஆண்டிற்கு 35 கோடி ரூபாயைச் செலவினத்தில் மிச்சப்படுத்தியுள்ளது.

* இஞ்சின் ஆயில் செலவினமும் 10,000 கி.மீ. ஓட்டத்திற்கு 13.13 லிட்டரிலிருந்து 7.16 லிட்டராக குறைந்ததன் காரணமாக ஆண்டிற்கு ரூ.1.50 கோடியைப் போக்குவரத்துக் கழகங்கள் சேமித்துள்ளன.

* உயர்வேக டீசல் எண்ணெய் விலையில் ஒரு கிலோ லிட்டருக்கு ரூ.1,321 தள்ளுபடி செய்து வழங்க எண்ணெய் நிறுவனங்கள் ஒப்புக்கொண்டு, 1.4.2005 முதல் ஒப்பந்தமும் ஏற்படுத்தியுள்ளன. இதன் காரணமாக, டீசல் செலவினத்தில் மட்டும் ஆண்டிற்கு ரூ.70 கோடி சேமிப்பு ஏற்பட்டுள்ளது.

* சாலைப் போக்குவரத்து நிறுவனம் மூலம் அடிச்சட்டம், டயர்கள், டயர் புதுப்பிக்கும் பொருட்கள், பிஸ்டன், பயணச் சீட்டு அச்சிடுதல் போன்றவைகளின் விலை நிர்ணயம் செய்யப்பட்டு, ஒப்பந்த முறையில் கொள்முதல் செய்யப்படுகின்றன. இதனால் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் ரூ.2.27 கோடி சேமித்துள்ளன.

* போக்குவரத்துக் கழகங்களின் நிருவாகத்திற்கும் தொழிற்சங்கப் பேரவைகளுக்கும் ஊதிய ஒப்பந்தம் ஆகஸ்டு 2005இல் ஏற்பட்டு 1,11,475 தொழிலாளர்களுக்கு நிலுவைத்தொகையுடன் கூடிய ஊதிய உயர்வு மற்றும் இதர சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

* அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களும் போனஸ் வழங்கும் சட்டத்திலுள்ள உச்ச வரம்பு நிபந்தனையைத் தளர்த்தி அனைத்து பணியாளர்களுக்கும் 20 சதவிகித போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கியுள்ளன.

* போக்குவரத்துக் கழகங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய ஓய்வூதியத் திட்டம், வருமான வரியிலிருந்து விலக்கு பெறாத நிலையிலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தொழிலாளர் நலன் கருதி ஓய்வூதியம் தொடர்ந்து அனைத்துப் போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கும் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள்.

* போக்குவரத்துக் கழகங்கள், பாதுகாப்பாக பேருந்துகளை இயக்க பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி போன்ற பயிற்சிகளை ஓட்டுநர்களுக்கு அளித்ததன் காரணமாக ஒரு லட்ச கிலோ மீட்டர் இயக்கத்திற்கு 2001ஆம் ஆண்டு 0.39 ஆக இருந்த விபத்து விகிதாச்சாரம் 2005ஆம் ஆண்டில் 0.29 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

* மோட்டார் வாகன இழப்புத் தொகை பெறுவதற்காக, வழக்குகளை "லோக் அதாலத்" என்று அழைக்கப்படும் மக்கள் நீதிமன்றத்தின் வாயிலாக நூற்றுக்கணக்கான வழக்குகள் தீர்க்கப்பட்டு உரிய நபர்களுக்கு உரிய நேரத்தில் இழப்புத் தொகை வழங்கப்படுகிறது.

* அதி நவீன வசதிகளுடன் கூடிய புறநகர் பேருந்து நிலையம் கோயம்பேட்டில் அமைக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து புறநகர் மற்றும் விரைவு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

* அகில இந்திய அளவில் எரிபொருள் (டீசல்) சிக்கனத்திற்கான முதலிடத்தை 2001–2002ஆம் ஆண்டிலும், இரண்டாம் இடத்தை 2002–2003ஆம் ஆண்டிலும் திருநெல்வேலியில் உள்ள அரசுப் போக்குவரத்துக் கழகம் தொடர்ந்து பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

* 2001–2002ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் சேலத்திற்கு அகில இந்திய அளவில் மசகெண்ணெய் பயன்பாட்டின் சேமிப்பிற்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

* 2001–2002ஆம் ஆண்டிற்கு அரசு விரைவு போக்குவரத்துக் கழகம், அகில இந்திய அளவில் நாள் ஒன்றிற்கு அதிக கிலோ மீட்டர் இயக்கத்திற்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

* 2003–2004ஆம் ஆண்டிற்கு பேருந்துகள் உற்பத்தித் திறன், அதிகபட்சப் பேருந்து உபயோகம் மற்றும் அதிகபட்ச டயர் திறனுக்கும் அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்திற்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

* மூன்று புதிய பணிமனைகள் முறையே, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், தருமபுரி – கிருஷ்ணகிரியில் ரூ.83.75 இலட்சத்திலும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் – தாரமங்கலத்தில் ரூ.31 இலட்சத்திலும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், மதுரை – புதுக்குளம் ரூ.14.95 இலட்சத்திலும் தொடங்கப்பட்டுள்ளன.

* மாநகரப் போக்குவரத்துக் கழகம் மாதாந்திர பயணச்சீட்டு மற்றும் விருப்பம் போல் பயணம் செய்யும் பயணச்சீட்டு ஆகியவற்றை அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி மாதம் ரூ.600 மட்டுமே பயணக் கட்டணமாக இந்தப் பயணச்சீட்டைப் பெறுவதற்கு வாங்கப்படுகிறது. அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மூத்த குடிமகன்களுக்கு 10 சதவிகித பயணச் சலுகையும், பேருந்தில் போவதற்கும் திரும்ப வருவதற்கும் முன்பதிவு செய்தவர்களுக்கு 10 சதவிகிதச் சலுகைகளும் வழங்கப்படுகின்றன. ரூ.500 செலுத்தி வாராந்திர பயண அட்டையைப் பெறுபவர் அந்த வாரம் முழுவதும் அரசு விரைவுப் பேருந்தில் எல்லா வழித்தடங்களிலும் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவார். ஓர் ஆண்டில் ஒரு தடவையாக ரூ.500 செலுத்தும் பயணி, அந்த ஆண்டு முழுவதும் 10 சதவிகித சலுகைக் கட்டணத்தில் பயணம் செய்யலாம்.

* போக்குவரத்துக் கழகங்களுக்கென தனியாக ஒரு இணைய தளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

* சாலைப் போக்குவரத்து நிறுவனத்தால் நடத்தப்படும் பெருந்துறை மருத்துவக் கல்லூரி மற்றும் ஈரோடு பொறியியல் கல்லூரிகளில் போக்குவரத்துத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குத் தனி இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. ஈரோடு பொறியியல் கல்லூரியில் தெர்மல் மற்றும் ஸ்டக்சுரல் இன்ஜினியரிங் ( ME Structural Engineering and M.E. Thermal Engineering Courses) மேற்படிப்பில் முதுகலை பட்டப்படிப்பு ஆரம்பிக்கப் பட்டுள்ளன. அதேபோல் பெருந்துறை கல்லூரியில் முதுநிலை எம்.டி. படிப்புகள் தொடங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

* இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் பயணக் கட்டணம் மிகக் குறைவாக உள்ளது. அண்டை மாநிலங்களின் பயணக் கட்டணம் ஒப்பீடு விவரம் :

(ஒரு கி.மீ. கட்டணம் பைசாவில்)

| மாநிலம் | கட்டண விகிதம் அமலுக்கு வந்த தேதி | புறநகர் (சாதாரணம்) | புறநகர் (விரைவு) | சொகுசு | அதி சொகுசு |
|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு | 6.12.2001 | 28 | – | 32 | 38 |
| ஆந்திரா | 4.2.2003 | 35 | 40 | 45 | 52 |
| கேரளா | 16.9.2004 | 42 | 46 | 54 | 63 |
| கர்நாடகம் | 25.06.2005 | 35 | 44.50 | 56 | 63 |

* * *

# திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

* 2005–2006ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.9,100 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

* பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு (2002–2007) ஒதுக்கீடு ரூ.40,000 கோடியாக நிர்ணயிக்கப்பட்டது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் நான்கு ஆண்டுகளின் சாதனைகளை கருதும்போது பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூ.40,000 கோடியையும் இவ்வரசு விஞ்சவுள்ளது.

* 2001–2002 முதல் 2005–2006 வரை திட்ட ஒதுக்கீடு ரூ.35,055.43 கோடியாக நிர்ணயிக்கப்பட்டு, செலவினம் ரூ.35,634.10 கோடியாக செலவினம் இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

* மாவட்டங்களிலுள்ள கிராம மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளை அமைத்துக் கொடுப்பதற்கு ரூ.250 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### இராஷ்டிரிய சம் விகாஸ் யோஜனா

* இராஷ்டிரிய சம் விகாஸ் யோஜனா திட்டத்தைச் செயல்படுத்த தமிழ்நாட்டில் ஐந்து மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு, திண்டுக்கல் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் 2003–2004ஆம் ஆண்டிலும், சிவகங்கை, கடலூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் 2004–2005ஆம் ஆண்டிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதுநாள் வரை ரூ.135 கோடி இத்திட்டத்திற்காக ஐந்து மாவட்டங்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளன. திண்டுக்கல் மாவட்டத்தில் நீர்வரத்துப் பகுதி திட்டத்தின் சிறப்பம்சமாக உள்ளூர் சமுதாயத்தினரை முழுமையாக ஈடுபடுத்தி, அமைக்கப்பட்ட குழு 56,000 பேர்களுக்கு பயனளித்துள்ளது.

* திருவண்ணாமலை மாவட்டத்தில் 18 தகவல் மையங்களுக்கு கூடுதலாக ஊரக வளர்ச்சித் திட்டத்தின் விவரங்களின் தகவல்களை ஊரக மக்களுக்கு தெரிவிப்பதற்காக அமைக்கப் பட்டுள்ளன. அவை சுயஉதவிக் குழுக்களின் அங்கத்தினர்களால் இயக்கப்படுகின்றன.

* சிவகங்கை மாவட்டத்தில், 1,000 ஏக்கர் ஆயக்கட்டுகொண்ட 40 குளங்கள் தேர்வு செய்யப்பட்டு தூர்வாரி புனரமைத்தல், கரைகளை வலுப்படுத்துதல் போன்ற பாசனப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தண்ணீர் கொள்ளளவை அதிகரிப்பதுடன் 2004–2005இல் புயலால் ஏற்பட்ட வெள்ள சேதாரங்களையும் குறைத்துள்ளது.

* கடலூர் மாவட்டத்தில், உழவர்கள் நேர்காணல் உலாவாக 2004–2005 இல் பஞ்சாப் மாநிலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட செம்மண்டலத்திற்கும் கண்ணியம்பேட்டைக்கும் இடையில் கடிலம் ஆற்றுக்குக் குறுக்கே புதிதாக உயர்மட்ட பாலம் கட்டும் பணி ரூ.200 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

* நாகப்பட்டினம் மாவட்டத்தில், வேளாங் கண்ணிக்கும், வேதாரண்யத்திற்கும் இடையில் சுமார் 9.75 கி.மீட்டர் தொலைவிற்கு ரூ.219 இலட்சம் செலவில் 2004–2005 இல் சாலை அமைக்கப்பட்டுள்ளது. இது தவிர, சூரிய ஆற்றல் மின்கலமும், உயிரினக் கழிவுகளிலிருந்து வாயு தயாரிக்கும் தளவாடமும் மரபுசாரா எரிசக்தி திட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ளன.

### மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம்

* மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாட்டில், கோவை, ஈரோடு, திண்டுக்கல், தேனி, மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 33 வட்டங்களில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மண்வள பாதுகாப்பு, தோட்டக்கலை, காடு வளர்ப்பு மற்றும் சில துறைகளின் கீழ் முக்கிய பணிகள் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

* கடந்த 5 ஆண்டுகளில், ரூ.5,495 இலட்சம் (ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூ.1,099 இலட்சம்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* கடந்த 5 ஆண்டுகளில், 8,705 எக்டேர் பரப்பளவில் பல்வேறு மண்வள பாதுகாப்பு பணிகளுக்காக, மொத்தம் ரூ.1,726.98 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* கடந்த 5 ஆண்டுகளில், 15,226.50 எக்டேர் பரப்பளவிலும், சுமார் 4,800 தோட்டக்கலைப் பணியாளர்கள் பயனடையும் வகையிலும் ரூ.689.27 இலட்சம் தோட்டக்கலைத் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* கடந்த 5 ஆண்டுகளில், 4,408 எக்டேர் பரப்பளவில் பல்வேறு காடு வளர்ப்பு பணிகளுக்கும் மற்றும் 24,200 எண்ணிக்கையில் மரக்கன்றுகள் நடவு செய்யும் பணிகளுக்காகவும், மொத்தம் ரூ.1,858.11 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும், கால்நடை பராமரிப்பு, சிறுபாசனம், ஊரக சாலை பராமரிப்பு, மீன்வளம், பட்டுவளர்ச்சி,

சுற்றுலா, மரபுசாரா எரிசக்தி, பனைப் பொருள் வளர்ச்சி, தொலையுணர்வு ஆய்வுப் பணிகள் மற்றும் ஏனைய பணிகளுக்கும் இத்திட்டத்தின் கீழ் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

* நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டுகளில், ரூ.11,050 இலட்சம் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு செலவிடப்பட்டுள்ளது.

* 2001–2002ஆம் ஆண்டு முதல் 2005–2006ஆம் ஆண்டு வரை ரூ.1,826.72 இலட்சம் பல்வேறு மண்வளப் பாதுகாப்புப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்துறையின் கீழ், கம்பிவலையுடன் கட்டப்படும் வெற்றுக்கல் தடுப்புகள், நீர் சேகரிக்கும் அமைப்புகள் மற்றும் கிணறுகள் போன்ற 4,053 பணிகள் மற்றும் வடிகால் வழிபாதுகாப்பு 9,512 மீட்டர்களும் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

* கடந்த 5 ஆண்டுகளில், ரூ.1,782.08 இலட்சம் சுற்றுச் சூழல் மேம்பாடு மற்றும் வனப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்துறையின் கீழ், 1,685 தடுப்பணைகள், கசிவு நீர் குட்டைகள், கைரின்கள் மற்றும் கல்லி பிளக்கிங் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. சோலை காடுகள் 804 எக்டேர்களிலும், 4,16,800 எண்ணிக்கையிலான சோலை நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டன. தீத்தடுப்புக் கோடுகள் 1,022 கிலோ மீட்டர் வெட்டப்பட்டன. யானைவேட்டைத் தடுப்பு காவலர்கள் மற்றும் தீத்தடுப்புக் காவலர்கள் 327 நபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

* தோட்டக்கலைத் துறைக்கு இதுவரை ரூ.1,498.95 இலட்சம் செலவிடப்பட்டு, 130 எண்ணிக்கையிலான பசுமைக்குடில்கள் அமைக்கப்பட்டன. 4,188 பயனாளிகளுக்கு தோட்டக்கலை உபகரணங்கள், நீர்இறைக்கும் ஆயில் இயந்திரங்கள், விசைத்தெளிப்பான்கள், விவசாயக்கருவிகள், கைத்தெளிப்பான்கள் ஆகியவை விநியோகிக்கப்பட்டுள்ளன. 5,050 விவசாயிகளுக்கு உயர்ரக தொழில்நுட்ப தோட்டக்கலைப் பயிற்சி வழங்கப்பட்டது. மேலும், கால்நடை பராமரிப்பு, சிறுபாசனம், சாலைகள், சுற்றுலா, உள்ளாட்சி நிறுவனங்கள் மேம்பாடு, மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரம், மனிதவள மேம்பாடு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பணிகள் ஆகிய துறைகளின்கீழ், 2001–2006ஆம் ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது. ✶

# செய்தி-மக்கள்தொடர்புத்துறை

**பத்திரிகையாளர்கள் நலன்**

* பத்திரிகையாளர்களுக்கு ஒய்வூதியம் வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிற ஒய்வூதியம் 2001ஆம் ஆண்டு முதல் ரூ.2,000லிருந்து ரூ.3,000 ஆக உயர்த்தப்பட்டு 67 பத்திரிகையாளர்கள் பயனடைந்துள்ளனர்.

* பத்திரிகையாளர்களுக்கு குடும்ப ஒய்வூதியம் 4–9–2001 முதல் ரூ.500லிருந்து ரூ.1,500ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

* அங்கீகாரம் அல்லது அடையாள அட்டைகள் பெற்று 20 ஆண்டுகள் அல்லது அதற்குமேல் தொடர்ச்சியாகப் பணியாற்றிய பத்திரிகை ஆசிரியர்கள், செய்தியாளர்கள், புகைப்படக் காரர்கள் மற்றும் தொலைக்காட்சி நிறுவனச் செய்தியாளர்கள், ஒளிப்பதிவாளர்கள் ஆகியோரில் எவரேனும் பணியிலிருக்கும் போது இயற்கை எய்தினால் அவர்களது குடும்பத்திற்கு பத்திரிகையாளர் குடும்ப உதவித்திட்டத்தின் மூலம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் நிதி உதவி 2001 ஆம் ஆண்டு முதல் ரூ.50,000லிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தப்பட்டு, இயற்கை எய்திய 3 பத்திரிகையாளர் குடும்பங்களுக்கு ரூ.6 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

* சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் உள்ள செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்கள் உட்பட 1,032 பத்திரிகை யாளர்களுக்கு இலவசப் பேருந்து பயண அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

* காஞ்சிபுரம், இராமநாதபுரம், மதுரை, தருமபுரி, சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 249 பத்திரிகை யாளர்களுக்கு சலுகை விலையில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**நினைவகங்கள்**

* தூத்துக்குடி மாவட்டம் கட்டாரங்குளம் கிராமத்தில், ரூ.28 இலட்சம் செலவில் வீரன் அழகு முத்துக்கோன் மணிமண்டபம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 8.12.2004 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

* கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்களுடைய நினைவாக, திருநெல்வேலியில் ரூ. 75 இலட்சம் செலவில் மணிமண்டபம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 23.6.2005 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

* பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு நிறைவு விழா நினைவாக பெருந்தலைவர் காமராஜர் பிறந்த ஊரான விருதுநகரில் நகராட்சி தங்கும் விடுதி வளாகத்தில், ரூ.5 இலட்சத்தில் நினைவுத் தூணும், ரூ.9 இலட்சம் செலவில் மணிமண்டபமும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

* சென்னை மெரினா கடற்கரையில் உள்ள பாரதரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிட வளாகத்தில், டாக்டர் எம்.ஜி.ஆர். அருங்காட்சியகம் ரூ.38.50 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

* நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் நினைவாக, தென்னிந்திய நடிகர் சங்கத்தின் மூலமாக நினைவு மண்டபம் அமைப்பதற்கென, அடையாறு ஆந்திர மகிளசபா அருகில் ரூ.10 கோடியே 19 இலட்சம் மதிப்பீட்டிலான 0.65 ஏக்கர் அரசு மனையிடம் தென்னிந்திய நடிகர் சங்கத்திற்கு இலவசமாக ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இந்த இடத்தில் ரூ.4.2 இலட்சம் செலவில் தார்ச்சாலை மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

* தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களுக்கு மணி மண்டபம் அமைக்கும் பொருட்டு, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், ஓமந்தூர் கிராமத்தில் 0.46.5 எக்டேர் நிலம் ரூ.43,500 செலவில் கையகப்படுத்தப் பட்டுள்ளது. மணிமண்டபம் கட்டுவதற்கு ரூ.75 இலட்சத்திற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.


* கிருஷ்ணகிரி மாவட்டம், தொரப்பள்ளிக்கு அருகிலுள்ள மோர்னப்பள்ளியில் மூதறிஞர் இராஜாஜி அவர்களுக்கு மணிமண்டபம் அமைத்திட 1.00 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

* ஈரோடு மாவட்டம், அரச்சலூர் கிராமம் ஓடாநிலையில், தீரன் சின்னமலைக்கு மணிமண்டபம் அமைக்க 3.05.0 எக்டேர் தனியார் நிலம் ரூ.19.67 இலட்சம் செலவில் அரசின் சார்பில் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு ரூ.30 இலட்சத்தில் மணிமண்டபமும், ரூ.20 இலட்சத்தில் சமுதாயக் கூடமும் உருவாக்கிடும் வகையில், அரசின் சார்பில் அடிக்கல் நாட்டப்பட்டு, கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

* தருமபுரி மாவட்டம், அதியமான் கோட்டையில், அதியமான் கோட்டம் மற்றும் திருமண மண்டபம் அமைத்திடும் வகையில், 0.81.0 எக்டேர் நிலம் ரூ.1,28,253 செலவில் கையகப்படுத்தப்பட்டு, அவற்றை உருவாக்குவதற்காக ரூ.115 இலட்சம் மதிப்பீட்டிலான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

* திருப்பூர் குமரன் நூற்றாண்டு விழாவினை யொட்டி, திருப்பூர் குமரன் நினைவகத்தில் அவரது மார்பளவு வெண்கலச் சிலை நிறுவப்பட்டுள்ளது. மேலும், திருப்பூர் குமரன் நூற்றாண்டு நினைவாக தபால் தலை வெளியிடப்பட்டது.

* முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன் மற்றும் தந்தை பெரியார் ஆகியோரின் 9 அடி உயர வெண்கலச்சிலைகள், ஒவ்வொன்றும் தலா ரூ.2.50 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டு, புதுடெல்லி நாடாளுமன்ற வளாகத்தில் நிறுவப்படவுள்ளன.



* ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில், 28 நினைவகங்களில் சம்பந்தப்பட்ட தலைவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய கிரானைட் கல்வெட்டுகள் வைக்கப்பட்டுள்ளன.

* தியாகி செண்பகராமன் அவர்களின் முழுவுருவச் சிலை சென்னை, கிண்டியிலுள்ள காந்திமண்டபம் வளாகத்தில் நிறுவப்படவுள்ளது.

* செஞ்சிக்கோட்டையை தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்த அரசன் தேசிங்கு ராஜன் உயிர்நீத்த இடமான விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டத்திலுள்ள கடலி கிராமத்தில் நினைவகம் கட்டப்படும்.

* மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி, ரெட்டமலை சீனிவாசன் அவர்களுக்கு, சென்னையில் ரூ.19.5 இலட்சம் மதிப்பீட்டில் நினைவுச்சின்னம் மற்றும் நினைவு மண்டபம் அமைக்க பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

* பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் அவர்கள், தனது வாழ்நாளில் கடைசி காலத்தில் வாழ்ந்த மதுரை – திருநகர் இல்லம் ரூ.22.59 இலட்சம் செலவில் கையகப்படுத்தப்பட்டு, ரூ.34 இலட்சம் மதிப்பீட்டில் அரசின் சார்பில் நினைவு இல்லமாக உருவாக்கிடும் பணிகள் விரைந்து மேற்கொள்ளப் பட்டுள்ளன.

* வீரபாண்டிய கட்ட பொம்மனுடன் போர்ப்படைத் தளபதியாக விடுதலைப்போரில் உடனிருந்த வெள்ளையத் தேவனுக்கு, தூத்துக்குடி மாவட்டம், வல்லநாடு கிராமத்தில் ரூ. 25 இலட்சம் மதிப்பீட்டில் மணிமண்டபமும், விடுதலைப் போராட்ட வீரர் சுந்தரலிங்கம் அவர்களுக்கு தூத்துக்குடி மாவட்டம், கவர்னகிரியிலுள்ள ஒட்டப்பிடாரம் வட்டம் பாஞ்சாலங்குறிச்சி என்ற இடத்தில் ரூ. 25 இலட்சம் மதிப்பீட்டில் மணிமண்டபமும், தமிழ் மொழி வளர்ச்சிக்கென தன் வாழ்நாள் முழுமையையும் அர்ப்பணித்துக்கொண்ட 'மொழி ஞாயிறு' தேவநேயப்பாவாணர் அவர்களுக்கு மதுரையில் ரூ.39.60 இலட்சம் மதிப்பீட்டில் மணிமண்டபமும் அமைக்கும் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன.

* தினத்தந்தி நாளிதழ் மூலமாக தமிழ் பத்திரிகைத் துறையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, தமிழ்த் தொண்டாற்றிய முன்னாள் அமைச்சரும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவருமான சி.பா ஆதித்தனார் அவர்கள், தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் கிராமத்தில் வாழ்ந்த இல்லத்தினை ரூ.7.50 இலட்சம் செலவில் நினைவில்லமாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

* சிவகங்கை மாவட்டம், அரியக்குடி இராமானுஜ அய்யங்கார் அவர்கள், காரைக்குடியில் வாழ்ந்த இல்லத்தை நினைவகமாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

* முகம்மது நபி (சல்) அவர்களை பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இயற்றப்பட்ட "சீறாப்புராணம்" என்னும் சிறப்புமிகு காவியத்தைப் படைத்த எட்டையபுர அரசவைக் கவிஞர் உமறுப்புலவர் அவர்கள், தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரத்தில் வாழ்ந்த நினைவிடத்தில் புதிய எழிலோடும், பொலிவோடும் ரூ.22.50 இலட்சம் மதிப்பில் மணிமண்டபம் அமைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**திரைப்பட விருதுகள்**

தேர்வு பெறும் திரைப்படங்களுக்கு கீழ்க்கண்டவாறு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன :

1. சிறந்த படம் – முதல் பரிசு : ரூ.2 இலட்சம் ரொக்கம் மற்றும் நினைவுப்பரிசு
2. சிறந்த படம் – இரண்டாம் பரிசு : ரூ.1 இலட்சம் ரொக்கம் மற்றும் நினைவுப்பரிசு
3. சிறந்த படம் – மூன்றாம் பரிசு : ரூ.75 ஆயிரம் ரொக்கம் மற்றும் நினைவுப்பரிசு
4. சிறந்த படம் – சிறப்புப் பரிசு : ரூ.75 ஆயிரம் ரொக்கம் மற்றும் நினைவுப்பரிசு

* பெண்களைப் பற்றி உயர்வாக சித்தரிக்கும் திரைப்படங்களுக்கு சிறப்புப் பரிசாக ரூ.1.25 இலட்சம் மற்றும் நினைவுப்பரிசு வழங்கப்படுகிறது.

* தேர்வு பெறும் சிறந்த நடிகர்கள், நடிகைகள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 5 பவுன் தங்கப்பதக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது. 2000ஆம் ஆண்டு முதல் ஆண் மற்றும் பெண் "டப்பிங்" கலைஞர்களுக்கான (பின்னணிக் குரல் கொடுப்பவர்) விருதுகளும் சேர்த்து வழங்கப்பட்டு வருகின்றன.

* 2001ஆம் ஆண்டு முதல், சிறந்த குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த நகைச்சுவை நடிகை போன்றவர்களுக்கான திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

* தமிழ்த் திரைப்படத்துறை வரலாற்றில் முத்திரை பதித்து, மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்ற அறிஞர் அண்ணா, கலைவாணர், ராஜா சாண்டோ, எம்.ஜி.ஆர்., கவிஞர் கண்ணதாசன், நடிகர் திலகம் சிவாஜிகணேசன் மற்றும் தியாகராஜ பாகவதர் ஆகியோர் பெயர்களில், குறிப்பிடத்தக்க சாதனை புரிந்தவர்களுக்கு கலைத்துறை வித்தகர் விருதுகள் வழங்கப்படுகின்றன.

* திரைப்படக்கல்லூரி மாணவர்கள் தயாரிக்கும் குறும்படங்களுக்கு தமிழ்நாடு அரசு திரைப்படத் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த படத்தொகுப்பாளர் மற்றும் சிறந்த படம் பதனிடுபவர் ஆகியோர்களுக்கு தலா 1 பவுன் தங்கப்பதக்கம், ரூ.5 ஆயிரம் ரொக்கம் மற்றும் நினைவுப் பரிசு ஆகியவை வழங்கப்படுகின்றன.

* 2000,2001 மற்றும் 2002ஆம் ஆண்டுகளுக்கான திரைப்படத் துறையினருக்கான விருதுகளை 03.12.2004 அன்று சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, திரைப்படத்துறையினருக்கு சிறப்பு செய்தார்கள்.

* குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்படும் தரமான தமிழ்த்திரைப்படங்களுக்கு அரசு மானியத் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் படங்களைத் தேர்ந்தெடுக்க ஒரு தேர்வுக் குழு அரசால் அமைக்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப் படும் ஒவ்வொரு படத்திற்கும் ரூ.5 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு வந்தது. 2003ஆம் ஆண்டு முதல், இம்மானியத் தொகையை, ரூ.7 இலட்சமாக உயர்த்தி வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளது.

**மானியத் தொகை விவரங்கள்**

| வருடம் | தேர்ந்தெடுக்கப்பட்ட திரைபடங்கள் | மானியத் தொகை |
|---|---|---|
| 2000 | 21 (தலா ரூ.5 இலட்சம் வீதம்) | ரூ.1,05,00,000 |
| 2001 | 24 (தலா ரூ.5 இலட்சம் வீதம்) | ரூ.1,20,00,000 |
| 2002 | 16 (தலா ரூ.5 இலட்சம் வீதம்) | ரூ.80,00,000 |
| 2003 | 24 (தலா ரூ.7 இலட்சம் வீதம்) | ரூ.1,68,00,000 |
| 2004 | 29 (தலா ரூ.7 இலட்சம் வீதம்) | ரூ.2,03,00,000 |
| | மொத்தம் | ரூ.6,76,00,000 |

இதற்குரிய அரசாணைகள் வெளியிடப்பட்டு திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு விரைவில் மானியத் தொகைகள் வழங்கப்பட உள்ளன.

* குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு தலா ரூ.5 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது. 2000, 2001, 2002, 2003, 2004 ஆகிய ஆண்டுகளில் குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு மானியத் தொகைகள் விரைவில் வழங்கப்படவுள்ளன. 2003ஆம் ஆண்டு முதல் இம்மானியத் தொகையை ரூ.7 இலட்சமாக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

* குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு, முதல் நான்கு வாரங்களுக்கு கேளிக்கை வரிவிலக்கு அளிக்கப்படுகிறது.

* சிறந்த திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு ரொக்கப் பரிசு, தங்கப்பதக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ் ஆகியவை வழங்கப்படுகின்றன.

* திரைப்படத்துறையில் குறிப்பிடத்தக்க சாதனை புரிந்தவர்களுக்கு கலைத்துறை வித்தகர் விருதுகள் வழங்கப்படுகின்றன.

* அரசுக்குச் சொந்தமான இடங்களில் படப்பிடிப்பு நடத்த ஒற்றைச் சாளர முறையில் (Single Window System) அனுமதி வழங்கப்படுகிறது. அதன்படி, திரைப்பட படப்பிடிப்பு நடத்தப்படுவதை ஊக்குவிக்கின்ற வகையில் பொது இடங்களில் படப்பிடிப்புகள் நடத்துவதற்கான கட்டண விகிதங்கள் நாளொன்றுக்கு ரூ.1,00,000லிருந்து ரூ.25,000ஆகவும், ரூ.50,000லிருந்து ரூ.10,000 ஆகவும், ரூ.25,000லிருந்து ரூ.5,000ஆகவும் 1.10.2004 முதல் குறைக்கப்பட்டுள்ளன.

* திரைப்படத்துறையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க, மாவட்ட மற்றும் மாநில அளவில் குழுக்கள் அமைக்கப்பட உள்ளன.

* சண்டைக் காட்சியில் நடிக்கும்பொழுது, சண்டைப் பயிற்சியாளர் காயமுற்று இறந்தால், அவரது குடும்பத்தினருக்கு ரூ.1 இலட்சமும், செயல்பட முடியாத அளவுக்கு ஊனமுற்றால் ரூ.50 ஆயிரமும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. திரைப்பட சண்டைக்காட்சியில் நடிக்கும் பொழுது மரணமடைந்த எஸ்.சுதாகர் என்ற ஸ்டண்ட் நடிகருக்கு 26.6.2002இல் ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டது.

## தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம்

* 2001–2002ஆம் கல்வி ஆண்டு முதல், ஒவ்வொரு பட்டயப் படிப்பிற்கும் அனுமதிக்கப் பட்டிருந்த மாணவ/மாணவியர்கள் எண்ணிக்கை 12–லிருந்து 14ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

* இந்நிறுவனத்தில் பயிற்றுவிக்கப்படும் 5 பட்டயப் படிப்புகளுக்கும், புதுடெல்லியில் உள்ள அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி குழு (AICTE) 2002 முதல் 2007 கல்வியாண்டு வரை அங்கீகாரம் அளித்துள்ளது.

* 11.05.2005 முதல் 22.05.2005 வரை பாரிஸ் நகரில் நடைபெற்ற CANNES திரைப்பட விழாவில் இந்நிறுவன மாணவர்களால் தயாரிக்கப்பட்ட 4 பட்டயப் படங்கள் திரையிடப்பட்டன.

* 2005ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஜெர்மனியில் நடைபெற்ற பாலிவுட் அண்ட் பியான்ட் என்கிற திரைப்பட விழாவில் இந்நிறுவன மாணவர்களின் 4 பட்டயப் படங்கள் திரையிடப்பட்டன.

* மாணவர்களுக்கு நவீனத் தொழில்நுட்ப அடிப்படையில் பயிற்சி அளித்திடும் வகையில், பகுதி–II திட்டத்தின் கீழ் 2003–2004ஆம் ஆண்டில் ரூ.11 இலட்சத்தில் இன்டர்நெட் வசதியுடன் கணினிகள் வாங்கப்பட்டுள்ளன. பகுதி–II திட்டத்தின் கீழ், 2004–2005ஆம் ஆண்டில், திரைத்துறை தொடர்பான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ரூ.61.45 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

* தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் மூலம், அரசின் முக்கிய நிகழ்ச்சிகளும், அரசின் பல்வேறு நலத் திட்டங்களும் படப்பிடிப்பு செய்யப்பட்டு, அவைகள் தொகுக்கப்பட்டு வீடியோ செய்தி மலர்களாக தயாரிக்கப்பட்டு, தனியார் தொலைக் காட்சிகளிலும் மற்றும் சென்னை தொலைக் காட்சியிலும் ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகின்றன. 35மிமீ வண்ண படச்சுருளில், ஆண்டிற்கு

12 கருத்து விளக்கப் படங்கள் தயாரிக்கப்பட்டு, அவை தமிழ்நாட்டிலுள்ள திரையரங்குகளில் திரையிடப்பட்டு வருகின்றன.

* தற்போதைய தமிழ்நாடு அரசால், திரைப்படப் பிரிவில் பல்வேறு நவீன தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 2002ஆம் ஆண்டிலிருந்து வீடியோ செய்தி மலர்கள் 60 குறுந்தகடுகளில் நகல் எடுக்கப்பட்டு கள விளம்பரத்திற்காக அனுப்பப்பட்டு வருகின்றன. மேலும், இவ்வலுவலகத்தில் குறுந்தகட்டிலும் மற்றும் டி.வி.டி.யிலும் ஒரே நேரத்தில் 13 நகல்கள் எடுக்கும் கருவியான மல்டி காப்பியர் சிஸ்டம் ரூ.4.31 இலட்சத்தில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

* 35மிமீ வண்ண படச்சுருளில் தயாரிக்கப்படும் கருத்து விளக்கப்படங்கள் ஒவ்வொன்றையும் 75 பிரதிகள் எடுத்து மைய அரசு திரைப்படப்பிரிவின் அனுமதியுடன் திரையில் வெளியிடுவதோடு, கூடுதலாக 30 பிரதிகள் எடுக்கப்பட்டு, தமிழகத்திலிருக்கும் ஒவ்வொரு செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கும் நேரடியாக வழங்கப்பட்டு வருகின்றன. இப்பிரதிகளை, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள், மாவட்டங்களில் உள்ள திரையரங்குகளின் மூலம் திரையிட்டு வருகின்றனர்.

* சட்டமன்ற கூட்டத்தொடர் நடைபெறும் நாட்களில், அந்நிகழ்வுகள் நேரடியாக வீடியோவில் ஒளிப்பதிவு செய்யப்பட்டு, பின்னர், படத்தொகுப்பு செய்யப்பட்டு தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பு செய்ய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

* துல்லியமான படப்பிடிப்புக்காக, இவ்வலுவலகத்தில், பி.டி.4, டாட் டிஜிட்டல் போர்ட்டபிள் ஆடியோ ரிக்கார்டர், மல்டி மீடியா சிஸ்டம் மற்றும் பீட்டா வீடியோ கேமராக்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது, 2005–2006ஆம் நிதியாண்டில், Non Linear Video Editing System மற்றும் Digital Electronic News Gathering Video Shooting System ஆகியவைகள் ரூ.39.80 இலட்சம் செலவில் கொள்முதல் செய்ய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## தமிழரசு

* தமிழக அரசின் செயல்பாடுகள், வளர்ச்சித் திட்டங்கள், சாதனைகள் போன்றவற்றை மக்களிடையே சேர்க்கும் தலைசிறந்த ஊடகமாக 'தமிழரசு' இதழ், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் வெளியிடப்பட்டு வருகின்றது.

* அரசின் கொள்கைகள், அறிவிப்புகள், திட்டங்கள், செயல்பாடுகள், சாதனைகள், நலத்திட்ட உதவிகள், செய்தி வெளியீடுகள் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் ஆகியவற்றைத் தாங்கி 'தமிழரசு' இதழ், தமிழில் மாதந்தோறும், ஆங்கிலத்தில் மூன்று மாதத்திற்கு ஒரு முறையும், செய்தி மக்கள் தொடர்புத்துறையால் வெளியிடப்பட்டு வருகிறது.


* இந்த இதழ், 35,000 பிரதிகள் அச்சிடப்பட்டு வந்த நிலையில், 2001ஆம் ஆண்டு முதல் அதிக அளவில் சந்தாக்கள் சேர்க்கப்பட்டதன் மூலம், 31.12.2005 வரை சந்தாதாரர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டு 83,600 பிரதிகள் அச்சிடப்பட்டு, தமிழக அரசின் செயல்பாடுகள் அதிக எண்ணிக்கையில் வாசகர்களை சென்றடைவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

* கடந்த 5 வருடங்களில் மட்டும் (டிசம்பர், 2005 முடிய) "தமிழரசு" இதழுக்கான சந்தாத் தொகையாக ரூ.6,62,54,000 (ரூபாய் ஆறு கோடியே அறுபத்திரண்டு இலட்சத்து ஐம்பத்து நான்காயிரம் மட்டும்) வருவாய் ஈட்டப்பட்டு, அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## பொருட்காட்சி

* செய்தி மக்கள் தொடர்புத்துறையின் பொருட்காட்சிப் பிரிவால் நடத்தப்படும் அரசுப் பொருட்காட்சிகளில், அரசுத்துறைகள், அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவை பங்கேற்கின்றன. அரசுப் பொருட்காட்சிகள் மக்களுக்குப் பொழுது போக்காக அமைவதோடு மட்டுமல்லாமல் வேலைவாய்ப்பையும் அளித்து வருகின்றன.

* கடந்த 4 ஆண்டுகளில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிகளின் மூலம் அரசுக்கு ரூ.6.20 கோடி நிகர இலாபம் வரப்பெற்றுள்ளது. சென்னையில் ஆண்டுதோறும் நடைபெறும் குடியரசு தினவிழாவில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் கலந்துகொள்வதும், ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்வதும் இத்துறையின் பங்களிப்பாகும். ஆண்டுதோறும் அக்டோபர் திங்கள் 2ஆம் நாள் சென்னை காந்தி மண்டபத்தில் நடைபெறும், காந்தி ஜெயந்தி விழாவில் காந்திஜியின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் புகைப்படக் கண்காட்சியும் மற்றும் பிற துறைகள் பங்கேற்கும் கண்காட்சியும் நடத்தப்பட்டு வருகிறது. அதுமட்டுமின்றி ஆண்டுதோறும் புதுதில்லியில் நடக்கும் மலர்ப்பேரணியில் தமிழ்நாடு அரசின் சார்பில் கலந்து கொண்டு முதல் பரிசினை பெற்று வருகிறது. மேலும், ஆண்டுதோறும் நவம்பர் 14 முதல் நவம்பர் 27 வரையில் புதுதில்லி பிரகதி மைதானத்தில் நடைபெறும் இந்திய பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில், தமிழ்நாடு சார்பில் அரங்கு அமைத்து கலந்து கொண்டு வருகிறது.




✶ 30 மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு ரூ.15 இலட்சம் செலவில் கணினிகள், ரூ.4.50 இலட்சம் செலவில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் –

✶ தலைமையிட வரவு–செலவு மற்றும் கணக்குப் பிரிவிற்கு ரூ.90 ஆயிரம் செலவில் நகலெடுக்கும் கருவி –

✶ மேற்கோள் பிரிவில் ரூ.12 இலட்சம் செலவில் மின்னணு ஆவணக் காப்பக முறை –

✶ தலைமையிட புகைப்படப் பிரிவிற்கு ரூ.70 ஆயிரத்தில் ஒரு பிலிம் நெகட்டிவ் ஸ்கேனர் கருவி, ரூ.2.15 இலட்சம் செலவில் ஒரு டிஜிட்டல் ஸ்டில் புகைப்படக் கருவி (10 எம்பி) –

✶ தமிழ்நாடு திரைப்படப் பிரிவிற்கு ரூ.11.60 இலட்சம் செலவில் ஒரு நான் லீனியர் வீடியோ எடிட்டிங் கருவி, ரூ.28.20 இலட்சம் செலவில் டிஜிட்டல் வீடியோ இ.என்.ஜி. படப்பிடிப்புச் சாதனம் –

✶ தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் முன்காண் திரையரங்கில் ரூ.22 இலட்சம் செலவில் டால்பி டிஜிட்டல் சிஸ்டம் மற்றும் டி.டி.எஸ். சிஸ்டம் மற்றும் ரூ.3 இலட்சம் செலவில் 5 பென்டியம் கணினிக் கருவிகள் –

✶ மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்காக ரூ.42 இலட்சம் செலவில் 6 வீடியோ வாகனங்கள் –

✶ விழுப்புரம் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலக உபயோகத்திற்காக ரூ.4.70 இலட்சம் செலவில் ஒரு வாகனம் –

✶ ரூ.6 இலட்சம் செலவில், தமிழரசு அச்சகத்தின் நிருவாகப் பிரிவு இயங்கும் இரண்டாவது தளம் விரிவாக்கம் –

என, மொத்தம் ரூ.152.75 இலட்சம் செலவில் நடப்பு நிதியாண்டில் (2005–2006) பகுதி–II திட்டப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. □

# சுற்றுலாத்துறை

✶ கடந்த 5 ஆண்டுகளில் சுற்றுலாத்துறைக்கு ரூ.139.67 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழக சுற்றுலாத்துறை வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளது.

✶ தமிழகத்தில் ஓட்டல்களில் விதிக்கப்படும் சொகுசுவரி 2002–2003இல் குறைக்கப் பட்டுள்ளது.

✶ ரூ.19 கோடி திட்ட மதிப்பீட்டில் 8.12.2003 அன்று மாமல்லபுர வளர்ச்சிப் பணிகள், காஞ்சிபுரத்தில் நடைபெற்ற விழாவின்போது, மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இதில், முதல் கட்டப் பணிகள் ரூ.5 கோடிக்கு முடிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டப் பணிகள் ரூ.5 கோடி அளவிற்கு விரைவில் தொடங்கப்படும்.


✶ கடந்த ஐந்து ஆண்டுகளில், அகமதாபாத், சண்டிகர், கவ்காத்தி, வாரணாசி, புவனேஸ்வர், ஆகிய ஊர்களில் சுற்றுலாத் தகவல் மையங்களும் ஆக்ரா மற்றும் ஜெய்ப்பூரில் சுற்றுலா அலுவலகங்களும் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

✶ சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சிக்காக வேலையில்லா பட்டதாரிகளைத் தேர்வு செய்து சென்னை, மதுரை, உதகமண்டலம் போன்ற மையங்களில் சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சிகள் 90 பேருக்கு ரூ.5 இலட்சம் செலவில் அளிக்கப்பட்டன.

✶ ஆதிசங்கரர் மற்றும் விவேகானந்தா சுற்றுலா சுற்றுச்சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.427.64 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

✶ கிராமிய சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ், கழுகுமலை மேம்பாட்டிற்கு ரூ.48.68 இலட்சம், செட்டிநாடு மேம்பாட்டிற்கு ரூ.50 இலட்சம், தீர்த்தமலை மேம்பாட்டிற்கு ரூ.50 இலட்சம், திருக்குறுங்குடிக்கு ரூ.50 இலட்சம், தேவிபட்டினத்திற்கு ரூ.75.60 இலட்சம் மற்றும் திருப்புடைமருதூருக்கு ரூ.50 இலட்சம் என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✶ நவகிரகத் தலங்கள் செட்டிநாடு, பழவேற்காடு, பிச்சாவரம் மற்றும் தரங்கம்பாடி உள்ளிட்ட புராதனப் பெருமை கொண்ட இடங்களை மக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் சுற்றுலாத் தலங்களை சுற்றுலாத்துறை மேம்படுத்தியுள்ளது.



* மதுரை திருமலைநாயக்கர் மகாலிலுள்ள ஒலி – ஒளிக் காட்சி அமைப்பு ரூ.96.18 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.
* கன்னியாகுமரியில் படகு குழாம் பகுதியில் ஒலி–ஒளிக் காட்சி அமைக்க, மைய அரசு ரூ.225 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.
* 64ஆவது ஸ்கால் மாநாடு 2003ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19 முதல் 24 வரை சென்னையில் நடைபெற்றது. ஸ்கால் மாநாட்டில் 700 முக்கியப் பிரமுகர்கள் 38 நாடுகளிலிருந்து பங்கேற்றனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இம்மாநாட்டில் பங்கேற்று சிறப்புச் செய்தார்கள். சென்னையில் நடத்தப்பட்ட இம்மாநாட்டிற்கு மத்திய அரசு விருது வழங்கிப் பாராட்டியுள்ளது. இந்த மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்காக 7 அம்ச திட்டத்தையும் "மகிழ்வூட்டும் தமிழ்நாடு நீங்களே அனுபவியுங்கள்'' என்ற விளம்பர உத்தியையும் அறிமுகப்படுத்தினார்கள்.
* 2003 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகமாக உள்ளதால், தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவருவதில் இரண்டாம் மாநிலமாகத் திகழ்கிறது.
* இந்தியாவில் உள்ள அனைத்து ஓட்டல் மற்றும் உணவக உரிமையாளர்களின் மாநாடு, 2005 அக்டோபர் 15 முதல் 17 வரை வெகுச்சிறப்பாக சென்னையில் நடைபெற்றது.
* சுனாமி தாக்கியவுடன் சுற்றுலாத்துறை நிவாரணப் பணிகளில் துரித நடவடிக்கை மேற்கொண்டது. இந்தியாவின் பிற பகுதிகள் / வெளிநாடுகளில் வசிக்கும் சுற்றுலாப் பயணிகளின் உறவினர்களுக்குத் தகவல் அளிக்க ஒரு அலுவலர் நியமிக்கப்பட்டார். சுனாமிக்குப் பின் தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலாப் பகுதிகளைப் பற்றிய தகவல்கள் வலைதளம் மூலம் வழங்கப்பட்டன. சுனாமியால் பாதிக்கப்பட்ட சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சுற்றுலா வசதிகளை சீர் செய்ய மத்திய அரசிடமிருந்து ரூ.535.50 இலட்சம் நிதி உதவி பெறப்பட்டுள்ளது.
* தமிழ்நாடு சுற்றுலாத் துறை "ட்டி 3" அமெடியஸ் விருது, கலிலியோ எக்ஸ்பிரஸ் பயணம் மற்றும் சுற்றுலா விருது, பாட்வா சர்வதேச விருது போன்ற தேசிய மற்றும் உலக அளவில் பல பெருமைக்குரிய பாராட்டுக்களையும், பரிசுகளையும் பெற்றுள்ளது.
* கப்பல் வழிச் சுற்றுலாவை ஈர்ப்பதில் தமிழக சுற்றுலாத் துறை பெரும் பங்கு வகிக்கிறது. கப்பல் வழி சுற்றுலாப் பயணிகளை சென்னை மாநகர், மாமல்லபுரம், காஞ்சிபுரம், மதுரை, திருநெல்வேலி போன்ற இடங்களுக்கு அழைத்துச் சென்று பாரம்பரிய முறையில் வரவேற்பு அளிக்கப்பட்டு வருகிறது.
* தமிழ்நாட்டின் முக்கிய சுற்றுலாத் தலங்கள் பற்றிய விவரங்கள், விழாக்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் உணவகங்கள், தங்கும் விடுதிகள் பற்றிய விரிவான விளக்கங்களை உலகில் எந்தவொரு மூலையிலிருக்கும் சுற்றுலாப் பயணியும் எளிதாக அறிந்துகொள்ளும் வண்ணம் ஒரு சுற்றுலா வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது.
* இணையதள(Online Reservation) முன் பதிவு வசதி 2–7–2004 முதல் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இவற்றின் மூலம் நவம்பர் 2005 வரை ரூ.32.13 இலட்சம் வரை வருமானம் கிடைத்துள்ளது.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்**

* தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இரயில் சுற்றுலாவைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் கொல்கத்தா, மும்பை, டில்லி, அகமதாபாத், லக்னோவிலிருந்து இரயில் சுற்றுலாவை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதன் மூலம் நவம்பர் 2005 வரை ரூ.221 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது.
* சுற்றுலா மேம்பாட்டிற்காக இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மற்றும் இதர மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகங்களுடன் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கூட்டு ஒப்பந்தம் செய்துள்ளது.
* அதிக வருவாய் ஈட்டக்கூடிய திட்டத்தின் கீழ், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், மைய அரசும் இணைந்து கம்பி வழிப் பயணத்திற்காக 2003 – 2004 நிதியாண்டில் கொடைக்கானலுக்கு ரூ.1,452 இலட்சமும், உதகமண்டலத்திற்கு ரூ.1,597 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்காடு மற்றும் கன்னியாகுமரியிலும் இதனை அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
* தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கடந்த நான்காண்டுகளில் ரூ.616.01 இலட்சம் இலாபம் ஈட்டி சிறப்புடன் செயல்படுகிறது.
* அறுபடை வீடு சுற்றுலா சுற்றுச்சாலை மேம்பாட்டிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
* சமண சமய சுற்றுலா சுற்றுச்சாலையை மேம்படுத்த முதற்கட்ட பணிகள் தொடங்குவதற்கு மைய அரசு ஆணை வழங்கியுள்ளது.
* ஏற்காட்டிலுள்ள முக்கிய இடங்களின் மேம்பாட்டிற்காக ரூ.498 இலட்சம் மதிப்பீட்டில் முதற்கட்ட பணிகள் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
* திருவண்ணாமலை கட்டமைப்பு மற்றும் சுற்றுலா தல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.5 கோடி மதிப்பீட்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
* 2004ஆம் ஆண்டில் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் 280 இலட்சம் பேர்களும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 10.58 இலட்சம் பேர்களும் வருகை புரிந்திருக்கின்றார்கள். இவை கடந்த ஆண்டைவிட 17 சதவிகிதம் அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

* * *

# சமூகநலத்துறை



* இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில் தமிழகத்தில் 48,74,772 மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு, 2,99,787 மகளிர் சுய உதவிக்குழுக்கள் உருவாக்கப் பட்டுள்ளன. இம்மகளிர் குழு உறுப்பினர்கள் ரூ.889.16 கோடியை சேமித்துள்ளனர். சுயதொழில் தொடங்கும் வகையில் அவர்களுக்கு ரூ.1,563.86 கோடி கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.
* 25.8.05 அன்று, சென்னையில் நடைபெற்ற மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான மாநில மாநாட்டில், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு தற்காலத்திற்கு ஏற்ற பொருளாதார மற்றும் வேலை வாய்ப்புக்களை உருவாக்க வழி செய்யும் வகையில், நவீன பயிற்சி திட்டங்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு தற்போது பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.
* 2005இல் சென்னையில் நடைபெற்ற மாநில அளவிலான நவராத்திரி பொருட்காட்சியில், சுய உதவிக்குழுக்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விற்பனை, வரலாறு காணாத வகையில் ரூ.1.57 கோடியை எட்டியது. புதுதில்லியில் நடைபெற்ற தேசிய அளவிலான இந்திய பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் ரூ.1.03 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டது.
* தமிழகத்தில் வறுமையைக் குறைக்கவும், பெண்கள் மற்றும் பாதிக்கப்பட்டோரை ஆற்றல் படுத்தவும் ரூ.717 கோடி மதிப்பீட்டில் "புது வாழ்வுத் திட்டம்" நடப்பாண்டில் தொடங்கப்பட்டுள்ளது.
* பெண்குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், ரூ.125.46 கோடி செலவில், 82,348 பெண் குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.
* 17,112 மகளிர் பயன்பெறும் வகையில் ரூ.22.25 கோடி செலவில், திருமண நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.
* ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையரது மகள் திருமண உதவித் திட்டத்தின் கீழ், ரூ.694.60 இலட்சம் செலவில் 7,774 பெண்கள் பயனடைந்துள்ளனர்.
* ரூ.5.76 கோடி செலவில் 29,299 பெண்களுக்கு இலவச தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
* தொட்டில் குழந்தை திட்டத்தின் கீழ், 5 வரவேற்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. 188 இடங்களில் தொட்டில்கள் வைக்கப்பட்டு ரூ.21.95 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.
* சுனாமிப் பேரலையால் மிகவும் பாதிக்கப்பட்ட ஆதரவற்ற குழந்தைகள், பெற்றோர்களை இழந்த வளர்இளம் பெண்கள் ஆகியோர் மறுவாழ்வுக்காக, ஆதரவற்ற குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் புதிய சேவை இல்லங்கள் ரூ.89.50 இலட்சம் செலவில் தொடங்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய குழந்தைகள் மற்றும் ஆதரவற்ற வளர்இளம் பெண்கள் ஆகியோரின் எதிர்கால நல்வாழ்விற்காக தலா ரூ.5 இலட்சம் வைப்பீடு வழங்க முடிவு செய்யப்பட்டு, முதல் கட்டமாக, 38 பயனாளிகளுக்கு ரூ.1.15 கோடி வைப்பீடு செய்யப்பட்டுள்ளது.
* தமிழ்நாடு சமூகப்பாதுகாப்பு நலநிதித் திட்டத்தின்கீழ் ரூ.7.65 இலட்சம் மதிப்பில், பாதிக்கப்பட்ட 153 மகளிர் பயனடைந்துள்ளனர்.
* சாலையோரச் சிறார்களுக்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வரும் இரவுப் புகலிடங்களுக்கான மானியம், புகலிடம் ஒன்றுக்கு ஆண்டுக்கு ரூ.65,500ஆக இருந்தது. இந்த மானியத் தொகை புகலிடம் ஒன்றுக்கு ஆண்டுக்கு ரூ.1,35,000ஆக உயர்த்தப்பட்டு, டிசம்பர் 2004 முதல் 6 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.
* 22 அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் 1,804 உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு, ரூ.28.12 கோடி செலவில் சிறப்புக் கல்வி, இலவசத் தங்கும் வசதி, உணவு, சீருடைகள் மற்றும் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.
* ஆண்டொன்றிற்கு சுமார் 15,000 உடல் ஊனமுற்ற மாணவ, மாணவியர்க்கு ரூ.4.84 கோடி மதிப்பீட்டில் கல்வி உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.
* ஊனமுற்றோர் மறுவாழ்வுக்காக பாடுபடுபவருக்கு என மத்திய அரசினால் வழங்கப்படும் 50 தேசிய விருதுகளில் தமிழகம் 15 விருதுகளைப் பெற்று பெருமை பெற்றுள்ளது.
* ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் 3 புதிய திட்டப் பகுதிகளும், புதிதாக 12,852 மையங்களும் ஏற்படுத்தப்பட்டு, தற்போது 434 திட்டப் பகுதிகளில் 42,677 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.
* 10,000 அங்கன்வாடி மையங்கள் ரூ.7 கோடி செலவில் பழுது பார்த்துப் புதுப்பிக்கப்பட்டுள்ளன. 82 அங்கன்வாடி மையங்களுக்கு ரூ.102.50 இலட்சம் செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.
* வளர் இளம்பெண்களின் முன்னேற்றத்திற்கான பயிற்சிகள் ரூ.1.09 கோடி செலவில் அளிக்கப்பட்டு, 6,23,000 வளர் இளம்பெண்கள் பயனடைந்துள்ளனர்.

✶ அங்கன்வாடி மையங்களின் மூலமாக 6,80,000 குழந்தைகள் மற்றும் 5,10,000 கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்கு இணை உணவும், 10,75,000 குழந்தைகள் மற்றும் 51,300 முதியோர் உதவித் தொகை பெறுவோர் ஆகியோருக்கு சத்துணவும் வழங்கப்படுகிறது.

✶ புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ், 61,57,528 மாணவ – மாணவியர் பயன்பெற்று வருகின்றனர்.

✶ சத்துணவுடன் வாரம் ஒரு முறை அதாவது, திங்கட்கிழமையன்று பயனாளி ஒருவருக்கு 20 கிராம் வேகவைத்த உருளைக்கிழங்கும், புதன்கிழமையன்று 20 கிராம் பச்சைப்பயிறு அல்லது 20 கிராம் கருப்புக் கொண்டைக்கடலையும் வேகவைத்து வழங்கப்படுகின்றன.

✶ "ஊட்டச்சத்து குறைபாடில்லா மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்குவோம்" என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் ஆணைக்கேற்ப ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வுப் பிரசாரம் தகவல் தொடர்புப் பணிகள் மூலம் 2001 முதல் 2005 வரை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.

✶ சத்துணவு மையங்களைச் செப்பனிட ரூ.25.10 கோடி செலவிடப் பட்டுள்ளது.

✶ சத்துணவு மற்றும் அங்கன்வாடியில் உணவருந்தும் குழந்தைகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வாங்கி வழங்குவதற்கு ரூ.4 கோடி செலவிடப்பட்டுள்ளது.

✶ சத்துணவு மையங்களில் சமைப்பதற்கு உதவும் பழைய அலுமினியப் பாத்திரங்களுக்குப் பதிலாக, புதிய அலுமினியப் பாத்திரங்கள் வாங்க ரூ.2 கோடி செலவிடப்பட்டுள்ளது.

✶ சத்துணவு சாப்பிடும் 68.28 இலட்சம் குழந்தைகளுக்கு ரூ.58 கோடி செலவில் இலவசமாக முட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

✶ சுனாமிப் பேரழிவு காரணமாக பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில், ரூ.8.18 இலட்சம் மதிப்புள்ள 39.650 மெட்ரிக் டன் இணை உணவு பயனாளிகளுக்கு கூடுதலாக வழங்கப்பட்டது.

✶ குழந்தைகளுக்கு வைட்டமின் "ஏ" சத்துக் குறைபாட்டை நீக்க புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ், சத்துணவுடன் 6 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட இரு வட்டாரங்களில், ரூ.22 இலட்சம் மதிப்பீட்டில் காய்கறிகளுடன் முருங்கைக் கீரைப் பொடி அல்லது கறிவேப்பிலைப் பொடி சமையலுக்கு சேர்த்து வழங்கப்படுகிறது. இதன் மூலம், 35,000 குழந்தைகள் பயன் பெறுகின்றனர். இத்திட்டம் பிற மாவட்டங்களுக்கும் நடப்பாண்டில் விரிவுபடுத்தப்படுகிறது. ✶

# தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத்துறை



**தமிழ் வளர்ச்சி இயக்ககம்**

✶ வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப தமிழ் மொழி வளப்படுத்தப்பட வேண்டும் எனும் நோக்கில் மிகப்பெரும் அளவில் 5.1.2002 அன்று சென்னையில், "அறிவியல் தமிழ் – தமிழ்ப் பண்பாட்டுக் கருத்தரங்கம்" நடத்தப்பட்டது.

✶ சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ், 15 வகைப்பாடுகளில் வழங்கப்பட்டு வந்த பரிசுகள் 31 வகைப்பாடுகளாக அதிகரிக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறந்த நூல்களை எழுதிய நூலாசிரியர்களுக்கும் அந்நூல்களைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கும் ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளில் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

✶ மும்பையில் வாழும் ஏழை, எளிய தமிழ் மாணவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், 3.10.2002 அன்று ரூ.43,025/– மதிப்புள்ள நூல்கள் இலவசமாக வழங்கப்பட்டன. கேரள மாநிலம், எர்ணாகுளம் பகுதியில் வாழும் தமிழ்க் குடும்பங்களின் குழந்தைகளுக்கு தமிழ் மொழி கற்பிக்கப்பட ஏதுவாக, ரூ.18,920/– மதிப்புள்ள 400 தமிழ்ப் பாடப்புத்தகங்களை இலவசமாக வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது.

✶ எழுத்தாளர்கள் புதுமைப்பித்தன், ந.மு.வேங்கடசாமி நாட்டார், ந. பிச்சமூர்த்தி, க.நா.சுப்பிரமணியம் ஆகியோரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் குடும்பத்தாருக்கு தலா ரூ.5 இலட்சம் வீதம் பரிவுத் தொகையும், கு.ப.சேது அம்மாள் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவருக்கு ரூ.3 இலட்சம் பரிவுத்தொகையும், கு.ப.ரா. அவர்களின் மகன் கு.ப.ரா. பட்டாபிராமனுக்கு ரூ.2 இலட்சம் பரிவுத் தொகையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி வழங்கப்பட்டது.

* எழுத்தாளர்கள் திரு.மாயூரம் வேதநாயகம் பிள்ளை, திரு.சக்தி வை. கோவிந்தன், திரு.தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், திரு.த.நா. குமாரசாமி ஆகியோரின் இலக்கியப் படைப்புகள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களது மரபுரிமையர்களுக்கு பரிவுத் தொகை ரூ.5 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

* புதுதில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழியைக் கற்பித்தல், கற்றல் மற்றும் ஆய்வு செய்தல் ஆகிய திட்டங்களுக்காகத் தமிழ் இருக்கை நிறுவ ரூ.50 இலட்சம் ஒரே தவணையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி வழங்கப்பட்டது. திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியல் பள்ளிக்கு 2005–06ஆம் ஆண்டுக்கு நல்கையாக ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

* மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர், எழுத்தாளர் கு.ப.ரா. மணிக்கொடி சீனிவாசன் ஆகியோரின் நூற்றாண்டு விழாக்கள் கொண்டாடப்பட்டன.

* பதினொன்று, பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் மாணவர்களிடையே படைப்பாற்றலை உருவாக்கி வளர்க்கும் நோக்கில் "தமிழ் மன்றம்" எனும் அமைப்பு மாவட்டந்தோறும் ஏற்படுத்தப்பட்டு, மாவட்ட மற்றும் மாநில அளவில் தமிழில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்படுகின்றன. இதே போன்று கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கும் மாவட்ட மற்றும் மாநில அளவில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தி, ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**சொல்வங்கித் திட்டம்**

* ஆங்கிலம் மற்றும் பிற மொழிச் சொற்களுக்கு நிகரான புதிய "தமிழ்ச் சொற்களை உருவாக்கிப் பயன்பாட்டிற்குக் கொண்டுவரும் நோக்கில்" சொல்வங்கித் திட்டம் தோற்றுவிக்கப்பட்டு இதுவரை 528 புதிய தமிழ்ச் சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சங்க காலம் முதல் பாரதிதாசன் படைப்புகள் வரையிலான இலக்கியங்களைக் கொண்டு "இலக்கியச் சொல்லடைவு" தயாரிக்கும் திட்டம் உருவாக்கப்பட்டு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திடம் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. தொழில் நுட்பக் கலைச் சொற் களஞ்சியம் தயாரிக்க அரசால் ஆணையிடப்பட்டு அப்பணி தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. "உலகத் தமிழ் இலக்கிய வரலாறு நூல்" உருவாக்கத் திட்டமிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

* சென்னை ஏழுகிணறு பகுதியில் வள்ளலார் வாழ்ந்த இல்லம் நினைவிடமாக்கப்பட தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

* அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு ஒய்வூதியம் வழங்கும் திட்டத்தின் கீழ், 32 தமிழறிஞர்களுக்கு, ஒவ்வொருவருக்கும் திங்கள் தோறும் ஒய்வூதியமாக ரூ.500/– வழங்கப்பட்டு வருகிறது.

* தமிழ் மொழிக்காவலர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், 2001 மே முதல் இந்நாள் வரை, 103 தமிழறிஞர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.10,000/– வீதமும் 15 மரபுரிமையர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.5000/– வீதமும் நிதியுதவிகள் வழங்கப் பட்டுள்ளன.

* நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், நூலாசிரியர்களுக்கு ரூ.25,86,955/– நிதியுதவியாக வழங்கப் பட்டுள்ளது. தமிழில் "பல்துறைக் கலைக் களஞ்சியம்" தயாரிக்க ஆணையிடப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* திருவாரூர் மாவட்டம், உத்தமதானபுரத்தில் தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சா. வாழ்ந்த இல்லம் நினைவிடமாக ஆக்கப்பட ஆணையிடப்பட்டு ரூ.24.37 இலட்சத்தை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

* ரூ.2 கோடி செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள தமிழ் வளர்ச்சி வளாகக் கட்டடத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 3.3.2005 அன்று திறந்து வைத்தார்கள்.

* தமிழகம் ஊரும் சீரும் குறுந்தகடுகள், தமிழில் மென்பொருள், மின் அகராதி, கிளவியாக்கம், மொழித்திறம் ஆகியவை தயாரித்தல், அரசு அலுவலர்களுக்கு ஆட்சிமொழித் திட்டம் பற்றிப் பயிற்சியளித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* இந்தியா மற்றும் பிற நாடுகளின் சிறந்த இலக்கியப் படைப்புகளைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடும் திட்டத்திற்கு ரூ.10 இலட்சமும், இந்தியில் தமிழ் இலக்கியங்களை மொழிபெயர்க்கும் திட்டத்திற்கு ரூ.5 இலட்சமும் 2005–2006 ஆம் ஆண்டில் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* 2005–2006 ஆம் ஆண்டில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் ஆய்வுக் கருத்தரங்கு நடத்தப்படுவதற்கென சிறப்பு நல்கை ரூ.1 இலட்சமும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் "அறிஞர் அண்ணா அறக்கட்டளை" நிறுவ ரூ.10 இலட்சம் நல்கைத் தொகையும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

* அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு உதவும் வகையில், உருவாக்கப்படும் மென்பொருள்களுள் சிறந்த மென்பொருளைத் தெரிவு செய்து அதனை உருவாக்கிய மாணவருக்கு ஆண்டுதோறும் "தமிழக முதல்வர் அறிவியல் தமிழ் விருது" வழங்கும் பொருட்டு விருதுத் தொகையாக ரூ.50,000/- அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

* தமிழகம் மட்டுமன்றி இந்தியா முழுவதும் பல மாநிலங்களிலும் வாழும் தமிழர்கள் தங்களது பண்பாட்டு வேர்களைக் காப்பதற்காகப் பல்வேறு அமைப்புகளை உருவாக்கி மொழி, இலக்கியம், கலை ஆகியவற்றைப் போற்றி வரும், அவர்களது பணிகளை ஊக்குவிக்கும் பொருட்டு ஆண்டுதோறும் ரூ.5 இலட்சம் மதிப்புள்ள "தமிழ்த் தாய்" விருது வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

## அரசு அருங்காட்சியகம், சென்னை

* சென்னை மற்றும் சில மாவட்ட அருங்காட்சியகங்களில் தீயணைப்புச் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. அருங் காட்சியக வளாகம் முழுவதும் புத்தாக்கம் செய்யப்பட்டு தோட்டம் அமைத்து பராமரிக்கப் பட்டு வருகிறது. சென்னை அரசு அருங் காட்சியகத்தில் உள்ள படிமக்கூடம் அகில உலகத் தரத்திற்கு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழில்கள் மற்றும் கைத்தொழில்கள் வளர்ச்சிக் கூடம் புதியதாக அமைக்கப் பட்டுள்ளது. மின்னணுக் கண்காணிப்புக் கருவி மற்றும் தீ கண்டுபிடிப்புக் கருவி பொருத்தப்பட்டுள்ளன. 53 அருங்காட்சியக வெளியீடுகள் மறு அச்சீடு செய்யப்பட்டுள்ளன.

## தொல்லியல் துறை

* கல்வெட்டு படியெடுக்கும் முனைப்புத் திட்டத்தின் கீழ், 10,112க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. 12 மாவட்டங்களில் பணி நிறைவடைந்துள்ளது. படியெடுக்கப்பட்ட கல்வெட்டுப் படிகள் வழக்கமாகப் பாதுகாக்கும் முறையோடு கூடுதலாக அவை டிஜிட்டல் படமெடுக்கப்பட்டு குறுவட்டில் (CD) பதிந்து கணிப்பொறியில் படிக்கும் திட்டமும் வகுக்கப்பட்டு, ஏறத்தாழ 3,000 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு குறுவட்டுகளில் பாதுகாக்கப் படுகின்றன.

* 454 கல்வெட்டுகள் புதுப்பிக்கப்பட்டு 4 கல்வெட்டுத் தொகுதிகளாக வெளியாகியுள்ளன. மத்திய தொல்லியல் துறை மற்றும் இத்துறையும் இணைந்து செயல்படும் திட்டத்தின் கீழ், 267 தமிழ்க் கல்வெட்டுகள் அடங்கிய தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி 1,915 ஒன்று வெளியிடும் பணி முடிவுறும் நிலையில் உள்ளது.

### அகழாய்வுப் பிரிவு

* 2001-2002ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள பேரூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மாங்குடி ஆகிய இடங்களில் ரூ.4 இலட்சம் செலவில் அகழாய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டது.

* 2004-2005 ஆம் நிதி ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள மோதூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஆண்டிப்பட்டி ஆகிய வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் ரூ.5 இலட்சம் செலவில் அகழாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

* 2001-2005 ஆம் ஆண்டுகளில் ஒன்பது புதிய நூல்கள் மற்றும் கல்வெட்டு தொடர்பான பத்து காலாண்டு இதழ்கள் இத்துறை அச்சுப்பிரிவின் மூலம் வெளியிடப்பட்டன. 2001-2005 ஆம் ஆண்டுகளில், நான்கு அகழாய்வு அறிக்கைகள் மற்றும் தமிழ்நாடு பாறை ஓவியங்கள் தொடர்பான ஓர் அரிய நூல் ஒன்றும் வெளியிடப்பட்டது.

* 2001-2005 ஆம் ஆண்டு வரை நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட 8,686 தொல் பொருட்கள் பதிவு செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

* 2005-2006ஆம் நிதி ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ், இத்துறைக்கு ரூ.36.27 இலட்சத்திற்கு திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, 2005 அக்டோபர் திங்கள் வரை ரூ. 2.67 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

* 2001-2005 ஆண்டுகளில் மூன்று தமிழ் நூல்கள் மற்றும் பலமொழி சிறு நூல் நான்கு தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. 300 புதிய ஓலைச் சுவடிகள் இந்நூலகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. அரசு கீழ்த்திசை ஓலைச் சுவடி நூலகம் ஓர் ஆய்வு மையமாக மாற்றப்பட்டுள்ளது. நூலக வரலாற்றிலேயே முதன் முறையாக, தமிழ் வெளியீடுகளின் ஆங்கில மொழிப் பெயர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

## இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

* மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் அறிமுகப்படுத்தி தொடங்கி வைக்கப்பட்ட திருக்கோயில் அன்னதானத் திட்டம் 180 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டு 2,32,04,704 பேர் பயனடைந்துள்ளனர். இத்திட்டம், 14.1.2006 முதல் மேலும் 180 திருக்கோயில்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

* 216 திருக்கோயில்களில் 7,19,082 பேர் ஆன்மீக வகுப்புகளில் பயின்றுள்ளனர்.

* 2,550 இணைகளுக்கு இலவசத் திருமணங்கள் செய்து வைக்கப்பட்டுள்ளன.

* அருள்மிகு பழனி தண்டாயுதபாணி திருக்கோயிலில் கம்பி வட ஊர்தி திட்டம்,

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 3.11.2004 அன்று துவக்கப்பட்டு இதுவரை 16,76,430 பக்தர்கள் பயனடைந்துள்ளனர்.

✶ 2,000 திருக்கோயில்களுக்கு இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

✶ யானைகள் புத்துணர்வு சிறப்பு முகாமில் 323 யானைகள் பங்கு பெற்று புத்துணர்வு பெற்றுள்ளன.

✶ ஆதிதிராவிடர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில் திருப்பணிகள் உட்பட 5,168 திருக்கோயில்களில் திருப்பணி மற்றும் கும்பாபிஷேகங்கள் நடைபெற்றுள்ளன.

✶ 148 திருக்கோயில் தேர்களுக்கு திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளன.

✶ ஆதிதிராவிடர் பகுதிகளில் உள்ள 12,147 திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

✶ 300 கிராமக் கோயில்களின் திருப்பணியும், 520 திருக்குளங்களைத் தூர்வாரி சீரமைத்துச் செப்பனிட்டு மழைநீர் சேகரித்தல் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்**

✶ தமிழில் சொற்பிறப்பியல் பேரகரமுதலியை பன்னிரு மடலங்களில் 31 பகுதிகளாகத் தொகுத்து வெளியிடும் திட்டத்தின் கீழ் ஆண்டுக்கு 6 பகுதிகள் என்ற செயல் இலக்கினை வரையறுத்து 2004–2005 நிதியாண்டு முடிய 18 பகுதிகள் அச்சுக்கு அணியமாக்கப்பட்டது குறிப்பிடத்தக்க சாதனையாகும். இந்த 18 பகுதிகளில் முதற்கட்டமாக 'ச' மற்றும் 'த' வரிசை 6 பகுதிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கடந்த 9.8.2005 அன்று வெளியிடப்பெற்றன. அடுத்து 'ந' மற்றும் 'ப' வரிசை 6 பகுதிகள் விரைவில் வெளியிடப்பெறவுள்ளன. 'ந', 'ய' மற்றும் 'வ' வரிசையில் 6 பகுதிகள் முடிக்கப்பட்டு அச்சுக்கு அணியமாயுள்ளன. நடப்பு 2005–2006 ஆம் நிதியாண்டில் கடைசி 7 பகுதிகள் தொகுப்புப் பணி நிறைவு பெறும். இதற்கான பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

## கலை பண்பாட்டுத்துறை

✶ கலை பண்பாட்டு இயக்ககத்தின் மூலம் மாவட்டங்கள் தோறும் கலை விழாக்களும், கலைப் பயிற்சி முகாம்களும் சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களிலும் கடந்த ரூ.91.49 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன. தொடர்ந்து இப்பணிகளுக்காக 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✶ ஒவ்வொரு மாவட்டத்திலும் தலைசிறந்த 5 கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டத்திற்கு ரூ.14.87 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை 375 கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

✶ பல்வேறு கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம் 2002–2003ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு இதுகாறும் மாவட்ட கலைமன்றங்கள் மூலம், 18,188 கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

**அரசு இசைப்பள்ளிகள்**

✶ 17 மாவட்ட அரசு இசைப்பள்ளிகளுக்கு இசைக்கருவிகள் வாங்கிட ரூ.11.50 இலட்சமும், இசை தொடர்பான நூல்கள் வாங்கிட ரூ.1.70 இலட்சமும், இசைப்பள்ளிகளில் கலை வல்லுநர்களைக் கொண்டு செயல்முறை நிகழ்ச்சிகளை மேற்கொள்ள ரூ.1.70 இலட்சமும், ஒலி ஒளி நூலகம் அமைக்க ரூ.8.50 இலட்சமும், ரூ.8.50 இலட்சம் செலவில் கணினிகளும் வழங்கப்பட்டுள்ளன.

✶ நான்கு அரசு இசைக்கல்லூரிகளிலும் ஆண்டுதோறும் இசைவிழாக்கள் நடத்திட இதுகாறும் ரூ.9 இலட்சமும், கணினிகள் வாங்கப்பெற ரூ.2 இலட்சமும், அரசு இசைக்கல்லூரிகளுக்கு ஒலி ஒளி நூலகங்கள் அமைக்க ரூ.4.25 இலட்சமும், இசைக்கருவிகள் வாங்கப்பெற ரூ.9 இலட்சமும் வழங்கப் பட்டுள்ளது.

✶ சென்னை, மதுரை அரசு இசைக்கல்லூரிகளில் நாட்டுப்புறக்கலை பயிலும் மாணவர்களுக்கு அரசு உதவித் தொகை மாதமொன்றுக்கு ரூ.250 வீதம் 10 மாதங்களுக்கு ரூ.2,500/– வழங்கும் திட்டம் 2004–2005 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

✶ திருவையாறு அரசு இசைக்கல்லூரிக்கு வகுப்பறைகள் கட்டப்பெற ரூ.10.66 இலட்சம் மதிப்பில் 10.67 ஏக்கர் நிலம் பெறப்பட்டு கட்டடங்கள் கட்டப்பெற ரூ.50 இலட்சம் ஒப்புதல் வழங்கப்பட்டு, 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.25 இலட்சம் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

**கவின்கலைக் கல்லூரிகள்**

✶ வகுப்பறைக் கட்டடங்கள் பழுதுபார்க்க மற்றும் சீரமைக்க சென்னை அரசு கவின்கலைக் கல்லூரிக்கு ரூ.10 இலட்சமும், கும்பகோணம் அரசு கவின்கலைக் கல்லூரிக்கு ரூ.5 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

✶ அரசு கவின்கலைக் கல்லூரிகளுக்கு கணினிகள் வாங்கப்பெற இதுகாறும் ரூ.15.40 இலட்சம் நிதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. சென்னை, கும்பகோணம் அரசு கவின்கலைக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் கண்காட்சி நடத்திட

ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. சென்னை அரசு கவின்கலைக் கல்லூரிக்கு சிற்றரங்குக்கான படப்பிடிப்பு உபகரணங்கள் வாங்கப்பெற ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

✶ அரசு கவின்கலைக் கல்லூரி மாணவர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த வரைபடப் பொருட்களுக்கான தொகை ரூ.250/–லிருந்து ரூ.1,000/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. கும்பகோணம் அரசு கவின்கலைக் கல்லூரியின் புகைப்படப் பிரிவினை நவீனமயமாக்கிட, புகைப்படக் கருவிகள் வாங்கிட ரூ.2 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது. சென்னை மற்றும் கும்பகோணம் அரசு கவின்கலைக் கல்லூரி மாணவர்கள் பயன்பாட்டிற்கு நீர்மப் படிமக் காட்சிப் பெருக்கி (Liquid Crystal Display Projector) வாங்கப்பெற ரூ.4 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

## அரசினர் கட்டட மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி

✶ மாமல்லபுரம், அரசினர் கட்டட மற்றும் சிற்பக்கலைக் கல்லூரிக்கு கணினிகள் வாங்கப்பெற மற்றும் கணினி மையம் அமைக்கப்பெற ரூ.14.40 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இக்கல்லூரி மாணவர்களின் பயன்பாட்டிற்காக அறைகலன்கள் வாங்கப்பெற ரூ.2 இலட்சமும் ஒலி ஒளி நூலகம் அமைக்கப்பெற ரூ.2 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

✶ இசையின் இராகங்கள் குறித்தும் அவற்றின் பயன்கள் குறித்தும் நுணுக்கமான ஆராய்ச்சி நடத்தப்பெற இராக ஆராய்ச்சி மையம் என்ற அமைப்பு தமிழக அரசால் 1992 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இம்மையத்திற்கு இதுகாறும் ரூ.20 இலட்சம் நல்கையாக வழங்கப்பட்டுள்ளது.

✶ தஞ்சாவூர், தென்னகப் பண்பாட்டு மையத்தின் மூல நிதிக்குத் தமிழ்நாட்டின் பங்காக 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.25 இலட்சமும், 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.25 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை தமிழக அரசு தென்னகப் பண்பாட்டு மையத்தின் மூல நிதிக்கு ரூ.200 இலட்சம் நிதி வழங்கியுள்ளது.

✶ கலை பயில் பண்பாட்டுக் கழகத்திற்கு கலை வளர்ச்சியினைக் கருத்தில் கொண்டு ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டது. இந்தியா மற்றும் இந்தோனேஷியா நாடுகளில் புகழ்பெற்ற பரதநாட்டியத்தில் ஒரு பிரிவான அசைவுகள் குறித்து புத்தகத் தொகுப்பு வெளியிட ரூ.7 இலட்சம் நிருத்யோதயா கலை நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு 3 தொகுதி நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்நிறுவனத் திடமிருந்து 10 தொகுப்புகள் பெறப்பட்டு அனைத்து இசைப் பள்ளிகளுக்கும் இசைக் கல்லூரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

✶ நலிந்த கலைஞர்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தின்கீழ், 2002–2003இல் 498, 2003–2004 இல் 500, 2004–2005இல் 500 கலைஞர்கள் மற்றும் 2005–2006ஆம் ஆண்டில் 1,000 நலிந்த கலைஞர்களுக்கு தலா ரூ.500/– நிதியுதவி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

✶ மறைந்த கலைஞர்களின் குடும்பப் பராமரிப்பு நிதி உதவித் திட்டத்தின்படி, தலா ரூ.5,000/– வீதம் 2001–2002 இல் 12, 2002–2003 இல் 16 மற்றும் 2003–2004 இல் 6 குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. 2004–2005 இல் இத்தொகை உயர்த்தப்பட்டு ரூ.6,000/– வீதம் 32 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2005–2006ஆம் ஆண்டில் நவம்பர் திங்கள் வரை 14 மறைந்த கலைஞர்களின் குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

✶ இளங்கலைஞர்களுக்கு ஊக்கமளிக்கும் திட்டம், கிராமியக் கலைஞர்களுக்கு இசைக் கருவிகள் மற்றும் ஆடை அணிகலன்கள் வாங்க நிதியுதவி, நட்டுவாங்க கலைப் பயிற்சி, நாதசுரம், தவில் சிறப்புப் பயிற்சி, குழந்தைக் கலைஞர் ஊக்குவிப்பு, மாநிலங்களுக்கிடையேயான கலைக்குழுக்கள் பரிமாற்றத் திட்டங்கள், புதிய நாட்டிய நாடகங்கள் தயாரிக்க நிதியுதவி வழங்கும் திட்டம் ஆகியவை சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

✶ 2001 முதல் 2005 நவம்பர் திங்கள் வரை 15,941 கலைக்குழுக்களுக்கு இரயில் பயணச் சலுகைச் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

✶ நாடகக் குழுக்களுக்கு 50 சதவிகிதம் பேருந்து கட்டணச் சலுகை வழங்கப்படுகிறது. இந்த வகையில் 2001 முதல் 2005 வரை 158 நாடகக் குழுக்களைச் சேர்ந்த 1,961 கலைஞர்கள் பயன்பெற்றுள்ளனர்.

## தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம்

✶ 2001–2002, 2002–2003, 2004–2005, 2005–2006 ஆகிய ஆண்டுகளில் 51 குழந்தைகள் புதுதில்லியில் நடத்தப்பட்ட இளந்திரு விருது தேர்வுப் போட்டியில் கலந்து கொண்டனர். இதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 9 சிறுவர்கள் தேசிய இளந்திரு விருதினைப் பெற்றுள்ளனர்.

✶ 2004–2005ஆம் ஆண்டுவரை இளந்திரு விருது பெற்றுள்ள 5 சிறுவர்களைப் பாராட்டி ஊக்கப்படுத்திட தலா ரூ.10,000/– வீதம் ரூ.50,000/– அரசு வழங்கியுள்ளது. 2001–2002 முதல் 2005–2006 முடிய கலை பண்பாட்டுத்துறையின் 6 மண்டலங்களில் ஒரு மண்டலத்திற்கு 3 பேர் வீதம் 18 சிறார்களுக்கு இலவச நடன அரங்கேற்றம் நடத்தப்பட்டுள்ளது.

* சென்னை, சவகர் சிறுவர் மன்றத்தில் 2001–2005 வரை கோடைக்கால இலவச கலைப் பயிற்சியில் 10,333 குழந்தைகள் பயிற்சி பெற்றுள்ளனர். கைவினைப் பயிலரங்கில் 2001–2005 வரை 160 குழந்தைகள் பங்கு கொண்டு பயன் பெற்றுள்ளனர்.

* 2001–2002 முதல் 2005–2006 வரை நடத்தப்பட்ட கோடைக்கால மாநில கலைப் பயிற்சித் திட்டத்தில் 500 சிறுவர்களும், மாரிக்கால முகாம்களில் 400 சிறுவர்களும் பயிற்சி பெற்றுள்ளனர். 2001 முதல் 2005 வரை தமிழ்நாட்டிலிருந்து 20 குழந்தைகள் பஞ்சாப் மாநிலம் படால்கர் நகருக்கும், 9 குழந்தைகள் பெங்களூர் சவகர் சிறுவர் மன்றத்திற்கும், 20 குழந்தைகள் ஒரிசா மாநிலம், புவனேஷ்வர் நகருக்கும் கலைப் பரிமாற்றம் திட்டத்தின்கீழ் தமிழகக் கலைநிகழ்ச்சிகளை நிகழ்த்தினர். பெங்களூர் சிறுவர் மன்றத்திலிருந்து 20 பேர், கேரள மாநிலம் திருச்சூர் சிறுவர் மன்றத்திலிருந்து 20 பேர் மற்றும் ஒரிசாவிலிருந்து 20 பேர் தமிழகத்திற்கு வந்து தமிழக குழந்தைகள் அறிந்துகொள்ளும் வகையில் பல்வேறு இடங்களில் அம்மாநில கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்தினார்கள்.

* தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழுவிற்கு கடந்த ஐந்தாண்டுகளில் ரூ.58.11 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

* 2001 நவம்பர் மாதத்தில் மாநில அளவில் மரபுவழி கலைக்காட்சி நடத்தப்பட்டது. 2003 ஆகஸ்டு மாதத்தில் மாநில அளவில் புதுப்பாணி கலைக்காட்சி நடத்தப்பட்டது.

* தனிநபர் கலைக்காட்சி நடத்த 2001–2005 ஆண்டுகளில் 48 ஓவிய சிற்பக் கலைஞர்களுக்கும், 2001–2002 இல் கூட்டுக்கலைக் காட்சி நடத்திய 4 (நான்கு) குழுக்களுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டது.


* கலை ஆர்வலர்கள் பயன்பெறும் வகையில் 'நுண்கலை' என்னும் கலையிதழ் வெளியிடப்பட்டு வருகிறது.

* கோவில் கட்டடக்கலைத் தொழில்நுட்ப நூல் பணிக்கு ரூ.20,000/– முதல் தவணையாக வழங்கப்பட்டுள்ளது.

* 'காலம் முதல் தற்காலம் வரை' என்ற தலைப்பில் புகைப்படத் தொகுப்பு தயாரிக்கப்பட்டு, குறுந்தகடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

* தமிழ்நாட்டு மரபுவழி மற்றும் புதுப்பாணி ஓவிய, சிற்பக்கலைஞர்கள் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவ்விவரங்கள் கொண்ட 'யார்? எவர்?' தொகுப்பு நூல் தயாரிக்கப்பட்டு வருகிறது. □

# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை



❖ ஒலிம்பிக், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் போட்டிகள், தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் பெற்ற தமிழ்நாட்டைச் சார்ந்த விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத் தொகை வழங்க தமிழ்நாடு அரசு ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் மூலம் 257 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.261.68 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

❖ டென்னிஸ் விளையாட்டில் இதுவரையில், சென்னையில் "டாடா ஓபன்" என்ற பெயரில் டென்னிஸ் போட்டிகள் நடத்தப்பட்டு வந்தன. தற்போது, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும், ஐஎம்சி (International Marketing Corporation) நிறுவனமும் இணைந்து, இந்தப் போட்டியை "சென்னை ஓபன்"(CHENNAI OPEN) என்ற பெயரில் 2005 முதல் 2009 ஆம் ஆண்டு முடிய ஒவ்வொரு ஆண்டும் நடத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2006ஆம் ஆண்டு ஜனவரி 2 முதல் 8 வரை சென்னை ஓபன் டென்னிஸ் போட்டிகள் நடைபெற்றன.

❖ 2005–ஆம் ஆண்டில், சென்னையில் சேம்பியன் சுழற்கோப்பைப் (ஆண்கள்) போட்டிகளை நடத்திட சர்வதேச வளைகோல்பந்து விளையாட்டு இணையம் அனுமதித்தது. இப்போட்டிகளை நடத்த ஏதுவாக ஏற்கெனவே இருந்த செயற்கை இழை புல் மைதானம்

மாற்றப்பட்டு பாலிடான் மெகா டர்ஃப் என்னும் செயற்கை இழை புல்தரை அமைக்கப் பட்டது. இப்போட்டிகளைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பும் வண்ணம் மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கில் மின்னொளி வசதியும் செய்யப்பட்டுள்ளது. சென்னையில் நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. உடற்பயிற்சிக் கல்வி கல்லூரி வளாகத்தில் கூடுதலாக ஒரு வளைகோல் செயற்கை இழை புல்தரை அமைக்கப்பட்டது. இவை அனைத்தும் ரூ.6.75 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டன.

❖ காவல்துறையில் நடைமுறையில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கான 10 சதவிகித இட ஒதுக்கீடு முறை, ஏனைய சீருடைப் பணித் துறைகளான சிறைத்துறை, வனத்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை ஆகியவற்றிற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

❖ 2002–2003ஆம் ஆண்டு முதல் "சர்வதேச விளையாட்டு வீரர்களைக் கண்டறியும் திட்டத்தின்"கீழ் உடற்திறன் தேர்வுப் போட்டிகளை, மாநிலத்திலுள்ள அனைத்து பள்ளிகளிலும் 6,7 மற்றும் 8ஆம் வகுப்புகளில் பயிலும் சிறுவர், சிறுமியர்களுக்கு நடத்தப்பட்டு அவர்களுக்கு உடற்திறன் அறிக்கை அட்டை அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் கண்டறியப்பட்ட திறன்படைத்த மாணவர்களுக்கு அவர்களின் திறமைக்கேற்ப, சிறப்பு அகாடமிகளில் சேர்க்கப்பட்டு சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. பயனடைந்தோர் எண்ணிக்கை 1,15,303 மாணவர்கள். திட்டத்திற்கான செலவினம் ரூ.61.25 இலட்சம்.

❖ தமிழகத்தில் தடகளப் பயிற்றுநர்களின் திறனை மேம்படுத்த உலகத்திறன் வாய்ந்த பயிற்சியினை பயிற்றுநர்களுக்கு வழங்க, ஆஸ்திரேலியா நாட்டு தடகளப் பயிற்றுநர் மூலம், ஒரு வார காலப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியில் இந்திய விளையாட்டுக் குழுமப் பயிற்றுநர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் தமிழ்நாடு தடகள சங்கத்தைச் சார்ந்த பயிற்றுநர்கள் மொத்தம் 35 பேர் தடகளப் பயிற்றுநர்களுக்கான சிறப்பு முகாமில் கலந்து கொண்டு, தடகள விளையாட்டில் தற்போதைய புதிய உத்திகளையும், சர்வதேசப் பயிற்சிகளையும் பற்றி அறிந்து கொண்டார்கள்.

❖ சேம்பியன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 81 விளையாட்டுச் சேம்பியன்களைக் கண்டறிந்து அவர்களுடைய திறமைகளை மேலும் வளர்க்க, அவர்களது தேவைக்கேற்ப சரியான உதவிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளுக்கு அயல்நாடு சென்று பயிற்சி மேற்கொள்ள பயணப்படிகளும், விளையாட்டுப் பொருட்களும், விளையாட்டு உபகரணங்களும், விளையாட்டு மருத்துவ உதவியும், சிறப்பு உணவுத் திட்ட உதவிகளும் மற்றும் மனரீதியான ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை இத்திட்டத்தின் கீழ், 81 விளையாட்டு வீரர்கள் ரூ.57.37 இலட்சம் செலவில் பயனடைந்துள்ளனர்.

❖ இளைஞர்களிடையேயுள்ள சக்தியினை வெளிக் கொணரும் வகையில், இளைஞர் நலத் திட்டங்களைச் செயல்படுத்திட, 300 இளைஞர் மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

❖ தமிழகத்தின் கடற்கரை ஓரங்களிலுள்ள பள்ளிகள் கண்டறியப்பட்டு, அங்கு படிக்கும் பள்ளி மாணவ, மாணவியர் பயனடையும் வகையில், கடற்கரை மணற்பரப்பில் விளையாடும் "பீச் வாலிபால்" என்ற புதிய விளையாட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ்விளையாட்டில் மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

❖ திறமைமிக்க விளையாட்டு வீரர்களுக்கு அயல்நாட்டில் நவீன முறையில் உயர்தரப் பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்கள் சர்வதேச அளவில் பதக்கம் பெற வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 37 விளையாட்டு வீரர்கள் பயனடைந்துள்ளனர்.

❖ "சாம்பியன் மேம்பாட்டுத் திட்டம்" மூலம் இளையோர் மற்றும் மிகவும் இளையோர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் தேவைக்கேற்ப உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

❖ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும், இந்திய விளையாட்டு மருத்துவக் கழகமும் இணைந்து 26ஆவது மருத்துவக் கருத்தரங்கத்தை, சென்னை நேரு விளையாட்டரங்கில் நடத்தின. இதில் உலகளவில் புகழ்பெற்ற 175 பேர் பங்கு பெற்றனர்.

❖ அனைத்து மாவட்டங்களிலும், தடகள விளையாட்டு மற்றும் அந்தந்த மாவட்டத்தில் பிரபலமாக விளங்கும் விளையாட்டுகளில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் பங்கேற்க வாய்ப்பளிக்கும் வண்ணம் மாதந்தோறும் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன. இதுவரை அனைத்து மாவட்டங்ளிலும் 6 விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன. ரூ.24.09 இலட்சம் செலவில், 1,09,742 பேர் பயனடைந்துள்ளனர்.

❖ மாவட்ட அளவில் உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கும் மற்றும் உடற்கல்வி இயக்குநர்களுக்கும் விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் விளையாட்டு தொழில்நுட்ப நிபுணர்கள் உதவியோடு விளையாட்டு உத்திகள் பற்றி ஆண்டுதோறும் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. மறுபயிற்சித் திட்ட பயிற்சி வகுப்புகள் முதலியன

இந்திய விளையாட்டுக் குழுமம் மற்றும் விளையாட்டுச் சங்கங்கள் முதலியவற்றின் மூலம் நடத்தப்பட்டுள்ளன. இதுவரை ரூ.22.85 இலட்சம் செலவில் 7,584 பேர் பயனடைந்துள்ளனர்.

❖ தேசிய சேம்பியன்ஷிப் விளையாட்டுகளைத் தொடர்ச்சியாக நடத்துவதன் மூலம், தமிழகம், ஏனைய மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாகவும், தேசிய அளவில் முன்னோடியாகவும் விளங்குகிறது. மாநிலத்தில் அதிக அளவில் விளையாடப்படும் விளையாட்டுக்களிலும், முக்கியமாக ஒலிம்பிக் அளவில் நடத்தப்படும் விளையாட்டுக்களிலும் மாநில விளையாட்டுச் சங்கங்கள் மூலம் தேசிய அளவிலான போட்டிகளை நடத்த தற்போது அளிக்கப்பட்டு வரும் மானியம் உயர்த்தப் பட்டுள்ளது.

❖ தமிழ்நாடு அணிகள் தேசிய சேம்பியன்ஷிப் போட்டிகளில் கலந்து கொண்டு தமிழகத்திற்குப் பெருமை சேர்க்கும் பொருட்டு, மாநிலச் சங்கங்களுக்கு அளிக்கப்படும் மானியங்கள், இவ்வாண்டு ஒலிம்பிக் சார்ந்த விளையாட்டுப் போட்டிகளுக்கு மாற்றியமைத்து வழங்கப் பட்டுள்ளது. இதுவரை ரூ.1.07 கோடி செலவில் 45 விளையாட்டுச் சங்கங்கள் பயனடைந்துள்ளன.

❖ திருச்சி, சேலம், ஈரோடு, நாகர்கோவில், திருநெல்வேலி, இராமநாதபுரம், கடலூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டத் தலைநகரங்களில் நீச்சல் குளங்கள் அமைக்கப்பட்டு, பொதுமக்களால் பயன்படுத்தப் பட்டு வருகின்றன.

❖ மதுரை, தூத்துக்குடி, புதுக்கோட்டை, திருவள்ளூர், கரூர், கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் நீச்சல்குளங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

❖ பளுதூக்கும் விளையாட்டு வீரர்களின் நீண்டகாலக் கோரிக்கையின் அடிப்படையில், பளுதூக்கும் கூடம் ஒன்று, சென்னை நேரு விளையாட்டரங்கத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அதில், இறக்குமதி செய்யப்பட்ட அயல்நாட்டு பளுதூக்கும் கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

❖ ரூ.2.00 கோடி செலவில், திருநெல்வேலி, பாளையங்கோட்டையிலுள்ள அண்ணா விளையாட்டு அரங்கத்தில், செயற்கை இழை புல் வளைகோல்பந்து மைதானம் அமைக்கப் பட்டுள்ளது.

❖ ரூ.22 இலட்சம் செலவில், சர்வதேச அளவில் போட்டிகளை நடத்திட பன்னாட்டுத் தரத்திற்கேற்ற வகையில் சென்னை உள்விளையாட்டரங்க வளாகத்தில் ஸ்கேட்டிங் ரிங் ஒன்றும், ஹாக்கி ஸ்கேட்டிங் ரிங் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

❖ ரூ.2.50 கோடி செலவில், மதுரையில் சர்வதேசத் தரம் வாய்ந்த செயற்கை இழை தடகள ஓடுபாதை அமைக்கப்பட்டுள்ளது.

❖ தற்சமயம் பள்ளிகளுக்கிடையே நடத்தப் படுகின்ற 14 விளையாட்டுப் போட்டிகளில் ஸ்குவாஷ் விளையாட்டும் சேர்க்கப்பட்டுள்ளது. சேலம், தேனி, காஞ்சிபுரம், நாகப்பட்டினம், தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய 6 மாவட்டங்களில் ஸ்குவாஷ் கோர்ட் அமைக்கப்பட்டுள்ளது.

❖ ஒலிம்பிக் போட்டிகளில் ஒன்றான வாள்சண்டை நமது மாநிலத்தில் பிரபலமான விளையாட்டாக வளர்ச்சி அடைந்து வருகிறது. தற்போது பள்ளிகளுக்கிடையே நடைபெற்று வரும் 14 வகையான விளையாட்டுப் போட்டிகளில் வாள் சண்டையும் ஒரு பிரிவாக சேர்க்கப்பட்டுள்ளது. இந்த விளையாட்டில் ஏராளமாக விளையாட்டு வீரர்கள் பங்கேற்று, பயிற்சி பெறும் வண்ணம் 5 மண்டல தலைமை இடங்களில் தரம் வாய்ந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

❖ ஒவ்வொரு ஆண்டும் பள்ளிகளுக்கிடையே நடைபெற்று வரும் விளையாட்டுப் போட்டிகளில் 14 பிரிவுகளில் ஜிம்னாஸ்டிக்ஸ் பிரிவு சேர்க்கப்பட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. ரூ.45 இலட்சம் செலவில், அனைத்து மாவட்டங்களுக்கும் தேவையான ஜிம்னாஸ்டிக்ஸ் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

❖ கல்வி நிறுவனங்கள், விளையாட்டுக் குழுக்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் தனியார் பங்கேற்புடன் அகாடமிகள் நிறுவப்பட்டு அவற்றில் தினமும் நவீன விளையாட்டுப் பயிற்சிகளும், போட்டிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. விருதுநகரில் ஹாக்கி அகாடமி, திண்டுக்கல்லில் கையுந்துபந்து அகாடமி, தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் கழகத்துடன் இணைந்து ஸ்குவாஷ் அகாடமி, சென்னை பேசின் பிரிட்ஜ் மேஜைபந்து அகாடமி, தமிழ்நாடு செய்லிங் கழகத்துடன் இணைந்து செய்லிங் அகாடமி, சென்னை அசோக்நகர் புதூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கிரிக்கெட் அகாடமி, சென்னை முகப்பேரில் டால்பின் நீச்சல் அகாடமி ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளன.

❖ ஒரு விளையாட்டு வீரரின் திறமையை குறிப்பிட்ட விளையாட்டில் மேம்படுத்த உளவியல் தேர்வு, மனவலிமை, உடல் வலிமை, சத்துணவு, முறையான பயிற்சி, விளையாட்டு உபகரணங்கள், மருத்துவ வசதி மற்றும் விஞ்ஞான அடிப்படையிலான பயிற்சி ஆகியவை மிக அவசியம். இதனைக் கருத்தில் கொண்டு

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் பயிற்றுநர்களையும் மற்றும் உயர்ந்த திறன் பெற்றவர்களையும் கொண்டு பயிற்சிகளை அளிக்க தமிழ்நாட்டில் பல்வேறு விளையாட்டுக்களில் 15 சிறப்பு விளையாட்டு அகாடமிகளை நிறுவி உள்ளது. இவ்வாறான அகாடமியைச் சார்ந்த விளையாட்டு வீரர்களுக்கு அடிக்கடி பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு, அவர்களுக்குத் தேவையான அயல்நாட்டு தர விளையாட்டுக் காலணிகள் வழங்கப்பட்டு, அகாடமிகள் சிறப்புற செயல்பட்டு வருகின்றன. ரூ.62.33 இலட்சம் செலவில் 1,193 விளையாட்டு வீரர்கள் பயனடைந்துள்ளனர்.

- ❖ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழ்நாட்டில் நீச்சல் பயிற்சியை மேம்படுத்தும் நோக்கோடு, பல்வேறு உத்திகளைக் கொண்ட ஒரு நீண்டகால திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் வாயிலாக ஒவ்வொரு நீச்சல் வீரருக்கும், அவரது திறனுக்குத் தகுந்தவாறு பயிற்சி அமைப்பு மற்றும் பயிற்சி அட்டவணை உருவாக்கப்பட்டு நீச்சல் பயிற்சி அளிக்கப்படுகிறது.

- ❖ நீச்சல் பயிற்சியாளர்கள் / வீரர்களின் திறனை மேம்படுத்துவதற்காக, பன்னாட்டு நீச்சல் களத்தில், நடைமுறையில் உள்ள உலகத்தரம் வாய்ந்த உத்திகளை அறிந்துள்ள, அனுபவம் வாய்ந்த ஒரு ஆஸ்திரேலிய நீச்சல் பயிற்சியாளர் இதற்கென நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நீச்சல் பயிற்சியாளர்களுக்கு, தற்போதைய சூழ்நிலையில், உலகளவில் நடைமுறையில் உள்ள மேம்பாடுடைய பயிற்சி நுணுக்கங்களில் பயிற்சி அளித்து வருகிறார். இதன் மூலம் சர்வதேச அளவில் நமது நீச்சல் வீரர்கள் உயர்நிலை அடைய வழிவகுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கல்வி நிறுவன மின்னஞ்சல் திட்டம் இணையதள அடிப்படையில் உருவாக்கப்படும் ஒரு வலைதளமாகும்.

- ❖ இத்திட்டத்தின்படி, துறை வழியாக வழங்கப்படும் உடனடித் தகவல்கள் / சுற்றறிக்கைகள் / ஆணைகள் ஆகியவைகளை அறியும் வகையில் ஒருங்கிணைக்கப்படும்.

- ❖ துறை மற்றும் எந்த நபருக்கும் எந்த வகையிலான கடிதமோ, தகவலோ உடனடியாக அளிக்க இயலும்.

- ❖ மாணவ, மாணவிகளின் "உலகத் திறனாளர்களை கண்டறியும் திட்டத்தின்" கீழ் தனித் திறன் போட்டி தகவல் அறிக்கையை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு உடனடியாக அனுப்பலாம்.

□ □ □

# பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை



- ✶ வெளிப்படையான, நேர்மையான, திறமையான நிருவாகம் அளிக்கும் பொருட்டு, குறை தீர்க்கும் மனுக்களைப் பெற்று, 5 நாட்களில் ஒப்புகைச் சீட்டு அனுப்ப வேண்டும் என்றும், 90 நாட்களில் மனுக்களின் மீது நடவடிக்கை எடுத்து, மனுவின் மீதான இறுதி முடிவினை மனுதாரருக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும், அரசு அறிவுறுத்தியுள்ளது. கோப்புகள் விரைவாக முடிக்கப்படும் பொருட்டு, ஒவ்வொரு திங்கட்கிழமையிலும் நிலுவையிலுள்ள கோப்புகளை நுண்ணாய்வு செய்ய வேண்டுமென மாவட்ட ஆட்சியர்களும், அரசு செயலாளர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

- ✶ கோப்புகளை ஆய்வு செய்து இறுதி முடிவு எடுப்பதில் செலவிடும் நேரத்தைக் குறைக்கும் பொருட்டு, "நிலை தாண்டுதல்" (Level Jump) முறையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி, பிரிவுகளில் பரிசீலிக்கப்படும் கோப்புகள் அனைத்து நிலை அலுவலர்களுக்கும் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டியதில்லை. இம்முறை இடைநிலை அலுவலர்களைத் தவிர்த்து, கோப்புகளை, உயர் அலுவலர்களுக்கு நேரடியாகச் சமர்ப்பிக்க உதவுகிறது.

- ✶ அரசின் நிருவாகச் செயல்பாடுகளைத் தாமதமின்றி நடைமுறைப்படுத்தவும், தேவையற்ற கடிதப் போக்குவரத்தைத் தவிர்க்கவும், தலைமைச் செயலகத் துறைகள் மற்றும் சென்னை மாநகரில்

அமைந்துள்ள துறைத் தலைவர்களுக்கும் இடையே ஒற்றைக் கோப்பு முறை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

✶ பிற துறைகளின் குறிப்பு தேவைப்படாத இனங்களில் மற்றும் அரசாணைகள் வெளியிடுவதில் ஏற்படும் காலதாமதத்தினைத் தவிர்ப்பதற்காக நிருவாகத் துறைச் செயலர் சம்பந்தப்பட்ட கோப்பில் சுற்றோட்டக்குறிப்பு இல்லாமலேயே தனித்தாளில் தனது கருத்தை முழு கையொப்பத்துடன் தெரிவித்து நேரடியாக அமைச்சரிடம் ஆணை பெறலாம்.

✶ ஒளிவுமறைவற்ற, சிறந்த நிருவாகத்திற்கு மின் ஆளுகையை உரிய அளவுக்குப் பயன்படுத்த இத்துறையில் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக, அனைத்து சட்டங்கள், விதிகளும் அரசு வலை தளத்தில் (Website) பதிவு செய்யப்பட்டுள்ளன.

✶ அனைத்து சட்டங்களும், விதிகளும் உள்ளடக்கிய மின்னணுவியல் தொகுப்பு உருவாக்கப்பட்டு, கணினி குறுந்தகடுகளில் (CD-ROM) பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

✶ இத்துறையால் வெளியிடப்பட்ட அனைத்து அரசாணைகளையும் உள்ளடக்கிய மின்னணுவியல் தொகுப்பு (Compendium) உருவாக்கப்பட்டு, கணினி குறுந்தகடுகளில் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

✶ இத்துறையில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும் மின்னணு பணி விவரக் குறிப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

✶ சட்டங்களிலும், விதிகளிலும் அவ்வப்போது செய்யப்படும் திருத்தங்கள் உடனடியாக மின்னணுவியல் தொகுப்பில் பதிவு செய்யப்படுகின்றன. இதற்கென ஒரு தகவல் வங்கி (Reference Bank) உருவாக்கப்பட்டுள்ளது.

✶ இந்திய ஆட்சிப் பணி சாராத கூடுதல் செயலாளர்கள், இணைச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள், சார்புச் செயலாளர்கள், பிரிவு அலுவலர்கள், தனிச் செயலாளர்கள், நேர்முக உதவியாளர்கள், உதவிப் பிரிவு அலுவலர்கள், நேர்முக எழுத்தர்கள், உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்கள் ஆகியவர்களின் பணியாளர் தொகுதிப் பட்டியல்கள் கணினிமயமாக்கப் பட்டுள்ளன.

✶ பொதுமக்கள் மற்றும் அரசுப் பணியாளர்கள் சம்பந்தப்பட்ட அரசாணைகள், கடிதங்கள், பணி விதிகள் போன்றவை தலைமைச் செயலக வலைதளம் மற்றும் தமிழ்நாடு அரசின் வலை தளத்தில் பதிவு செய்யப்படுகின்றன.

✶ தமிழ்நாட்டில், சென்னையில் அரசு அலுவலர்களுக்கு மேலாண்மைப் பயிற்சி அளிப்பதில் முன்னோடிப் பயிற்சி நிலையமாக இயங்கி வரும் அண்ணா மேலாண்மை நிலையத்திற்கு ரூ. 10 கோடி செலவில், நவீன வசதிகளுடன் கூடிய புதிய கட்டட வளாகம் அமைக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், 25-05-2005 அன்று திறக்கப்பட்டு "மகிழம்பூ" எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

✶ பல்வேறு துறைகளில் அண்ணா மேலாண்மை நிலையத்தில் பிரிவு அலுவலர்கள், அரசு சார்புச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள் மற்றும் இணைச் செயலாளர்கள் (இ.ஆ.ப அல்லாத) போன்ற தலைமைச் செயலக அலுவலர்களுக்கு, பயிற்சி அளிப்பதற்காக ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. 2003-2005 கால அளவில் அண்ணா மேலாண்மை நிலையத்தில் மேற்சொன்ன பயிற்சிக்காக 27 அணிகளைச் சேர்ந்த அதிகாரிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

✶ ஐக்கிய நாடுகள் வளர்ச்சித்திட்டம் மற்றும் மைய அரசின் பணியாளர் மற்றும் பயிற்சித்துறை உதவியுடன் " பயிற்சி நிறை பணியாளர் மாவட்டத் திட்டம்" என்ற சிறப்புத்திட்டம் தேனி மாவட்டத்தில் அனைத்து அரசுப்பணியாளர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்காக ரூ.40.14 இலட்சம் செலவில் 8.12.2004 அன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இந்தியாவில் இந்தத் தனிச்சிறப்பு வாய்ந்த திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தெரிவு செய்யப்பட்ட மிகச்சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.

✶ டிசம்பர் 2004 முதல் மே 2005 வரையிலான ஆறு மாத காலத்திற்குள் தேனி மாவட்டத்திலுள்ள அனைத்து அரசுத்துறை அலுவலர்களான 5,496 நபர்களுக்கும் நிருவாக நடைமுறை மற்றும் மேலாண்மை பற்றிய தலைப்புகளில் முழுமையான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

✶ இந்தியாவிலுள்ள பல முக்கியமான பயிற்சி நிறுவனங்களில் சென்னையிலுள்ள அகில இந்திய குடிமைப்பணி பயிற்சி மையம் முன்னோடியாக விளங்குகிறது. 2003-ஆம் ஆண்டில் இப்பயிற்சி மையத்தில் பயிற்சி அளிக்கப்பட்ட 82 நபர்களில் 45 நபர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். இவர்களை உள்ளடக்கி தமிழகம் முழுவதிலும் மொத்தம் 54 நபர்கள் அனைத்து இந்திய குடிமைப் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதால் இந்தியாவிலேயே தமிழகம் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

✶ 2004ஆம் ஆண்டில் இம்மையத்தில் பயிற்சி அளிக்கப்பட்ட 200 நபர்களில் 84 நபர்கள் அகில இந்திய குடிமைப் பணிகளுக்கான நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டனர். இவர்களில் 23 நபர்கள் மேற்படி பணிகளுக்காக மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப் பட்டனர். □

# படமும் செய்தியும்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள், **1–2–2006** அன்று, தலைமைச் செயலகத்தில், நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை நகரில், ரூ.7 கோடியே 62 இலட்சம் மதிப்பீட்டில், புதிதாக கட்டப்படவுள்ள பேருந்து நிலையம், நூலகக் கட்டடம், அரசு மருத்துவமனை–மகப்பேறு பிரிவு மற்றும் ரூ. 7 இலட்சத்து 92 ஆயிரம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள ராஜன் தோட்டம் பல்நோக்கு விளையாட்டு மைதானப்பணி ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டினார்கள்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள், **1–2–2006** அன்று, தலைமைச் செயலகத்தில், ரூ.6.83 கோடி மதிப்பில் புனரமைக்கப்பட்டுள்ள மதுரை அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலையினை திறந்து வைத்தார்கள்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள், **7–2–2006** அன்று, தலைமைச் செயலகத்தில், புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் ரூ.1,023 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள திருப்பூர் தொழிற்சாலைகள் மற்றும் திருப்பூர் நகராட்சி, வழியோர நகராட்சிகள், கிராமங்கள் ஆகியவற்றிற்கு பயனளிக்கும் குடிநீர் திட்டப் பணிகள் மற்றும் திருப்பூர் நகராட்சி பாதாள சாக்கடை வசதி ஆகியவற்றை மக்கள் பயன்பாட்டுக்குத் திறந்து வைத்தார்கள்.




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள், 8–2–2006 அன்று, சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாநில மாநாடு மற்றும் அரசு அலுவலர் – ஆசிரியர் சங்கங்களின் பொது மாநாட்டில் கலந்துகொண்டு, நலிந்தோருக்கு மனிதநேய உதவிகளை வழங்கினார்கள்.




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள், 10–2–2006 அன்று, தலைமைச் செயலகத்தில், ரூ.18.39 கோடி மதிப்பீட்டில், சேலம் பெரியார் பல்கலைக்கழக வளாகத்தில் கட்டப்படவுள்ள தேர்வாணையர் அலுவலகம், அறிவியல்துறைக் கட்டடங்கள், மாணவர் பயன்பாட்டு மையக் கட்டடம் மற்றும் பெரியார் மேலாண்மைக் கல்வி நிறுவனக் கட்டடம் ஆகிய புதிய கட்டடப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள், 10–2–2006 அன்று, தலைமைச் செயலகத்தில், திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின், பல்கலைக்கழக வளாகத்திலும், காஜாமலை வளாகத்திலும் மொத்தம் ரூ.5 கோடியே 8 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவர் பயன்பாட்டு மையம் மற்றும் பல்வேறு துறைகளுக்கான கட்டடங்கள், தொழில் முனைவோர் சுயவேலை மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தொழில்நுட்பப் பூங்கா ஆகியவற்றை திறந்து வைத்து, வகுப்பறைகள் மற்றும் ஆய்வுக் கூடங்கள், உயிர் மருத்துவ அறிவியல் வளாகம், பல்நோக்கு அரங்கம், குழந்தைகள் காப்பகம், மாணவ மாணவியர் விடுதிகள் ஆகிய கட்டடப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.



# நித்தமும் திட்டங்களைச் செயல்படுத்தும் அரசு

"உங்கள் அன்பும், உங்கள் பாசமும் ஒரு கோடித் தடைகளை உடைத்தெறிகின்ற வல்லமையை எனக்குத் தருகின்றன.

சக்தி என்பது மக்கள் சக்தி தானே? மின் சக்தி என்றாலும், காந்த சக்தி என்றாலும், அணு சக்தி என்றாலும் அவை எல்லாம் மக்கள் சக்திக்கு அப்புறம் தான் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை.

ஆகவேதான் என் எண்ணங்கள் மக்களைச் சுற்றியே அமைந்திருக்கின்றன. என்னுடைய செயல்பாடுகள் மக்களை மையப்படுத்தியே அமைந்திருக்கின்றன.

ஏழைகள், ஏழைகளாகவே இருந்துவிடக் கூடாது. அவர்களது நிலை உயர வேண்டும்!

அதற்காகவே அல்லும் பகலும் நான் உழைத்து வருகிறேன்.

ஆட்சிப் பொறுப்பேற்ற ஐந்தாண்டு காலத்திற்குள் ஏழை எளியோர், உழவர்கள், நெசவாளர்கள், தொழிலாளர்கள், மகளிர், மாணவர்கள், மீனவர்கள் என்று சமூகத்தின் அனைத்து தரப்பினரது நிலைமை உயர நித்தமும் திட்டமிட்டு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது உங்கள் அன்புச் சகோதரியின் அரசு."

9-1-2006 அன்று நடைபெற்ற
தேனி மாவட்ட அரசு விழாவில்,
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து...





தமிழரசு

R.N.I.No.21446/70 - Regn. No.TN/ARD/48/06-08
TN/PMG(CCR)/WPP-518/06-08



# நாட்காட்டி - 2006

## திருவள்ளுவர் ஆண்டு 2036-37

| ஜனவரி | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | 1 | 8 | 15 | 22 | 29 |
| திங்கள் | 2 | 9 | 16 | 23 | 30 |
| செவ் | 3 | 10 | 17 | 24 | 31 |
| புதன் | 4 | 11 | 18 | 25 | |
| வியா | 5 | 12 | 19 | 26 | |
| வெள்ளி | 6 | 13 | 20 | 27 | |
| சனி | 7 | 14 | 21 | 28 | |

| பிப்ரவரி | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | | 5 | 12 | 19 | 26 |
| திங்கள் | | 6 | 13 | 20 | 27 |
| செவ் | | 7 | 14 | 21 | 28 |
| புதன் | 1 | 8 | 15 | 22 | |
| வியா | 2 | 9 | 16 | 23 | |
| வெள்ளி | 3 | 10 | 17 | 24 | |
| சனி | 4 | 11 | 18 | 25 | |

| மார்ச் | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | | 5 | 12 | 19 | 26 |
| திங்கள் | | 6 | 13 | 20 | 27 |
| செவ் | | 7 | 14 | 21 | 28 |
| புதன் | 1 | 8 | 15 | 22 | 29 |
| வியா | 2 | 9 | 16 | 23 | 30 |
| வெள்ளி | 3 | 10 | 17 | 24 | 31 |
| சனி | 4 | 11 | 18 | 25 | |

| ஏப்ரல் | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | 30 | 2 | 9 | 16 | 23 |
| திங்கள் | | 3 | 10 | 17 | 24 |
| செவ் | | 4 | 11 | 18 | 25 |
| புதன் | | 5 | 12 | 19 | 26 |
| வியா | | 6 | 13 | 20 | 27 |
| வெள்ளி | | 7 | 14 | 21 | 28 |
| சனி | 1 | 8 | 15 | 22 | 29 |

| மே | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | | 7 | 14 | 21 | 28 |
| திங்கள் | 1 | 8 | 15 | 22 | 29 |
| செவ் | 2 | 9 | 16 | 23 | 30 |
| புதன் | 3 | 10 | 17 | 24 | 31 |
| வியா | 4 | 11 | 18 | 25 | |
| வெள்ளி | 5 | 12 | 19 | 26 | |
| சனி | 6 | 13 | 20 | 27 | |

| ஜூன் | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | | 4 | 11 | 18 | 25 |
| திங்கள் | | 5 | 12 | 19 | 26 |
| செவ் | | 6 | 13 | 20 | 27 |
| புதன் | | 7 | 14 | 21 | 28 |
| வியா | 1 | 8 | 15 | 22 | 29 |
| வெள்ளி | 2 | 9 | 16 | 23 | 30 |
| சனி | 3 | 10 | 17 | 24 | |

| ஜூலை | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | 30 | 2 | 9 | 16 | 23 |
| திங்கள் | 31 | 3 | 10 | 17 | 24 |
| செவ் | | 4 | 11 | 18 | 25 |
| புதன் | | 5 | 12 | 19 | 26 |
| வியா | | 6 | 13 | 20 | 27 |
| வெள்ளி | | 7 | 14 | 21 | 28 |
| சனி | 1 | 8 | 15 | 22 | 29 |

| ஆகஸ்ட் | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | | 6 | 13 | 20 | 27 |
| திங்கள் | | 7 | 14 | 21 | 28 |
| செவ் | 1 | 8 | 15 | 22 | 29 |
| புதன் | 2 | 9 | 16 | 23 | 30 |
| வியா | 3 | 10 | 17 | 24 | 31 |
| வெள்ளி | 4 | 11 | 18 | 25 | |
| சனி | 5 | 12 | 19 | 26 | |

| செப்டம்பர் | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | | 3 | 10 | 17 | 24 |
| திங்கள் | | 4 | 11 | 18 | 25 |
| செவ் | | 5 | 12 | 19 | 26 |
| புதன் | | 6 | 13 | 20 | 27 |
| வியா | | 7 | 14 | 21 | 28 |
| வெள்ளி | 1 | 8 | 15 | 22 | 29 |
| சனி | 2 | 9 | 16 | 23 | 30 |

| அக்டோபர் | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | 1 | 8 | 15 | 22 | 29 |
| திங்கள் | 2 | 9 | 16 | 23 | 30 |
| செவ் | 3 | 10 | 17 | 24 | 31 |
| புதன் | 4 | 11 | 18 | 25 | |
| வியா | 5 | 12 | 19 | 26 | |
| வெள்ளி | 6 | 13 | 20 | 27 | |
| சனி | 7 | 14 | 21 | 28 | |

| நவம்பர் | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | | 5 | 12 | 19 | 26 |
| திங்கள் | | 6 | 13 | 20 | 27 |
| செவ் | | 7 | 14 | 21 | 28 |
| புதன் | 1 | 8 | 15 | 22 | 29 |
| வியா | 2 | 9 | 16 | 23 | 30 |
| வெள்ளி | 3 | 10 | 17 | 24 | |
| சனி | 4 | 11 | 18 | 25 | |

| டிசம்பர் | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | 31 | 3 | 10 | 17 | 24 |
| திங்கள் | | 4 | 11 | 18 | 25 |
| செவ் | | 5 | 12 | 19 | 26 |
| புதன் | | 6 | 13 | 20 | 27 |
| வியா | | 7 | 14 | 21 | 28 |
| வெள்ளி | 1 | 8 | 15 | 22 | 29 |
| சனி | 2 | 9 | 16 | 23 | 30 |

### அரசு விடுமுறை நாட்கள்

| | | |
|---|---|---|
| பக்ரீத் | 11.01.2006 | புதன் |
| பொங்கல் திருநாள் | 14.01.2006 | சனி |
| திருவள்ளுவர் திருநாள் | 15.01.2006 | ஞாயிறு |
| குடியரசுத் திருநாள் | 26.01.2006 | வியாழன் |
| மொகரம் | 09.02.2006 | வியாழன் |
| தூய வெள்ளி | 14.04.2006 | வெள்ளி |
| தமிழ்ப் புத்தாண்டுப் பிறப்பு | 14.04.2006 | வெள்ளி |
| மே தினம் | 01.05.2006 | திங்கள் |
| சுதந்திரத் திருநாள் | 15.08.2006 | செவ்வாய் |
| ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி | 16.08.2006 | புதன் |
| விநாயக சதுர்த்தி | 27.08.2006 | ஞாயிறு |
| ஆயுத பூஜை | 01.10.2006 | ஞாயிறு |
| மகாத்மா காந்தி பிறந்த நாள் | 02.10.2006 | திங்கள் |
| விஜயதசமி | 02.10.2006 | திங்கள் |
| தீபாவளி | 21.10.2006 | சனி |
| ரம்ஜான் | 24.10.2006 | செவ்வாய் |
| கிருஸ்துமஸ் | 25.12.2006 | திங்கள் |